டெரிக்பிரின்ஸ்

வாழ்விற்கான அதிகாரம்

ஆவிக்குரிய யுத்தத்தில் உன்னுடைய பங்கிற்காக ஆயத்தப்படுதல்

Originally published in English under the title
"EMPOWERED FOR LIFE"

Published by Derek Prince Ministries – Asia/Pacific
PO Box 2029, Christchurch, New Zealand 8140
admin@dpm.co.nz

Printed by Derek Prince Ministries

B66/TA/3000/0410/SR
ISBN 978-93-80495-08-8

"EMPOWERED FOR LIFE" (Tamil)
"VAZHVIRKANA ADHIGARAM"

Published by permission in the Tamil language.
Translated into Tamil language by:
Mrs. Mabel Christina Jothi Bai M.A., M.Ed.,M.Phil
Mrs. Joy Mathew B.A., B.T

For orders & other enquiries please contact :
DEREK PRINCE MINISTRIES - INDIA
18/32 Mangammal Salai, Renganagar
Trichy - 620 021, Tamil Nadu, S.India.
E-mail: rhema@derekprince.in
Phone : 00-91-431-2459464 / 2457181

DPM

Derek Prince Ministries
www.derekprince.co.nz

பொருளடக்கம்

முன்னுரை

டெரிக் பிரின்ஸ் அவர்கள் அவரது பார்வையில் மிக உயர்ந்த நிலையில், ஆற்றல் வளம் மிக்கவராய் தற்காலத்து ஸ்டார் என்னும் தொடர்புத்துறை ஊழியத்திற்கு முன்பாகவே அவர் பிரபலமடைந்தார். எனினும் அவர் அசாதாரணமான வேதப் போதகராகவும், இறையியல் வல்லுநராகவும் இருபதாம் நூற்றாண்டில் சிறந்த ஒருவராகத் திகழ்ந்தார்.

அவர் இந்தியாவில் பிறந்து இங்கிலாந்துக் குடியுரிமைப் பெற்றிருந்தார். பிரின்ஸ் ஈட்டனில் கல்விக் கற்றவராகவும் கேம்பிரிட்ஜில் பயிற்சிப் பெற்றவராகவும் மேலும் C.S. லூயிஸ் என்பவரின் சமகாலத்தவராகவும் திகழ்ந்து அவரோடு ஐக்கியம் கொண்டவர். ஆனால் ஒருமுறை அவருடைய ஆச்சரியப்படத்தக்க அறிவாற்றலைக் கிறிஸ்துவிடம் அர்ப்பணித்த பின்பு அவர் பரிசுத்த ஆவியானவரால் ஒளி வீசும்படி அலங்கரிக்கப்பட்டார். அவர் வல்லமைமிக்க படைவீரனாக வேதத்தின் உண்மைகளை எடுத்துரைப்பவராக இருந்தார். முதல் தரமான பயிற்சி பெற்ற தத்துவஞானி வெட்கப்படாமல் வரங்களைப் பயன்படுத்தினார். அவர் மிகவும் அரிதானவராய் பல்கலைக்கழகத்திற்கு ஒத்தவராய் இணைந்து சென்று கலக்கிற சங்கமமாவார். இயற்கைக்கு அப்பாற்பட்ட செயல்களில் திறந்த உள்ளம் உடையவர். வார்த்தையாகவும், வல்லமையாகவும், உண்மையாகவும், ஆவியோடும் காணப்பட்டார்.

அறுபது ஆண்டுகளில், அதாவது ஏறத்தாழ அறுபது ஆண்டுகளாக ஆறு கண்டங்களிலும் எண்ணற்ற நகரங்களில் டெரிக் பிரின்ஸ் அவர்கள் கற்பித்து, போதித்து, உற்சாகப்படுத்தி, அறிக்கையிட்டு, பகிர்ந்து கொடுத்து, உந்தப்பட்டு செயல்பட்டார். மேலும் இவ்வாறான நீண்ட பாதையில் அவர் எழுதினார். அவருடைய மதிப்பையும், செல்வாக்கையும் அளவிட்டுக் கூறுவது மிகவும் கடினமாக இருக்கும். இப்படிப்பட்ட தாழ்மையான, பயனளிக்கக் கூடிய ஆசிரியராக உலகம் முழுவதிலும் திகழ்ந்தார்.

டெரிக் பிரின்ஸ் 2003 ஆம் ஆண்டு இலையுதிர் காலத்தில் தனக்கு அருமையான எருசலேமில் தனது வீட்டில் ஏறக்குறைய இருபது ஆண்டுகள் இருந்து பின்பு மரித்துப் போனார். அப்பொழுது அவருக்கு வயது 88. அவர் தனக்குப் பின்னாக சில ஆச்சரியமான கொடைகளை விட்டுச் சென்றுள்ளார். அவரை அறிந்து கொள்ளுவதற்கு சிலாக்கியம்

பெற்றவர்களுக்கு அவர் ஒரு தெய்வீக ஊக்கம் பெற்ற முன்மாதிரியாகத் திகழ்ந்தார். தேவனுக்காகக் கனி கொடுத்தார், சபையின் மீது அன்பு கூர்ந்தார், இஸ்ரவேலுக்கான கனிந்த இருதயம் உடையவராய் இருந்தார். கிறிஸ்து அவர்களுக்காகக் கிரயம் செலுத்திப் பெற்றுக் கொடுத்த தேவனுடைய ஜனங்கள் பரிபூரணமான சுதந்தரத்திலும் அதிகாரத்திலும் நடை போடுவதைக் கண்டு துணிந்து பேரார்வம் காட்டினார். நம் எல்லாருக்காகவும் அவர் ஆச்சரியப்படத்தக்கதான தொகுப்பான கற்பித்தலுக்கான புத்தகங்களையும், கட்டுரைகளையும், பிரசங்கங்களையும் நிருபங்களையும் விட்டுச் சென்றுள்ளார்.

அந்தப் பொக்கிஷத்திலிருந்து இப்பொழுது நீங்கள் உங்கள் கரங்களில் தனித்தன்மை வாய்ந்த ஒரு சிறுபகுதியை ஏந்திக் கொண்டு இருக்கிறீர்கள். 1993 முதல் 2003 வரையிலான காலக்கட்டத்தில் டெரிக் மேம்பாடு அளிக்கும் செய்திகள் அடங்கிய கற்பித்தலுக்கான கடிதங்களை அவருடைய நண்பர்களுக்காகவும் மற்றும் ஊழியத்தின் பங்காளர்களுக்காகவும் வெளியிட்டு எழுதியுள்ளார். இந்த ஊழியத்திற்கான கடிதங்கள் சில ஆழமான வளமான போதனைகளை முக்கியமானவைகளாக நீங்கள் தெரிந்துகொள்ளும்படிக் காட்டுகிறது. ஆனால் சில புறக்கணிக்கப்பட்ட தலைப்புகளும் உள்ளன. அவையாவன தனிமனிதனின் நன்னடத்தை, உண்மையான ஆராதனை, மற்றும் தேவனுடைய வார்த்தையின் வல்லமை ஆகியனவாகும். இந்த நேர்த்தியான தொகுப்புகளிலிருந்து சிலவற்றை வெளியிடுவது இவர்களது விருப்பமாக இருக்கிறது.

இதை நாங்கள் செய்வது சிறப்பாகப் பொருத்தமாக உள்ளது ஏனென்றால் ஒரு முறைக்கு மேலாக டெரிக் பிரின்ஸ் அவர்கள், அவரது ஆணித்தரமான விருப்பத்தை வெளியிட்டுள்ளார். அதாவது அவரது ஊழியமானது அவர் நித்திய வீட்டை அடைந்த பின்பும் தொடர்ந்து நடைபெற வேண்டும் என்பதாகும். சில காரியங்களை அவர் முக்கியமாகக் கருதினார். அவைகள் அவருடைய வாழ்க்கையில் உண்மைக்காக அவர் செலவு செய்ததையும் அவருடைய அறிவையும் விட சிறந்ததாகக் கருதப்பட்டன. அவர் அறிக்கை செய்தது தொடர்ந்து சென்று பரிசுத்தவான்களுக்கும் அறிக்கை செய்யப்பட வேண்டுமென்பதே அவரது விருப்பமாகும்.

தேவ ஜனங்கள் வார்த்தையில் பலப்படுவதைக் காண வேண்டும் என்பதற்காகத் தன்னையே, தன்னுடைய வாழ்வையே ஊற்றிவிட்டார். இந்தத் தொகுப்பானது உன்னுடைய வாழ்வில் ஒரு பரம்பரைச் சொத்து போன்று ஒரு தொடர் நிகழ்வாக நிலவட்டும்.

பகுதி ஒன்று

கிறிஸ்தவ நன்னடத்தையைக் கட்டுதல்

1

கீழ்ப்படிதலோடு நம்முடைய தத்தளிப்பு

ஒரு குறிப்பிட்ட வகையான மனிதனைத் தேடி அதாவது தேவனிடத்தில் உண்மையும் உத்தமுமாய் உள்ள இருதயத்தையுடைய ஒருவனைத்தேடி உலகம் முழுவதிலும் தேவனின் பரிசுத்த ஆவியானவர் அங்கும் இங்குமாக அசைவாடிக் கொண்டிருக்கிறார். பரிசுத்த ஆவியானவர் எப்பொழுது காலாட்படையிலுள்ள அப்படிப்பட்ட ஒரு போர் வீரனைக் கண்டுபிடிக்கிறாரோ அப்பொழுது தேவன் மகிழ்ச்சியடைந்து அவனை அவருக்காகப் பலப்படுத்தி அவருடைய திறந்த வெளிப்பாட்டையும் வல்லமையையும், அந்த மனிதனுடைய தனிப்பட்ட வாழ்விலும் அவனுடைய ஊழியத்திலும் வழங்குகிறார். அவர் திறந்த மனதோடு கூடிய வல்லமையையும் ஆசீர்வாதத்தையும் கொடுக்கக் காத்துக் கொண்டிருக்கிறார்.

இந்த ஆவிக்குரிய யுத்தத்தில் மனிதன் விட்டுக்கொடுக்க வேண்டியது அனைத்தையும் விட்டுக்கொடுத்தால்தான் வெற்றி கிடைக்கும். ஆபிரகாம் இந்த வகையான போர் வீரனாக இருந்தார் என்று வேதம் சொல்லுகிறது, யோபும் கூட. வேதம் சொல்லுகிறது அவர்கள் இப்படிப்பட்ட இருதயமுடையவர்களாயிருந்து தங்களுக்கு வந்த சவால்களை எதிர்கொண்டு அதனை ஏற்றுக்கொண்டு ஆவிக்குரிய வளர்ச்சியில் உச்சக்கட்டத்தை எய்தினார்கள்.

ஆனால் காத்திரு! என்று நீங்கள் சொல்லுகிறீர்கள். முதல் காரியமானது முதலாவது தான். நான் ஆபிரகாமாகவோ யோபாகவோ இல்லை அப்படியிருக்க நான் தேவனிடத்தில் உத்தமமான இருதயமுள்ளவனாக இருக்க முடியும் என்பது எப்படி என்னால் முடியும்? அது இப்படியாக இருந்தால் அது என்னை ஆவிக்குரிய யுத்தத்தில் என் பங்கைப் பெறுவதற்கு என்னை ஆயத்தப்படுத்துவதாக இருக்கும். ஈடுபாட்டிற்கான இந்த சட்ட திட்டங்கள் தேவனிடத்தில் உத்தமமான இருதயமுள்ளவனாய்

இருப்பவன் மட்டுமே அதைத் தழுவிக் கொள்ள முடியும் என்று இருந்தால் நான் ஒன்றை ஆரம்பிக்கும் முன்பே நான் தோல்வியைத் தழுவ வேண்டியதிருக்கும்.

இல்லை! நீங்கள் ஆபிரகாம் இல்லை! எனினும் நீங்கள் தேவனிடத்திலிருந்து ஒரு புதிய சவாலை ஏற்றுக் கொள்ள முடியும். நீங்கள் யோபு அல்ல, எனினும் நீங்கள் தேவனிடத்தில் ஒரு சரியான மனப்பான்மையையும், பிசாசினிடத்தில் ஒரு சரியான மனப்பான்மையையும் கொண்டவர்களாக இருக்க முடியும். தேவனிடத்தில் குறைபாடு இல்லாதவனாக இருப்பதால் அங்கே சமநிலையில் இருப்பது முடியாது என்பதை நாம் பார்த்துக் கண்டுபிடித்துக் கொள்ள வேண்டும். ஒரு படைவீரன் தன்னுடைய படையில், தனக்கு விருப்பமில்லாத எந்த செயலுக்கும் ஒத்துப்போக மாட்டான். நீங்கள் முழுமையாகக் கீழ்ப்படிதலுக்கு ஒப்புக்கொடுக்க வேண்டும். அதற்கான கிரயம் எவ்வளவாக இருந்தாலும் அது ஒரு பொருட்டல்ல. ஒவ்வொரு படைவீரனும் இதை அறிந்திருந்தாலும், இது மீண்டும் அறிவுறுத்தப்படுகிறது. அதற்காகக் கிரயம் செலுத்துவது சிறிதாவது தேவனால் அங்கீகரிக்கப்பட்டிருக்க வேண்டும்.

காலாகாலமாக தேவனுடைய நோக்கத்தை நிறைவேற்றுவதில் நாம் எல்லாரும் ஒரு கருத்துக்கு வர வேண்டும். ஒவ்வொரு மனிதனுக்கும் தேவனுடைய செய்தியாவது, யார் தன்னுடைய இடத்தை எடுத்துக் கொள்ளப் போகிறானோ அவனுக்குத் தேவன் செய்யப்போவது இதுதான் “எனக்கு முன்பாக நடந்து கொண்டு உத்தமனாய் இரு” என்பதாகும். இதுதான் ஆவிக்குரிய யுத்தத்தில் அன்றன்றுள்ள, இப்பொழுது உள்ள பலப்பரீட்சையிலும், வரப்போகிற இதைவிடப் பெரிய யுத்தத்திலும் நம்முடைய பங்கிற்கான படி. எப்படி இதை நிறைவேற்றப்போகிறோம்?

மனிதர்களாகிய நம்முடைய அடிப்படையான பிரச்சனையாவது நாம் எத்தனை விலையுயர்ந்தவர்கள் என்பதை அறிந்து கொள்ளாததே ஆகும்.

ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக நான் எண்ணற்ற மக்களுக்கு, அவர்களது வாழ்க்கைப் பிரச்சனைகளில் உதவி புரியும்படி முயற்சி செய்துள்ளேன். இறுதியாக நான் ஒரு ஆச்சரியமான முடிவுக்கு வந்தேன். அதாவது *மனிதர்களாகிய நம்முடைய அடிப்படையான பிரச்சனையாவது நாம் எத்தனை விலையுயர்ந்தவர்கள் என்பதை அறிந்து கொள்ளாததே ஆகும்.* இதை நாம் அடுத்த அத்தியாயத்தில் மேலும் அதிகமாக விவாதிக்கப் போகிறோம். நாம் நம்மைப் பற்றி நோக்குவதைவிட தேவன் நம்மை எப்படி நோக்குகிறார் என்பதை அதிகமாக நாம் ஒருமுகப்படுத்திப்

பார்ப்பது அவசியமாகும். நாம் அடிக்கடி இந்த யுத்தத்தில் சேருவதற்கான அழைப்பை இழந்து விடுகிறோம். ஏனென்றால் இதில் நம்முடைய நிலையைத் தக்கவைத்துக்கொள்ள முடியாது என்று நாம் நினைக்கிறோம்.

இதன் விளைவாக நாம் மிகவும் பரிதபிக்கத்தக்கத் தவறுகளைச் செய்கிறோம். மிகுந்த அதிர்ஷ்டத்திற்குரிய சட்டப்படி சுதந்தரவாளியாக இருக்கும் ஒருவனைப் போல நாம் இருக்கிறோம். ஆனால் நாம் அந்த முழு சுதந்தரத்தையும் உரிமையையும் ஒப்பிட்டுப் பார்க்க முடியாதபடி மிகக்குறைந்த விலைக்கு விற்று விடுகிறோம். அதாவது ஒரே ஒரு இராத்திரி அனுபவிக்கும் பாலியல் இன்பத்திற்காக, போதைப் பொருளால் அனுபவிக்கும் சுகத்துக்காக, ஒரு குடிக்கும் விருந்திற்காக, ஒரு குறுகிய நிதிநிலைத் திட்டத்திற்காக விற்கிறோம்.

நம்மைச் சற்று உயர்ந்தவர்களாக மதித்து, அரசியலில் சற்று முக்கியமான பதவியையோ, கேளிக்கை உலகில் பாராட்டையோ அல்லது மதத்திற்கடுத்த காரியங்களில் முக்கியத்துவத்தையோ தேடலாம். இருந்தாலும் அதனுடைய எல்லா மேன்மைகளையும் நம்முடைய உரிமையின் மதிப்போடுகூட ஒப்பிட்டுப் பார்க்க முடியாது. அப்படிப்பட்ட விலையுயர்ந்த உரிமையை நாம் மாற்றிக் கொள்ளுகிறோம்.

தேவன் நம்முடைய வாழ்க்கையில் வல்லமையோடு கடந்து செல்ல விழைகிறார். இனிவரும் வருடங்கள் முழுவதுமாக நாம் வெற்றியுடன் செல்ல அவர் விரும்புகின்றார். இவ்வாறாக அவரைப்பற்றி அதிகமாக அறிந்து கொள்ளவும், நம்மைப் பற்றி அதிகமாக அறிந்து கொள்ளவும் நாடுகிறார். ஒழுங்கற்ற நிலையில் நம்மைச் சுற்றிலுமிருக்கின்ற பெரிய அளவான இடத்தை நாம் எல்லையாக்கிக் கொள்ளுகிறோம். இவ்வாறாக ஆவிக்குரிய போராட்டத்தில் நாம் நம்முடைய இடத்தை எடுத்துக் கொள்ளுகிறோம். ஒரு படைவீரனின் நன்னடத்தை எவ்வாறாக விருத்தியடைகிறது என்பதை நாம் கற்றுக்கொள்வோம். மேலும் பரிசோதனைகளைச் சந்திக்கும்பொழுது என்ன செய்ய வேண்டும் என்பதையும் அறிந்து கொள்ளுவோம். இவ்வுலகத்திலுள்ள மிகப்பெரிய போதகரும் உதவி செய்கிறவருமாகிய பரிசுத்த ஆவியானவரின் பயிற்சி கொடுக்கும் முகாமில் நாமும் உள்ளே செல்லுவோம். பின்பு நாம் வானுலகத்தின் போரின் உள்ளே சென்று பகைவனின் பலவகையான திட்டங்களைத் தெரிந்துகொள்வோம். இறுதியாக நமது நிலையில் இருந்துகொண்டு நமது பண்பு நிலைத்து, சோதனையில் வெற்றி காண்கிறதா எனப் பார்க்க வேண்டும்.

நம்முடைய இலட்சியம் ஆயத்தப்படுதலாக இருக்க வேண்டும். நாம் பின்னாகச் சென்று வேத வரலாற்றின் தொடக்கத்திலிருந்து ஆரம்பிக்கலாம். முதலாவதாக நம்முடைய மனித வர்க்கத்தின் முற்பிதாவாகிய ஆதாமைப்பற்றியும் பின்பு நம்முடைய முற்பிதாவாகிய

யாக்கோபையும் அவர்கள் கீழ்ப்படிதலுக்காக பல வழிகளில் அனுபவித்த போராட்டங்களையும் சுருக்கமாகக் காண்போம். சுயாதீனமாக இருக்க விரும்புதல் என்னும் பண்பு ஆரம்பக் காலத்திலிருந்தே தடையாக இருந்துள்ளது என்பதை ஆரம்பக்கால விளக்கங்களில் காணலாம்.

விழுந்து போன நமது செயல் நோக்கங்கள்

"நீங்கள் நன்மை தீமை அறிந்து தேவர்களைப் போல் இருப்பீர்கள் (ஆதியாகமம் 3:5)." தேவனைப் போல் இருப்பீர்கள் என்பது நிச்சயமாக ஒரு நகைப்பிற்குரியதாகவும் பாராட்டத்தக்கக் கற்பனை சார்ந்ததாகவும் உள்ளது. அதிலே எப்படி தவறு ஏற்படக்கூடும். இருந்தாலும் சாத்தானுடைய வாயினால், அது ஒரு சர்ப்பமாக உருவெடுத்து தன்னைத் தானே மேன்மைப்படுத்திக் கூறியது. இதனால் ஆதாமும் ஏவாளும் ஒரு பெரிய அழிவுக்குள்ளானார்கள். இதனால் வந்த பிசாசின் விளைவுகளினால் அவர்களது பிற்கால சந்ததியார் யாவரும் பாதிக்கப்பட்டனர்.

ஆதாமும் ஏவாளும் இரை விலங்காக விழுந்தது, கண்டுபிடிக்க முடியாத கண்ணியாகிய சூழ்ச்சியானது என்னே பரிதாபம்! அது ஒரு சொல்ல முடியாத செயல் நோக்கமாகும். ஆனால் சுதந்தரமாக இருக்க விரும்புவதை இது மறைமுகமாகக் குறிப்பிடுகிறது. ஒருமுறை நீங்கள் நன்மை எது தீமை எது என்று அறிந்து கொண்டால் உங்களுடைய சொந்த தீர்மானத்தை எடுத்துக் கொள்ள தன்னுரிமை உள்ளவர்களாக இருப்பீர்கள். இவ்வாறானால் நீங்கள் இதன்பிறகு தேவனைச் சார்ந்தவர்களாக இருக்கமாட்டீர்கள். தானாகவே நிர்ணயிக்கும் இந்த சுதந்தரத்தின் மேல் உள்ள ஆசையானது இந்த உலகத்திலுள்ள எல்லா மனிதவர்க்கத்திற்கும் மரபுரிமையாகப் பெறப்பட்டு புகுத்தப்பட்டது. இது பழைய மனிதனின் தெளிவான அடையாளமாகும். இதுவே விழுந்துபோன பாவமான இயற்கை சுபாவமாக நம் ஒவ்வொருவருக்குள்ளும் நினைவில் இருக்கிறது.

தேவனிடமிருந்து மனிதவர்க்கம் சுதந்திரத்தை நாடிச் சென்ற பல வழிகளைப் பற்றி வரலாற்றுச் சான்றுகள் உள்ளன. முதன்மையானது *அறிவைப்* பின்பற்றினது. ஏதேன் தோட்டத்தில் இரண்டு சிறப்பான விருட்சங்கள் இருந்தன. அவைகளில் ஒன்று ஜீவ விருட்சம், மற்றொன்று அறிவு, நன்மை, தீமை கண்டறியக் கூடிய விருட்சம். ஆதாமும் ஏவாளும் ஜீவ விருட்சத்தை விட்டு அறிவின் விருட்சத்தைத் தெரிந்து கொண்டது வரலாற்றின் ஓர் திருப்பமாகும்.

அந்நாள் தொடங்கி அறிவைப் பெற்றுக்கொள்ளுதலே மனித சமுதாயத்தின் ஒரே மையக் குறிக்கோளாய் மாறிவிட்டது. கடந்த இரண்டு

அல்லது மூன்று நூற்றாண்டுகளில் இந்நாட்டம் அறிவியல் மேல் அதிக முக்கியத்துவம் அளிக்க விளம்பியது. (அறிவியல் என்ற ஆங்கில வார்த்தை சயின்ஸ், சயின்டியா என்ற “அறிவை” குறிக்கும் இலத்தீன் வார்த்தையினின்று பிறந்தது.)

அறிவியலின் அறிவு விருத்தி மனிதவர்க்கத்தின் அடிப்படைப் பிரச்சனைகளான நியாயமின்மை, கொடுமை, போர், பட்டினி, நோய் போன்றவற்றை தீர்த்து வைக்கவில்லை. உண்மையில் சில வழிகளில் அறிவியல் பிரச்சனைகளை அதிகப்படுத்திவிட்டது. விஞ்ஞானம், மனித வர்க்கத்தையே அழித்துவிடக் கூடிய அழிவின் போர்க்கருவிகளைத் தயாரித்து பூலோகத்தைச் சாம்பலாக்கும் கருவிகளை மனிதனிடம் கொடுத்துள்ளது. மேலும் இத்தகைய கருவிகள் சில கொடூரமான, பொல்லாதவர்கள் கையில் இருக்கின்றன. அவர்கள் எவ்விதக் கருணை அல்லது நீதிமுறை இன்றி அவைகளை உபயோகிக்கத் தயங்கமாட்டார்கள்.

தேவனிடமிருந்து சுதந்தரத்தை மனிதவர்க்கம் பெறும் இரண்டாம் வழி வியப்புக்குரியது. அது ***மதம்***. அநேக வித்தியாசமான முறைகளில் மனிதர்கள் மத சம்பந்தமான சட்டங்களையும், அமைப்புகளையும் ஏற்படுத்தி, அவையே முற்றும் போதுமானது என்றும் தேவனே இனித் தேவையில்லை என்றும் கூறுகிறார்கள். அவர்கள் செய்ய வேண்டியதெல்லாம் சட்டங்களை வைத்துக்கொள்ளுவது மட்டுமே.

உலகத்தின் பெரிய மதங்களான யூதமதம், இஸ்லாம், புத்தமதம், கிறிஸ்தவத்தின் சில பிரிவுகள் இந்த அமைப்புகளைப் பின்பற்றுகின்றன. இந்த மதவாதிகள் தங்கள் சட்டம் மற்றும் அமைப்புகளால் தேவனை விட்டே தனிமையாகிவிடுகிறார்கள். இதனால் தான் நல்ல மத சம்பந்தமான மக்கள் கூட சம்பாதிக்க முடியாத இலவச கிருபையைக் கூட நிராகரித்து விடுகிறார்கள்.

தேவனை விட்டு மனிதன் சுதந்திரமாகச் செயல்பட முற்படும் அடுத்தக் காரியம் அதிகமான பணத்தையும் உலகப்பொருட்களையும் சம்பாதித்துக் குவிப்பதாகும். லூக்கா 12:16-20இல் இயேசு ஒரு நிலச் சொந்தக்காரர் வெற்றி கண்டதாக நினைத்துத் தானியம் சேர்த்து வைக்க இடமற்ற நிலையை அடைந்ததைக் குறிப்பிடுகிறார். இன்னும் பெரிய களஞ்சியங்களைக் கட்ட முற்பட்ட அவன் தன் ஆத்துமாவை நோக்கி,

> ஆத்துமாவே, உனக்காக அநேக வருஷங்களுக்கு அநேகம் பொருள்கள் சேர்த்துவைக்கப்பட்டிருக்கிறது; நீ இளைப்பாறி, புசித்துக் குடித்து, பூரிப்பாயிரு என்று என் ஆத்துமாவோடே சொல்லுவேன் என்று தனக்குள்ளே சிந்தித்துச் சொல்லிக்கொண்டான். தேவனோ அவனை நோக்கி: மதிகேடனே, உன் ஆத்துமா உன்னிடத்திலிருந்து

இந்த இராத்திரியிலே எடுத்துக்கொள்ளப்படும், அப்பொழுது நீ சேகரித்தவைகள் யாருடையதாகும் என்றார்.

லூக்கா 12:19-20

இதைப் போன்ற பயங்கரமான தவற்றைச் செய்து சரித்திரத்தின் ஏடுகளில் எண்ணிறந்தோர் இதே ஆசையினால் ஈர்க்கப்பட்டுத் தேவனைவிட்டுத் தனிப்பட்டுச் சுதந்திரமாய்ச் செயல்பட விரும்புகின்றனர்.

இவ்வாறு தேவனைத் தன் வாழ்விலிருந்து ஒதுக்கி வைப்பவர்கள் சாத்தானின் அரசைச் சேர்ந்தவர்கள் - இதில் வீழ்ந்து போன தேவதூதர்கள், பிசாசுகள், வீழ்ந்த போன மானிடம் அடங்கும். இது உலக ஆசைக்கடுத்த காரியம். இதைக் குறித்து இயேசு தம்முடைய சீடர்களிடம் "நான் உலகத்தானல்லாததுபோல, அவர்களும் உலகத்தாரல்ல" (யோவான் 17:16) என்கிறார்.

இந்த அர்த்தத்தில் "உலக'' ஆசை என்பதில் தேவனால் நியமிக்கப்பட்ட இராஜாவாகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் அதிகாரத்திற்குத் தன்னை ஒப்புக்கொடாதவர்கள் அடங்குவர். இவர்களில் சிலர் கற்பொழுக்கம் உள்ள மதத்தை மதிப்பவர்கள். இவர்கள் தேவனால் எதிர்பார்க்கப்படும் இயேசுவிற்குத் தங்களை முற்றிலும் ஒப்புக்கொடுத்தலை ஏற்றுக்கொள்ளாதவர்களிடம் "பழைய மனிதனின்" குணம் மேலோங்கி நிற்பதால் இவர்கள் கிருபையினால் மட்டுமே கிடைக்கக் கூடிய தேவனுடைய இலவச ஈவான இரட்சிப்பை வெறுப்பவர்களாவர்.

தனிமைப்படுத்தப்பட்ட மானிடம்

தேவனைத் தவிர்த்து தன்னிச்சையாக வாழ விரும்பும் ஆவல் இவர்களை மற்ற படைப்புகளிலிருந்தும் பிரித்துவிடுகிறது. மற்ற படைப்புகள் கேள்வி எதுவும் எழுப்பாமல் படைப்பாளியாம் தேவனைச் சார்ந்துள்ளது.

எந்த ஒரு வானுலகப் படைப்பும் தன்னிச்சையாகச் செயல்படுவதற்கு ஆவல் கொள்ளுவதில்லை. "சந்திரனைக் காலக் குறிப்புகளுக்காகப் படைத்தார்; சூரியன் தன் அஸ்தமனத்தை அறியும்." (சங்கீதம் 104:19). தேவன் நட்சத்திரங்களைப் பெயரிட்டு அழைக்கிறார், அவைகள் பதில் அளிக்கின்றன. "அவர் நட்சத்திரங்களின் இலக்கத்தை எண்ணி, அவைகளுக்கெல்லாம் பேரிட்டு அழைக்கிறார்." (சங்கீதம் 147:4)

கீழ்ப்படியாத சில மூலப்பொருட்கள் கீழ்ப்படியாத மாதிரி சில வேளைகளில் காணப்பட்டாலும் அது ஒரு பொருட்டல்ல. ஆனால் அவைகள் எப்பொழுதும் தன்னைப் படைத்த சிருஷ்டி கர்த்தாவிற்குக்

கீழ்ப்படிகின்றன - "அக்கினியே, கல்மழையே, உறைந்த மழையே, மூடுபனியே, அவர் சொற்படி செய்யும் பெருங்காற்றே" (சங்கீதம் 148:8).

இதே கொள்கையானது மிருகங்களின் படைப்புகளிலும் உண்மையாகின்றது. "பால சிங்கங்கள் இரைக்காக கெர்ச்சித்து, தேவனால் தங்களுக்கு ஆகாரங் கிடைக்கும்படித் தேடும்." (சங்கீதம் 104:21) "பெரிதும் விஸ்தாரமுமான இந்தச் சமுத்திரமும் அப்படியே நிறைந்திருக்கிறது; அதிலே சஞ்சரிக்கும் சிறியவைகளும் பெரியவைகளுமான எண்ணிறந்த ஜீவன்கள் உண்டு. அதிலே கப்பல்கள் ஓடும்; அதிலே விளையாடும்படி நீர் உண்டாக்கின திமிங்கிலங்களும் உண்டு. ஏற்ற வேளையில் ஆகாரத்தைத் தருவீர் என்று அவைகளெல்லாம் உம்மை நோக்கிக் காத்திருக்கும்." (சங்கீதம் 104:25-27). பறவைகளைப் பொறுத்தவரை "ஆகாயத்துப் பட்சிகளைக் கவனித்துப் பாருங்கள்; அவைகளையும் உங்கள் பரமபிதா பிழைப்பூட்டுகிறார்." (மத்தேயு 6:26)

எதிர்ப்புத் தெரிவிக்கும் மனிதன் சில வேளைகளிலே தனிமையாகவும், பிறரின் அனுதாபத்தை இழந்தது போலும் தன்னைச் சுற்றிலும் உள்ள இந்தப் பிரபஞ்சத்தில் உணருவது ஆச்சரியத்திற்குரியதல்ல. இதே உலகத்திலுள்ள மற்ற படைப்புகள் ஒன்று சேர்ந்து தங்களை உண்டாக்கிய சிருஷ்டிகளைச் சார்ந்தே செயல்படுகின்றன.

சார்ந்திருத்தலுக்குத் திரும்பிச் செல்லும் வழி

வீழ்ந்து போன நிலைமைக்குத் தேவன் இரண்டு மீட்பு வழிகளைச் சிலுவையில் அளித்துள்ளார். நமது சார்பில் அவர் நம்முடைய எல்லா பாவங்களுக்காகவும் முழுக் கிரயத்தையும் செலுத்தி ஒப்புரவாகுதல் இல்லாமலே தேவன் நம்முடைய பாவங்களை மன்னிப்பது நடைபெறும்படி இவ்வாறாக உண்டாக்கினார். இது அவரது சொந்த நியாயத்தின்படியானதாகும். இரண்டாவதாக இயேசு கூட விழுந்துபோன இயற்கையின் தன்மையான சுதந்தரம், தான் என்று சொல்லப்படும் அகந்தை ஆகியவற்றை அறிந்திருந்தார். இயேசு கிறிஸ்துவிலே நம்முடைய போராடும் தன்மையை அவர் சாகும்படி செய்தார். "நம்முடைய பழைய மனுஷன் அவரோடே கூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம்." (ரோமர் 6:6)

இயேசுவின் சீடராக வர விரும்புகிற நாம் ஒவ்வொருவரும் இந்த இரட்டத்தனையான மீட்பை நாமாகவே எடுத்துக் கொள்ள வேண்டும். முதலாவது நாம், மனந்திரும்புதல் மற்றும் விசுவாசத்தின் வழியாக நம்முடைய எல்லாப் பாவங்களும் மன்னிக்கப்பட்டுவிட்டது என்று உறுதி செய்துக்கொள்ள வேண்டும். இரண்டாவதாக நம்மிடத்தில் நமக்குள்

இருக்கும் எதிர்ப்புத் தன்மையாக இருக்கும் சுதந்தரமான தற்பெருமையானது மரணத்திற்கு ஒப்புக்கொடுக்கப்பட்டுவிட்டது என்பதை நாம் ஒத்துக் கொள்ள வேண்டும்.

இதன்பிறகு சீஷராகுவதற்காக இயேசு உண்டாக்கின சட்ட திட்டங்களாவன, “அப்படியே உங்களில் எவனாகிலும் தனக்கு உண்டானவைகளையெல்லாம் வெறுத்துவிடாவிட்டால் அவன் எனக்கு சீஷனாயிருக்கமாட்டான் என்பதாகும்.” (லூக்கா 14:33)

“வெறுத்துவிடுதல்” என்ற வார்த்தையை மொழி பெயர்க்கும் பொழுது “எல்லாவற்றிற்கும் வழியனுப்புதல்” செய்துவிட வேண்டும் என்று அர்த்தம் எடுத்துக் கொள்ளலாம். இயேசுவின் சீஷனாக மாற வேண்டும் என்பதின் கருத்தாவது, பொதுவாக நாம் சார்ந்திருக்கும் ஒவ்வொன்றையும் வெறுத்துவிட வேண்டும் என்பதாகும். அதாவது குடும்பம், நண்பர்கள், பணம், வாழ்க்கை, உலகப்பிரகாரமான மதிப்பு, அல்லது தன்மானம் ஆகியன. ஒருமுறை இந்தப் பொருட்களையெல்லாம் நாம் உண்மையாகவே துறந்துவிட்டோமானால், அவருடைய நோக்கத்தின்படி நமக்குத் தகுதியானவற்றையெல்லாம் தேவன் நமக்குத் திரும்பவும் கொடுத்துவிடுவார். ஆனால் நாம் அவற்றிற்கு உரிமையாளர்களாக மாட்டோம். நாம் தேவையானால் அவைகளை உபயோகிக்கும் முறைக்கான கணக்கைக் கொடுக்கும் சாதாரண கண்காணிகளாக மட்டும் இருப்போம். நம்முடைய சுதந்தரம் முழுமையாகத் தேவன் மேல் சார்ந்திருப்பதாக ஆகிவிடும்.

சில வேளைகளில் இதை ஒரு ஆபத்தான நிலையாக எடுத்துக்கொள்ளலாம் அல்லது ஒரு பேரழிவாகவும் கூட இருக்கலாம். இது எதற்காக என்றால் தேவன் மேல் நம்முடைய சார்ந்திருத்தலை நாம் முழுமையாக ஒப்புக் கொள்ளும் நிலைக்கு நம்மைக் கொண்டுவருவதற்காகும்.

சில வேளைகளில் இதை ஒரு ஆபத்தான நிலையாக எடுத்துக் கொள்ளலாம் அல்லது ஒரு பேரழிவாகவும் கூட இருக்கலாம். இது எதற்காக என்றால் தேவன் மேல் நம்முடைய சார்ந்திருத்தலை நாம் முழுமையாக ஒப்புக்கொள்ளும் நிலைக்கு நம்மைக் கொண்டுவருவதற்காகும். அப்போஸ்தலர் 27 ஆம் அதிகாரத்தில் விவரிக்கப்பட்ட பரிசுத்த பவுலின் ரோமாபுரி பயணத்தை நான் நினைவு கூறுகிறேன். பவுலடிகளார் ரோம சாம்ராஜ்யத்தின் தலைநகரான

ரோமாபுரிக்குச் செல்வதில் தேவன் ஒரு தனிப்பட்ட திட்டத்தை வகுத்திருந்தார். "புறஜாதிகளின் அப்போஸ்தலனாகிய" அவர் தன்னுடைய தனித்தன்மையான சேவையின் மூலம் அங்குச் சபைகளை உருவாக்குவதற்காகும்.

ஆனால் பவுலடிகளார் சங்கிலிகளால் கட்டப்பட்ட ஒரு கைதியாகவே பயணம் செய்தார். அவர் பயணம் செய்த கப்பல் புயல் காற்றோடு போராட வேண்டியதிருந்தது. இதனுடைய பயங்கரத்தினால் அவர்கள் இரண்டு வாரங்களாகப் பகற்காலத்தில் ஒருபோதும் சூரியனைக் காணவுமில்லை இரவு வேளைகளில் நட்சத்திரங்களையும் பார்க்கவில்லை. இறுதியாக அவர்கள் கப்பல் உடைந்து, கப்பல் சேதத்தினால் பாதிக்கப்பட்டுப் பாறைகள் நிறைந்த கடற்கரையான மெலித்தா தீவை அடைந்தனர். அவர்கள் ஒன்று சேர்ந்திருக்கும்போது ஒரு விஷம் மிகுந்த பாம்பு பவுலைக் கடித்துவிட்டது. (அப்போஸ்தலர் 27:13 & 28:6ஐப் பார்க்கவும்) தேவனுடைய சித்தம் பரிசுத்த பவுல் ரோமுக்குச் செல்ல வேண்டும் என்று இருக்கும்போது அங்கு செல்லும் பயணத்தின் போது ஏன் அவர் இப்படிப்பட்ட அசாதாரணமான கஷ்டங்களை அனுபவிக்க வேண்டும்?

இதை நான் தீர எண்ணிப்பார்க்கும் பொழுது எனக்கு ஒரு வாசகம் ஞாபகத்திற்கு வந்தது. (அப்போஸ்தலர் 27:20) "இனித் தப்பிப் பிழைப் போமென்னும் நம்பிக்கை முழுமையும் அற்றுப்போயிற்று". இதுதான் பரிசுத்த பவுலின் கஷ்டங்களுக்கான நோக்கமாகும். இது அவனை ஒரு நம்பிக்கையற்ற நிலைக்குக் கொண்டு வந்தது. இப்பொழுது பரிசுத்த பவுலுக்குத் தேவன் மேல் நம்பிக்கை கொள்வதைவிட வேறு ஒன்றும் வைக்கப்படவில்லை. இந்த நேரத்தில்தான் தன் அனுபவத்தின் மூலமாகத் தேவன் ஒருவரே எல்லாவற்றிற்கும் போதுமானவர் என்பதை ஆதாரப்பூர்வமாகப் புரிந்துகொண்டார். தேவன் நம்மை முற்றிலுமாக அவரைச் சார்ந்திருக்கும்படியான நிலைக்குக் கொண்டு வருகிறார். அவர் முழுமையாகத் தேவனையே சார்ந்திருப்பவர் என்பதை விளக்கிக் காட்டினார்.

இப்படியாக முழுமையான அர்ப்பணிப்பிற்கு வந்தபின் பரிசுத்த பவுல் ரோம் நகரத்தில் உள்ள கிறிஸ்தவர்களுக்கு ஊழியம் செய்வதற்கு ஆயத்தமானான். அங்கே அவன் செல்வதற்கான பயணமானது அவனை இவ்வாறாக ஆயத்தப்படுத்தியது. தன்னுடைய சுயமுயற்சி அனைத்தும் ஒன்றுமில்லாமல் ஆக்கப்பட்ட பின்பு அவர் சரணடைந்ததினால் தேவனுடைய ஆசீர்வாதங்கள் ஊற்றப்படும் கால்வாயாக அவர் இருந்தார். பவுல் ஒரு அப்போஸ்தலனாக இருந்தாலும் தேவனுடைய சீஷத்துவத்தின் கீழ் அவர் ஒரு சீடராகவும் இருந்தார் என்பதை நாம் மறப்பது உகந்ததாயிருக்காது.

படிப்படியாக வருடங்கள் கடந்து செல்லும்போது நான் முழுமையாகச் சார்ந்திருக்கும் இந்தப் பாடத்தைக் கற்றுக் கொண்டேன். நான் மெதுவாக கற்றுக்கொள்ளக்கூடியவன் என்பதை நான் அறிக்கையிட வேண்டும். தேவன் பல விதமான சூழ்நிலைகளில் பல நேரங்களில் இந்தப் பாடத்தைக் கட்டாயப்படுத்திப் படிக்கும்படி உபயோகிக்கிறார். ஆனால் நான் அதிகமாகத் தேவனையே அண்டிக்கொள்ளும்பொழுது, அதன் விளைவுகளினால் ஊற்றப்படும்பொழுது ஆச்சரியப்படும்படி செய்கிறார் என்பதை நான் கண்டுபிடித்தேன். இது நான் எவ்வளவு காலம் என்னுடைய சொந்த முயற்சியில் சார்ந்திருந்தேனோ அவ்வளவு காலம் நான் அடைந்த பயன்களை விட அதிகமானதாகும்.

யாக்கோபின் அர்ப்பணிப்பு

வேதத்திலே யாக்கோபு அவனுடைய சுதந்தரத்தை விட்டுக் கொடுக்கும்படி அவனுக்கு வெளிப்படையாகச் சரீரத்தில் ஏற்பட்ட பாடுகளைக் குறிக்கும் ஒரு பாத்திரமாவான். அவன் வாலிபப் பருவத்தில் இருக்கும்பொழுது ஆவலுடையவனாகவும், தன்னார்வமுடையவனாகவும் இருந்தான். அவன் சிறிது நேரத்தில் தன்னுடைய சகோதரன் ஏசாவின் சரீர பலவீனத்தைப் பயன்படுத்திக் கொண்டு, ஒரு கோப்பைக் கூழுக்காக ஏசாவின் சேஷ்டபுத்திர பாகத்தை விற்றுப் போடும்படிச் செய்து அந்தச் சந்தர்ப்பத்தைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டான். பின்பு அவன் (ஏசா சாதாரணமாக சேஷ்டபுத்திரபாகத்தோடு பெறக்கூடிய) பெற்றோரின் ஆசீர்வாதத்தையும், கண்பார்வையற்ற தனது தகப்பனாகிய ஈசாக்கையும் ஏசாவைப் போல வேடம் தரித்து ஏமாற்றிப் பெற்றுக் கொண்டான்.

இருந்தாலும் இந்தச் சேஷ்டபுத்திரபாகமும், ஆசீர்வாதமும் யாக்கோபுக்கு அதிகமான நன்மை ஒன்றையும் செய்யவில்லை. ஏசாவின் பழி வாங்குதலுக்குத் தப்பி மெசப்பொத்தோமியாவிற்கு ஓடிப்போய்த் தன் மாமனாகிய லாபானிடத்தில் ஒரு அகதி போல இருந்தான். இங்கே மீண்டுமாக அவன் தன்னுடைய ஏமாற்று வித்தையைக் கையாண்டான். அவன் லாபானுடைய இரண்டு குமாரத்திகளையும் திருமணம் செய்து கொண்டு அவனுடைய செல்வத்தின் பெரும்பகுதியைப் பெற்றுக் கொண்டான்.

பின்பு கர்த்தர், அவனிடம் அவனுடைய சொந்த தேசத்திற்குத் திரும்பிப் போகும் நேரம் வந்துவிட்டது என்று சொன்னார். அவன் திரும்பிச் சென்று கொண்டிருக்கும்பொழுது யார் என்று அறியாத ஒரு அந்நியன் இரவு முழுவதும் அவனிடம் சண்டையிட்டார். குறிப்பிட்ட சூழ்நிலையில் நிகழ்கிற அரிய நிகழ்ச்சியாக அந்த அந்நியன் யாக்கோபின் தொடையில் சுளுக்கு உண்டு பண்ணினார் (அவனுடைய சரீரத்திலுள்ள

மிக வலிமையான தசைகளாலான பகுதி). எனவே யாக்கோபு உதவியற்ற நிலையில் அவரைச் சார்ந்து பற்றிக்கொண்டான். இப்படிப்பட்ட போராட்டத்திற்குப் பின்புதான் யாக்கோபு உண்மையாக அவனுடைய சொந்த தேசத்திற்குத் திரும்பி வந்தான். ஆனால் அவனுடைய வாழ்நாட்களின் மீதியான காலத்தில் அவன் நொண்டி நொண்டி நடந்தான். இது தன் சுதந்தரத்தை முழுமையாக ஒப்புக் கொடுத்ததற்கான வெளிப்படையான ஒரு அடையாளமாகும்.

யாக்கோபுடன் போரிட்ட அந்த அந்நியன் யார்? முதலாவது அவர் ஒரு புருஷன் என்று அழைக்கப்பட்டார் (ஆதியாகமம் 32:24). ஆனால் அடுத்த நாள் யாக்கோபு “நான் தேவனை முகமுகமாய்க் கண்டேன்” என்று சொன்னான் (ஆதியாகமம் 32:30) (அழுத்தமாகக் கூறப்படுகிறது). பின்பு ஓசியா தீர்க்கதரிசியும் இந்தப் போரட்டத்தைக் குறித்து “அவன் தூதனாவரோடே போராடி மேற்கொண்டான்” என்று கூறுகிறார்.

ஆகவே அந்தப் புருஷன் ஒரு மனிதன், இருந்தாலும் தேவன்; மேலும், தேவனால் அனுப்பப்பட்ட தூதுவனாகிய ஒரு தேவதூதன். இந்த விவரிப்புகளுக்கான விடையாக அமைபவர், இந்த உலகத்தில் ஒரே ஒருவர் தான் உண்டு. அதாவது ஒரு மனிதன், ஆனாலும் தேவன், தேவனால் அனுப்பப்பட்ட தூதனானவர். அவர் தான் மனித வரலாற்றில் மனிதனாக வெளிப்பட்ட நாசரேத்து ஊரானாகிய இயேசு. அவர் ஒரு மனிதன் ஆனாலும் தேவன், மேலும் தேவனால் மனிதர்களுக்கு அனுப்பப்பட்ட ஒரு தூதுவன் ஆவார்.

ஒருவேளை நீங்கள் இதுவரைக்கும் முழுவீச்சில் ஈடுபடவில்லை எனக் கருதலாம். உங்கள் இருதயம் ஆதாம், யாக்கோபு இவர்களின் இருதயம் போல் இருந்ததேயன்றி ஆபிரகாம், யோபு இவர்களின் இருதயம் போல் இல்லை. நீங்களும் கூட உங்கள் சொந்த பெலத்தில்தான் போராடிக்கொண்டிருக்கிறீர்களே தவிர தேவன் உங்கள் வாழ்வினை நடத்த ஒப்புக்கொடுக்கவில்லை. இவ்வாறாக இருந்தால் நீங்கள் யாக்கோபு செய்ததை மட்டும் செய்வது அவசியமாகிறது. தயங்காமல் இயேசு கிறிஸ்துவினிடத்தில் உங்களை முழுமையாக அர்ப்பணியுங்கள்.

நம்முடைய பயணத்தைத் தொடர்வதற்கு முன்பாக உங்களைச் சரிசெய்து கொள்ள விரும்புகிறீர்களா? அப்படியானால் இங்கே நீங்கள் ஜெபிப்பதற்காக ஒரு ஜெபம் உள்ளது.

> தேவனாகிய இயேசுவே! நீரே என் இரட்சகர் என்பதையும் நீர் முழுமையான கீழ்படிதலுக்கு ஒப்படைப்பதை விரும்புகிறீர் என்பதையும் உண்மையாக நம்புகிறேன். ஆனால் நான் இருதயத்தை உமக்கு முன்பாக உத்தமமாகக்

காத்துக்கொள்ளவில்லை. நான் என்னுடைய சுயவழியைத் தேடிக் கொண்டு என்னுடைய சுயபலத்தையே சார்ந்திருந்து உலகத்தோடு ஒட்ட வாழ்ந்து கொண்டிருந்தேன். நான் இதற்காக வருந்துகின்றேன். நான் என்னுடைய சுதந்தரத்தை ஒதுக்கிவிட்டு தயங்காமல் தேவனுடைய வழிநடத்துதலுக்கு என்னை முற்றிலுமாகச் சரண் செய்கிறேன். இந்த நேரத்திலிருந்து உம்முடைய முழுமையான கிருபைக்கு என்னை ஒப்புக்கொடுக்கிறேன்.

தயாரா? நாம் முன்னேறிச் செல்லுவோம்! படை அணிவகுத்துச் செல்லுகிறது. ஆனால் இப்பொழுது, முதலாவது சோதனை ஆரம்பமாகிறது. நீங்கள் தீர்மானம் செய்துகொள்ள வேண்டிய ஒரு முக்கியமான நடத்தையாவது யுத்தத்திற்கான ஆயத்தமாகும். நாம் இதைக் கிதியோனுடைய படையை வைத்துக் கண்டுகொள்ள வேண்டும்.

2

யார் தகுதியுடையவராவர்?

சமீபகாலத்தில் ஏசாயா 55:8-9 இல் உள்ள தேவனின் வார்த்தைகளால் நான் அதிகமாக உணர்த்தப்பட்டேன்.

> என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல; உங்கள் வழிகள் என் வழிகளும் அல்லவென்று கர்த்தர் சொல்லுகிறார். பூமியைப் பார்க்கிலும் வானங்கள் எப்படி உயர்ந்திருக்கிறதோ, அப்படியே உங்கள் வழிகளைப் பார்க்கிலும், என் வழிகளும் உங்கள் நினைவுகளைப் பார்க்கிலும் என் நினைவுகளும் உயர்ந்திருக்கிறது.

தேவனின் வழிகள் மற்றும் எண்ணங்கள் எவ்வளவாய் நம்முடையவற்றிலிருந்து பிரிந்து பெரிய பிளவாய்க் காணப்படுகிறது என்பதை நான் சிந்தித்துக் கொண்டிருக்கும்போது, நியாயாதிபதிகள் 6-8வரை உள்ள அதிகாரங்களில் கிதியோனின் விவரங்களைக் குறித்து நான் அதிகமாய் ஞாபகப்படுத்தப்பட்டேன்.

இக்காலத்தில், இஸ்ரவேல் பாவம் மற்றும் விக்கிரக ஆராதனையில் விழுந்து விட்டது. அதன் நியாயத்தீர்ப்பாக, மீதியானியரின் படைகள் அவர்களின் நிலத்தை ஒவ்வொரு வருடமும் முற்றுகையிட்டு, நிலத்தின் விளைச்சல்களைச் சூரையாட தேவன் அனுமதித்தார்.

ஒரு நாள், மீதியானியரின் கைக்குத் தப்புவிக்க கிதியோன் ஒளிவு மறைவாக கோதுமையை ஆலையருகில் போரடித்துக் கொண்டிருக்கும் போது, கர்த்தருடைய தூதனானவர் அவருக்குத் தரிசனமாகிக் கூறினது: “பராக்கிரமசாலியே கர்த்தர் உன்னோடே இருக்கிறார்” (நியாயாதிபதிகள் 6:12). கிதியோன் தன்னைப் பார்த்த விதமாய் அல்ல. ஆண்டவர் திட்டமாய் வேறு விதமாய் அவனைப் பார்த்தார். கிதியோன் தன்னை இளைஞனாவும், பெலவீனனாகவும், பயனற்றவனாகவும் எண்ணினான். ஆனால், தேவன் அவனைப் “*பராக்கிரமசாலியே*” என்று வாழ்த்தினார்.

நான் முன்னால் குறிப்பிட்டது போல, நாம் நம்மை எவ்வாறு எண்ணுகிறோம் என்பதைக் குறித்துச் சிறிதே கரிசனைக் கொண்டு,

தேவன் நம்மை எவ்வாறு பார்க்கிறார் என்பதையே அதிகமாக அறிய வேண்டும். கிறிஸ்துவில் நாம் ஒவ்வொருவரும் "புதிய மனிதன் . . . மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும், தேவனின் வார்த்தைக்கு ஏற்ப சிருஷ்டிக்கப்பட்டவன்" (எபேசியர் 4:24). நம்மைக் குறித்து இவ்வாறு எண்ணும்போது, யுத்தக் களத்தில் நாம் எவ்வாறு ஈடுபடுகிறோம் என்பதை இது தவறாமல் விளக்கிக் காட்டும்.

இஸ்ரவேலைத் தலைமைத் தாங்கி மீதியானியருக்கு விரோதமாகப் போர் செய்யும்படி தேவன் கிதியோனுக்கு ஆணையிட்டார். கிதியோன் கீழ்ப்படிந்து, வட திசையில் பதிவிருந்த மீதியானியருக்கு விரோதமாக ஆரோத் என்னும் கிணற்றண்டையில் போர் படையை நிறுத்தினான்.

இருபக்கமும் போரிட்டவர்களின் எண்ணிக்கை யாது? கிதியோனின் சேனை 32,000 மீதியானியரின் சேனை 35,000 இப்படியாக கிதியோன் 32,000 ஆண்கள் (பார்க்கவும் நியாயாதிபதிகள் 7:3) 1,35,000 மீதியானியர்களைச் (நியாயாதிபதிகள் 8:10 ஐப் பார்க்கவும்) சந்தித்தார்கள். தன்னைப் போன்று நான்கு மடங்கு மக்கள் அங்கிருந்தனர். ஆண்டவர், உன்னோடே இருக்கிறவர்கள் மிகுதியாய் இருக்கிறார்கள். (நியாயாதிபதிகள் 7:2) என்று சொன்னபோது, கிதியோனின் எதிர் விளைவை எண்ணிப் பாருங்கள்.

நம்மைப் பற்றி நாம் எப்படி பார்க்கிறோம் என்பதைவிட தேவன் நம்மை எப்படி பார்க்கிறார் என்பதில் அதிகக் கரிசனை செலுத்த வேண்டும்.

தனது சேனையில் பயந்து போய் இருப்போரை அனுப்பிவிடும்படி ஆண்டவர் கிதியோனுக்கு அறிவுரை வழங்கினார். அதன் விளைவாக 22,000 மனிதர்கள் போய் விட்டனர். 10,000 பேர் மட்டும் தான் கிதியோனுடன் இருந்தனர். இந்நிலையிலும் அவன் 13:1 என்ற விகிதத்தில் தான் இருந்தான்.

தேவன் இன்னும் முடிவு சொல்லவில்லை, "மக்கள் இன்னும் அதிகமாகவே இருக்கிறார்கள்" (வசனம் 4) என்று கூற கிதியோன் வியப்படைந்தான்.

பின்னர் கிதியோனிடம் அவனுடைய ஆட்களைத் தண்ணீரண்டைக்குக் கொண்டு வரச் சொன்னார். அவர்கள் தண்ணீர் குடித்த விதத்தைச் சோதித்தார். இரண்டு முழங்கால்களையும் ஊன்றி தண்ணீர் குடித்தவர்கள் நீக்கப்பட்டனர். நாயைப் போன்று நக்கிக் குடித்தோரே பரீட்சையில் தேறினர் (நியாயாதிபதிகள் 7:4-7ஐப் பார்க்கவும்).

தேவையான ஒரு முக்கியமான நடத்தை

இந்தச் சோதனையை ஒருமுகப்படுத்துவதற்கு ஒரு முக்கிய செயல் *விழிப்புணர்வு* ஆகும்.

முதலாவது, சாதாரண முறையில் தண்ணீர் குடித்த ஜனங்களைப் படம் பிடித்துக் கொள்ளுங்கள். இடது கையிலுள்ள பரிசையை மற்றும் ஈட்டியை வைத்துவிட்டு, முழங்காலிட்டு, தண்ணீரில் தங்கள் முகத்தைப் புதைத்து விட்டார்கள். இந்நிலையில் எதிரி திடீர் தாக்குதல் நடத்த வாய்ப்புண்டு. எதிர் வரும் விரோதியை அவர்களால் பார்க்க முடியாது. போர் ஆயுதங்களை உபயோகிக்க ஆயத்த நிலையில் அவர்கள் இல்லை. அவர்கள் ஆயத்தம் செய்வதற்கு முன்னால், விரோதி வெற்றி கொண்டு விடுவான்.

நாய்களைப் போல் நக்கிக் குடித்தவர்களின் நிலை என்ன? நாய் குடிக்கும்போது தண்ணீருக்குள் தன் மூக்கைப் புதைப்பதில்லை. தனது நாக்கை தண்ணீருக்குள் விட்டு நக்கி குடிக்கிறது. நீர்த்துளிகளும் சிந்தி விடுகின்றன.

இப்படிக் குடித்தோரை நாம் எப்படிக் காண்கிறோம்? (நியாயாதிபதிகள் 7:6 கூறுகிறது.) தங்கள் கையால் அள்ளி, தங்கள் வாய்க்கெடுத்து நக்கிக் கொண்டார்கள். ஒரு முழங்காலில் தான் அவர்கள் நின்றார்கள். பரிசையை இடது கையில் வைத்திருந்தார்கள். வலது கையினால் தங்கள் ஈட்டி அல்லது வாளை தங்கள் பக்கம் வைத்திருந்தார்கள். இந்தக் கோணத்தில் அவர்கள் உஷாராய் இருந்தார்கள். திடீர் தாக்குதலுக்கு விழிப்பாய் இருந்தார்கள். அவர்களின் பரிசைகள் ஆயத்தமாய் இருந்தன. தங்கள் ஈட்டியையோ, வாளையோ உடன் எடுக்கக்கூடிய நிலையில் இருந்தார்கள். கவனக்குறைவாக விரோதி அவர்களைப் பிடிக்க வாய்ப்பில்லை.

இவ்விரண்டாம் பரீட்சையில் கிதியோனின் மனிதர்களில் 300 பேர் தான் தேறினர். 1,35 000 மீதியானியரை அவர்கள் சந்தித்தனர். 450:1 என்ற விகிதத்தில் அவர்கள் இருந்தனர்.

வேண்டாம் என்று தள்ளப்பட்டவர்களில் சிலர், “நல்ல வேளை இப்போரில் நாம் இல்லை. கிதியோன் பைத்தியக்காரன்தான். ஒரு மனிதன் எப்படித் தண்ணீர் குடித்தால் என்ன? பார்க்கலாம், அவனும், அவனது முட்டாள்களையும்” என்று அவர்களுக்குள்ளேயே சொல்லியிருந்திருப்பார்கள் என்று நான் யூகிக்கிறேன்.

முடிவில் கிதியோனும், அவனது 300 பேரும் மீதியானியர் மேல் திடீர் தாக்குதல் செய்து, அவர்களைக் குழப்பத்திற்குள்ளாக்கினார்கள்.

பின்னர் மற்ற இஸ்ரவேலரும் கிதியோனோடு சேர்ந்து மீதியானியரை முற்றிலுமாய்த் தோற்கடித்தார்கள்.

நடந்தவை விளக்கம் அளிக்கிறது. முதல் தாக்குதலுக்கு முந்நூறு பேர்தான் தகுதி பெற்றனர். அவர்கள் மேற்கொண்ட வேளையில், ஆயிரக்கணக்கான இஸ்ரவேலர்கள் மிரண்டு ஓடும் மீதியானியர்களைத் துரத்திச் செல்ல ஆரம்பித்தனர்.

இம்முழு விவரமும் நம் வழிகளிலிருந்து, தேவனின் வழிகள் எவ்வளவு வித்தியாசமானவை என்று எடுத்துரைக்கிறது. கிதியோன் தனியாக இருந்தால் என்னோடு இருப்பவர் சிலர். மேலும் பட்டாளம் தேவை என்று சொல்லியிருப்பான். ஆனால் தேவனின் தொலைவுத் தோற்றம் வேறு! “உன்னோடு இருப்பவர் அதிகம்.” முடிவில் தன்னோடு சேர்ந்தவர்களில் 100க்கு ஒருவர் தான் கிதியோனோடு இருந்தனர். தேவனிடம் “எத்தனை மக்கள்” என்பதல்ல. “எப்பேர்ப்பட்ட மக்கள்” என்பதே கேள்வி.

ஒரு தனிப்பட்ட மதிப்பீடு

இந்தக் கணிப்பின்படி நாம் ஒவ்வொருவரும் ஒரு தனிப்பட்ட மதிப்பீட்டை உண்டாக்குவது அவசியமாகிறது. இன்று தேவன் தனது படைக்கான ஆட்களைச் சேகரிக்கிறார். அதற்குத் தகுதியுடையவர்கள் ஒரு சிலராக இருந்தாலும் அதில் ஒருவனாக நான் இருப்பேனா? அல்லது பயத்திற்கு இடம் கொடுத்ததினால் விலக்கப்பட்ட 22,000 இல் ஒருவனாக இருப்பேனா? அல்லது தங்களுடைய ஆயுதத்தைக் கீழே போட்டுவிட்டு முகங்களைத் தண்ணீருக்குள் ஆழ்த்தித் தண்ணீர் குடித்த 9,700 பேரில் ஒருவனாக இருப்பேனா?

அன்றாட வாழ்க்கையின் காரியங்களில் *அடிக்கடி முகத்தைப் புதைத்துக் கொண்டு* சாதாரணமாக இருப்பது மிகவும் எளிதான காரியம். நமக்கு ஒவ்வொரு நாளும் எதிர்படும் அன்றாடத் தேவைகளை ஏற்றுக் கொண்டு நாம், இருளின் இராஜ்யத்திற்குரிய கண்ணுக்குப் புலப்படாத சேனைகளோடு நமக்கு உண்டாகும் ஆவிக்குரிய போராட்டத்தை மறந்து விடுகிறோம். இவைகள் நாம் ஆயத்தநிலையில் இல்லாத தருணத்தைப் பயன்படுத்தத் தொடர்ச்சியாக நம்மை கவனித்துக் கொண்டிருக்கின்றன.

ஒவ்வொரு தருணத்திலும் இடைவிடாத விழிப்புணர்வுடன் இருப்பதற்கு மனசாட்சியும், தனிப்பட்ட கட்டுப்பாடும் தேவைப்படுகிறது. இது நம்முடைய சாதாரண எண்ணங்களுக்கும், கிறிஸ்தவ நடத்தையையும், பால்வகை ஒழுக்கத்தையும் கடந்து அப்பால் செல்லுகிறது. இருந்தாலும் புதிய ஏற்பாடு நம்மைத் தெளிவாக

எச்சரிக்கிறது. *"தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள்; ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம் போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித் திரிகிறான்"* (1பேதுரு 5:8). இந்த எச்சரிப்பை அசட்டைச் செய்தோமானால் சாத்தானுடைய புண்படக்கூடிய, சூட்சுமமான, முன்னாலே கண்டுகொள்ள முடியாத தாக்குதலுக்கு ஆளாவோம்.

எடுத்துக்காட்டாக, விடுமுறையைப் பொறுத்தமட்டில் நானும் ரூத்தும் அவ்வப்போது வேளாவேளைக்குச் சில நாட்கள் ஓய்வு எடுத்துக்கொண்டு தேவனுடைய பாதத்தில் காத்திராவிட்டால் எங்களுடைய ஊழியத்தைத் தொடர்ந்து திறனுடன் செய்ய முடியாது என்பதைக் கண்டு கொண்டோம். (எங்களுடைய விடுமுறை நாட்கள் உண்மையாகப் பரிசுத்த நாட்களாகவே இருக்கும்.) ஆனால் நான் ஒரு விஷயத்தைக் கற்றுக்கொண்டேன். அதாவது *சாத்தான் ஒருபோதும் விடுமுறை எடுத்துக் கொள்வதில்லை*. ஓய்வாக இருப்பது நமக்கு மிகவும் அவசியம் என்று நாம் உணரும் நேரத்தில் சாத்தான் நமக்கு விரோதமாக முழுமையாக எதிர்பாராத அழுத்தத்தை உண்டாக்கி விடுவான். உடனடியான உபயோகத்திற்கு நாம் நம்முடைய ஆயுதங்களைத் தயார் நிலையில் வைக்காததனால் அவன் எளிதாக நம்மைத் தன் வலையில் சிக்கும்படிச் செய்து விடுவான்.

அன்றாட வாழ்க்கையின் காரியங்களில் அடிக்கடி முகத்தைப் புதைத்துக் கொண்டு சாதாரணமாக இருப்பது மிகவும் எளிதான காரியம். இவ்வாறு இருந்து கொண்டு நாம் இருளின் இராஜ்யத்திற்குரிய கண்ணுக்குப் புலப்படாத சேனைகளோடு நமக்கு உண்டாகும் ஆவிக்குரிய போராட்டத்தை மறந்து விடுகிறோம்.

இதனால் நீண்ட விடுமுறை நாட்களை எடுத்துக் கொள்ளக் கூடாது என்று அர்த்தமா? இல்லை! ஆனால் நாம் இந்த ஓய்வு எடுத்துக் கொள்ளும் வேளையிலும் நம்முடைய *முகங்களைப் புதைத்துக் கொள்ளக்கூடாது* என்பது அர்த்தமாகும். நாம் நம்முடைய ஆயுதங்களைக் கீழே வைக்கக் கூடாது. இதிலிருந்து அடிக்கடி நாம் எந்த வேளையிலும் மிகுந்த விழிப்புணர்வுடன் இருக்கப் பயிற்சி செய்து கொள்ள வேண்டும் என்பதை உண்மையாகக் கற்றுக்கொள்ள வேண்டும்.

பல வித்தியாசமான வகையில் இது கையாளக் கூடிய ஒரு உதாரணம் ஆகும். இவை குடும்ப உறவுகள், வியாபார சம்பந்தமான செயல்கள், சிறப்பான கொண்டாட்டங்கள், கல்வி சம்பந்தமான

வாய்ப்புகள் ஆகியவைகள் ஆகும். நாம் இவைகள் எல்லாவற்றிலும் பங்கு கொள்ளலாம். ஆனால் இவற்றில் ஒன்றில் கூட நாம் நம் முகத்தை ஆழ்த்தி அமிழ்ந்து போகக் கூடாது.

கிதியோனுடைய சேனையில் 1/400 அதாவது நானூறு பேரில் ஒருவர் தான் தகுதி பெற்றிருந்தார் என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். இன்று இந்த விகிதாச்சாரம் வித்தியாசமாய்க் காணப்படுகிறதல்லவா?

ஒருமுறை நாம் விழிப்புணர்வு சோதனையில் வெற்றி பெற்றோமானால் அது ஒரு தொடக்கம் மட்டும் தான். நாம் இப்பொழுது நம்முடைய தனித்தன்மையானது, நம்முடைய ஆயத்தத்தை எப்படிப் பாதிக்கிறது என்பதைப் பார்ப்போம். இவ்வாறாக ஒரு போர் வீரனின் நடத்தைக்கான அடுத்த படியை வரையறுப்போம்.

3

தேவனின் படைக்கான தேவைகள்

சமாதானத்தின் தேவன் தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக, உங்கள் ஆவி, ஆத்துமா சரீரம் முழுவதும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக.

1 தெசலோனிக்கேயர் 5:23

இதுதான் பவுலடியார்களின் ஜெபம் அதாவது கிறிஸ்தவர்கள் முழுவதுமாகப் பரிசுத்தம் பெற வேண்டும். பின்பு முழுமையான மனிதனின் தனித்தன்மை காக்கப்படுவதற்கான மூன்று இடங்களைக் குறிப்பிடுகிறார். அவையாவன ஆவி, ஆத்துமா, சரீரம் என்பனவாகும்.

இந்த மூன்று பொருள்கள் ஒவ்வொன்றும் நம்முடைய தனித்தன்மைக்கான உயர்வான பொருட்கள் என்பதை அநேக கிறிஸ்தவர்கள் கொஞ்சம் புரிந்து கொண்டிருக்கிறார்கள். எனினும் வேதாகமம் அவைகளின் தன்மை ஒவ்வொன்றிற்கும் உள்ள உறவு மற்றும் ஒவ்வொருவரும் எப்படி செயலாற்ற வேண்டும் என்பதை ஒரு தனித்தன்மை வாய்ந்த "கண்ணாடி" போலக் காட்டுகிறது. இந்தக் கண்ணாடியை உபயோகிக்கத் தவறினால் அது நமக்கு அதிகமாக உள்ளான வெறுப்புத் தன்மையையும் ஒற்றுமையின்மையையும் வெளியே காட்டும்.

மனிதன் ஆரம்பத்தில் படைக்கப்படும்பொழுது தேவன் சொன்னார் (ஆதியாகமம் 1:26). பின்பு தேவன் "நமது சாயலாகவும்" "நமது ரூபத்தின்படியேயும்" மனுஷனை உண்டாக்குவோமாக என்றார். சாயல் என்பது மனிதனுடைய வெளிப்படையான தோற்றத்தைக் குறிக்கிறது. ஒரு வழியில் இது மற்ற படைப்புகளில் உண்மையாகாது. மனிதன் மட்டும்தான் தேவனின் சாயலை வெளிப்படுத்திப் பிரதிபலிக்கிறான். தேவகுமாரன் உலகத்தில் வந்த நாட்களில் பொருத்தமாக மனித உருவில் வந்தார் - ஒரு காளையாகவோ வண்டாகவோ வரவில்லை - சேராபீன் போல பரலோகப் பாத்திரமாகவும் வரவில்லை.

விருப்பம் என்பது மனிதனுடைய உள்ளான இயற்கைத் தன்மையைக் குறிப்பிடுகிறது. வேதம் தேவனை மூவரான ஆட்களாகக் காட்டுகிறது: அதாவது பிதா, குமாரன், பரிசுத்த ஆவி ஆகும். இதைப் போல மனிதனும் ஆவி, ஆத்துமா, சரீரம் ஆகிய மூன்று கூறுகளால் ஆனவன் என்று வெளிப்படுத்துகிறது. இதன்படி மனிதனுடைய படைப்பு இந்த மூன்று இயற்கையமைப்புகளைக் கொண்ட ஆளாகக் குறிப்பிடப்படுகிறது. "தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார், மனுஷன் ஜீவாத்துமாவானான்" (ஆதியாகமம் 2:7). சரியாகச் சொல்லப் போனால் ஒரு வாழும் ஆத்துமா.

மனிதனுடைய ஆவி தேவனுடைய சுவாசத்தை சுவாசிக்கும்படிச் செய்ததால் உண்டானதாகும். அவனுடைய சரீரம் களிமண்ணால் உருவானது. மண்ணிலிருந்து மாம்சத்துடன் வாழும் மனிதனாக மாற்றப்பட்டான். இவ்வாறாக அவன் ஒரு வாழும் ஆத்துமாவாக வந்தான்.

மனிதனும் ஆவி, ஆத்துமா, சரீரம் ஆகிய மூன்று கூறுகளால் ஆனவன்.

இவ்வாறாகப் படைக்கப்பட்ட ஆன்மாவில் சுயம் என்னும் கூறு ஆள்தத்துவத்தைக் குறித்தது. இதற்கு மூன்று கூறுகள் உள்ளன: சித்தம், அறிவு, உணர்ச்சி. இது "எனக்கு வேண்டும்", "நான் நினைக்கிறேன்", "நான் உணர்கிறேன்" என்கின்ற மூன்று நிலையில் வெளிப்படுகிறது. இயற்கைக்கு அப்பாற்பட்ட தேவ கிருபையால் தொடப்பட்டாலன்றி, மனிதனுடைய பழக்க வழக்கங்கள் இம்மூன்று கூறுகளால் கட்டுப்படுத்தப்படுகிறது.

பாவத்தின் விளைவும் மீட்பும்

தேவன் மனிதனோடு சொந்த ரீதியில் ஐக்கியம் கொள்வதற்கு படைக்கப்பட்டான். ஆனால் அவனுடைய கீழ்ப்படியாமையின் பாவம், மேற்கூறிய மூன்று கூறுகளிலும் அழிவின் சுவடைப் பதித்துவிட்டது.

தேவனோடு உள்ள உறவு துண்டிக்கப்படும்பொழுது மனிதனுடைய ஆவி செயலிழக்கிறது. இது நிறைவு பெறுவதற்கான தேவனுடைய எச்சரிப்பு ஆகும். "*ஆனாலும் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்க வேண்டாம். அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார்*" (ஆதியாகமம் 2:17). ஆதாமினுடைய சரீரம் இப்பொழுது அழிவுக்குள்ளானது அதனால்தான், வியாதி, வீழ்ச்சி, மரணம் ஆகியவை செயல்படுகிறது. தொள்ளாயிரம் ஆண்டுகளுக்கு மேல் வாழ்ந்த பிறகு அவன் மரித்துப் போகிறான்.

தன்னுடைய சுயசித்தத்தைச் செய்ததின் மூலமாக தேவனுக்கு நேரிடையாக கீழ்ப்படியாமற் போனான். மனிதன் தன்னுடைய ஆத்துமாவிலும் எதிர்க்க ஆரம்பித்தான். அந்த நேரத்திலிருந்து ஒவ்வொரு மனிதனும், பின்னர் ஆதாமிடத்திலிருந்து ஒரு எதிர்க்கும் குணத்தைப் பெற்றுக் கொண்டான்.

எபேசியர் 2:1-3 வரை பவுலடிகளார், எதிர்ப்பின் விளைவுகள் நம் ஒவ்வொருவரையும் எவ்வாறு பாதித்துள்ளது என்பதை விளக்குகிறார்.

> அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் மரித்தவர்களாயிருந்த உங்களை உயிர்ப்பித்தார். அவைகளில் நீங்கள் முற்காலத்திலே இவ்வுலக வழக்கத்திற்கேற்ற படியாகவும், கீழ்ப்படியாமையின் பிள்ளைகளிடத்தில் இப்பொழுது கிரியை செய்கிற ஆகாயத்து அதிகாரப் பிரபுவாகிய ஆவிக்கேற்ற படியாகவும் நடந்து கொண்டீர்கள். அவர்களுக்குள்ளே நாமெல்லாரும் முற்காலத்திலே நமது மாம்ச இச்சையின் படியே நடந்து, நமது மாம்சமும் மனசும் விரும்பினவைகளைச் செய்து, சுபாவத்தினாலே மற்றவர்களைப் போலக் கோபாக்கினையின் பிள்ளைகளாயிருந்தோம்.

பாவத்தின் விளைவாக நாம் எல்லோரும் நம்முடைய ஆவியிலும் மரித்தவர்களாகிவிட்டோம். நம்முடைய ஆத்துமாக்களிலும் தேவனுக்கு விரோதமாகச் செயல்படுகிறோம். நம்முடைய சரீரங்கள் கூட வியாதியின் கொடுமை, அழிவு, மரணம் ஆகியவற்றின் வலிமையினால் துன்பப்படுகின்றன.

எனினும் தேவனுடைய அன்பிற்கு எல்லையே இல்லை. ஆகவே அவர் தொடர்ந்து மனிதனோடு அவருக்குள்ள உறவைத் திருப்பிக்கொள்ள விழைகிறார். "நம்மில் வாசமாயிருக்கிற ஆவியானவர் நம்மிடத்தில் வைராக்கிய வாஞ்சையாயிருக்கிறாரென்று வேதவாக்கியம் வீணாய்ச் சொல்லுகிறதென்று நினைக்கிறீர்களா?" (யாக்கோபு 4:5). எல்லாவற்றிற்கும் மேலாகச் சிலுவையில் இயேசுவின் தியாகத்தினால், இழந்து போன உறவைத் திருப்பிக் கொள்வதற்கு ஒரு வழியைத் திறந்துள்ளார்.

தேவனுடைய அன்பிற்கு எல்லையே இல்லை. ஆகவே அவர் தொடர்ந்து மனிதனோடு அவருக்குள்ள உறவைத் திருப்பிக் கொள்ள விழைகிறார்.

நமது ஆவியில் இரட்சிப்பு வெளியரங்கமாய் கிரியை செய்வதை பவுல் விவரிக்கிறார். "தேவனோ இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராய் நம்மில் அன்பு கூர்ந்த தம்முடைய மிகுந்த அன்பினாலே அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மைக்

கிறிஸ்துவுடனே கூட உயிர்ப்பித்தார்; கிருபையினாலே இரட்சிக்கப்பட்டீர்கள்" (எபேசியர் 2:4-5). நமது ஆவிகள் தேவனோடு திரும்ப ஒன்று சேர்ந்து, மறுபடியும் ஜீவனோடிருக்கின்றன. அதே நேரத்தில் மன்னிப்பு மற்றும் விசுவாசத்தின் மூலமாய் நம் ஆத்துமாக்கள் அடங்காமையிலிருந்து மீட்கப்பட்டு, தேவனோடு ஒப்புரவாகின்றன.

> நாம் தேவனுக்கு சத்துருக்களாயிருக்கையில், அவருடைய குமாரனின் மரணத்தினாலே அவருடனே ஒப்புரவாக்கப்பட்டோமானால், ஒப்புரவாக்கப்பட்ட பின் நாம் அவருடைய ஜீவனாலே இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே. அதுவுமல்லாமல், இப்பொழுது ஒப்புரவாகுதலை நமக்கு கிடைக்கப் பண்ணின நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மூலமாய் நாம் தேவனைப் பற்றியும் மேன்மை பாரட்டுகிறோம்.
>
> ரோமர் 5:10-11

தேவனுக்கு விரோதமாக நாம் கிளர்ச்சியில் ஈடுபட்டோம் என்று உணரும்போது, மனந்திரும்புதல் இல்லாமல் உண்மையான இரட்சிப்பு இல்லை என்று அறிந்து கொள்ளுவோம். மனந்திரும்புதல் என்பது நமது எதிர்ப்பைக் கீழே வைத்துவிடுதலும், தேவனுடைய நீதியான அரசாட்சிக்கு அடிபணிதலுமேயாம்.

இரட்சிப்பு சரீரத்திற்கும் வகை செய்கிறது. பாவத்தின் அடிமைத்தனத்தினின்று விடுவிக்கப்பட்டு, நமது சரீரம் பரிசுத்த ஆவி தங்கும் ஆலயமாகி விடுகிறது. நமது சரீரத்தின் அவயவங்கள் நீதியின் ஆயுதங்களாகி விடுகின்றன (ரோமர் 6:13ஐப் பார்க்கவும்). இறுதியாக கிறிஸ்துவின் வருகையின் போது, நமது சரீரங்கள் கிறிஸ்துவைப் போன்று அழிவில்லாத சரீரமாக மாற்றப்படுகிறது.

சீஷத்துவத்திற்கான தேவைகள்

ஆவிக்குரிய போராட்டத்தில் ஈடுபடுவோருக்கு இது எப்படி பொருந்துகிறது? இயேசு அப்போஸ்தலருக்கு எல்லா நாட்டு மக்களையும் சீஷர்களாக்கும்படிக்குக் கட்டளைக் கொடுத்தார். சபை அங்கத்தினர்களாக்கும்படி அவர்களுக்குச் சொல்லவில்லை. நாம் முன்பு படித்த விழிப்புணர்வுக்கு அடுத்ததாக, ஓர் போர்வீரனின் உருவாக்கப்பட வேண்டிய சிறந்த குணம் சீஷத்துவமே. ஆள்தத்துவத்தின் ஒவ்வொரு பாகத்திலும் சரீரம், ஆத்துமா மற்றும் ஆவியில் ஒரு புரட்சிகரமான எதிர் செயலை ஏற்படுத்த வேண்டும்.

நமது சரீரத்திற்கு வேண்டிய தேவை ரோமர் 12:1இல் கூறப்பட்டுள்ளது. "நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும், தேவனுக்குப் பிரியமான ஜீவபலியாக ஒப்பு கொடுக்க வேண்டுமென்று" இஸ்ரவேல் மக்கள் பழைய உடன்படிக்கையின்படி பலிபீடத்தின் மேல் மிருகங்களை பலியிட்டார்களோ, அதே போன்று நமது சரீரங்களை தேவனுக்குப் பலிபீடத்தின் மேல் படைக்க வேண்டும், என்றாலும் ஓர் முக்கியமான வித்தியாசம் உண்டு. இஸ்ரவேலர் தாங்கள் பலியிட்ட மிருகங்களைக் *கொன்றனர்*. நாம் தேவனுக்கு ஒப்புக்கொடுக்கும் சரீரம் *ஜீவனுள்ள பலியாகும்.*

எனினும் அந்த நேரத்திலிருந்து அதற்குப் பின் நம்முடைய சரீரங்கள் அதற்கு மேலும் நமக்குச் சொந்தமானதல்ல. அவைகள் தேவனுடைய சொத்துக்களாகும், தேவனுடைய ஆலயமாகும். நாம் வெறும் கண்காணிகளாக இருந்து அவருடைய ஆலயமாகிய நம்முடைய சரீரத்தில் கவனம் செலுத்துவதைக் குறித்து அவருக்குக் கணக்குக் கொடுக்க வேண்டும். இன்றைக்குப் பெரும்பான்மையான கிறிஸ்தவர்கள் துரதிர்ஷ்டவசமாக, தங்களுடைய சரீரங்கள் தங்களுக்கே சொந்தமானது என்று நினைத்துத் தாங்கள் விரும்பிய எல்லாவற்றையும் சரளமாகச் செய்கிறார்கள்.

நம்முடைய ஆத்துமாக்களைக் குறித்து இயேசு மத்தேயு 16:24-25இல் தனக்குத் தேவையானதாகக் கூறுவதாவது,

> அப்பொழுது, இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி: ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத் தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக் கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன். தன் ஜீவனை இரட்சிக்க விரும்புகிறவன் அதை இழந்து போவான்; என் நிமித்தமாக தன் ஜீவனை இழந்து போகிறவன் அதைக் கண்டடைவான்.

நாம் மரிக்க விரும்பும் இடமே நம்முடைய சிலுவை இருக்கும் இடமாகும். தேவன் இதை நம்மேல் திணிக்கவில்லை. நாம் இதை நம்முடைய சொந்த சித்தத்தின்படியே ஏற்றுக்கொள்ளுகிறோம். இங்கேதான் நாம் நம்முடைய ஆத்துமாக்களை வெறுத்துவிட வேண்டும். இதன் அர்த்தமாவது ஆத்துமாவின் மூன்று முக்கியத் தேவைகளுக்கு இல்லை என்று சொல்வதாகும். 'எனக்கு வேண்டும்', 'நான் நினைக்கிறேன்', 'நான் உணருகிறேன்' என்ற செயல்கள். இப்பொழுதிலிருந்து, இனி மேல் நாம் இந்த மூன்று எண்ணங்களால் கட்டுப்படுத்தப்படப் போவதில்லை. இவைகளின் நிலை தேவனுடைய வார்த்தையினாலும், தேவனுடைய சித்தத்தினாலும் ஆட்கொள்ளப்படும். நாம் தேவனுடைய வார்த்தைக்கும், தேவனுடைய சித்தத்திற்கும்

கீழ்ப்படியும் போது தேவன் நமக்கு வழங்கும் புதுவாழ்வைக் கண்டு கொள்வோம்.

நம்முடைய சரீரங்கள், நம்முடைய ஆத்துமாக்கள், நம்முடைய ஆவி இவைகளுக்காக தேவன் விரும்புவனவற்றை நாம் நிறைவு செய்யும்பொழுது தேவனுடைய ஐக்கியத்திற்குள்ளாகப் பிரவேசிக்கும்படியான உரிமை நமக்குண்டு. விழுந்து போனதினால் இழந்து போனவற்றை விட இது இன்றும் அதிக ஆச்சரியப்படத்தக்கதாகும். 1 கொரிந்தியர் 6: 15-16ஐப் பாருங்கள். இங்கே பவுலடிகளார் கிறிஸ்தவர்களை வேசிகளோடான துன்மார்க்கமான பாலியல் தொடர்புக்கு விரோதமாக எச்சரிக்கை செய்கிறார். ஏனென்றால் இதன் பொருள் வேசியும் அவனும் ஒரே மாம்சமாயிருப்பார்கள் என்பதாகும். இதற்கு எதிராக அவர் தொடர்ந்து கூறுவது, “அப்படியே கர்த்தரோடிசைந்திருக்கிறவனும், அவருடனே ஒரே ஆவியாயிருக்கிறான்”என்பதாகும். (வசனம் 17 அழுத்தமாகக் கூறுகிறது.)

இதனுடைய அர்த்தம் மிகவும் தெளிவாக இருக்கிறது. மீட்கப்பட்ட ஆவியானது இப்பொழுது தேவனோடு உறவு கொள்வதில் மகிழ்ச்சியடைய முடியும். அதாவது சரீரப்பிரகாரமான பாலியல் தொடர்பு கொள்ளும்போது உண்டாகும் நெருக்கத்தையும் அந்நியோந்நியத்தைப் போன்றும் அது இருக்கும். இது ஆவிக்கு மட்டும்தான், ஆத்துமாவிற்கோ சரீரத்திற்கோ அல்ல. இதை நேரடியாக நெருக்கமாகத் தேவனோடு தொடர்பு கொள்ளும்போது அனுபவப்பூர்வமாக அனுபவிக்க முடியும்.

இவ்வாறு ஆரம்பத்தில் ஆராதனையாகிய செயலின் மூலம் நம்முடைய ஆவி இப்படிப்பட்ட உறவுக்குள் நுழைகிறது. “உண்மையாய்த் தொழுதுகொள்ளுகிறவர்கள் பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளுங்காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது; தம்மைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் இப்படிப்பட்டவர்களாயிருக்கும்படி பிதாவானவர் விரும்புகிறார். தேவன் ஆவியாயிருக்கிறார். அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ள வேண்டும்” என்று இயேசு சொன்னார். (யோவான் 4:23-24 இல் அழுத்தமாகக் கூறப்படுகிறது.) உண்மையான ஆராதனை ஆவிக்குரிய செயலாக இருக்க வேண்டும் என்று அவர் தெளிவாகக் கூறுகிறார்.

இந்த சமகால சபையில் ஆராதிப்பதின் தன்மையைப்பற்றி கொஞ்சம் புரிந்து கொண்டிருக்கிறார்கள். ஏனென்றால் முக்கியமாக நாம் ஆவிக்கும் ஆத்துமாவிற்கும் இடையில் உள்ள வித்தியாசத்தைப் பகுத்து அறிவதில்லை. ஆராதிப்பது என்பது பொழுதுபோக்கு அல்ல. பொழுதுபோக்கு சினிமாக் கொட்டகைக்கு உரிய து ஆலயத்திற்கு உரியதல்ல. ஆராதிப்பது என்பது துதிப்பது என்பதைப் போலாகாது.

நாம் நம்முடைய ஆத்துமாக்களில் தேவனைத் துதிக்கிறோம். அவ்வாறு செய்வது சரியானதாகும். நம்முடைய துதிகளின் மூலமாக நாம் தேவனுடைய பிரசன்னத்தில் நெருங்கிச் சேருகிறோம். ஆனால் ஒருமுறை நாம் அவருடைய பிரசன்னத்திற்குள் வந்து விட்டால் அவ்வாறு ஆராதிப்பதின் மூலமாகத்தான் நாம் அவரோடு ஆவிக்குரிய உண்மையான தொடர்பு கொள்வதில் மகிழ்ச்சியடைய முடியும்.

நாம் நம்முடைய ஆத்துமாக்களில் தேவனைத் துதிக்கிறோம். அவ்வாறு செய்வது சரியானதாகும். நம்முடைய துதிகளின் மூலமாக நாம் தேவனுடைய பிரசன்னத்தில் நெருங்கிச் சேருகிறோம்.

தேவனை இவ்வாறான முறையில் ஆராதிக்க முடியும் என்பதுதான் இரட்சிப்பின் இலக்காகும். இதுவே உலகத்தில் முதலானதாகவும். பின்பு பரலோகத்திலும் உண்டாகும். இதுவே மிகவும் உயர்ந்ததான மேலும் மிகவும் பரிசுத்தமான செயலாக மனித அவதாரம் எடுத்த ஒரு மனிதன் செய்யக்கூடிய செயலாய் அமையும். எப்படியும் ஆத்துமாவும் சரீரமும் ஆவிக்குள்ளான அடிபணிதலுக்கு வரும் பொழுது குருதியுடன் கலந்து உறுப்புக்கள் செயல்படுவதுபோல அதோடு செயல்படும். இத்தகைய ஆராதனை அடிக்கடி வார்த்தைகளோடு மிகவும் நெருங்கியதாகும். இது தேவனோடு ஒரு நெருங்கிய அமைதியான ஒன்றுபடுதல் ஆகிறது.

இதிலிருந்து இந்த ஆவிக்கும் ஆத்துமாவுக்கும் இடையிலான தனிச்சிறப்பானது முக்கியமான வலிமையான சீஷத்துவமாகும். நாம் எப்படி இந்த இரண்டிற்குமுள்ள தனிச்சிறப்பினை அதிக ஆழமாகக் கண்டுகொள்ள முடியும் என்பதைப் பார்போம்.

4

உள்ளான ஒத்திசைவைக் காணல்

மனிதப் படைப்பின் மூலமாகிய மாதிரியில் மனிதன் இறைவனிடத்தில் குறைத்துக் கொண்டு செல்லக்கூடிய தொடர்பையே அனுபவத்தில் கொண்டிருந்தான். தேவன் மனிதனுடைய ஆவியில் கடந்து சென்றார். அவருடைய ஆவி ஆத்துமாவிலும் கடந்து சென்றது. மற்றும் அவருடைய ஆத்துமா அவனுடைய சரீரத்தை வழி நடத்தியது. மனிதனுடைய ஆவி தேவனிடத்திலிருந்து நேரிடையாக வந்தது. நேரடியாகத் தேவனோடு தொடர்பு கொள்கிறது. மனிதனுடைய எதிர்ப்பினாலே அவனது ஆவி விலகிப் போய், அவனது ஆத்துமா கட்டுபாடு செய்தது. அதன் விளைவாக இரட்சிப்படையாத மனிதன், தனது ஆத்துமாவின், சித்தம், அறிவு மற்றும் உணர்ச்சியால் கட்டுபடுத்தப்படுகிறான்.

தேவன் மனிதனைத் தன்னோடு ஒப்புரவாக்கும்போது, அவர், மனிதனின் ஆவியோடு நேரடித் தொடர்பு கொள்ளும் பழைய நிலையைத் திரும்ப ஏற்படுத்துவதே அவரது நோக்கமாயிருந்தது. மனிதனின் ஆவி அவன் ஆத்துமாவின் மேல் நிலைபெறுகிறது. அவனது ஆத்துமா அவன் சரீரத்தின் மேல் அசைவிக்கிறது. சங்கீதம் 103:1இல் தாவீது கூறிய வார்த்தைகள் இதை விளக்குகிறது, “என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்தரி.” விசுவாசத்தின் மூலம் தாவீதின் ஆவி தேவனோடு திரும்ப ஐக்கியமாகி அவன் ஆராதிக்க ஆவலுள்ளதாய் இருக்கிறது. எனவே அவன் ஆவி அவன் ஆத்துமாவை உற்சாகப்படுத்தி, தனது உயிரொலி அவயவங்களால், பொருத்தமான ஆராதனைக்குரிய வார்த்தைகளை விளம்புகிறது.

மனிதன் தேவனுக்குப் பயந்திருக்கும் போதும், அவன் ஆத்துமா அவன் ஆவிக்குக் கீழ்ப்படிந்திருக்கும்போதும் அவன் தேவனோடு இசைவாக செயலாற்றுகிறான். தன்னோடும் இசைவாக இருக்கிறான். எப்போதாகிலும் தேவனுக்கு விரோதமான எதிர்ப்பை அவன் காட்டும்போது அவன் ஆத்துமா அவன் ஆவிக்குக் கீழ்ப்படிகிறதில்லை. உள்ளான ஒத்திசைவு முறிக்கப்படுகிறது. ஆவிக்கும், ஆத்துமாவுக்கும் எப்போதும் உள்ள அழுத்த நிலையையே அது காட்டுகிறது.

ஆளுகை செய்வது எது?

புதிய ஏற்பாட்டின் கிரேக்க மொழி ஆத்துமா ஆரம்பிக்கும் பணியை விளக்கும்போது சிறப்பான ஓர் துணைப்பெயரைக் கொண்டுள்ளது. ஆத்துமா "சுக்கி"என்று அழைக்கப்படுகிறது. அதைத் தழுவுகின்ற சொல் "சுக்கிகாஸ்" ஆகும். இதை ஆங்கிலத்தில் "சோலிஷ்" ஆத்துமா சம்பந்தமானது என்று மொழிபெயர்த்தாலும், அதன் தன்மையை விளக்கும் ஆங்கில வார்த்தை இல்லை. புதிய ஏற்பாட்டின் மொழி பெயர்ப்புகள் இயற்கையான (KJV, NKJV) புலன் மட்டும் சார்ந்த (NKJV), உலகப்பிரகாரமான (NKJV), ஆவியற்ற, உலக எண்ணம் கொண்ட (NASB) ஆவியற்ற (NIV) சுபாவ சிந்தை கொண்ட (NIV) போன்ற பலதரப்பட்ட வார்த்தைகளை உபயோகிக்கின்றன. இந்த ஏழுவார்த்தைகளும் ஒரே கிரேக்க வார்த்தையைத் தான் குறிப்பிடுகின்றன என்று ஆங்கிலம் படிப்போருக்குத் தெரியாது. இந்நூலில் சோலிஷ்என்னும் வார்த்தையை உபயோகித்து சுக்கிகாஸ் அல்லது ஆத்துமா என்பதை விளக்க முற்படுகிறேன்.

> ***மனிதனின் எதிர்ப்பால் அவனுடைய ஆவி புறக்கணிக்கப்பட்டு அவன் ஆத்துமா கட்டுப்பாடு செய்தது.***

1 கொரிந்தியர் 15:44-46 இல் பவுல் மும்முறை இவ்வார்த்தையை உபயோகித்து நமது ஜென்ம (சோலிஷ்) மற்றும் உயிர்த்த ஆவிக்குரிய சரீரங்களின் வித்தியாசங்களைக் குறிப்பிடுகிறார்.

> ஜென்ம சரீரம் விதைக்கப்படும், ஆவிக்குரிய சரீரம் எழுந்திருக்கும்; ஜென்ம சரீரமுமுண்டு, ஆவிக்குரிய சரீரமுமுண்டு. அந்தப்படியே "முந்தின மனுஷனாகிய ஆதாம் ஜீவாத்துமாவானான்" என்றெழுதியிருக்கிறது; பிந்தின ஆதாம் உயிர்ப்பிக்கிற ஆவியானார். ஆகிலும் ஆவிக்குரிய சரீரம் முந்தினதல்ல, ஜென்ம சரீரமே முந்தினது; ஆவிக்குரிய சரீரம் பிந்தினது.

மேலும், ஓர் ஆத்துமா சம்பந்தமான சரீரத்தில், ஆத்துமா மூலமாக ஆவி கிரியை செய்கிறது. ஆவிக்குரிய சரீரத்தில் ஆவி நேரடியாகக் கிரியை செய்கிறது. ஆத்துமா மூலம் கிரியைச் செய்கிறதில்லை. பின்னானது, எசேக்கியேல் முதலாம் அதிகாரத்தில் குறிப்பிட்ட ஜீவன்கள் பெற்றிருந்த சரீரம் போன்றவை. "அவைகள் ஒவ்வொன்றும் தன் தன் திசைக்கு நேர்முகமாய்ச் சென்றது; ஆவி போகவேண்டுமென்றிருந்த எவ்விடத்துக்கும் அவைகள் போயின" (வசனம் 12). மீண்டும் "ஆவி போக வேண்டுமென்றிருந்த எவ்விடத்திற்கும் அவைகள் போயின;

அவ்விடத்துக்கு அவைகளின் ஆவியும் போக வேண்டுமென்றிருந்தது" (வசனம் 20).

உயிர்த்தெழுதலுக்குப் பின், விசுவாசிகள் இப்பேர்ப்பட்ட சரீரத்தைத்தான் பெறுவார்கள் எனப் பவுல் சொல்லிக் கொண்டிருக்கிறார். நமது ஆவிகள், நமது ஆத்துமாக்களை இப்படிச் செய் என்று சரீரங்களுக்குக் கட்டளையிடத் தேவையில்லை. நமது சரீரங்கள், நமது ஆவிகளின் தீர்மானங்களுக்கு நேரடியாகப் பதில் கூறும். நாம் எசேக்கியேலின் ஜீவன்கள் போலிருப்போம். நாம் எங்கும் திரும்பாமல் நமது ஆவிகள் விரும்பும் இடத்திற்குச் செல்வோம். என்ன மகிமையான சுயாதீனம்!

ஆவிக்குரியவைகள் மற்றும் ஆத்துமாவுக்குரியவைகளுக்கும் இடையே ஏற்படக்கூடிய எதிர்ப்பு அல்லது அழுத்தங்கள் பற்றி புதிய ஏற்பாட்டில் மூன்று இடங்களில் சொல்லப்பட்டுள்ளன. முதலில் பவுல் சொல்லுகிறார்.

கிறிஸ்தவர்கள் உலகப் பிரகாரமாக மாறும் போது, அவர்கள் நித்தியத்தின் தரிசனத்தை இழக்கிறார்கள். இவ் வாழ்விற்கு அப்பாற்பட்ட காரியங்களை அவர்களால் பார்க்க முடியாது . . .

> ஜென்ம சுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக் கொள்ளான்; அவைகள் அவனுக்குப் பைத்தியமாகத் தோன்றும்; அவைகள் ஆவிக்கேற்ற பிரகாரமாய் ஆராய்ந்து, நிதானிக்கப்படுகிறவைகள் ஆனதால், அவைகளை அறியவுமாட்டான். ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் நிதானிக்கிறான்; ஆனாலும் அவன் மற்றொருவனாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான்.

(1 கொரிந்தியர் 2:14-15)

ஆவிக்குரிய காரியங்களை அறிந்து கொள்வதற்கு, ஆத்துமா ஆவியின் மேல் சார்ந்திருக்கிறது. ஆத்துமா ஆவியோடு ஒன்றித்திராவிட்டால், ஆவியின் ஆட்சி அதற்கு மூடப்பட்டதாகவே இருக்கும். ஆவிக்குரிய போராட்டத்தில் ஈடுபட, சத்தியத்தைச் சரியான நோக்கில் அணுகுவது எவ்வளவு முக்கியமானதாய் இருக்கிறது. நமது ஆத்துமாக்கள் நமது ஆவிக்குப் பணிய வேண்டும். நமது ஆவிகள் தேவனோடு ஐக்கியமாயிருக்க வேண்டும்.

இரண்டாவதாக, யூதா தனது நிருபத்தில் சபையிலுள்ள மக்களைக் குறித்துப் பேசுகிறார். "இவர்கள் முறுமுறுக்கிறவர்களும்,

முறையிடுகிறவர்களும், தங்கள் இச்சையின்படி நடக்கிறவர்களுமாய் இருக்கிறார்கள்; இவர்களுடைய வாய் இறுமாப்பானவைகளைப் பேசும்; தற்பொழிவுக்காக முகஸ்துதி செய்வார்கள். இவர்கள் பிரிந்து போகிறவர்களும், ஜென்ம சுபாவத்தாரும், ஆவியில்லாதவர்களுமாமே". (யூதா 16,19)

ஒரு கிறிஸ்தவனின் ஆத்துமா அவன் ஆவியின் மூலமாய் தேவனுக்குச் சமர்ப்பிக்கப்படாத நிலையில், அந்த மாம்சம், பிரிவினையின் வாய்க்காலாய் சபைக்குள் ஊடுருவி வந்துவிடும். இது உண்மை, கிறிஸ்துவின் சரீரத்தில் பிரிவினை உண்டாக்கும் காரணமும் இதுவே.

இறுதியாக அப்போஸ்தலர் யாக்கோபு 3:15இல் ஒரு வகையான ஞானத்தைக் குறித்து பேசுகிறார். "இப்படிப்பட்ட ஞானம் பரத்திலிருந்து இறங்கிவருகிற ஞானமாயிராமல், லௌகிக சம்பந்தமானதும், ஜென்ம சுபாவத்துக்குரியதும் (ஆத்துமா சம்பந்தமானது), பேய்த்தனத்துக்கடுத்ததுமாயிருக்கிறது." மூன்று தொடர் கட்டங்களில் கீழ்நோக்கிச் செல்லும் நிலை, உலகத்திற்கு அடுத்ததும், ஜென்ம சுபாவத்திலிருந்து பேய்த்தனத்திற்குப் போவதையும் யாக்கோபு வலியுறுத்துகிறார்.

கிறிஸ்தவர்கள் உலகப்பிரகாரமாக மாறும்போது, அவர்கள் நித்தியத்தின் தரிசனத்தை இழக்கிறார்கள். இவ்வாழ்விற்கு அப்பாற்பட்ட காரியங்களான வெற்றி, இன்பம், செல்வம், சரீர சுகம் ஆகியவற்றை அவர்களால் பார்க்க முடியாது. இவ்வுலகில் அவர்கள் விசுவாசம், அவர்களுக்கு இந்த வாழ்க்கையில் செய்வதையே அவர்கள் விரும்புகிறார்கள். அப்பேர்ப்பட்ட மக்களைக் குறித்துப் பவுல் சொல்லுகிறார், "இம்மைக்காக மாத்திரம் நாம் கிறிஸ்துவின் மேல் நம்பிக்கையுள்ளவர்களாயிருந்தால், எல்லா மனுஷரைப்பார்க்கிலும் பரிதபிக்கப்படத்தக்கவர்களாயிருப்போம்". (1 கொரிந்தியர் 15:19) அப்பேர்ப்பட்ட கிறிஸ்தவர்கள் தங்களைச் செல்வந்தர்களாகவும், வெற்றியடைந்தவர்களாகவும் கருதுகிறார்கள். தேவன் அவர்களைப் பரிதபிக்கப்படத்தக்கவர்களாய்க் கருதுகிறார்.

உலகக் காரியத்தை அடுத்தது ஜென்ம சுபாவமான ஆத்துமாவைப் பற்றியது. அது ஆணவமும், தன்னயமுமாய் இருப்பது. அவர்களுக்கு கிறிஸ்தவ விசுவாசம் என்பது தங்களுக்கு வேண்டியதை வாழ்விலிருந்து பெற்றுக்கொள்வதே."அவர்கள் தேவ பக்தியை ஆதாயத்தொழிலென்று எண்ணுகிறார்கள்" (1 தீமோத்தேயு 6:5).

ஜென்ம சுபாவம் பேய்த்தனத்திற்கு வழியைத் திறக்கிறது. இந்த பிரதான வழியில்தான், பிசாசுகள் சபைக்குள் ஊடுருவுகின்றன. கிறிஸ்தவர்களுக்குப் பிசாசின் பிடியிலிருந்து விடுதலை தேவையா?

யாக்கோபின் வார்த்தைகள் பதில் உரைக்கின்றன. உலகப் பிரகாரமாயிருப்பதிலிருந்து, ஜென்ம சுபாவத்திற்கும், பின்னர் பேய்த்தனத்திற்கும், கீழ் நோக்கிச் செல்லும் சரிவு, தனிப்பட்ட விசுவாசிகளையும், முழுச் சபைகளையும் பிசாசுகளின் கிரியைகளுக்குக் கொண்டு செல்லுகிறது.

ஒத்திசைவைத் திரும்பப் பெறல்

சபை இன்று அநேக இடங்களில் தேவனற்ற கலப்பாகவே இருக்கிறது. ஆவிக்குரியவைகளுக்கும், ஜென்ம சுபாவ காரியங்களுக்கும் வித்தியாசம் காட்டப்படவில்லை. எனவே பேய்த்தனத்திற்குத் தடை இல்லை. பரிசுத்த ஆவியின் உண்மையான வெளிப்பாடுகளும், பிசாசின் திட்டமான வெளிப்பாடுகளும் இடையிடையே காணப்படுகின்றன. அதன் விளைவாக, அநேக உண்மையான விசுவாசிகள் குழப்பமடைந்து திக்குத் தெரியாமலிருக்கிறார்கள்.

நம்மைப் பாதுகாத்துக் கொள்ள, நாம் ஆவிக்குரிய பகுத்தறியும் தன்மையைப் பழக்கப்படுத்திக்கொள்ள வேண்டும். எது ஆவிக்குரியது, எது ஜென்ம சுபாவமானது என்பதின் வித்தியாசத்தை அறிய கற்றுக்கொள்ள வேண்டும். இதைச் செய்வதற்கு ஒரே கூர்மையான கருவி **கர்த்தருடைய வார்த்தையே**. இன்றியமையாத தேவனுடைய வார்த்தையைப் பற்றி இப்புத்தகத்தில் பின்னர் காண்போம். இப்போது நாம் ஒத்துக் கொள்வோம்.

> தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும் ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது.
>
> எபிரெயர் 4:12

மேலும், எபிரெயர் 5:14 இல் இப்பேர்ப்பட்ட பகுத்தறிவை உபயோகிப்பதற்கு இரு நிபந்தனைகளை நிறைவேற்ற வேண்டும் என எபிரெய ஆக்கியோன் கூறுகிறார். “பலமான ஆகாரமானது நன்மை தீமையின்னதென்று பயிற்சினால் பகுத்தறியத்தக்கதாக முயற்சி செய்யும் ஞானேந்திரியங்களையுடையவர்களாகிய பூரண வயதுள்ளவர்களுக்கே தகும்.”

முதல் நிபந்தனை யாதெனில் முழு வேதாகமத்தைப் படிப்பதின் மூலம் நாம் திடமான ஆவிக்குரிய ஆகாரத்தை ஒழுங்காக உட்கொள்ள வேண்டும். இரண்டாம் நிபந்தனை யாதெனில் நாம் பகுத்தறிதலை ஒழுங்காக அப்பியாசம் செய்யவேண்டும். நாம் தொடர்ந்து விழிப்பாய் இருந்து, ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு நிலையில் நாம் சந்திக்கும் ஆவிக்குரிய ஆற்றல்களைக் கண்டுகொள்ளவேண்டும். ஓர் கிறிஸ்தவ போர் வீரனின் வாழ்க்கையில் ஜெபத்தைப் போல, பகுத்தறிதலும் ஓர் முக்கியப் பங்காக இருக்க வேண்டும்.

இக்கடிதத்தை ஓர் ஜெர்மானிய மனோதத்துவரிடமிருந்து பெற்றேன். தனது ஆள்தத்துவத்தில் அவர் "ஆவிக்குரியவை" மற்றும் "ஜென்ம சுபாவத்திற்கு" உரியவை (சோலிஷ்) பற்றி வெளிப்பாடு பெற்றிருந்தார். ஒருவரின் வாழ்க்கையில் இப்பகுத்தறிவு ஏற்படுத்தக்கூடிய மாற்றங்களைப் பற்றி ஓர் கருத்தை இது தருகிறது.

அன்பான பிரின்ஸ் அவர்களுக்கு,

எனது வாழ்வில் இது போல் முன்பு நடந்ததில்லை. உங்களது விரிவுரையை (மனிதன் யார் என்னும் தலைப்பில்) நான் கேட்டுக் கொண்டிருக்கும்போது "ஆவிக்குரிய ஹேன்ஸ்" ஆகிய நான் உயர்ந்த நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு "ஜென்ம சுபாவமான ஹேன்ஸ்"ஐப் பார்த்தேன். அவரது உயர்ந்த காட்சி நொடிந்து தூளாய் போய்க் கொண்டிருந்தது.

உயிர்பிக்கப்பட்டபின், என்னுடைய ஆவிக்குரிய பகுதி, "ஆவிக்குரிய ஹேன்ஸ்", பரிசுத்த ஆவியினால் எரிவூட்டப்பட்ட உங்கள் உரையைக் கேட்ட பின் உயிரோடு இருக்கிறது.

எனது வாழ்வில் ஏற்பட்ட மாற்றம்,திருத்துவ மனிதனாய் இருப்பது எனது தொழிலையும் புரட்சிகரமாக்கியது. எனது வாழ்வில் முதலாவதாக, 45 வயதான நான், ஓர் மனோதத்துவ நிபுணராக, இருப்பது நன்மைக்கே என்று காண்கிறேன்.

ஹேன்ஸ்.பி., ஜெர்மனி

உயிர்த்தெழுதல் வரை, நமக்கு உண்மையான ஆவிக்குரிய சரீரம் கிடைக்காது. ஆனால் ஹேன்ஸைப்போன்று, தேவனுக்குக் கீழ்ப்படிந்திருந்து, நமது ஆத்துமாக்களை நமது ஆவிக்குக் கீழ்ப்படிய பயிற்சி அளித்து ஊழியத்தி ற்கு ஆயத்தம் செய்யலாம். இறுதியாக பவுல் 1 கொரிந்தியர் 16:13-14 இல் கூறும் ஆலோசனையைக் கேட்போம்.

“விழித்திருங்கள், விசுவாசத்திலே நிலைத்திருங்கள், புருஷராயிருங்கள், திடன்கொள்ளுங்கள். உங்கள் காரியங்களெல்லாம் அன்போடே செய்யப்படக்கடவது.”

இப்போது, அப்பேர்ப்பட்ட ஊழியத்தின் தரத்தை எப்படி நடைமுறைப்படுத்துவது என்பதைப் பார்ப்போம்.

5

சோதிக்கப்படுதலும், சிட்சிக்கப்படுதலும்

தேவனின் சோதித்தலையும், அவரது சிட்சையையும் கண்டுணர்வது மிக முக்கியமாய் இருக்கிறது. சோதிக்கப்படுதல் மகிழ்ச்சியின் நேரம் என்றும் சிட்சிக்கப்படுதல் மனந்திரும்பும் நேரம் என்றும் இந்த அத்தியாயத்தில் காண்போம். இவ்விரண்டுக்கும் உள்ள வித்தியாசத்தை நாம் புரிந்துகொள்ள வேண்டும். ஏனெனில் நமது விடை, தேவன் செயல்படும் தனி விதத்தைப் பொறுத்தது. நாம் சோதிக்கப்படுதலை முதலில் கற்போம்.

தேவனால் சோதிக்கப்படுதல்

“மனுஷனை நீர் . . . காலைதோறும் அவனை விசாரிக்கிறதற்கும், நிமிஷந்தோறும் அவனைச் சோதிக்கிறதற்கும், அவன் எம்மாத்திரம்?” (யோபு 7:17-18).

இது ஓர் ஆச்சரியமான வெளிப்பாடு தேவன் நம்மை ஒவ்வொரு காலையிலும் சந்திக்கிறார். ஒவ்வொரு கணமும் சோதிக்கிறார். அது முதன்முதல் எனக்கு நிஜமான போது, *தேவனிடமிருந்து ஓர் சந்திப்பை ஒவ்வொரு காலையும் பெறுவதற்கு நான் ஆயுத்தமா?* அந்த எதிர்ப்பார்போடு, நான் விழிக்கிறேனா? என என்னையே நான் கேட்டுக் கொள்ள வேண்டியதாயிற்று. தேவன் ஏன் என்னைச் சோதிக்க வேண்டும்? அவரது திட்டம் என்ன? என்று என்னையே கேட்டேன்.

சோதித்தல் என்ற வினைச்சொல்லுக்கு காலின்ஸ் ஆங்கில சொற்களஞ்சியம், சில பரீட்சைக்களுக்கு உட்படுத்தி . . . ஒரு மனிதனின் தகுதியை உறுதியாய் அறிந்துகொள்என கவர்ச்சியான விளக்கம் தருகிறது. நம்மைக் கோபப்படுத்தவோ அல்லது குறைத்துக்காட்டவோ, தேவன் நம்மைச் சோதிப்பதில்லை. மாறாக, சோதித்தல் தேவனின் தயவுக்கு ஓர் அடையாளமாயிருக்கிறது. நமக்கு மதிப்பை ஏற்படுத்தவே, அவர் நம்மைச் சோதிக்கிறார். ஓர் நகை வியாபாரி தங்கம் அல்லது வெள்ளியை அப்பேர்ப்பட்ட சோதனைக்கு உட்படுத்துவார். அவைகள்

விலை உயர்ந்தவையானதால் அப்படிச் செய்வார். சாதாரண உலோகங்களான இரும்பு அல்லது தகட்டிற்கு அப்படிச் செய்வதில்லை. உண்மையிலேயே, பேதுரு நம் விசுவாசத்தைப் பொன்னிற்கு ஒப்பிட்டுப் பேசி, அதன் உண்மையான தரத்தை அக்கினியால் சோதித்தறிய வேண்டும் என்று சொல்லுகிறார். (1 பேதுரு 1:7 ஐப் பார்க்கவும்)

முற்பிதாக்களின் உலகத்தில் மிகச் சிறந்த நீதிமானாக வாழ்ந்த ஓர் மனிதன் அதிகமான சோதனையைச் சந்தித்தான். இப்புத்தகம் அவனின் இருதயம் எப்பேர்ப்பட்டது என எடுத்துக்கூறி, நாமும் அப்பேர்ப்பட்ட இருதயத்தை வாஞ்சித்து நமது குணநலனை பெற்றுக் கொள்ள வேண்டும் என்று ஆரம்பிக்கிறது. அவன் பேர் யோபு. தேவன் யோபைப் பற்றி பெருமைப்பட்டார். சாத்தானிடம் அவனைப் பற்றி புகழ்ந்து பேசினார். “கர்த்தர் சாத்தானை நோக்கி: என் தாசனாகிய யோபின் மேல் கவனம் வைத்தாயோ? உத்தமனும், சன்மார்க்கனும், தேவனுக்குப் பயந்து, பொல்லாப்புக்கு விலகுகிறவனுமாகிய அவனைப் போலப் பூமியில் ஒருவனும் இல்லை என்றார்” (யோபு 1:8).

சோதிக்கப்படுதல் தேவனின் தயவுக்கு ஓர் அடையாளம். நமது மதிப்பை நிலைநாட்டவே, அவர் நம்மைச் சோதிக்கிறார்.

குறிப்பிடத்தக்கவிதமாக, சாத்தானின் பதில், யோபு தன் சுயநலத்திற்காகவே, அப்படி இருந்தான் என்றிருந்தது. “உம்மிடமிருந்து பெறக் கூடியவைகளுக்காகவே அவன் உம்மைச் சேவிக்கிறான்.”

அதற்குப் பதிலாக, தேவன் யோபைச் சோதிப்பதற்குச் சாத்தானுக்கு அனுமதி வழங்கினார். யோபுக்கு உண்டான அனைத்தையும் அழிப்பதற்குச் சாத்தானுக்கு அனுமதி வழங்கினார். அவனது உடைமைகள், அவனது வேலையாட்கள் மற்றும் அவனது பிள்ளைகள். பின்னர் சாத்தான் யோபுவின் சரீரத்தைத் தொடுவதற்கும், தலை முதல் கால் விரல் வரை புண்களால் வேதனையுறுவதற்கும் அனுமதி அளித்தார். ஆனால் அவர் யோபுவின் ஜீவனை எடுப்பதற்குச் சாத்தானுக்கு அனுமதி அளிக்கவில்லை.

தேவன் தன்னைச் சோதிக்கிறார் என்று யோபு அறிந்து கொண்டான். “அவர் என்னைச் சோதித்த பின் நான் பொன்னாக விளங்குவேன்” (யோபு 23:10) என யோபு கூறினார். அதாவது நெருப்பினால் சோதிக்கப்பட்ட பொன்னைப் போல் ஆவேன் என்றார். இது தான் அவருக்குச் சகித்துக்கொள்ளும் பெலனைத் தந்தது. அவர் தன் ஆத்தும வேதனையால் அழுதாலும், ஒருபோதும் நம்பிக்கை இழக்கவில்லை.

எலிப்பாசும் மற்ற யோபின் இரண்டு சமய நண்பர்களும் யோபு செய்த பாவங்களின் நிமித்தமே இவ்வாறு துன்புறுகிறார் என்று சொல்லி பயங்கர குற்றச்சாட்டுக்களை அவருக்கு எதிராகக் கொண்டுவருகிறார்கள். முடிவில் தேவன் யோபுவை மெய்பித்துக்காட்டி, அவனது நண்பர்களைக் கடிந்து கொள்கிறார். அவர் எலிப்பாசிடம் கூறினார். “என் தாசனாகிய யோபு பேசினது போல், நீங்கள் என்னைக்குறித்து நிதானமாய்ப் பேசவில்லை” (யோபு 42:7).

நமது முற்பிதாக்களில் மற்றொருவரான ஆபிரகாம் தேவனுக்கு முன்பாக குறைபாடற்ற இருதயத்தை உடையவர். நீதிமானானாலும் தன் மகனைத் தகன பலியாக ஒப்புக்கொடுக்கும் நிலை வரை சோதிக்கப்பட்டார். தேவன் அவரை, யூதர்கள், கிறிஸ்தவர்கள் போன்று தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களுக்குத் தகப்பனாகும் நோக்கத்தை வைத்திருந்தார். எவருக்கெல்லாம் சிறப்பான செயல்நோக்கத்தைத் தேவன் வைத்திருக்கிறாரோ, அவர்களை முக்கியப் பரீட்சைகளுக்கு உட்படுத்துகிறார்.

கிறிஸ்தவர்களாகிய நாம் சோதனையைச் சகிக்க வேண்டும் என்று புதிய ஏற்பாடு நம்மைத் திட்டமாய் எச்சரிக்கிறது. சோதனையை மகிழ்வோடு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று யாக்கோபு கூறுகிறார்.

> என் சகோதரரே, நீங்கள் பலவிதமான சோதனைகளில் அகப்படும் போது, உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்குமென்று அறிந்து, அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள். நீங்கள் ஒன்றிலும் குறைவுள்ளவர்களாயிராமல், பூரணராயும் நிறைவுள்ளவர்களாயும் இருக்கும்படி, பொறுமையானது பூரணக் கிரியை செய்யக்கடவது.
>
> யாக்கோபு 1:2-4

அநேகச் சந்தர்ப்பங்களில் ரூத்தும், நானும் மனஸ்தாபப்பட்டு தேவனிடம் மன்னிப்புக் கேட்க நேரிட்டது. ஏனெனில், எங்கள் சோதனைகளில் சிலவற்றிற்கு நாங்கள் சரியாக எதிர் செயலளிக்கவில்லை. அவைகளைச் சந்தோஷமாக ஏற்றுக்கொள்ளவில்லை.

சோதனையாகிய கருத்தை மேலும் அறிவதற்கு யாக்கோபு யோபுவின் வாழ்க்கையை மேற்கோள் காட்டுகிறார். “இதோ, பொறுமையாயிருக்கிறவர்களைப் பாக்கியவான்களென்கிறோமே! யோபின் பொறுமையைக் குறித்துக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள்; கர்த்தருடைய செயலின் முடிவையும் கண்டிருக்கிறீர்கள்; கர்த்தர் மிகுந்த உருக்கமும் இரக்கமுமுள்ளவராயிருக்கிறாரே” (யாக்கோபு 5:11). சோதனை,

கிறிஸ்தவனுக்கு மகிழ்ச்சியான நேரம். தேவனுடைய இரக்கமும், கிருபையும் காணப்படும் சிறந்த குணங்களை உருவாக்கும் நேரம்.

இப்பொழுது சிட்சிக்கப்படுதலைப் பற்றிக் காண்போம்.

தேவனால் சிட்சிக்கப்படுதல்

கிறிஸ்தவர்களாகி விட்டால், அவர்களுக்குத் தேவனின் சிட்சையிலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறது என்று அநேகர் எண்ணிக்கொண்டு இருக்கிறார்கள். அதிலும் கூடுதல் காலம் கிறிஸ்தவர்களாய் இருந்திருப்பின் இந்த எண்ணத்திற்கு வேதத்தில் எந்த ஆதாரமும் கிடையாது. இப்பேர்ப்பட்ட விசுவாசிகளுக்கு எபிரெயர் கடுமையான ஓர் எச்சரிப்பை விடுகின்றது.

> அன்றியும்: என் மகனே, கர்த்தருடைய சிட்சையை அற்பமாக எண்ணாதே, அவரால் கடிந்து கொள்ளப்படும் போது சோர்ந்து போகாதே. கர்த்தர் எவனிடத்தில் அன்பு கூறுகிறாரோ அவனை அவர் சிட்சித்து, தாம் சேர்த்துக் கொள்ளுகிற எந்த மகனையும் தண்டிக்கிறார் என்று பிள்ளைகளுக்குச் சொல்லுகிறது போல உங்களுக்கு சொல்லியிருக்கிற புத்திமதியை மறந்தீர்கள். நீங்கள் சிட்சையைச் சகிக்கிறவர்களாயிருந்தால் தேவன் உங்களை புத்திராக எண்ணி நடத்துகிறார்; தகப்பன் சிட்சியாத புத்திரனுண்டோ? எல்லாருக்கும் கிடைக்கும் சிட்சை உங்களுக்குக் கிடையாதிருந்தால் நீங்கள் புத்திரராயிராமல் வேசிப்பிள்ளைகளாயிருப்பீர்களே!

எபிரெயர் 12:5-8

இது சம்பந்தமாக, தேவன் தாம் மோசேயோடு செயல்பட்ட உதாரணத்தை எனக்கு மனதில் பதிய வைத்தார். தேவன் மோசேயை எகிப்துக்குத் திரும்பிச் சென்று, இஸ்ரவேலை அடிமைத்தனத்தினின்று விடுவிக்க அதிகாரம் கொடுக்கும் போது, அவனது வயது எண்பத்தி நான்கு. ஆனாலும் மோசே எகிப்துக்கு திரும்பும் போது, கர்த்தர் அவனைச் சந்தித்து அவனைக் கொல்ல பார்த்தார். (பார்க்கவும்: யாத்திரயாகமம் 4:24-26)

ஏன் இப்படிப்பட்ட சிட்சை? மோசேயின் கீழ்ப்படியாமையினாலே மோசே, கர்த்தர் ஆபிரகாமோடும், அவன் சந்ததியாரோடும், ஏற்படுத்தின விருத்தசேதனமாகிய உடன்படிக்கையை நிறைவேற்றாதிருந்தான். (பார்க்கவும் ஆதியாகமம் 17:9-14) மோசே மனந்திரும்பி, தன் மகனுக்கு விருத்தசேதனம் செய்ததினால், தேவன் அவன் வாழ்வைத் தப்புவித்து, தன் வழியே போக விட்டார். தனது

கட்டளை நிமித்தமாக, கீழ்ப்படியாமல் எகிப்துக்குச் செல்வதை அனுமதிப்பதை விட, தேவன் அவனையே கொன்று போட்டிருப்பார். தலைவன் என்று அவன் வைத்திருந்த பதவி, தேவனின் ஒழுங்கு முறையிலிருந்து அவனுக்கு விலக்கு அளிக்கவில்லை. மாறாக அவனை அதிகப் பொறுப்புள்ளவனாக மாற்றியது.

எனது 82வது வயதில் இதை எழுதும் போது, எனக்கும் ஓர் பொருத்தமான வேண்டுகோள் உள்ளது. தேவனால் எனக்குக் கொடுக்கப்பட்ட பணியை, என் வாழ்வில் கீழ்ப்படியாமை இருக்குமானால், நிறைவேற்ற முடியாது. தேவனின் செயலாற்றத்திற்குள், நாம் வரும் போது, அவர் முன் நம்மைத் தாழ்த்த வேண்டும். சங்கீதம் 139:23-24 இல் உள்ள தாவீதின் ஜெபத்தை, ஜெபிக்க வேண்டும்.

> தேவனே, என்னை ஆராய்ந்து, என் இருதயத்தை அறிந்து கொள்ளும்; என்னைச் சோதித்து, என் சிந்தனைகளை அறிந்து கொள்ளும். வேதனை உண்டாக்கும் வழி என்னிடத்தில் உண்டோ என்று பார்த்து, நித்திய வழியிலே என்னை நடத்தும்.
>
> சங்கீதம் 139:23-24

தேவன் வெளிப்படுத்துவதுதான், நாம் எப்படி எதிர்செயலாற்றுவோம் என்பதை நிர்ணயிக்கும். சிட்சிப்பதற்கு, நமது மறுமொழி மனந்திரும்புவது. சோதிக்கப்படுவதற்கு நமது பதில் சகித்துக் கொள்வதே. நாம் மனந்திரும்பாமல், சகித்துக் கொண்டே இருப்போமானால், அறியாமை மற்றும் முரட்டுத்தனம் ஆகியவற்றிற்கு குற்றவாளிகளாவோம். நாம் சாத்தானை எதிர்ப்பது போல் ஒரு பாவனையை மேற்கொள்ளுவோம். ஆனால் உண்மையிலேயே, தேவனுக்கு நாம் கீழ்ப்படிந்திருக்க வேண்டும். இது வெளிக்காட்டும் அடிப்படை மரபுக்கூறு பிரச்சனை *பெருமையே.*

சிட்சிக்கப் படுவதற்கு நம் எதிர்செயல் மனந்திரும்புவதே; சோதிக்கப்படுவதற்கு நம் பதில் சகித்துக் கொள்வதே.

19 ஆம் சங்கீதத்தின் இறுதியில் உள்ள ஜெபத்தை ரூத்தும், நானும் மீண்டும் மீண்டும் செய்வோம்.

> தன் பிழைகளை உணருகிறவன் யார்? மறைவான குற்றங்களுக்கு என்னை நீங்கலாக்கும். துணிகரமான பாவங்களுக்கு உமது அடியேனை விலக்கிக்காரும்; அவைகள் என்னை ஆண்டு

கொள்ள ஒட்டாதிரும்; அப்பொழுது நான் உத்தமனாகி, பெரும் பாதகத்துக்கு நீங்கலாயிருப்பேன்.

சங்கீதம் 19:12-13

அந்தரங்கப் பாவங்கள், மற்ற மக்களிடமிருந்து நாம் மறைத்து வைக்கும் ரகசியங்கள் அல்ல. அவை தேவனிடம் நாம் மறைக்கும் பாவங்களும் அல்ல. அவை நமக்குத் தான் ரகசியம். நமது நடத்தையில், நாம் கண்டுகொள்ள முடியாத பாவங்களே அவை. தாவீது அவைகளை “துணிகரமான பாவங்கள்” என்று வர்ணிக்கிறார். நாம் தேவனோடு சரியாகத்தான் நடக்கிறோம் என்று எண்ணி, அவரைத் துக்கப்படுத்தும் போது அந்தரங்க பாவங்களைச் செய்கிறோம்.

நாம் நம்மை முற்றிலுமாய் தாழ்த்தி, நமது குணநலன்களை அவர் ஆராய அழைத்து, அவர் முன் நம் உள்ளான நோக்கங்களை வெளிப்படையாகக் காட்டவேண்டும். அப்போது தான் தேவன் நம் பாவங்களை நமக்கு வெளிப்படுத்துவார். நாம் உண்மையாக நம் இருதயத்தைத் தேவன் ஆராயும்படி அனுமதிக்கும்போது, அவருக்கு பிடித்தம் இல்லாத எக்காரியத்தின் மேலும், அவர் தம் விரலை வைக்காத போது, நாம் தேவனுடைய சிட்சைக்குரியவர்களாக இராமல் அவருடைய பரீட்சைக்குரியவர்களாக இருக்கிறோம்.

சோதனையா அல்லது சிட்சையா?

சோதனை மற்றும் சிட்சையான அவரது கருவிகள் மூலம், தேவன் நம்பிக்கை வைத்தல் மற்றும் சகித்தல் போன்ற நல்ல குணநலன்களை நம்மில் உண்டாக்குகிறார். ஆவிக்குரிய யுத்தத்தில் நிலைத்திருத்தல் என்ற மிக முக்கியமான பொருளடங்கிய சகிப்புத்தன்மை இப்புத்தகம் முழுவதும் பாய்ந்தோடுகிறது. நான்காம் பிரிவில் அது அபூர்வமாக விளக்கப்படுகிறது. ஆனாலும் இங்கே சற்றே அதைப் பார்க்கலாம்.

குறிப்பு 1: மனந்திரும்புதல்

மனந்திரும்புதல் அடிப்படைக் கிறிஸ்தவக் கோட்பாடாக இருப்பினும் தற்கால பிரசங்கிமார் அதற்குரிய முக்கியத்துவம் கொடுப்பதில்லை. விசுவாசித்தால் போதும் என்பது கேட்பதற்கு இனிய செய்தியாக இருப்பினும் இது வேதத்திற்கடுத்த முழு உண்மையன்று. புதிய ஏற்பாட்டின் ஆரம்பம் முதல் முடிவுவரை *முதலாவது மனந்திரும்புதல் அதற்குப் பின்புதான் விசுவாசித்தல்* என்றுதான் வருகிறது. நமது வாழ்வில் மறைந்து கிடக்கும் பாவத்தை வெளிப்படுத்தும்படி கேட்க வேண்டும். அவருடைய வழிநடத்துதலை ஏற்க மனதாயிருந்தால் அவர் அதைத்

தெளிவுபடுத்துவார். இல்லையென்றால் மனந்திரும்பாத நிலையில் உண்டாகும் விசுவாசம் மனிதனின் மாறுபாடான கருத்தாகும். உண்மையான விசுவாசத்திற்கு உண்டாகும் பலன் மனந்திரும்புதல் இல்லாமல் உண்டாகாது.

இரு சக்கர வண்டி இயக்குபவர் U-வளைவு போட்டு திரும்புவது போல மனந்திரும்புதலும் உள்ளது. சரியான வழியில் தான் வாழ்கிறோமா என்னும் நிச்சயம் வேண்டும். நின்று U-வளைவு போட்டு வாழ்க்கையைத் திரும்பச் செய். அதற்குப் பின் நல்ல மறுபாதையில் தொடர்ந்து செல். மனந்திரும்பி எதிர்ப்பாதையில் செல்லவில்லையாயின் நீ உண்மையாக மனந்திரும்பவில்லை என்பதாகும்.

குறிப்பு 2: ஒப்புக்கொடுத்தல்

ரோமர் 10:9ன் படி இரட்சிப்படைய இரண்டு நிபந்தனைகள் உள்ளன. தேவன் கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து உயிருடன் எழச்செய்தார் என்பது ஒன்று; மற்றது இயேசுவே கர்த்தர் என்று வாயினால் அறிக்கையிடுவது.

இயேசுவே கர்த்தர் என்று அறிக்கையிடும்பொழுது, நமது வாழ்வு - நமது நேரம், நமது பணம், நமது தாலந்துகள், நமக்கு முக்கியமானவை, நமது உறவுகள். இவையனைத்தையும் அவருடைய கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருகிறோம்.

நமக்கென்று எதையும் வைத்துக்கொள்ள முடியாது. இயேசுவைக் கர்த்தராக வைக்கவில்லையாயின், அவரைக் கர்த்தராகவே கருதவில்லை எனக்கூறினார்.

குறிப்பு 3: வசனம் பற்றிய நமது கண்ணோட்டம்

நமது ஆரம்பப் பெற்றோரைச் சாத்தான், தேவன் இப்படிச் சொன்னது உண்டோ? என்று கேள்வி கேட்டு வீழ்ச்சியைத் தோற்றுவித்தான். (ஆதியாகமம் 3:1)

வசனத்திற்கு தெய்வீக அதிகாரம் உண்டு என்று இயேசு தாமே முத்திரைப் பதித்து, அது தேவனுடைய வசனம், வேதவாக்கியம் தவறாதது எனக் கூறியுள்ளார் (யோவான் 10:35). பவுல் திட்டவட்டமாக வேதம் ஆவியானவரால் ஏவப்பட்டு எழுதப்பட்டது என்று கூறியுள்ளார் (2 தீமோத்தேயு 3:16).

வேதத்தைக் கேள்வி கேட்கும் அதிகாரத்தை நாம் தவிர்க்க வேண்டும். ஏதேன் தோட்டத்தில் அழிவை ஏற்படுத்தியது போல அது இன்றும் அழிவை உண்டாக்கும்.

குறிப்பு 4: சரியான உறவுகள்

சரியான கொள்கை கிறிஸ்தவ விசுவாசத்தின் அடித்தளம். சரியான கோட்பாடு சரியாக செயல்படுத்தும்பொழுது சரியான உறவுகளை உண்டாக்கும். நமது சொந்த உறவு நாம் பின்பற்றும் கொள்கையை வெளிப்படுத்தும். சரியான உறவுகளைக் கடைப்பிடிப்பதற்கு இயேசு அதிமுக்கியத்துவம் அளித்துள்ளார். நமக்கு விரோதமாகப் பாவம் செய்யும் சகோதரர்களைக் குறித்து சரியாக வழிகாட்டியுள்ளார் (மத்தேயு 18:15-17). மத்தேயு 5:25இல் மலைப்பிரசங்கத்தில் நீ உன் எதிராளியோடு வழியில் இருக்கும்போதே சீக்கிரமாய் அவனுடனே நல்மனம் பொருந்து என எச்சரித்துள்ளார். தனது மாதிரி ஜெபத்தில் இது பற்றி சரியாக எச்சரித்துள்ளார். மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னியாதிருந்தால், உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களையும் மன்னியாதிருப்பார் (மத்தேயு 6:15).

சோதனை அல்லது சிட்சையின் வேளையில் நமது உள்நோக்கங்களையும் உறவுமுறைகளையும் சோதிக்க வேண்டும். நமது இதயத்தில் மனக்கசப்போ, மன்னியாத தன்மையோ, எதிர்த்து நிற்பதோ இல்லை என்பதை உறுதிசெய்தல் வேண்டும்.

தவறான மக்களுடன் சரியான உறவுகொள்ள முடியாது என்பதையும் மனதிற்கொள்ள வேண்டும். பவுல் “மோசம்போகாதிருங்கள்; ஆகாத சம்பாஷணைகள் நல்லொழுக்கங்களைக் கெடுக்கும்” என்று 1 கொரிந்தியர் 15:33இல் கூறியுள்ளார். பரிசுத்தமற்றவர்களுடன் கைக்கோர்த்தால் நாம் பரிசுத்த ஜீவியம் செய்ய முடியாது. அப்படிப்பட்ட உறவுகள் கருக்குள்ள தேவ வசனத்தால் துண்டிக்கப்பட வேண்டும்.

தேவன் எதை எதிர்பார்க்கிறார்?

பரீட்சையின் மூலமும் சிட்சையின் மூலமும் தேவன் நம்மில் நற்பண்புகளாகிய சார்ந்திருப்பதையும் பொறுத்துக்கொள்வதையும் வளர்க்கிறார். பொறுமை என்னும் கருத்து ஆவிக்குரிய யுத்தத்தில் முக்கியப் பங்கெடுக்கிறது என்பதைப் பலமுறை இந்நூலில் கூறியுள்ளோம். நான்காம் பகுதியில் அதை விளக்கமாகப் பார்த்தாலும் அதைப்பற்றி இங்கு சுருக்கமாகக் காண்போம்.

நம்பிக்கை

பாவம் அல்லது நீதி போன்ற அடிப்படைக் காரியங்கள், சாத்தான் ஆதாமையும், ஏவாளையும் ஆதியில் சோதனை செய்ததிலேயே

விளக்கப்படுகிறது. டயபோலோஸ் என்ற கிரேக்கப் பதம் (ஆங்கிலத்தில் பிசாசு) “அவதூறு பண்ணுகிறவன்” என்று அர்த்தங்கொள்ளும். அவதூறு பண்ணுதல் என்பது பிறர் குணத்தைக் குறைவுபடுத்துதல் ஆகும். இதுவே சாத்தானின் ஆரம்பச் செயல்.

முதன்முதலாக, சாத்தான் தேவனின் குணத்தைக் குறைகூற ஆரம்பித்தான். “நீங்கள் தோட்டத்திலுள்ள சகல விருட்சங்களின் கனியையும் புசிக்க வேண்டாம் என்று தேவன் சொன்னது உண்டோ?” (ஆதியாகமம் 3:1) என்று ஏவாளிடம் தான் கேட்ட மூலக் கேள்வியிலிருந்து தேவன் ஓர் கொடுங்கோன்மையான, நீதியற்ற, அன்பற்ற சர்வாதிகாரி எனச் சாத்தான் அவர்களுக்குக் கூறினான். ஆதாமும் ஏவாளும் “அறிவின் உயர்நிலையை” அடையாதபடிக்கு நன்மை தீமை அறியக் கூடிய மரத்தின் கனியை ருசிக்காதபடி தேவன் அவர்களைத் தடை செய்தார். தேவன் அவர்களுக்கு வேண்டிய நன்மையான, அழகான மற்றும் மகிழ்ச்சியான அனைத்தையும் ஏற்கெனவே கொடுத்திருந்தார். தேவனின் நற்பண்பில் நம்பிக்கை வைப்பதைச் சீர் குலையச் செய்வதே சாத்தானின் நோக்கம்.

தேவனின் நல்ல தன்மையின் மேல் அவநம்பிக்கை, கொண்டதால் ஆதாமும் ஏவாளும் தேவனின் வார்த்தையை நம்பாமல், கீழ்ப்படியாமைக்குச் சென்றனர். அவர்கள் வீழ்ச்சியில் மூன்று படிகள் உள்ளன. அவை அவநம்பிக்கை, விசுவாசமின்மை மற்றும் கீழ்ப்படியாமையே. கிறிஸ்துவில் விசுவாசம் வைப்பதின் மூலம், கீழ்நோக்கிச் செல்லும் வீழ்ச்சியை மாற்றக்கூடிய மீட்பைத் தேவன் வழங்குகிறார். அது நம்பிக்கையின்மையை விசுவாசமாகவும், கீழ்ப்படியாமையை கீழ்ப்படிதலாகவும், அவநம்பிக்கையை நம்பிக்கையாகவும் மாற்றுகிறது. கீழ்ப்படிதலுக்கு வழிநடத்தும் விசுவாசமே முதற்படி. ஆனால் விசுவாசம் நம்பிக்கைக்கு வழி நடத்த வேண்டும்.

அவரது சோதனை மற்றும் சிட்சையினால், நம்மில் முக்கியமான குணநலன்களை தேவன் கட்டிவருகிறார். அவை நம்பிக்கையும் சகித்தலுமே.

விசுவாசத்திற்கும் நம்பிக்கைக்கும் உள்ள வித்தியாசம் என்ன? இறையியல் சாராத பதில் யாதெனில்; விசுவாசம் என்பது ஒரு செயல்; நம்பிக்கை என்பது ஓர் மனப்பான்மை. (ஆங்கிலேய சுவிசேஷகர் ஸ்மித் விக்கிள்ஸ்வொர்த் விசுவாசம் என்பது ஒரு செயலே என்று தொடர்ந்து வற்புறுத்தி வந்தார்.) விசுவாசம் ஓர் செயலாகவும், நம்பிக்கை ஓர் மனப்பான்மையாகவும் மாறுபட்ட கருத்தைத் தெளிவான எடுத்துக்காட்டாக சங்கீதம் 37:5 இல் காணலாம்.

'உன் வழியைக் கர்த்தருக்கு ஒப்புவித்து, அவர் மேல் நம்பிக்கையாயிரு; அவரே காரியத்தை வாய்க்கப் பண்ணுவார். ஒப்புவித்தல் விசுவாசத்தின் ஓர் செயலைக் காட்டுகிறது; நம்பிக்கை முதலில் ஒப்புவித்தலுக்குப்பின் தொடர்ந்து வரும் மனப்பான்மையை விளக்குகிறது. அதன் பின்னர், தேவன் எல்லாப் பொறுப்பையும் எடுத்துக் கொள்கிறார். அவர் அதைச் செய்வார்.

ஒரு சேமிப்பு வங்கியில் முதலீடு செய்வது இதற்கு ஓர் சாதாரண உதாரணம் ஆகும். வங்கிப் பணியாளரிடம் உங்கள் பணத்தைக் கொடுத்து ரசீது பெற்றுக் கொள்கிறீர்கள். அது ஒப்புவித்தல், விசுவாசச் செயல். அதற்குப் பின்னர் வங்கி என் பணத்தைப் பத்திரமாக வைத்துக் கொள்ளுகிறதா என இரவில் நீங்கள் தூங்காமலிருப்பதில்லை. ரசீதைப் பாதுகாப்பான ஓர் இடத்தில் வைத்துவிட்டு, நிம்மதியாகத் தூங்குவீர்கள் அதுவே உண்மை. அநேகக் கிறிஸ்தவர்கள் முதற்படியை, எடுத்து வைக்கிறார்கள். அது விசுவாசச் செயலே. ஆனால் நம்பிக்கையான மனத்திடனை வைத்துக் கொள்வதில்லை. பரலோகத்திலுள்ள தேவனின் மேல் நம்பிக்கை வைப்பதைக் காட்டிலும் இவ்வுலகத்திலுள்ள ஓர் வங்கியை நம்புவது நமக்கு இலகுவாயிருக்கிறது.

தேவன் சோதனையையும், சிட்சையையும் பயன்படுத்தி நம்மில் நம்பிக்கையை உண்டுபண்ணுகிறார். யோபுவைப் பற்றிய காரியத்தில் இது உண்மையாயிருந்தது. கடுந்துன்ப அனுபவங்கள் மத்தியிலும், யோபு உறுதியாகக் கூறினார். அவர் என்னைக் கொன்று போட்டாலும், அவர் மேல் நம்பிக்கையாயிருப்பேன். (யோபு 13-15). இந்த நம்பிக்கையின் மனப்பான்மை, கணநேரத்தில், காலத்திற்கு அப்பால் உள்ள நித்தியத்தையும், உயிர்த்தெழுதலையும் கண்களை ஏறெடுத்துப் பார்க்கச் செய்தது.

> என் மீட்பர் உயிரோடிருக்கிறார் என்றும், அவர் கடைசிநாளில் பூமியின் மேல் நிற்பார் என்றும் நான் அறிந்திருக்கிறேன். இந்த என் தோல் முதலானவை அழுகிப் போன பின்பு, நான் என் மாம்சத்தில் இருந்து தேவனைப் பார்ப்பேன். அவரை நானே பார்ப்பேன்; அந்நிய கண்கள் அல்ல, என் கண்களே அவரைக் காணும்; இந்த வாஞ்சையால் என் உள்ளந்திரியங்கள் எனக்குள் சோர்ந்து போகிறது.
>
> யோபு 19:25-27

நம்பிக்கை ஏன் அவ்வளவு முக்கியமானது? ஏனெனில் அது நாம் எந்த அளவிற்குத் தேவனின் குணத்தை எண்ணி மதிக்கிறோம் என்பதைக் காட்டுகிறது. ஆதாமும் ஏவாளும் சாத்தானின் சோதனைக்கு இசைந்த போது, அச்செயல் அவர்கள் பேசக்கூடிய வார்த்தைகளை விட அதிகமாய் எடுத்துரைத்தது. தேவன் நியாயமற்றவர். அன்ப ற்றவர். எங்களோடு

நியாயமாய் நடந்து கொள்ளவில்லை. அவரை நம்பமுடியாதுஎன்று சொல்லுவது போல் அவர்கள் செயல் இருந்தது.

வீழ்ச்சியின் பலனை ஒன்றுமில்லாததாக மாற்றி, நம்மில் நம்பிக்கை என்னும் நற்குணத்தை நாம் பெறும் வரை, பாவத்திலிருந்து பெற்ற இரட்சிப்பு முற்றுப்பெறாது. அநேகப் பரீட்சைகள் வழியாய் நாம் கடந்து செல்ல வேண்டியதிருக்கும். தேவனின் முடிவான திட்டத்தை நாம் எப்போதும் நம் கண்முன் வைத்திருக்க வேண்டும். அதுவே தேவனின் முழுமையான நம்பகத்தன்மையில் நமது அசைக்க முடியாத பற்றுறுதியை உண்டு பண்ணும்.

நம்பிக்கையின் உன்னதமான மாதிரியை இயேசு தருகிறார். பிதாவின் திட்டம் நிறைவேற, அவர் பழிபாவத்துக்கு அஞ்சாத, கொடூரமான தேவனற்ற மக்களிடம் ஒப்புக்கொடுக்கப்படுகிறார். அவர்கள் அவரைக் கேலி செய்து, முகத்தில் துப்பி, வாரினால் அடித்து, துணியை உரிந்து, நிர்வாணமாய் சிலுவையில் அறைந்தனர். அவர் அப்போது கதறினார். 'என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்? (மத்தேயு 27:46). இவைகள் எல்லாவற்றிலும் பிதாவின் உண்மையில் அவர் வைத்த நம்பிக்கை ஒருபோதும் மாறவில்லை. தனது இறுதி மூச்சோடு தனது ஆவியைத் திரும்பவும் பிதாவினிடத்திலேயே ஒப்புக்கொடுத்தார்.

நாம் தேவனிடம் கூப்பிட்டும், அவர் பதில் அளிக்காத நிலையில் நாம் எப்படி அதை ஏற்றுக்கொள்கிறோம்? உண்மையில் நமது நம்பிக்கையை அவர் மேல் இன்னும் வைத்திருக்கிறோமா?

நாம் தாங்கிக் கொள்வதற்கு அப்பாற்பட்டு, அவர் நம்மைச் சோதிக்கவிடுகிறதில்லை. இயேசுவிடமிருந்து அவர் எதிர்பார்த்தது, அல்லது யோபுவிடமிருந்து எதிர்பார்த்ததைக் கூட, நம்மிடம் அவர் எதிர் நோக்கவில்லை. ஒவ்வொரு சோதனையும் அல்லது நம்மை மாற்றக்கூடிய சிட்சையும் நமது பண்பை உருவாக்குகிறது. கிறிஸ்துவில், நமது படைப்பின் நோக்கத்தை நிறைவேற்ற உதவுகிறது. சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான்; அவன் உத்தமனென்று விளங்கினபின்பு கர்த்தர் தம்மிடத்தில் அன்புகூறுகிறவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின ஜீவகிரீடத்தைப் பெறுவான். (யாக்கோபு 1:12).

சகித்துக் கொள்ளுதல்

வேதாகமத்தில் நற்குணத்தின் ஓர் அம்சம் சகித்துக் கொள்ளும் தன்மை ஆகும். அநேகக் கிறிஸ்தவர்களிடம் இது விரும்பப்படாத ஓர் பொருள். எனது பிரசங்கத்தில் நான் சகிப்புத்தன்மையைப் பற்றி பேசுகிறேன் என்று சொன்னால், வெகுசிலரே அல்லேலூயா என்று பதில் உரைக்கிறார்கள். சிலவேளைகளில் நான் சகிப்புத்தன்மையை எப்படி

உண்டாக்குவது என்று கூறும் போது, மக்கள் அதன் ரகசியத்தை அறிய ஆவலாய் உள்ளார்கள். சகிப்புத்தன்மையைச் சகிப்பதன் மூலம் தான் பெற்றுக்கொள்ள முடியும் என்று நான் சொல்லுவேன். அப்போது யாவரும் சேர்ந்து கேட்கக்கூடிய அளவிற்குப் பெருமூச்சுவிடுவர். இதைவிடச் சுலபமான வழி இல்லையா என்பதுதான் அப்பெருமூச்சிற்கு அர்த்தம்.

இல்லை, வேறு சுலபமான வழி கிடையாது. வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்க்கைக்கு அத்தகைய பொறுமை அவசியம். சகிப்பதின் மூலம்தான் அதைப் பெற்றுக் கொள்கிறோம். இந்த உண்மையை நாம் ஏற்றுக்கொள்ளுவோமானால், நமது வழியில் வரும் ஒவ்வொரு துன்பத்தையும் நாம் சரியாக சந்திக்க முடியும். அதை மிகுந்த சந்தோஷமாய் எண்ணுங்கள். . . உங்கள் விசுவாசத்தின் பரீட்சைப் பொறுமையை உண்டாக்கும் (யாக்கோபு 1:2-3).

'பொறுமையானது (சகிப்புத்தன்மை) பூரண கிரியை செய்யக்கடவது' (யாக்கோபு 1:4) என்று நாம் எச்சரிக்கப்படுகிறோம். அதாவது தேவனின் திட்டம் நிறைவேற்றப்பட்டுத் துன்ப அனுபவம் முடிவு பெறும் வரை, நாம் பொறுமையோடு இருக்க வேண்டும்.

இந்தச் சோதனை ஆறு மாதங்கள் நீடிக்கப் போகிறது என்று தேவன் முன் கூட்டியே சொல்லுவதில்லை. ஐந்தரை மாதங்கள் முடிந்தவுடன் இதைத் தாங்கிக்கொள்ள முடியாது. விட்டுவிடுகிறேன் என்று கூட சொல்லலாம்.

ஒவ்வொரு சோதனையையும், சீர் செய்யும் சிட்சையையும் நாம் கடந்து வரும்போது நமது நற்பெயர் உயரும்.

எவ்வளவு வருத்தம்! இன்னும் பதினைந்து நாட்கள் சகித்திருந்தால், தேவனின் திட்டம் நிறைவேறியிருக்குமே! இப்பேர்ப்பட்டவர் இன்னும் ஒரு சோதனையைச் சகித்து, தன் குணத்தில் காணப்படும் குறைவை சரிசெய்ய வேண்டியதிருக்கும். தனது திட்டத்தை நிறைவேற்றுமட்டும் தேவன் தன் சோதனையையும், பரீட்சையையும் நீக்கமாட்டார். தேவையானபோது மன்னிப்பைப் பெற்று பொறுமையோடு இருக்கும்போது வேகமான ஆவிக்குரிய முன்னேற்றம் ஏற்படும்.

எபிரெயரின் ஆக்கியோனைப் போல், பவுல் உடற்பயிற்சி போட்டியாளரின் மாதிரியை உபயோகித்து, பொறுமையை விளக்குகிறார். பந்தயத்திற்குப் போராடுகிற யாவரும் எல்லாவற்றிலேயும் இச்சையடக்கமாயிருப்பார்கள். (1கொரிந்தியர் 9:25) இச்சையடக்கமாய் நாம் இருந்தால் தான் நாம் பொறுமையாய் இருக்கப் பெலன் பெறுவோம்.

2 பேதுரு 1:57இல் மேற்சொல்லும் வெற்றிப்படிகளைப் பார்க்கிறோம். விசுவாசம் என்னும் அஸ்திபாரத்திலிருந்து, கிறிஸ்தவப் பண்பு என்னும் உன்னத நிலையை அடையும் அகாப்பே அன்பைக் காண்கிறோம். அந்தப் படிகள்:

ஒழுக்கம் (உயர்ந்த சன்மார்க்கம்)

அறிவு

இச்சையடக்கம்

பொறுமை காத்துக் கொள்ளல் (சகிப்பு)

தேவ பற்று

சகோதர அன்பு

அன்பு

பேதுரு, பொறுமையைக் கடைப்பிடிக்க தன்னடக்கம் அவசியம் தேவை என திட்டவட்டமாக கூறுகிறார். பொறுமைக்கான ஒவ்வொரு சோதனையும் தன்னடக்கத்திற்கான பரீட்சையே. நமது ஆள்தத்துவத்தின் எந்த ஒரு பகுதியின் பலவீனத்தையும் அது வெளிக்காட்டி விடும். மனக்கிளர்ச்சி பகுதியில் அது பயமாகவோ, உற்சாகமின்மையாகவோ அல்லது அழுத்தமாகவோ இருக்கலாம். ஜென்ம சுபாவத்தில் அது காமவிகாரமாகவோ, பசியார்வமாகவோ இருக்கலாம். நமது தனிப்பட்ட உறவுகளில், அது கோபமாகவோ, பொறாமையாகவோ இருக்கலாம். நமது ஆவிக்குரிய வளர்ச்சியில் பெருமை அல்லது சுய நம்பிக்கையாக இருக்கலாம்.

நாம் பொறுமையாக இருக்க, சவால்களைச் சந்திக்கும்போது, பெலவீனமான பகுதிகள் வெளிப்படுத்தப்படும். அநேகக் கிறிஸ்தவர்கள், தன்னடக்கம் மற்றும் சகித்தல் போன்ற இருநிலைகளில் ஜெயம் கொள்ளாமலிருப்பது வருந்தத்தக்கதே. அதனால் அவர்கள் முன்னேற்றமடைந்து தேவபற்று, சகோதர அன்பு மற்றும் அன்பு போன்ற கிறிஸ்தவப் பண்புகளில் முன்னேறுவதில்லை.

இயேசுவை நோக்கி

சோதனையை எப்படிச் சகிக்க வேண்டும் என்பதற்குத் தலையாய உதாரணம் இயேசுவே. எல்லா விதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார் (எபிரெயர் 4:15). அவரது முன்மாதிரியைப் பின்பற்ற, பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையும்

தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம் (எபிரெயர் 12:1).

நமது வாழ்வில், உண்மையான பாவமான காரியங்களைச் சரிசெய்வது மட்டுமல்ல; நாம் பாரமான காரியங்களை அகற்ற வேண்டும். அவை பாவங்கள் அல்ல. ஆனால் கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்ய நாம் எடுக்கும் ஒவ்வொரு முயற்சியிலும் கவனம் செலுத்துவதிலிருந்து அவை நம்மைத் தடைப் பண்ணுகின்றன.

ஓட்டப் பந்தயத்தில் ஓடும் வீரர் தேவையான மிகக் குறைந்த ஆடையையே உபயோகிக்கிறார். தேவையற்ற ஒரு அவுன்ஸ் சுமை கூட அவர் வைத்திருப்பதில்லை. அதையே நாமும் செய்ய வேண்டும். நாம் அகற்ற வேண்டிய சில காரியங்கள்; ஆவிக்குரிய முக்கியத்துவம் இல்லாத சமுதாயக்கடன்கள், மக்கள், இடங்கள், செல்லப் பிராணிகள் இவைகளோடு மனதளவில் பந்தம், பங்குச்சந்தை, விளையாட்டு, பெண்கள் நாகரீகச் சாதனங்கள், வியாபாரப் பொருட்களைப் பார்த்தல், பணம், சுகம், குடும்பம் மற்றும் அரசியல் போன்றவைகளாகும்.

நாம், நேரம் மற்றும் கவனம் செலுத்தும் ஒவ்வொன்றையும் குறித்து இரு கேள்விகள் கேட்க வேண்டும். இது கிறிஸ்துவை மகிமைப்படுத்துகிறதா? ஆவிக்குரிய வகையில் என்னைக் கட்டி எழுப்புகிறதா?

அல்லது தனிப்பட்ட ரீதியில் என்னை முன்னேற்றுகிறதா? அடுத்த அதிகாரத்தின் தலைப்பே இந்த இடறு குழியைப் பற்றி தான்.

6

எல்லாவற்றையும்விடக் கடினமான தேர்வு

ஒரு குழுவைச் சார்ந்தவர்களிடம் கிறிஸ்தவர்கள் சந்திக்கும் மிகவும் கடுமையான சோதனை யாது என்று கேட்டால், அதற்குப் பலவிதமான பதில்கள் கிடைக்கும். இதற்குரிய என்னுடைய பதில் உங்களை வியக்கச்செய்யும். ஏனெனில் அது ஐம்பது ஆண்டுகளுக்கு மேல் கிறிஸ்தவ ஊழியத்தில் இருந்த அனுபவத்தில் நான் கூறுவதாகும். நாம் எதிர்கொள்ளும் மிகக்கடினமான தேர்வாவது, நாம் மிகவும் குறைவாகக் கடந்து செல்ல விரும்பும் வெற்றி என்று நான் நம்புகிறேன்.

சாலொமோன் நம்மை எச்சரிக்கின்றார். (பிரசங்கி 7:8) "ஒரு காரியத்தின் துவக்கத்தைப் பார்க்கிலும் அதின் முடிவு நல்லது; பெருமையுள்ளவனைப் பார்க்கிலும் பொறுமையுள்ளவன் உத்தமன்". இதை வேறுவிதமாகச் சொல்லப் போனால், நீங்கள் ஓர் பந்தயத்தை எப்படித் தொடங்குகிறீர்கள் என்பது பெரிதல்ல, அதிலே எப்படி வெற்றி பெறுகிறீர்கள், அதை எப்படி முடிக்கிறீர்கள் என்பதே சிறப்பாகும். ஒரு மிகக்கெட்டிக்காரரான சீனப் போதகர் ஜெயிலில் இருபது வருடங்களுக்கு மேலாக வாழ்ந்தவர், விசுவாச வீரனாகத் திகழ்ந்தவர், சமீபத்தில் தேவ சமூகத்தில் சேர்ந்தார். அவர் தன் சொந்த வார்த்தையாக அநேக மக்கள் நல்ல தொடக்கத்தைத் தொடங்குவதை நான் பார்த்திருக்கிறேன். ஆனால் ஒரு சிலரே நன்றாக முடிக்கிறார்கள் என்று சொன்னார்.

இதற்கு எடுத்துக்காட்டுகளாக, வெற்றி பெற்ற மனிதர்களான இஸ்ரவேலின் சில அரசர்களைப் பார்க்கலாம்.

பழைய ஏற்பாட்டு அரசர்கள்

முதல் அரசனான சவுல் ஒரு வலிமையான முதன்மையான வாலிப மனிதனாக இருந்தான். அவன் தனது வாழ்வின் ஆரம்பக் காலத்தில் போரில் அநேக வெற்றிகளைப் பெற்றான். ஆனால் தேவனால் அமலேக்கியர்களுக்கு விரோதமாகச் செல்லும்படி கட்டளைப் பெற்றபோது அந்த மனிதர்களுக்குப் பயந்து தேவனுடைய கட்டளைக்கு

முழுமையாகக் கீழ்ப்படியாமல் தன்னை விலக்கிக் கொண்டான். இதன் விளைவாக சாமுவேல் தீர்க்கதரிசி தேவன் உம்மை அரச பதவியிலிருந்து தள்ளிவிட்டார் என்ற செய்தியோடு அவரிடத்திற்கு வந்தான்.

சவுலின் அடிப்படையான பிரச்சனை சாமுவேலின் செய்தியில் தொகுத்துக் கூறப்படுகிறது.

அப்பொழுது சாமுவேல், "*நீர் உம்முடைய பார்வைக்குச் சிறியவராயிருந்தபோது அல்லவோ* இஸ்ரவேல் கோத்திரங்களுக்குத் தலைவரானீர்; கர்த்தர் உம்மை இஸ்ரவேலின் மேல் ராஜாவாக அபிஷேகம் பண்ணுவித்தாரே." (1 சாமுவேல் 15:17) எவ்வளவு காலம் சவுல் தாழ்மையாக இருந்தாரோ அவ்வளவு காலம் தேவன் அவனை ஆசீர்வதித்தார். அவன் பெருமை கொண்டபோது தேவன் அவனைப் புறம்பே தள்ளிவிட்டார். இது நம் எல்லோருக்கும் பொருந்துவதாகவும் நாம் நம்முடைய பார்வைக்குச் சிறியவராக இருக்கும்பொழுது தேவனுடைய மேன்மைக்கு இடம் கொடுப்போம். நாம் நம்முடைய பார்வைக்குப் பெரியவர்களாகும்போது தேவனுடைய வெளிப்பாட்டிற்கும், அவருடைய மேன்மை நம் வழியாகச் செயல்படுவதற்கும் நாம் இடம் கொடுப்பதில்லை.

சவுலினுடைய பெருமை அவனை ஒரு துக்ககரமான முடிவுக்கு இழுத்துச் சென்றது. அவனுடைய வாழ்வின் கடைசி இரவில் அவன் ஒரு மந்திரவாதியிடம் ஆலோசித்தான். அடுத்தநாள் அவன் யுத்தக்களத்தில் தற்கொலை செய்து மாண்டுவிட்டான்.

அடுத்த அரசன் தாவீது தேவனுடைய இருதயத்திற்கு உகந்த மனிதனாக இருந்தான். பல ஆண்டுகளாக அவன் சவுல் அரசனால் நாடோடி போல அலைந்து, துன்புறுத்தப்பட்டு, வேட்டையாடப்பட்டு துன்பமான வாழ்க்கை வாழ வேண்டியதாய் இருந்தது. இருப்பினும் அவன் இவைகள் எல்லாவற்றையும் கடந்துவந்து, வெற்றியடைந்தான். இறுதியாக அவன் அதிசயிக்கத்தக்கதான சாட்சியாக இருந்தான்.

> கர்த்தர் என் நீதிக்குத் தக்கதாக எனக்குப் பதிலளித்தார்; என் கைகளின் சுத்தத்திற்குத்தக்கதாக எனக்குச் சரிகட்டினார். கர்த்தருடைய வழிகளைக் கைக்கொண்டு வந்தேன்; நான் என் தேவனுக்குத் துரோகம் பண்ணினதில்லை.
>
> (சங்கீதம் 18:20-21)

என்று கூறிய பின்பு தாவீது மாறினான், அவனது மொழியும் மாறிவிட்டது.

தேவனே, உமது கிருபையின்படி எனக்கு இரங்கும், உமது மிகுந்த இரக்கங்களின்படி என் மீறுதல்கள் நீங்க என்னைச் சுத்திகரியும். என் அக்கிரமம் நீங்க என்னை முற்றிலும் கழுவி, என் பாவமற என்னைச் சுத்திகரியும்.

(சங்கீதம் 51:1-2)

என்ன நடந்தது? ஏன் இந்த மாற்றம்? தாவீது முழுமையான வெற்றியை அனுபவித்தான். இஸ்ரவேல் முழுவதிற்கும் அரசனாக ஆட்சி செய்தான். அவனுடைய எல்லா விரோதிகளின் மேலும் வெற்றி பெற்றான். அவன் வெற்றியின் கனியை அனுபவித்து மகிழ்ந்தான். அவன் அதற்குப் பின்பு சண்டைக்குச் செல்லவில்லை. அவன் எருசலேமில் தன் வீட்டில் இருந்தான். அவன் தான் விரும்பிய எல்லா ஆசைகளிலும் மூழ்கியிருந்தான்.

ஆகவே தனது அண்டை வீட்டானாகிய உரியாவின் மனைவியாகிய பத்சேபாளிடத்தில் தவறான வழியில் சென்றான். உரியாவின் கொலைக்கு உடன்பட்டாலும் தன் பாவத்தை மறைக்க முயற்சித்தான். தாவீதின் வெற்றிமயமான நேரங்களில் அவன் அரசனாவதற்கு முன்பு வாழ்ந்து வந்த கொள்கைகளை மறந்து விட்டான்.

தாவீதின் வெற்றிமயமான நேரங்களில் அவன் அரசனாவதற்கு முன்பு வாழ்ந்து வந்த கொள்கைகளை மறந்துவிட்டான்.

இறுதியாகத் தாவீது மனங்கசந்து அறிக்கையிட்டான். தேவன் அவனது பாவத்தை மன்னித்தார். இதற்காகக் கர்த்தருக்கு ஸ்தோத்திரம். எனினும் தாவீதின் பாவமானது பின்வரும் சந்ததியில் பரம்பரை பரம்பரையாக ஒரு இருளின் நிழலாகத் தொடர்ந்து வந்தது. தேவன் எச்சரிக்கை செய்தார். "பட்டயம் என்றென்றைக்கும் உன் வீட்டை விட்டு விலகாதிருக்கும்" என்றார். (2சாமுவேல் 12:10)

இதிலிருந்து தேவனுடைய மன்னிப்பானது, நம்முடைய பாவத்தின் எல்லா விளைவுகளையும் ரத்து செய்து விடுவதற்கான அவசியம் இல்லை என்பதை நாம் ஞாபகத்தில் வைத்துக் கொள்வது முக்கியமாகும்.

தாவீதுக்குப் பின்பாக அவனுடைய மகன் சாலொமோன் அரசனானான். அவன் தேவனைச் சார்ந்தவனாகவும் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவனாகவும் இருந்தான். ஏனென்றால் அவன் தாழ்மையுடன் தான் ஞானத்தைப் பெறுவது அவசியம் என்பதை உறுதிப்படுத்தினான். தேவன் அவனுக்கு மிகுந்த செல்வத்தையும், மதிப்பையும் கொடுத்தார். இஸ்ரவேலின் ராஜாக்கள் எல்லோரைப் பார்க்கிலும் இவன்

ஞானமுள்ளவனாகவும், செல்வம் மிகுந்தவனாகவும் அதிகம் புகழ்பெற்றவனாகவும் திகழ்ந்தான்.

சாலொமோன் எல்லாவற்றிலும் ஞானத்தைப் பெற்றிருந்தவனாக இருந்தபோதிலும் வெற்றியின் சோதனையில் வெற்றி பெற்றவனாகக் கடந்து வரவில்லை.

> சாலொமோன் வயது சென்றபோது, அவனுடைய மனைவிகள் அவன் இருதயத்தை அந்நிய தேவர்களைப் பின்பற்றும்படி சாயப்பண்ணினார்கள்; அதனால் அவனுடைய இருதயம் அவன் தகப்பனாகிய தாவீதின் இருதயத்தைப் போல, தன் தேவனாகிய கர்த்தரோடே உத்தமமாயிருக்கவில்லை. சாலொமோன் சீதோனியரின் தேவியாகிய அஸ்தரோத்தையும் அம்மோனியரின் அருவருப்பாகிய மில்கோமையும் பின்பற்றினான். சாலொமோன் தன் தகப்பனாகிய தாவீதைப் போல கர்த்தரைப் பூரணமாய்ப் பின்பற்றாமல், கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தான்.

1 இராஜாக்கள் 11:4-6

மகிமையான ஆரம்பம் அவனுக்கு இருந்தாலும் சாலொமோன் விக்கிரக ஆராதனைக்காரனாக மரித்தான்.

சாலொமோனுக்குப் பின்பு இராஜ்யம் பிரிக்கப்பட்டது. இஸ்ரவேலின் எல்லா ராஜ்யங்களும், வடக்கு இராஜ்யமும் விக்கிரகாராதனைக்காரர்களாக மாறினார்கள். ஆகவே அவர்கள் தேவனால் கைவிடப்பட்டார்கள். தெற்கு இராஜ்யங்களில் உள்ள அநேக அரசர்கள், யூதாவும் கூட தேவனிடத்திலிருந்து தூரமாகத் திரும்பி விக்கிரக ஆராதனைக்கு உட்பட்டனர். எப்படியாயினும் அங்கே சில உண்மையுள்ள நீதியுள்ள அரசர்கள் யூதாவில் இருந்தார்கள். ஆனால் அவர்களில் ஒருவரும் வெற்றிச் சோதனையில் முழுமையாகத் தேர்ச்சி பெறவில்லை.

எடுத்துக்காட்டாக எசேக்கியா பெரிய அளவில் மாற்றங்களை ஏற்படுத்தி யெகோவாவிற்கு உண்மையான ஆராதனையைத் திரும்பவும் உண்டாக்கினான். அசீரியாவின் ராஜாவாகிய சனகெரிப் எருசலேமை முற்றுகையிட்டபோது கர்த்தர் அவர்களுக்காகச் செயல்பட்டு எசேக்கியாவையும் அவனது ஜனங்களையும் அதிசயமாக விடுவித்தார். பின்பு எசேக்கியா நோய்வாய்ப்பட்டு மரணத்தருவாயில் இருக்கும்பொழுது கர்த்தர் அவனைச் சுகப்படுத்தியதுமல்லாமல் அவனுக்கு ஒரு அற்புதமான அடையாளத்தையும் கொடுத்தார். அதாவது சூரிய கடிகாரத்தில் பாகைக்குப் பாகை முன்போன சாயை பத்துப்பாகை பின்னிட்டுத்

திரும்பும்படி செய்தார். உன் நாட்களோடே பதினைந்து வருடங்களைக் கூட்டுவேன் என்றும் வாக்குப்பண்ணினார்.

சூரியனில் ஏற்பட்ட அற்புதமான அடையாளத்தினிமித்தமாக எசேக்கியாவின் புகழ் மற்ற தேசங்களுக்கும் பரவியது. இதன் விளைவாக பாபிலோனிலிருந்து தூதுவர்கள் அவரிடத்தில் வந்தார்கள். அவர்கள் சொன்ன முகஸ்துதியின் நிமித்தமாக எசேக்கியா அவர்களுக்கு அவனுடைய இராஜ்யத்திலுள்ள அனைத்து விலை மதிப்பான எல்லாப் பொருட்களையும், பொக்கிஷங்களிலுள்ளவற்றையும் காண்பித்தான். ஆனால் கர்த்தருக்குச் செலுத்த வேண்டிய கனத்தைச் செலுத்தவில்லை.

எசேக்கியாவின் நடத்தைப்பற்றி வேதம் இரண்டு காரியங்களைக் குறித்து சொல்லுகிறது.

> எசேக்கியா தனக்குச் செய்யப்பட்ட உபகாரத்திற்குத் தக்கதாய் நடவாமல் மன மேட்டிமையானான்; ஆகையால் அவன் மேலும், யூதாவின் மேலும், எருசலேமின் மேலும் கடுங்கோபம் மூண்டது.
>
> ஆகிலும் பாபிலோன் பிரபுக்களின் ஸ்தானாபதிகள் தேசத்திலே நடந்த அற்புதத்தைக் கேட்க அவனிடத்துக்கு அனுப்பப்பட்ட விஷயத்தில் அவன் இருதயத்தில் உண்டான எல்லாவற்றையும் அறியும்படி அவனைச் சோதிக்கிறதற்காக தேவன் அவனைக் கைவிட்டார்.
>
> 2 நாளாகமம் 32:25,31

எசேக்கியாவினிடத்திலிருந்து நாம் இரண்டு காரியங்களைக் கற்றுக்கொள்ள வேண்டும். முதலாவது தேவன் உங்களுக்குச் சில சிறப்பான அற்புதங்களை வழங்கியிருந்தால் அதனால் நீங்கள் ஒரு சிறந்த மனிதன் ஆகிவிடமாட்டீர்கள். உங்களுக்கு ஒரு சிறப்பான தேவன் இருக்கிறார் என்பது மட்டுமே அதன் பொருளாகும். இரண்டாவதாக தேவன் தன்னுடைய பிரசன்னத்தை விலக்கிக்கொண்டு, நம்முடைய வாழ்க்கையில் சுறுசுறுப்பாக செயல்படாமல் போனது போல் காணப்பட்டால் நீங்கள் இவ்வாறு அர்த்தம் கொள்ளலாம். அதாவது அவர் உங்களை சுயமாகச் செயல்பட விடும் போது நீங்கள் எப்படி நடந்து கொள்ளுகிறீர்கள் என்று சோதிப்பதற்காகும்.

பின்பு யூதாவின் வரலாற்றிலே மற்றொரு நீதியுள்ள அரசன் யோசியா எழும்பினான். எசேக்கியாவைப் போலவே இவனும் விரைவான மாற்றங்களை உண்டாக்கி, யெகோவாவிற்கான உண்மையான வழிபாட்டை மீண்டும் உணடாக்கி இவைகளை அறிமுகப்படுத்தினான்.

இவரும் கூட வடபகுதி இராஜ்யத்திலுள்ள பெத்தேலில் விக்கிரக ஆராதனைக்காரர்களின் பலிபீடத்தைத் தகர்த்துப் போட்டார்.

ஆனால் யோசியாவின் வெற்றிகள் அவனுக்குத் தன்னம்பிக்கையை உண்டாக்கியது. அதனால் அவன் மடத்தனமான துணிவுடையவனானான். தேவனிடத்தில் ஆலோசனை பெறாமல் அவருடைய அமைதியான எச்சரிப்பையும் மீறி செயல்பட்டான்.

அவன் நாட்களில் எகிப்தின் ராஜாவாகிய பார்வோன் நேகோ அசீரியா ராஜாவுக்கு விரோதமாய் ஐபிராத்து நதிக்குப் போகிறபோது ராஜாவாகிய யோசியா அவனுக்கு எதிராகப் புறப்பட்டான், பார்வோன் நேகோ அவனை மெகிதோவிலே கண்டபோது அவனைக் கொன்று போட்டான் (2 ராஜாக்கள் 23:29).

இவனோடு கடைசியாக மினுக்கு மினுக்கென மங்கி ஒளிவீசிக் கொண்டிருந்த யூதாவின் நம்பிக்கை மறைந்து போயிற்று.

புதிய ஏற்பாட்டில் வெற்றியுள்ள மனிதர்கள்

புதிய ஏற்பாட்டைப் பற்றியது என்ன? அது வித்தியாசமான நிலையைக் கொடுக்கிறதா? நாம் முன்னணியில் இருந்த மனிதர்களைப் பற்றிக் காணலாம். இயேசுவையும் அவருடைய முன்னணியில் தலைமையேற்றிருந்த சீஷர்களாகிய பேதுரு, யோவான் மற்றும் பவுல் ஆகியோர் அவர்களது முடிவு என்ன?

இயேசுகிறிஸ்து நிச்சயமாகத் தனித்தன்மை வாய்ந்தவராகவும், குறைவற்றவராகவும், பாவமில்லாத தேவகுமாரனாகவும் இருந்தார். அவர் ஒருபோதும் தோல்வியைத் தழுவியதில்லை. எனினும் நிர்வாணியாய்ச் சிலுவையில் தொங்கி, பாவிகள் கேலி செய்யும்படி தன் வாழ்க்கையை ஒப்புக்கொடுத்தார். அதுதான் உலகம் இயேசுவைக் கடைசியாகக் கண்ட காட்சியாகும். மேற்படியாக அவரது உயிர்த்தெழுதலையும், பின்னால் ஏற்பட்ட மகிமையையும் “தேவனுக்கு சாட்சியாய் வாழ்ந்த சில தெரிந்து கொள்ளப்பட்டவர்களுக்கு மட்டுமே தன்னை பிரத்தியட்சப்படுத்தினார்” (அப்போஸ்தலர் 10:41). உலகத்தைப் பொறுத்த வரையில் ஒருவேளை இயேசு நல்ல போதகராகவும், நல்ல மனிதனாகவும் கூட இருந்தார். ஆனால் பெரிய வெற்றி என்பது கடினமாக இருந்தது. மேலும் தேவன் இந்தப் பதிவினை நேராக்க ஒருபோதும் தேடவில்லை.

பன்னிரு அப்போஸ்தலர்களுக்கும் தலைவனாயிருந்தப் பேதுருவைப் பற்றியது என்ன? நம்பத்தகுந்த மரபின்படி பேதுரு கூட தன்னுடைய சொந்த விண்ணப்பத்தின்படி தலைகீழாகச் சிலுவையில் அறையப்பட்டு அவனுடைய வாழ்வு முடிவுற்றது. ஏனென்றால் தேவன்

பாடுபட்ட அதே முறையில் தானும் பாடுபட, தான் தகுதியற்றவன் என்று உணர்ந்தான்.

யோவானின் மரணத்தைக் குறித்த நம்பத்தகுந்த ஆவணங்கள் நமக்குக் கிடைக்கப் பெறவில்லை. ஆனால் அவருடைய வயது முதிர்ந்தக் காலத்தில் அவர் வெறுமையான, பாறைகள் மிகுந்த பத்மு தீவுக்கு நாடு கடத்தப்பட்டார். அங்கே அவர் வெளிப்படுத்தின விசேஷத்தில் எழுதப்பட்டுள்ள தரிசனங்களைப் பெற்றுக்கொண்டார்.

உலகத்தைப் பொறுத்தவரையில் ஒருவேளை இயேசு நல்ல போதகராகவும், நல்ல மனிதனாகவும்கூட இருந்தார். ஆனால் பெரிய வெற்றி என்பது கடினமாக இருந்தது.

பரிசுத்த பவுலைப் பற்றியது என்ன? நாம் அவருடைய சொந்தப் பதிவுகளின்படி அவரும் அவருடைய உடன் அப்போஸ்தலர்களும் எப்படி வாழ்ந்தார்கள் என்பதை அறிகிறோம்.

> இந்நேரம் வரைக்கும் பசியுள்ளவர்களும், தாகமுள்ளவர்களும், நிர்வாணிகளும், குட்டுண்டவர்களும், தங்க இடமில்லாதவர்களுமாயிருக்கிறோம். எங்கள் கைகளினாலே வேலை செய்து, பாடுபடுகிறோம்; வையப்பட்டு, ஆசீர்வதிக்கிறோம்; துன்பப்பட்டு, சகிக்கிறோம்; தூஷிக்கப்பட்டு, வேண்டிக்கொள்ளுகிறோம்; இந்நாள் வரைக்கும் உலகத்தின் குப்பையைப்போலவும், எல்லோரும் துடைத்துப்போடுகிற அழுக்கைப்போலாவுமானோம்.

(1 கொரிந்தியர் 4:11-13)

இறுதியாக ஒரு வல்லமையான மற்றும் அற்புதமான ஊழியத்திற்குப் பின்பு புறஜாதிகளின் உலகிற்கு சுவிசேஷத்தைச் சொல்லுவதற்குத் திறந்த வாசல் உண்டாகியது. பரிசுத்த பவுல் சங்கிலிகளால் கட்டப்பட்டு ஒரு குளிர் மிகுந்த ரோமர்களின் இருட்டறையில் அடைக்கப்பட்டார். அவருடைய மிகவும் நெருங்கிய உடன் வேலையாட்கள் சிலரால் கைவிடப்பட்டார். அங்கிருந்து அவர் வெளியே கொண்டுவரப்பட்டு மரணதண்டனை பெற்றதால் பகிரங்கமாகச் சிரச்சேதம் செய்யப்பட்டார்.

இயேசு, பேதுரு, யோவான் மற்றும் பவுல் ஆகியோரின் பதிவுகளினால் அர்ப்பணிக்கப்பட்ட கிறிஸ்தவர்கள், இரத்தச் சாட்சிகளின் மரணமாக மரிக்க அவசியமாகிறது என்று அவர்கள் நினைக்கிறார்களா?

அல்லது எந்த அர்ப்பணிக்கப்பட்ட கிறிஸ்தவனும் செல்வந்தனாக இருக்கக்கூடாது என்பதா? இல்லை! ஆனால் அவர்கள் மிகவும் முக்கியமான ஒரு கருத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். “*நாம் ஒருபோதும் உலகத்தை இச்சித்து அதன் வெற்றியின் நிலைகளை ஏற்றுக்கொள்ள நம்மை அனுமதிக்கக் கூடாது*”. நாம் உலகத்தின் ஒப்புதலை ஒருபோதும் தேடக் கூடாது. புகழ்பெற வேண்டும் என்ற ஆசையானது எப்பொழுதும் ஆபத்தானதாகும்.

இயேசு கிறிஸ்து இதற்கு விரோதமாக சில அழுத்தமான எச்சரிப்புகளைக் கொடுக்கிறார். பரிசேயர்களிடத்தில் அவர் “மனுஷனுக்குள்ளே மேன்மையாக எண்ணப்படுகிறது தேவனுக்கு முன்பாக அருவருப்பாயிருக்கிறது” (லூக்கா 16:15) என்று சொன்னார். அவர் தனது சீஷர்களுக்கு, “எல்லா மனுஷரும் உங்களைக் குறித்துப் புகழ்ச்சியாய்ப் பேசும்போது உங்களுக்கு ஐயோ; அவர்கள் பிதாக்கள் கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கும் அப்படியே செய்தார்கள்” (லூக்கா 6:26) என்று சொன்னார்.

உண்மையான வெற்றிக்குரிய திறவுகோல்

மனதிற்குள்ளாக நான் பழைய ஏற்பாட்டிலுள்ள ஐந்து அரசர்களின் முடிவோடு கூட இயேசுவையும் அவருடைய சீஷர்களையும் எதிரான முறையில் ஒப்புமை செய்தேன். *உண்மையான வெற்றிக்கான நடத்தையை உருவாக்குவதற்குரிய திறவுகோல் என்ன என்று நான் கேட்டேன்.* தேவன் எனக்கு, இரண்டு வேத வசனங்களைக் கொடுத்து வழிநடத்தினார்.

முதலாவது பரிசுத்த பவுல் சொல்லுவதுஇ (1 கொரிந்தியர் 7:25) “ஆகிலும் நான் உண்மையுள்ளவனாயிருப்பதற்குக் கர்த்தரால் இரக்கம்பெற்று என் அபிப்பிராயத்தைத் தெரியப்படுத்துகிறேன்.” விசுவாசத்துடன் இருப்பதற்கு நான் காண்பது, *நான் முழுமையாகத் தேவனுடைய இரக்கத்தின் மீது சார்ந்திருத்தல் வேண்டும்.* நான் வேறு எதையும் சார்ந்திருக்க முடியாது. அதாவது என்னுடைய கல்வியின் பின்னணி, என்னுடைய ஆவிக்குரிய வரங்கள், என்னுடைய சென்ற கால சாதனைகள், என்னுடைய கிறிஸ்தவர்களுக்காகச் சேவை செய்த ஆண்டுகள் ஆகிய எதையும் சார்ந்திருக்க முடியாது. என்னை விசுவாசமுடையவனாகக் காத்துக்கொள்ளுவதற்கு அங்கே ஒன்றே ஒன்றுதான் உள்ளது. *அதுதான் தேவனுடைய இரக்கம்.* நான் இதை எனது வாழ்வின் மையக்கருத்தாக ஏற்படுத்திக் கொண்டு மனச்சாட்சியோடு, தொடர்ச்சியாக தேவனுடைய இரக்கத்தைச் சார்ந்திருக்க வேண்டும். என்னுடைய சார்ந்திருக்கும் உணர்வை

மறைக்கக்கூடிய அல்லது குறைக்கக்கூடிய வகையில் செயல்படக்கூடிய எந்தச் செயலுக்கும் விரோதமாக நான் என்னைக் காத்துக்கொள்ள வேண்டும். குறிப்பாக என்னிடத்தில் எவ்விதத்திலும் பெருமை ஏற்படாதபடி நான் கவனமாக இருக்க வேண்டும். ஏனென்றால் பெருமை என்பது சுயசார்பு ஆகும்.

உலகம் தனது வெற்றியின் தரத்தை நம்மை இச்சிக்க வைத்து அதனை ஏற்றுக் கொள்ளும்படி செய்யும்போது ஒருபோதும் நாம் அதற்கு இடம் கொடுக்கக் கூடாது.

“இரண்டாவதாக இயேசு சொல்வது, யோவான் 4:34. “இயேசு அவர்களை நோக்கி: நான் என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்து, அவரது கிரியையை முடிப்பதே என்னுடைய போஜனமாயிருக்கிறது” என்பதாகும். இயேசுவின் வாழ்விற்கு ஆதாரமானதும் அவருக்குப் பலத்தைத் தருவதும் ஒரே மனதான தீர்மானமாக அவருடைய வாழ்க்கையின் முடிவுபரியந்தம் பிதாவின் சித்தத்தைச் செய்வதாகவே இருந்தது. இதுதான் நீங்களும் நானும் குறிக்கோளாக வைத்துக்கொள்ள வேண்டிய *உண்மையான வெற்றியாகும்.*

7

"பழைய மனுஷனைக்"களைந்து போடுதல்

நாம் இதுவரை கவனித்த வெற்றியானது வித்தியாசமான மக்களுக்கு வித்தியாசமான அர்த்தத்தைக் கொடுக்கிறது. உலகத்தைப் பொறுத்த வரையில் அது பொதுவாக செல்வத்தையும் புகழையும் குறிக்கும்.

கிறிஸ்தவர்களுக்கு அது தேவனுடைய சித்தத்தைச் செய்வதாகும். இப்படிப்பட்ட வெற்றியை நாம் எப்படிப் பெற முடியும்? அங்கே ஒரே ஒரு வழி தான் உண்டு, அது இயேசுவைப் பின்பற்றுவதேயாகும். கிறிஸ்தவர்களுக்கான நன்னடத்தையைக் கட்டுவதற்கு இதுவே வழியாகும். உண்மையாக இதுவே கிறிஸ்தவ வாழ்க்கையின் சாரமாகும்.

இது வரி வசூலிப்பவரான மத்தேயுவின் மனமாற்றத்தின் மூலம் விளக்கப்படுகிறது. (மத்தேயு 9:9 ஐப்பார்க்கவும்) "இயேசு அவ்விடம் விட்டுப் புறப்பட்டுப் போகையில் ஆயத்துறையில் உட்கார்ந்திருந்த மத்தேயு என்னும் ஒரு மனுஷனைக் கண்டு, எனக்குப் 'பின் சென்று வா' என்றார்; அவன் எழுந்து அவருக்குப் பின் சென்றான்". மத்தேயுவினுடைய மறுமைக்கான முடிவு அவனுடைய பதிலைப் பொறுத்து அமைந்தது. அவன் எழுந்திருந்து இயேசுவுக்குப் பின்சென்றான்.

மத்தேயு செய்ததுபோல நாமும் செய்யத் தீர்மானித்தால், நாம் பின் செல்ல ஆரம்பிப்பதற்கு முன்பாக அங்கே இரண்டு அத்தியாவசியமான கட்டளைகளை நாம் தெரிந்துகொள்ள வேண்டும். மத்தேயு சுவிசேஷத்தில் மத்தேயு இயேசு சொல்லுவதைக் குறிப்பிடுகிறார். "அப்பொழுது, இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி: ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக் கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்" (மத்தேயு 16:24). முதலாவது நம்மை நாம் வெறுக்க வேண்டும். இரண்டாவதாக நாம் நம்முடைய சிலுவையை எடுத்துக்கொள்ள வேண்டும்.

தன்னைத்தான் வெறுத்துவிடுவது என்பது வேண்டாம் என்று சொல்லுவதாகும். நாம் நம்முடைய அன்றாடத் தேவைகள், தான் என்ற அகங்காரம் ஆகியவற்றிற்கு 'இல்லை' என்று சொல்ல வேண்டும். இயேசு கெத்சமெனேயில் செய்த ஜெபத்தை நாம் எதிரொலிக்க வேண்டும்.

"என்னுடைய சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்று ஜெபம் பண்ணினார்" (லூக்கா 22:42). முதலாவது நம்மை நாம் வெறுத்த பின்புதான் நம்முடைய சிலுவையை எடுத்துக்கொண்டு நாம் நடக்க முடியும். நம்முடைய சிலுவையைப் பற்றி ஒருவர், எங்கே தேவனுடைய சித்தமும் நம்முடைய சித்தமும் கடந்து செல்லுகிறதோ அந்த இடமே சிலுவை என்று கூறுகிறார். உண்மையாக அது மரண தண்டனைக்குரிய இடமாகும்.

ரோமர் 6:6இல் பரிசுத்த பவுல் நமக்கு, "நாம் இனிப் பாவத்திற்கு ஊழியம் செய்யாதபடிக்கு, பாவசரீரம் ஒழிந்துபோகும் பொருட்டாக, நம்முடைய பழைய மனுஷன் அவரோடேகூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம்" என்று சொல்லுகிறார்.

நம்முடைய முதலாவது அத்தியாயத்திலேயே பழைய மனுஷன் என்பது எதிர்க்கக்கூடிய தன்மையும், தன்னை சந்தோஷப்படுத்திக் கொள்வதும் ஆகிய இயற்கைத் தன்மை கொண்டவனாய் இருந்து பின்வரும் சந்ததியாரிலும் இத்தன்மையைப் புகுத்தினான். இது நம்முடைய மூதாதையரான ஆதாமினால் உண்டானது. பழைய மனிதனைக் கையாள்வதில் தேவனுக்கு ஒரே ஒரு தீர்வு தான் உண்டு. அவர் அவனை ஆலயத்திற்கோ அல்லது ஞாயிறு பள்ளிக்கோ அனுப்பவில்லை. அவர் அவனுக்கு தம் சட்ட திட்டங்களைப் போதிக்கவுமில்லை, சுய முன்னேற்றம் பெறுவதற்கான எந்த வகுப்பிற்கும் அனுப்பவுமில்லை. தேவனுடைய தீர்வானது எளிமையானதும் இறுதியானதுமாகும். அது மரணதண்டனையாக இருக்கிறது.

சுவிசேஷத்தின் நற்செய்தியாவது, இயேசு சிலுவையில் மரித்தபோது இந்த மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது. அவருக்குள், அந்நேரத்தில் நமது ஆதாமின் சுபாவம் சிலுவையில் அறையப்பட்டது. இது ஒரு சாதாரண வரலாற்று உண்மையாகும். நாம் இதை அறியாமலிருந்தாலும் நம்பாமலிருந்தாலும் இது உண்மையேயாகும். ஆனால் அதிலிருந்து நாம் நன்மையைப் பெற்றுக் கொள்ள அதை நாம் அறிந்து கொள்ள வேண்டும், நம்பவும் வேண்டும்.

ஒரு கனவில் தேவனால் சவால் கொடுக்கப்படல்

ஏறக்குறைய ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் லண்டனிலுள்ள ஸ்பீக்கர்ஸ் கார்னர் (Speaker's corner) மார்பிள் ஆர்ச் என்னுமிடத்தில் சுவிசேஷக் கூட்டங்கள் நடத்துவது உண்டு. அவ்வாறு நடத்திக் கொண்டிருக்கும் வேளையிலே ஓர் இரவு நான் ஒளிமயமான ஒரு கனவு கண்டேன். அதில் ஒரு மனிதன் ஸ்பீக்கர்ஸ் கார்னரில் பேசிக் கொண்டிருப்பதை நான் கண்டேன். அந்த மனிதனுடைய செய்தியானது

நன்றாக இருந்தது. ஆனால் அவனுடைய தோற்றத்தை நான் சிறிது விரும்பவில்லை. அவனுடைய சரீரம் குறுகலாயிருந்தது. அவனிடத்தில் முன்னால் தடித்திருக்கும் கனத்த தடியைப் போன்ற பாதம் காணப்பட்டது. அந்நேரத்தில் நான் அந்தக் கனவிற்கு எந்த குறிப்பிட்ட முக்கியத்துவமும் கொடுக்கவில்லை.

ஒரு வாரம் சென்ற பின்பு அதே கனவை நான் திட்டவட்டமாக மீண்டும் கண்டேன். தேவன் என்னிடம் ஏதோ சொல்ல விரும்புகிறார் என்ற முடிவுக்கு வந்தேன். 'தேவனே'! அந்த மனிதனுடைய செய்தியானது நன்றாக இருந்தது. ஆனால் அவனுடைய தோற்றத்தை நான் சிறிதும் விரும்பவில்லை. அவன் யார்? என்றேன்.

தேவனுடைய பதில் உடனடியாக நேரிடையாக இருந்தது. *நீயே அந்த மனிதன்!* தேவன் என்னிடத்தில் சில முக்கிய மாற்றங்கள் நேரிட வேண்டியது அவசியம் என்று நினைத்தார். ஆனால் அது என்ன என்பதை நான் அறியவில்லை. உயிர்த்தெழுதல் பண்டிகையின் (Easter) காலம் நெருங்கிக் கொண்டிருந்தது. நான் சிலுவையைப் பற்றிய தியானத்தை மேற்கொண்டிருந்தேன்.

ஒரு மலையிலே மூன்று சிலுவைகள் இருப்பதை நான் மனதிலே படக்காட்சி போலக் கண்டேன். அதிலே மையமான சிலுவையானது மற்ற இரண்டு சிலுவைகளைப் பார்க்கிலும் உயரமானதாக இருந்தது. பரிசுத்த ஆவியானவர் என்னிடத்தில் *"யாருக்காக இந்த மைய சிலுவை செய்யப்பட்டது?"* என்று கேட்டார். பின்பு அவர் என்னை *"நீ எப்படி பதில் சொல்லுகிறாய் என்பதில் கவனமாக இருக்க வேண்டும்"* என்று எச்சரித்தார்.

நான்தான் அந்தக் குற்றவாளி எனக்காகவே அந்த சிலுவை தயாரிக்கப்பட்டது. அது என்னுடைய அளவின்படி செய்யப்பட்டது. அதுவே நான் இருக்கவேண்டிய இடமாகும்.

ஒரு கணம் நான் அதைப் பற்றி சிந்தித்தேன். பின்பு *"மத்திய சிலுவை பரபாசுக்காகச் செய்யப்பட்டது. ஆனால் கடைசி நேரத்தில் இயேசு அவனுடைய இடத்தை எடுத்துக் கொண்டார்"* என்றேன்.

ஆகவே "இயேசு பரபாசின் இடத்தை ஏற்றுக் கொண்டார்". பரிசுத்த ஆவியானவர் மேலும் தொடர்ந்து சொன்னார். ஆனால் "நீ சொன்னாய் இயேசு உன்னுடைய இடத்தை எடுத்துக் கொண்டார்என்று. ஆம் அவர் அப்படியே செய்தார் என்று" பதில் சொன்னேன்.

"அப்படியானால் நீயே அந்த பரபாஸ்" !

அந்தக் கணத்தில் நான் அதை முழுத் தெளிவுடன் பார்த்தேன். நான் தான் அந்த குற்றவாளி எனக்காகவே அந்தச் சிலுவை தயாரிக்கப்பட்டது. அது என்னுடைய அளவின்படி செய்யப்பட்டது. அதுவே நான் இருக்க வேண்டிய இடமாகும் என்று உணர்ந்தேன்.

என்னுடைய பழைய மனிதன் கிறிஸ்துவின் சிலுவையில் அறையப்பட்டிருந்த போதிலும் நான் இன்னும் என்னைப் பரிசுத்த பவுல் தன்னை மதிப்பீடு செய்ததைப்போல அவரோடு நானும் என்னை அறிந்து கொள்ளும்படி வற்புறுத்தப்பட்டேன். “நன்மை செய்ய வேண்டுமென்ற விருப்பம் என்னிடத்திலிருக்கிறது, நன்மைசெய்வதோ என்னிடத்திலில்லை” (ரோமர்7:18). என்னுடைய ஆள்தன்மையின் ஒவ்வொரு பகுதியிலும் பாவத்தின் அழிவினால் நிறைந்திருப்பதை நான் பார்த்தேன். பரிசுத்தம் என்பதும் நன்மையானவைகளும் எதுவும் என்னிடத்தில் காணப்படவில்லை. இப்படி இருந்தால் தேவசகாயத்தைப் பெறுவது எப்படி? ஆகவே நான் எப்படி நடந்துகொள்ள வேண்டும்?

தேவனுடைய முன்னேற்பாடு, நம்முடைய படிகள்

ரோமர் 6:13இல் பவுல் நான்கு வெற்றிகரமான படிகளை நியமித்திருக்கிறார். நம்முடைய நடத்தையைக் கட்டிக் கொள்வதற்கும் இதனால் பழைய மனுஷனைத் தோற்கடித்து இயேசுவின் தன்மையைப் பின்பற்றுவதற்கும் இவற்றை வரிசைக் கிரமமாக நாம் கடைப்பிடிக்க வேண்டும்.

நன்னடத்தையைக் கட்டுவதற்கான நான்கு வெற்றிகரமான படிகள்

1. முதலாவதாக, இயேசுகிறிஸ்து சிலுவையில் மரித்த போது, என்னுடைய பாவகரமான தன்மையும் மரித்துவிட்டது என்பதை நான் **தெரிந்து கொள்ள வேண்டும்.** இதுவே அத்தியாவசியமான முதற்படியாகும். இதிலிருந்து தான் மற்ற படிகள் தொடருகின்றன. (வசனம் 6ஐப் பார்க்கவும்)

2. இயேசு மரித்தது போல நானும் மரித்தேன் என்று நான் **கணிக்க வேண்டும்.** (வசனம் 11ஐப் பார்க்கவும்)

3. இதன் அடிப்படையில் திட்டவட்டமாகப் பாவமானது தொடர்ந்து என்னை அதிகாரம் செலுத்துவதற்கு நான் மறுத்துவிட வேண்டும். (வசனம் 12ஐப் பார்க்கவும்)

4. ஒருவர் மரித்து எழுந்தது போல நான் என்னைத் தேவனிடம் ஒப்படைக்க வேண்டும். நான் எனது சரீர

> அவயவங்களைக் கருவிகளாக அவரிடம் சரண் செய்ய வேண்டும் (உண்மையான நீதியின் ஆயுதங்கள்). **ஆயுதங்கள்** என்ற வார்த்தை பயன்படுத்தப்படுவதால் நான் சாத்தானின் எதிர்ப்பைச் சந்திக்க வேண்டும் (வசனம் 13 ஐப்பார்க்கவும்).

இவ்வாறாக நாம் பாவத்தின் கொடுமையிலிருந்து முழுமையாக விடுபட தேவனுடைய மூன்று மடங்கான சலுகைகளைப் பெற வேண்டும். முதலாவது அவர் நமது *பாவத்தையும்,* நாம் செய்த எல்லா பாவச் செயல்களையும் சரிகட்ட வேண்டும். ஏனென்றால் இயேசு நம்முடைய பாவங்களுக்கான எல்லாக் கிரயத்தையும் சிலுவையில் செலுத்திவிட்டார். இயேசு நம்மிடத்தில் ஒப்பந்தம் ஒன்றும் செய்து கொள்ளாமல் நமது பாவத்தை அவருடைய சொந்த நீதியினால் மன்னிக்க முடியும். ஆகவே முதலாவது சலுகையானது *பாவ மன்னிப்பாகும்.*

பின்பு தேவன் நம்மிடத்திலுள்ள குற்ற உணர்வுகள், திரும்பத் திரும்பப் பாவச் செயல்களைச் செய்தல் ஆகியவற்றையும் சரி செய்கிறார். அவரது சலுகையாவது மரண தண்டனை அதாவது அந்த பாவத் தன்மையை மரணமடையும்படிச் செய்வதாகும். நற்செய்தி என்னவென்றால் இருபது நூற்றாண்டுகளுக்கு முன்பு இயேசு சிலுவையில் மரித்து மரணதண்டனையை ஏற்றுக் கொண்டார் என்பதாகும்.எப்படியாயினும் இதுவே முடிவாகிவிட முடியாது. தேவனுடைய நோக்கமாவது பழைய மனிதனைக் களைந்து போட்டு விட்டு புதிய மனிதனை உருவாக்குவது ஆகும். இந்த வாய்ப்பு எபேசியர் 4:22-24 வரை விளக்கப்பட்டுள்ளது.

> அந்தப்படி, முந்தின நடக்கைக்குரிய மோசம் போக்கும் இச்சைகளாலே கெட்டுப் போகிற பழைய மனுஷனை நீங்கள் களைந்துபோட்டு, உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர்களாகி, மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாகச் சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொள்ளுங்கள்.

நாம் மேலே கூறப்பட்ட பவுலினுடைய படிகளைப் பின்பற்றினாலும் பழைய மனிதன் தான் மரணத்திற்குட்படுத்தியதை ஏற்றுக் கொள்வான் என்று நாம் நிதானிக்க முடியாது. இதற்கு மாறாக அவன் சில வேளைகளில் நம்மேல் ஆளுகை செய்வதற்கு அவன் பயங்கரமாகப் போராடுவான். இது பவுலினுடைய எச்சரிப்பின் வார்த்தைகளை, கொலொசெயர் 3:3 விளக்குகிறது. 'நீங்கள் மரித்தீர்கள்', பின்பு வசனம் 5இல் அவர் சொல்லுகிறார். "ஆகையால் விபசாரம், அசுத்தம், மோகம், துர் இச்சை விக்கிரகாராதனையான பொருளாசை ஆகிய இவைகளைப் பூமியில் உண்டு பண்ணுகிற உங்கள் அவயவங்களை

அழித்துப் போடுங்கள்" என்பதாகும். நாம், நம்முடைய பழைய மனுஷன் மரித்துப் போனது என்பது முடிந்து போன உண்மை என்ற விசுவாசத்தில் உறுதியாய்த் தரித்திருக்க வேண்டும். நாம் உற்சாகமாக நம்மை மீண்டும் ஆளுகை செய்ய வேண்டும் என்ற சாத்தானுடைய முயற்சிகளுக்கு எதிர்த்து நிற்க வேண்டும்.

துரதிர்ஷ்டமாக அநேக பொறுப்பான கிறிஸ்தவர்கள், தேவனுடைய முழுமையான ஈவுகளைப் புரிந்துகொள்ளுவதுமில்லை அதனை ஆதாயப்படுத்திக் கொள்ளுவதுமில்லை. தங்களுடைய பாவங்களின் மன்னிப்பை அவர்கள் உரிமை பாராட்டுவார்கள். மீண்டும் தொடர்ந்து உரிமை பாராட்டுவார்கள். ஆனால் அவர்கள் தேவன் பழைய மனிதனைக் களைந்து போட்டுவிட்டு அவனது இடத்தில் புதிய மனுஷனை உண்டாக்கியதை அவர்கள் அறியமாட்டார்கள். இதன் விளைவினால் அவர்களது கிறிஸ்தவ வாழ்க்கைக் களைப்புடையதாகவும், பாவம் செய்தல், மனந்திரும்புதல், பாவமன்னிப்புப் பெறுதல், அதன் பின்பு திரும்பவும் பாவம் செய்தல் என்று இருக்கிறது. அவர்கள் பழைய பாவ மனுஷத்தன்மையின் ஆளுகையிலிருந்து விடுதலையாக்கப்படும் அனுபவத்தை ஒருபோதும் பெறவில்லை. பாவத்தைக் குறித்து தேவன் முழுமையாகக் கொடுக்கும் ஈவைப் பகுத்து ஆராயும்போது, அது நம்மை தனிப்பட்ட ஆவிக்குரிய கண்டுபிடிப்புக்கு வழி நடத்த வேண்டும். இதனால் நாம் நம்மிடத்தில் பின்வரும் வினாக்களை வினவுகிறோம். என்னுடைய எல்லாப் பாவங்களும் முழுமையாக மன்னிக்கப்பட்டுவிட்டது என்ற நிச்சயம் உண்டா? நான் என்னுடைய பழைய மனுஷனின் மாம்ச இச்சைக்குரிய தன்மையின் ஆளுகையிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளேனா? நான் நீதியையும் உண்மையான பரிசுத்தத்தையும் உண்டாக்கும் புதிய மனிதனைத் தரித்துக் கொண்டேனா? நான் இயேசுவைப் பின்பற்றுகிறேனா?

வருங்காலத்தைப் பற்றிய கண்ணோட்டம்

இந்தக் காலங்களின் முடிவில் தேவன் தாமே மேசியாவைப் பின்பற்றும் 1,44,000 இஸ்ரவேலர்களை தமக்காக எழுப்பப் போகிறார். அவர் அவர்களை ஒரு உலகத்திற்குள்ளாக அனுப்பப் போகிறார். அந்த உலகத்தில் ''மகா உபத்திரவங்களின்'' விளைவுகளின் கீழ் உபத்திரவப்படுவார்கள். மேலும் அவர்கள் மிகுந்த ஆத்துமாக்களின் விளைவினை அறுப்பார்கள். அந்த அறுவடையை ஒருவனாலும் கணக்கெடுக்க முடியாது.

வெளிப்படுத்தின விசேஷம் 14:1-3 "பின்பு நான் பார்த்த போது, இதோ, சீயோன் மலையின் மேல், ஆட்டுக்குட்டியானவரையும், அவரோடேகூட அவருடைய பிதாவின் நாமம் தங்கள் நெற்றிகளில்

தேவனுடைய நோக்கமாவது பாவமுள்ள பழைய மனிதனைக் களைந்து போட்டு புதிய மனிதனை உருவாக்குவது ஆகும்.

எழுதப்பட்டிருந்த இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேரையும் நிற்கக் கண்டேன்.

அல்லாமலும், பெருவெள்ள இரைச்சல் போலவும், பலத்த இடிமுழக்கம் போலவும், ஒரு சத்தம் வானத்திலிருந்து உண்டாகக் கேட்டேன். நான் கேட்ட சத்தம் சுரமண்டலக்காரர் தங்கள் சுரமண்டலங்களை வாசிக்கிற ஓசையைப் போலிருந்தது.

அவர்கள் சிங்காசனத்திற்கு முன்பாகவும், நான்கு ஜீவன்களுக்கு முன்பாகவும், மூப்பர்களுக்கு முன்பாகவும் புதுப்பாட்டைப் பாடினார்கள். அந்தப் பாட்டு பூமியிலிருந்து மீட்டுக்கொள்ளப்பட்ட இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேரேயல்லாமல் வேறோருவரும் கற்றுக் கொள்ளக் கூடாதிருந்தது".

அவர்கள் எப்படிப்பட்ட வகையான ஜனங்கள்?

அவர்களுடைய தன்மை தெளிவாகக் கோடிட்டுக் காட்டப்படுகிறது. "ஸ்திரீகளால் தங்களைக் கறைப்படுத்தாதவர்கள் இவர்களே; கற்புள்ளவர்கள் இவர்களே; ஆட்டுக்குட்டியானவர் எங்கே போனாலும் அவரைப் பின்பற்றுகிறவர்கள் இவர்களே; இவர்கள் மனுஷரிலிருந்து தேவனுக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் முதற்பலனாக மீட்டுக் கொள்ளப்பட்டவர்கள். (வசனம் 4)

அது உன்னை உற்சாகப்படுத்துகிறதா? - அது உன்னை உற்சாகப்படுத்தியது போல - இயேசுவை மிகவும் நெருக்கமாக பின்பற்றுவதற்கு உனக்கு விருப்பம் உண்டாகிறதா?

8

ஆராதனையின் பங்கு

சென்ற அத்தியாயத்தின் இறுதியில் நாம் ஒரு சுருக்கமான பார்வையாக யார் பழுதில்லாத ஆளுமையைப் பெற்று, தேவனுடைய சிங்காசனத்தின் கீழ் வெற்றிகரமாகத் தொழுகிறார்களோ அவர்களைப் பற்றிக் கண்டோம். தேவன் என்னிடத்தில் இடைப்பட்டு, ஆராதனையின் செம்பொருள் பற்றிக் காட்டினார். அவர் எனக்கு ஒரு புதிய அறிந்து கொள்ளுதலைக் கொடுத்தார் என்று நான் நம்புகிறேன். நான் எப்பொழுதும் ஆராதனை என்பது வேதத்திலுள்ள முக்கியக் கருத்துகளில் ஒன்றாகும் என்பதை அறிந்து கொண்டேன். மேலும் இது ஆவிக்குரிய யுத்தத்தில் ஈடுபடும் கிறிஸ்தவர்களுக்கு மிகவும் முக்கியமானதாகும். ஆனாலும் நான் ஆராதனையின் தன்மையைப்பற்றி தெளிந்த புரிந்துகொள்ளுதலை உடையவன் என்று ஒருபோதும் உணரவில்லை.

நான் ஆரம்பத்தில் குறிப்பிட்டது போல ஆராதனை என்பது தற்கால சபைகள் வழக்கமாக ஆராதிப்பதை விட மிகவும் வித்தியாசமானது என்று நான் நம்புகிறேன். அநேக சபைகளில் மக்கள் காலை ஆராதனை முறைமையைப் பற்றி பேசுகிறார்கள். அதைப் பற்றி ஆழ்ந்து சிந்திப்பதில்லை. என்னுடைய அனுபவம் என்னவென்றால் அதிகமாக அந்தச் சபைகளில் உண்மையான தொழுதல் நடைபெறுவதில்லை. ஆகவே நம்முடைய இறுதிக் கட்ட நன்னடத்தையைக் காட்டும் படிப்பினையில் உண்மையான ஆராதனையோடு கூட ஆராதனையின் தன்மையைப் பற்றிக் கூட அதன் படிகளை நான் சோதித்துப் பார்க்க விரும்புகிறேன். மேலும் நான் உண்மையான ஆராதனையின் கனிகளைப் பெறுவதற்கானவற்றை ஆலோசனையாக எடுத்துக்கூற விரும்புகிறேன். இது யுத்தத்திற்கு ஆயத்தப்படும் புத்தகத்தில் எதிர்மாறாகக் காணப்படுவது போல் தோன்றும். அது ஓய்வு ஆகும்.

சங்கீதம் 95ஐ உங்களுடன் இணைந்து மிகவும் ஆழமாகத் தியானிக்க விரும்புகிறேன்.

> கர்த்தரைக் கெம்பீரமாய்ப் பாடி, நம்முடைய இரட்சண்யக் கன்மலையைச் சங்கீர்த்தனம் பண்ணக்கடவோம் வாருங்கள். துதித்தலுடனே அவர் சந்நிதிக்கு முன்பாக வந்து, சங்கீதங்களால் அவரை ஆர்ப்பரித்துப் பாடக்கடவோம். கர்த்தரே மகா தேவனும், எல்லா தேவர்களுக்கும் மகாராஜனுமாயிருக்கிறார். பூமியின் ஆழங்கள் அவர் கையிலிருக்கிறது; பர்வதங்களின் உயரங்களும் அவருடையவைகள். சமுத்திரம் அவருடையது, அவரே அதை உண்டாக்கினார்; வெட்டாந்தரையையும் அவருடைய கரம் உருவாக்கிற்று. நம்மை உண்டாக்கின கர்த்தருக்கு முன்பாக நாம் பணிந்து குனிந்து முழங்காற்படியிடக் கடவோம் வாருங்கள். அவர் நம்முடைய தேவன்; நாம் அவர் மேய்ச்சலின் ஜனங்களும், அவர் கைக்குள்ளான ஆடுகளுமாமே. இன்று அவருடைய சத்தத்தைக் கேட்பீர்களாகில், வனாந்தரத்தில் கோபம் மூட்டினபோதும் சோதனை நாளிலும் நடந்ததுபோல, உங்கள் இருதயத்தைக் கடினப்படுத்தாதேயுங்கள். அங்கே உங்கள் பிதாக்கள் என்னைச் சோதித்து, என்னைப் பரீட்சை பார்த்து, என் கிரியையும் கண்டார்கள். நாற்பது வருஷமாய் நான் அந்தச் சந்ததியை அரோசித்து, அவர்கள் வழுவிப் போகிற இருதயமுள்ள ஜனமென்றும், என்னுடைய வழிகளை அறியாதவர்களென்றும் சொல்லி, என்னுடைய இளைப்பாறுதலில் அவர்கள் பிரவேசிப்பதில்லையென்று என்னுடைய கோபத்திலே ஆணையிட்டேன்.
>
> (சங்கீதம் 95)

ஒரு சங்கீதம் எதிர்மறையான ஒரு வாசகத்தைக் கொண்டு முடிவது அசாதாரணமாக உள்ளது. ஆனால் ஒரு கணம் நாம் பார்த்தோமானால், அதிலே ஒரு சிறப்பான காரணம் உண்டு என்று நான் நம்புகிறேன்.

வாயிலுக்குள்ளும் பின்பு துதித்தலுடனே அவர் சந்நிதிக்குள்ளும் நுழைதல்

இந்தச் சங்கீதத்தில் மூன்று செயல்கள் ஒன்றுக்கொன்று மிகவும் தொடர்புள்ளவைகளாயிருக்கின்றன. அவை நன்றி செலுத்துதல், போற்றுதல் மற்றும் துதித்தல் என்பவைகளாகும். ஆனாலும் அவைகள் தனித்தனிச் சிறப்புடையவைகள். எனினும் நான் அவைகளை வானவில்லிலுள்ள தனிப்பட்ட நிறங்களைப் போல நினைக்கிறேன். இவைகள் ஒன்றின் மேல் ஒன்றாக வளைவாக அடுக்கப்பட்டுள்ளன. முதல் இரண்டு செயல்களை எளிதாகப் புரிந்து கொள்ளலாம். அதாவது

மிகவும் எளிதாக! நான் சொல்வது தேவன் நமக்குச் செய்த எல்லாவற்றிற்காகவும் தேவனுக்கு நன்றி செலுத்துகிறோம். குறிப்பாக அவர் நமக்குச் செய்த எல்லாவற்றிற்காகவும் அவருடைய மகத்துவத்தை நாம் போற்றுகிறோம்.

சங்கீதம் 95இன்படி நாம் நம்முடைய நன்றி செலுத்துதலையும் போற்றுதலையும் மகிழ்ச்சியோடு இசையோடும், பாடல்களோடும் சத்தம் செய்தும் ஏறெடுக்க வேண்டும். கர்த்தரைப்பாடி அவரைக் கீர்த்தனம் பண்ணுங்கள். "கர்த்தர் பெரியவர். அவர் தமது தேவனுடைய நகரத்திலும், தமது பரிசுத்த பர்வதத்திலும் மிகவும் துதிக்கப்படத்தக்கவர்". (சங்கீதம் 48:1) அரை மனதுடன் துதிப்பதைத் தேவன் ஏற்றுக் கொள்வதில்லை, என்று நான் நம்புகிறேன். உண்மையில் நாம் அவரது மகிமையைத் துதிக்க ஆயத்தமாயிராவிட்டால் நாம் அதைச் செய்யக்கூடாது. இதுவே அவரண்டைக் கிட்டிச் சேரும் வழி. துதியில்லாமல் அவரிடம் கிட்டிச் சேர வேறு வழியில்லை என்று நான் நம்புகிறேன். ஏசாயா தீர்க்கதரிசி "உன் மதில்களை இரட்சிப்பென்றும், உன் வாசல்களைத் துதியென்றும் சொல்லுவாய்" (ஏசாயா 60:18) என்று கூறுகிறார். இதை வேறு விதமாகச் சொல்லப் போனால் நீங்கள் இரட்சிப்பிற்குள் வர வேண்டுமானால் வாயிலின் வழியாக வரவேண்டும். ஒவ்வொரு வாயிலும் துதியேயாகும். துதியில்லாமல் ஒரு நுழைவுரிமையும் இல்லை என்று நான் நம்புகிறேன்.

> ***அரை மனதுடன் துதிப்பதைத் தேவன் ஏற்றுக் கொள்வதில்லை என்று நான் நம்புகிறேன். உண்மையில் நாம் அவரது மகிமையைத் துதிக்க ஆயத்தமாய் இராவிட்டால் அதைச் செய்தல் கூடாது.***

சங்கீதம் 95லும் கூட நாம் தேவனைத் துதிப்பதற்குரிய காரணங்களைக் காட்டுகிறார்.

> கர்த்தரே மகா தேவனும், எல்லா தேவர்களுக்கும் மகா ராஜனுமாயிருக்கிறார். பூமியின் ஆழங்கள் அவர் கையில் இருக்கிறது; பர்வதங்களின் உயரங்களும் அவருடையவைகள். சமுத்திரம் அவருடையது, அவரே அதை உண்டாக்கினார்; வெட்டாந்தரையையும் அவருடைய கரம் உருவாக்கிற்று.
>
> சங்கீதம் 95:3-5

முழுமையாகப் படைக்கப்பட்ட உலகை நாம் பார்க்கும் போது, சிருஷ்டி கர்த்தாவின் ஞானத்திற்கும் மகா மேன்மைக்கும் நாம்

சாட்சிகளாய் இருக்கிறோம். இது நம்மை நன்றி செலுத்துவதற்கும் துதிப்பதற்கும் உரிய பொறுப்பினை உண்டாக்குகிறது.

பின்பு இந்த இரு செயல்களும் நாம் எப்படி தேவனிடத்தில் சேருகிறோம் என்பதைக் காட்டுகிறது. நாம் நன்றி செலுத்துதலினால் நுழைவாயில்களுக்குள் வந்துள்ளோம். இதன் பின்பு முன்னேறிச் சென்று புகழ்தலுடன் நியாயாசனத்திற்குள் செல்லுகிறோம். ஆனால் இவைகள் இரண்டுமே ஆராதனை அல்ல.

தேவனுக்குரிய ஆராதனை

வேதத்தின் பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் உள்ள ஒவ்வொரு வார்த்தையும் துதி செய்தலையே குறிக்கும். இந்தத் துதி செலுத்துதல் என்பது மொழிபெயர்க்கப்படும்பொழுது எப்பொழுதும் எண்ணத்தைப் பற்றிய விரிவாக்கமாக உள்ளது. இதுவே தேவன் என்னிடத்தில் பேசிக் கொண்டிருந்த துதித்தல் ஆகும் என்று நான் நினைக்கிறேன். ஆரம்பத்தில் இது ஓர் எண்ணமாகும். முக்கியமாக தேவனுடைய பரிசுத்தத்தில் நாம் இவ்வழியில் தான் தொடர்பு கொள்ளுகிறோம்.

நாம் நன்றி செலுத்துதலினால் நுழைவாயில்–களுக்குள் வந்துள்ளோம். இதன் பின்பு முன்னேறிச் சென்று துதித்தலுடனே அவர் சந்நிதிக்குள் செல்கிறோம். ஆனால் இவைகள் இரண்டுமே ஆராதனை அல்ல.

தேவனுடைய குணாதிசயங்கள் பல. அவற்றுள் புரிந்துகொள்வதற்குக் கடினமான பண்பு அவருடைய பரிசுத்தம். ஏனெனில் அதற்கு ஈடாக உலகில் எதுவும் இல்லை. நாம் தேவனுடைய ஞானத்தைப் பற்றிச் சொல்ல முடியும், நாம் ஞானவான்களையும் அறிவோம். நாம் தேவனுடைய மகிமையைப் பற்றிப் பேச முடியும். நாம் பெரிய மனிதர்களையும் அறிவோம். நாம் தேவனுடைய வல்லமையைப் பற்றிப் பேச முடியும். மேலும் நாம் வல்லமையைச் செயல்முறை விளக்கத்தின் மூலமும் காண்கிறோம். ஆனால் தேவனைத் தவிர பரிசுத்தத்தைப் பற்றிய செயல்முறை விளக்கம் எதுவும் இல்லை. அது தேவனுடைய தனித்தன்மைக்கான செயலாகும். இதனை தேவனிடத்திலிருந்து பெற்றுக் கொண்டவர்கள் மட்டுமே செய்ய முடியும்.

வசனம் 6-7இல் 95ஆம் சங்கீதத்தின் நிலை மாறுபடுகிறது. “நம்மை உண்டாக்கின கர்த்தருக்கு முன்பாக நாம் பணிந்து குனிந்து

முழங்காற்படியிடக்கடவோம் வாருங்கள். அவர் நம்முடைய தேவன்; நாம் அவர் மேய்ச்சலின் ஜனங்களும், அவர் கைக்குள்ளான ஆடுகளுமாமே". நான் பார்ப்பது போல், ஆராதனை செய்வதின் நோக்கமானது நாம் சட்டமாக வைத்துள்ள, சத்தமாகக் கத்துவது போன்றதல்ல. அது அமைதியாக இருப்பதேயாகும்.

துதித்தலின் போது அங்கே சில குறிப்பிட்ட சரீர சம்பந்தமாக இருக்கும் நிலைகளும் (Postures) சம்பந்தப்பட்டுள்ளது. இவைகள் அனைத்தும் வேதாகமம் முழுவதிலும் காணப்படுகிறது. அவைகள் தாழ்மையைக் குறிக்கிறது. தலையை வணங்குவது, இடுப்புக்கு மேலே உள்ள சரீரத்தால் குனிந்து வணங்குவது, தலைக்கு மேலாகக் கரங்களை உயர்த்துவது மற்றும் தேவனுக்கு முன்பாகத் தலை குப்புற சாஷ்டாங்கமாய் வணங்குவது. இவற்றில் கடைசியாக உள்ளது குறிப்பாகப் பொருத்தமானதாக இருக்கும். ஏனெனில் எந்த மனிதனாவது தேவனுக்கு முன்பாக சாஷ்டாங்கமாய் குனிந்து வணங்காமல் எப்பொழுதாவது தேவனிடத்தில் நெருங்கிச் சேர முடியுமா என்று எளிதாகக் கேள்வி கேட்கலாம். வேதத்தில் குறிக்கப்பட்ட தனிப்பட்ட மனிதன் ஒருவன் தேவனுக்கு முன்பாக முகங்குப்புற விழுந்து பணியாமல் இருப்பதைப் பார்ப்பது கடினமானதாகும். நான் இதைப் பழக்கப்படுத்தியிருந்தேன். சமய சிந்தாந்த வகைக்கான காரணத்திற்கோ, மதச்சடங்காச்சாரத்திற்கோ அல்ல. எனக்குப் பாதுகாப்பு தேவை என்று நான் உணரும் போதெல்லாம் ஒவ்வொரு நேரமும் இதைச் செய்வேன். மிகவும் பாதுகாப்பான இடம் என்று நான் அறிவது தேவனுக்கு முன்பாக வணங்கிக் கிடப்பதாகும். ஜான் பன்யன் என்பவர் குனிந்து வணங்குகிறவனுக்குப் பயம் தேவையில்லை கீழே விழுந்து போவதுமில்லை என்கிறார். நீ தரையிலே இருக்கும்போது அதை விடத் தாழ்ந்த இடம் வேறு எதுவுமில்லை. இயேசு சொன்னார். "தன்னை உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான். தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்" (மத்தேயு 23:12).

சங்கீதம் 95:7இல் நாம் தேவனை ஏன் தொழுது கொள்ள வேண்டும் என்பதற்கு இரண்டு காரணங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அவர் நம்முடைய தேவன்; நாம் அவர் மேய்ச்சலின் ஜனங்களும், அவர் கைக்குள்ளான ஆடுகளுமாமே!

தேவனைத் தொழுது கொள்ளுவதற்கான முதலாவது காரணம் என்னவென்றால் அவர் தேவன்; அவர் நம்முடைய தேவன். அவர் ஒருவரே அண்டசராசரங்கள் அனைத்திலும் தொழுதுகொள்ளப்படத்தக்கத் தகுதியை உடையவராவார். நாம் ஆண்களையோ பெண்களையோ புகழலாம். ஆனால் நாம் ஒரு போதும் ஆண்களையோ பெண்களையோ வணங்கக்கூடாது. தேவனைத் தேவனாகத் தொடர்பு கொள்வதற்குரிய முக்கியமான வழி தொழுது கொள்ளுதல் ஆகும்.

நாம் துதியை ஏறெடுக்கும்பொழுது நம்மைக் கட்டுப்படுத்திக் கொள்வதற்குத் தகுதியைப் பெறுகிறோம் என்பதை நான் உறுதி செய்து கொண்டேன். நாம் அதிகமாகத் தொழுதுகொள்ள தொழுதுகொள்ள, நாம் இவ்வாறு மாறுகிறோம். இதனால் நாம் நம்மீது ஒரு வல்லமையை அதிகமாகப் பெற்றுக்கொள்வோம். நாம் தேவனைத் தொழுது கொள்ளாவிட்டால் எந்த அளவுக்கு அவர் நம்முடைய உண்மையான தெய்வமாக இருப்பார்?

அவரைத் தொழுது கொள்வதற்கான இரண்டாவது காரணம் என்னவென்றால் நாம் அவர் மேய்ச்சலின் ஜனங்களும் அவர் கைக்குள்ளான ஆடுகளுமாமே. துதித்தலே தேவனின் நம்முடைய பராமரிப்பிற்குரிய சரியான மறுமொழியாகும். இதுவே நாம் அவரை நம்முடைய தேவனாகத் தெரிந்து கொள்ளும் வழியாகும். நம்முடைய பாதுகாப்பிற்குத் துதித்தலே அவருக்குப் பதிலளிக்கும் வழியுமாகும்.

தெரிந்து கொள்ளுதல்

இதன் முக்கியத்துவம் இந்தச் சங்கீதத்தில் இதோடு முடிவடைவதில்லை. நாம் மேலே கவனித்த விதமாக அது ஒரு கவலைக்கிடமான எச்சரிப்புடன் முடிவடைகிறது.

> இன்று அவருடைய சத்தத்தைக் கேட்பீர்களாகில், வனாந்தரத்தில் கோபம் மூட்டின போதும் சோதனை நாளிலும் நடந்தது போல உங்கள் இருதயத்தைக் கடினப்படுத்தாதேயுங்கள் (வசனம் 8) (மேரிபாவில் நடந்தது போல) நாற்பது வருஷமாய் நான் அந்த சந்ததியை அரோசித்து, அவர்கள் வழுவிப் போகிற இருதயமுள்ள ஜனமென்றும், என்னுடைய வழிகளை அறியாதவர்களென்றும் சொல்லி,என்னுடைய இளைப்பாறுதலில் அவர்கள் பிரவேசிப்ப-தில்லையென்று என்னுடைய கோபத்திலே ஆணையிட்டேன்.
>
> (சங்கீதம் 95: 10-11)

இது நமக்கு முன்பாக இரண்டு எதிர்மறையான தெரிந்து கொள்ளுதலை வழங்குகிறது. உண்மையான துதித்தலின் நிலைக்குள் செல்வது அல்லது செல்லாமலிருத்தல் ஆகும்.

எரேமியா 7:23 இல் தேவன் தன்னுடைய ஜனங்களிடத்தில் நான் உங்களுக்குக் கட்டளையிடுவது என்னவென்றால்" என் வாக்குக்குச் செவி கொடுங்கள், அப்பொழுது நான் உங்கள் தேவனாயிருப்பேன்" என்று சொன்னார்.

தேவன் விரும்புவது, நான் படித்த எல்லா வாசகங்களிலும் மிகவும் எளிதான ஒரு வாசகம் ஆகும். “என் வாக்குக்குச் செவி கொடுங்கள் அப்பொழுது நான் உங்கள் தேவனாயிருப்பேன்”.

உபாகமம் 28இல் கீழ்ப்படிதலுக்கான ஆசீர்வாதங்கள் எல்லாவற்றையும், கீழ்ப்படியாமைக்கான சாபங்கள் எல்லாவற்றையும் காண்கிறோம். ஆசீர்வாதம் இவ்விதமாகத் தொடங்குகிறது. “இன்று நான் உனக்கு விதிக்கிற உன் தேவனாகிய கர்த்தருடைய கட்டளைகளின் படியெல்லாம் செய்ய நீ கவனமாயிருக்கும்படிக்கு, அவர் சத்தத்திற்கு உண்மையாய்ச் செவிகொடுப்பாயானால், உன் தேவனாகிய கர்த்தர் பூமியிலுள்ள சகல ஜாதிகளிலும் உன்னை மேன்மையாக வைப்பார்”. “நீ உன் தேவனாகிய கர்த்தரின் சத்தத்துக்குச் செவி கொடுக்கும் போது, இப்பொழுது சொல்லப்படும் ஆசீர்வாதங்களெல்லாம் உன் மேல் வந்து உனக்குப் பலிக்கும்”(வசனம் 1-2). “அவர் சத்தத்திற்குச் செவிகொடாதே போவாயாகில் இப்பொழுது சொல்லப்படும் சாபங்களெல்லாம் உன்மேல் வந்து உனக்குப் பலிக்கும்”(வசனம் 15).

துதித்தலில் கீழ்ப்படிதலே தேவனுடைய சத்தத்திற்குச் செவி கொடுத்து எண்ணத்தின் வழியாக அவரோடு தொடர்பு கொள்வதற்கு நியமிக்கப்பட்ட வழியாகும். அல்லது இதை வேறு ஒரு வழியாகச் சொல்லப்போனால் துதித்தலுக்குரிய மனப்பாங்கு உண்டாகும் வரைக்கும் நாம் தேவனுடைய சத்தத்தைக் கேட்க முடியாது. பிறகு தேவனுடைய வார்த்தையைக் கேட்கும்பொழுது நாம் அவருடைய நித்திய ஓய்விற்குள் செல்லுவோம். ஆராதனை செய்தலே நமக்கு இளைப்பாறுதல் கொடுக்கக் கூடியது என்று நான் நம்புகிறேன். எப்படி ஆராதனைச் செய்வது என்று உண்மையாக அறிந்தவர்கள் இளைப்பாறுதலை உண்மையாக அனுபவிப்பார்கள்.

எபிரெயர் 4:9-11 வரையிலான வசனத்தைப் பாருங்கள்.

> ஆகையால், தேவனுடைய ஜனங்களுக்கு இளைப்பாறுகிற காலம் இனி வருகிறதாயிருக்கிறது. ஏனெனில், அவருடைய இளைப்பாறுதலில் பிரவேசித்தவன், தேவன் தம்முடைய கிரியைகளை முடித்து ஓய்ந்தது போல, தானும் தன் கிரியைகளை முடித்து ஓய்ந்திருப்பான். ஆகையால், அந்தத் திருஷ்டாந்தத்தின்படி, ஒருவனாகிலும் கீழ்ப்படியாமையினாலே விழுந்து போகாதபடிக்கு, நாம் அந்த இளைப்பாறுதலில் பிரவேசிக்க ஜாக்கிரதையாய் இருக்கக்கடவோம்.

திரும்பவும் வேதம் வெளிக்கொண்டுவரும் உண்மையாவது கீழ்ப்படியாமையினாலே தேவனுடைய ஜனங்கள் இளைப்பாறுதலுக்குள்

பிரவேசிப்பதை இழந்து போனார்கள். இப்பொழுது நான் இங்கே ஓய்வு நாளை ஆசரிப்பதைப் பற்றியோ ஞாயிற்றுக் கிழமையை ஓய்வுநாளாக ஆசரிப்பதைப் பற்றியோ அல்லது இதைப் போன்ற ஏதாவது ஒரு கருத்தையோ உண்டாக்க நான் முயற்சி செய்யவில்லை. நாம் கவனமாக இல்லாமலிருந்தால் சில முக்கியமானவற்றை இழந்து போக நேரிடும். தேவன் நம்மை இளைப்பாறும்படிக் கட்டளையிட்டிருக்கிறார். வாரத்தின் ஏழு நாட்களிலும், ஒவ்வொரு வாரமும் நான் வேலையில் ஆழ்ந்திருந்தால் நான் தேவனை மகிழ்ச்சியூட்ட முடியாது என்பதை நான் அறிந்து கொண்டேன். மேலும் நான் எனது தேக ஆரோக்கியத்திற்கும் ஆபத்து விளைவிக்கக் கூடியவன் என்பது நிச்சயம். ஓய்வுநாள்-ஓய்வு பற்றி தேவன் என்னுடைய இருதயத்தில் சில கிரியைகளைச் செய்து கொண்டிருக்கிறார். உங்களுடைய இருதயத்திலும் அவர் சில கிரியைகளைச் செய்ய முடியும் என்பதை விசுவாசியுங்கள். இது இயற்கையாக அவருடைய தெய்வீகமான, நித்தியமான மாறாத சட்டங்களை உங்களுக்கு உண்டாக்கும்.

ஆராதனை செய்தலே நமக்கு இளைப்பாறுதல் தரக்கூடியது என்று நான் நம்புகிறேன். எப்படி ஆராதனை செய்வது என்று உண்மையாக அறிந்தவர்கள் உண்மையாக இளைப்பாறுதலை அனுபவிப்பார்கள்.

இந்த தேவனுடைய இளைப்பாறுதலுக்குள் வர அழைக்கப்படும்போது நீங்கள் இந்தக் கேள்விகளைக் குறித்து நிதானியுங்கள். உங்களுடைய நேரத்தைச் சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்ளுகிறீர்களா? இளைப்பாறுதல் என்பது என்ன என்பதை அறிந்திருக்கிறீர்களா? மன ரீதியாகவும் நீங்கள் செய்யும் செயல்களைச் செய்யாமலிருக்கும்படி உங்களைக் கட்டுப்படுத்த உங்களால் முடியுமா? நீங்கள் எப்பொழுதாவது படுத்துக் கொண்டிருந்து நீங்கள் எதைச் செய்ய வேண்டுமோ அவற்றைப் பற்றி நினைப்பதை நிறுத்த முடியுமா?

தேவன் நம்முடைய சாதனைகளை விட நம்முடைய நடத்தையைப் பற்றி மிகவும் அதிகக் கரிசனையுடையவராயிருக்கிறார். சாதனைகள் உலகத்தின் குறிப்பிட்ட காலத்தில் மட்டும் முக்கியத்துவம் பெறும். நடத்தையோ நித்தியமானது. நித்தியத்தின் வழியில் நாம் எந்த நிலையில் இருக்கிறோம் என்பதை அது வரையறுக்கிறது.

ஏசாயா பரலோகத்தைக் குறித்து ஒரு தரிசனத்தைக் கண்டார். அதில் பரலோகத்தின் உன்னதமான படைப்புகளையும், ஆண்டவர் உயரமும் உன்னதமுமான சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கக் கண்டார்.

(ஏசாயா 6 ஆம் அதிகாரம்) சேராபீன்கள் என்று அழைக்கப்பட்டவைகள் பரலோகத்தில் துதி ஏறெடுத்தார்கள். சேரூப் (Seraph) என்னும் எபிரெய வார்த்தை நேரடியாக நெருப்பு என்ற வார்த்தையோடு சம்பந்தப்பட்டது. சேராபீன்கள் அக்கினி மயமான படைப்புகளாகத் தேவனுடைய சிங்காசனத்திற்கு அருகில் நின்றார்கள். அவர்களில் ஒவ்வொருவருக்கும் மும்மூன்று ஜோடிகளான அவ்வாறு செட்டைகளிருந்தன. அவர்கள் இரவும் பகலும் “சேனைகளின் தேவனாகிய கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர் என்று சத்தமிட்டுச் சொன்னார்கள்”. (வசனம் 3) என்னைக் கவர்ந்தது என்னவென்றால் அவர்களுடைய செட்டைகளால் அவர்கள் என்ன செய்தார்கள்? என்பதேயாகும். அவைகள் இரண்டு செட்டைகளால் தன் தன் முகத்தை மூடி, இரண்டு செட்டைகளால் தன் தன் கால்களை மூடி இரண்டு செட்டைகளால் பறந்து (வசனம் 2) முகத்தை மூடுவதும் கால்களை மூடுவதும் தொழுதலுக்கான தாழ்மையைக் குறிக்கிறது என்று நான் விளக்கம் அளிக்கிறேன். மேலும் பறப்பது என்பது சேவை செய்வதாகும்.

தேவனுக்கு நன்றி செலுத்தும்போதும் அவரைப் போற்றிப் புகழும்போதும் சத்தமாக நடனமாடி கரங்களைத் தட்டிப் பாடித் துதிப்பதில் நான் நம்பிக்கை கொண்டுள்ளேன். ஆனால் அங்கு ஒருவேளை வரும்போது நான் என்னுடைய செட்டைகளால் என்னுடைய முகத்தை மறைத்து, இரண்டு செட்டைகளால் கால்களை மூடித் தாழ்மையுடன் தேவனைத் தொழுது தேவன் என்ன சொல்லுகிறாரோ அதைக் கவனித்துக் கேட்பேன்.

நீங்கள் உங்கள் நேரத்தைச் சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்ளுகிறீர்களா? இளைப்பாறுதல் என்றால் என்ன என்பதை நீங்கள் அறிவீர்களா? நீங்கள் மனதளவில் செயல்படுதலை நிறுத்துவதற்குரிய பழக்கத்தைக் கடைப்பிடிக்க உங்களால் முடியுமா?

இன்று அவருடைய சத்தத்தைக் கேட்பீர்களாகில் உங்கள் இருதயத்தைக் கடினப்படுத்தாதேயுங்கள். துதிக்க வேண்டும் என்ற எண்ணத்தை விருத்தி செய்து இளைப்பாறக் கற்றுக் கொள்ளுங்கள். தேவனாகிய பரிசுத்த ஆவியானவர் ஒரு குறிப்பிட்ட வகையான மனிதனை அதாவது தேவனிடத்தில் உத்தமும் உண்மையாகவும் இருக்கும் ஒருவரைத் தேடுகிறார் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். அப்படிப்பட்ட தன்மையுள்ள ஒரு மனிதனாக நீங்கள் இருங்கள். எப்படியென்றால் தேவனிடத்தில் ஒரு குறைவும் வைக்காத மனிதனாக

இருங்கள். தேவன் உங்களுக்காக அவரில் பலப்படும்படி உங்களுக்கு அருளுவார்.

இப்பொழுது நாம் நம்முடைய போர் வீரர்களுக்கான ஆயத்தங்களைத் தொடர்ந்து, யுத்தத்திற்காக நம்மை மேம்படுத்தி பயிற்சி கொடுக்கும் ஒருவரைப் பற்றி மென்மேலும் கற்றுக் கொள்வோம்.

பகுதி 2

பயிற்றுவிக்கும் தூய ஆவியானவர்

9

உங்கள் வழிகாட்டியை அறிந்துகொள்ளுதல்

கர்த்தரின் பரிசுத்த ஆவியானவர்.

வழிநடத்துதலின் மூலமாக நமது நற்பண்புகளைக் கட்டி எழுப்புகிறவரும், யுத்தத்திற்கு நம்மைப் பழக்குவிக்கிறவருமாகிய, நமக்கு உதவி செய்கிற அந்த நபர் யார்? நம் வாழ்க்கையில் அவருடைய வல்லமை எப்படிச் செயற்படுகிறது? பரிசுத்த ஆவியானவர் தம்மைக் குறித்தும் இலவசமாக அவர் வழங்கும் வரங்களைப் பற்றியும் நமக்குக் கற்றுத் தருகின்றார்.

திரித்துவத்தில் மூன்றாவது நபராகிய பரிசுத்த ஆவியானவரை நோக்கி நமது முழுச் சிந்தனையையும் செலுத்துவோமாக. பரிசுத்த ஆவியானவர் எப்படிப்பட்டவர் என்பதை நாம் நன்றாக அறிந்து கொள்வதின் மூலமாக நாம் தேவனுடைய அரசில் வல்லமையுள்ள ஒரு நல்ல போர் வீரனாக மாறமுடியும் என்பது என் அனுபவம். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில் வாழ்ந்த காலத்தில் செய்து முடித்த ஊழியங்களை நாம் தொடர்ந்து செய்து முடிக்க நமக்கு உதவி செய்பவர் யார்? இந்தப் பரிசுத்த ஆவியானவரே!

பரிசுத்த ஆவியானவருக்குச் சொந்தமான மூன்று பண்பு நலன்களோடு இந்தப் பகுதியை நான் தொடங்குகின்றேன். அவர் நித்தியமானவர், சர்வ ஞானி, சர்வ வியாபகர்.

பரிசுத்த ஆவியானவர் நித்தியமானவர்

நான் முதன்முதலாவது கலந்துகொண்ட ஒரு பெந்தெகோஸ்தே ஆராதனையின் இறுதியில் அந்தப் போதகர் என்னைப் பார்த்து, “நீ ஒரு பாவிஎன்பதை நீ நம்புகிறாயா? ” எனக் கேட்டார். அந்தச் சமயத்தில் நான் ஒரு தத்துவஞானியாக இருந்தேன். அது மட்டுமல்ல கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலையில் டாக்டர் பட்டம் பெறுவதற்காக

சமர்ப்பிக்கப்படும் “விளக்கங்களையும்” அப்போதுதான் முடித்திருந்தேன். உடனடியாக “நான் ஒரு பாவி”என்பதற்கான பலவிதமான வரையறைகள் என் மனதிலே ஓட ஆரம்பித்தன. அவை அனைத்தும் என்னைப் பொறுத்தமட்டில் அப்படியே பொருந்துவதாக இருந்தது. எனவே, “நான் ஒரு பாவி என்பதை ஒத்துக்கொள்கின்றேன்” எனப் பதிலளித்தேன்.

“ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து உன்னுடையப் பாவங்களுக்காக கல்வாரிச் சிலுவையில் தன் ஜீவனையேத் தந்தார் என்பதை விசுவாசிக்கிறாயா?” என்று அந்தப் போதகர் கேட்டார், சற்று நேரம் சிந்தித்த பின் நான் பதில் சொல்லத் தொடங்கினேன், “உண்மையைச் சொல்லப் போனால் 19 நூற்றாண்டுகளுக்கு முன் மரித்த ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மரணம், நான் என் வாழ்நாள் முழுவதும் செய்த பாவத்திற்காக என்னச் செய்யப் போகிறது” என்று கேட்டேன்.

அந்தப் போதகர் சிறந்த அறிவாளி போலும் என்னிடத்தில் அதைக்குறித்து எந்த வாக்குவாதமும் செய்யவில்லை. சில நாட்கள் சென்ற பின்பு எதிர்பாராதவிதமாக ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இடைப்பாட்டினால் என் முழு வாழ்க்கையிலும் ஒரு வல்லமையான மாற்றம் ஏற்பட்டது, அதிலும் குறிப்பிடத்தக்கது என்னவென்றால் வேதப் புத்தகமானது உயிரோட்டமும் அர்த்தமும் உள்ள புத்தகமாக எனக்கு மாறியது.

இயேசு கிறிஸ்துவின் தியாகம் எல்லையற்றது அவர் எப்பொழுது மரித்திருந்தாலும் சரி பத்தொன்பது நூற்றாண்டுகளுக்குப் பின் நான் செய்த பாவங்களுக்கெல்லாம் மன்னிப்பு அவருடைய மரணத்தில் உள்ளது.

சில நாட்களுக்குப் பின் எபிரெயர் 9:14இல் நித்திய ஆவியினாலே தம்மைத் தாமே பழுதற்ற பலியாக தேவனுக்கு ஒப்புக்கொடுத்த கிறிஸ்துவினுடைய இரத்தம் என்பதை வாசித்தேன். திடீரென்று நித்தியமானவர் என்ற வார்த்தையின் அர்த்தத்தை நான் அறியலானேன். அந்த அர்த்தமானது விரிவானது, அது கடந்த காலம், தற்காலம், வருங்காலம் அனைத்தையும் உள்ளடக்கியது.

இயேசு கிறிஸ்து சிலுவைக்குத் தன்னை ஒப்புக்கொடுத்து தியாகப்பலியாகி, மரித்தது அக்காலத்திற்கு மட்டுமல்ல, அது எல்லா மனிதர்களின், இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகிய எல்லாக் காலத்திற்கும் உரித்தானது. நான் பத்தொன்பது நூற்றாண்டுகளுக்குப்பின் செய்த எல்லாப் பாவங்களும் கூட அதற்குள் அடங்கும்.

கிரேக்கத்தில் *நித்தியம்* என்ற சொல்லுக்குரிய ஆழமான பொருளை அறிந்துணர முடியாது. அது பெயர்ச்சொல்லாகிய Aeon என்ற சொல்லிலிருந்து வந்ததாகும். அதற்கு இணையான, ஆங்கிலச் சொல் Aeon என்பதாகும். Aion என்பது காலத்தை அளவிடும் சொல்லாகும். இதைக் குறித்தப் பலவிதமான கருத்துக்கள் பல மொழிபெயர்ப்புகளில் கூறப்பட்டுள்ளன. (கிங் ஜேம்ஸ் மொழி பெயர்ப்பில் இடைச் செருகலாக வருபவை கீழே)

> அவருக்கு என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக. ("சதாகாலங்களிலும்") கலாத்தியர் 1:5

> இவரோ என்றென்றைக்கும் நிலைத்திருக்கிறபடியினாலே, மாறிப்போகாத ஆசாரியத்துவம் உள்ளவராய் இருக்கிறார். ("என்றென்றைக்கும் நிலைத்திருக்கிறார்") எபிரெயர் 7:24

> தாம் ஒருவரே ஞானமுள்ளவருமாகிய நம்முடைய இரட்சகரான தேவனுக்குக் கனமும், மகத்துவமும், வல்லமையும், அதிகாரமும் இப்பொழுதும் எப்பொழுதும் உண்டாவதாக. ("இப்பொழுதும் எப்பொழுதும்") யூதா 1:25

ஆங்கில மொழிபெயர்ப்பு, கிரேக்க வார்த்தைகளின் ஆழமான அர்த்தத்தைத் தெரிவிக்கவில்லை. இச்சொற்றொடர்கள் என்னை ஆச்சரியத்தில் ஆழ்த்தின. நான், என்னால் ஏற முடியாத இரண்டு மலைகளின் மேல் உள்ள பிளவின் மேல் உள்ள நீர்த்திவலைப் போல் உணர்ந்தேன். அநேகக் காலங்களை உள்ளடக்கிய ஒரு காலத்தை எனது மனதால் கிரகிக்க முடியவில்லை. இப்பேர்ப்பட்ட காலங்கள் அடங்கிய காலங்களை எப்படிக் கிரகிக்க முடியும்? என்றாலும் நித்திய காலமாக பரிசுத்த ஆவியானவர் அவைகளை அறிவார். அவை அளவிடப்பட முடியாத கடந்த காலத்திலிருந்து அளவிடப்படமுடியாத எதிர்காலம் வரைத் தொடர்ந்து செல்லும்.

பரலோகத்தின் தேவன் முடிவில்லாமல் இவ்வாறு ஆராதிக்கப்படுகிறார். "இருந்தவரும் (நித்திய காலமாக) இருக்கிறவரும் வருகிறவருமாகிய சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர்" என்று வெளிப்படுத்தின விசேஷம் 4:8ஆம் வசனம் கூறுகிறது.

பரிசுத்த ஆவியானவர் சர்வ ஞானி

நித்தியமான பரிசுத்த ஆவியானவரின் மற்றொரு பண்பு என்னவென்றால் அவர் சர்வ ஞானமுள்ளவர் என்பதாகும். 1 யோவான் 3:20இல் ஒரு சின்ன

வெளிப்பாட்டின் மூலம் இதனை அப்போஸ்தலனாகிய யோவான் விளக்குகிறார். *கர்த்தர் சகலத்தையும் அறிவார்.* கர்த்தர் அறியாதது, அவரால் அறிய முடியாதது என்று எதுவுமே இல்லை. பூமியிலுள்ள மிகவும் சிறிய ஊரும் உயிரும் அவர் அறிவார் மிகவும் உயரத்தில், வானத்தில் உள்ள நட்சத்திரங்களையும் அவர் அறிவார். முற்றிலும் அறியாத ஒன்று என்பது தேவனிடத்தில் இல்லை. நம்மைக் குறித்து நமக்கே தெரியாத காரியங்கள் தேவனுக்குத் தெரியும். உதாரணமாக அவர் நம்முடைய தலையில் உள்ள முடியையெல்லாம் எண்ணி வைத்திருக்கிறார். உங்கள் தலையிலுள்ள மயிரெல்லாம் எண்ணப்பட்டிருக்கிறது என்று மத்தேயு 10:30ல் கூறப்பட்டுள்ளது. நினிவே பட்டணத்து மக்களின் எண்ணிக்கையை அவர் அறிந்திருந்தார். யோனா 4:11 இல் “வலது கைக்கும் இடது கைக்கும் வித்தியாசம் தெரியாத இலட்சத்து இருபதினாயிரம் பேருக்கு அதிகமான மனுஷரும்” என்று பார்க்கிறோம். யோனாவுக்கு நிழல் கொடுக்கும்படி ஒரு செடிக்குக் கட்டளைக் கொடுக்கவும் அறிந்திருந்தார். ஒரு பூச்சிக்குக் கட்டளைக் கொடுத்து அந்தச் செடியைக் காய்ந்து போகச் செய்வதையும் கர்த்தர் அறிந்திருந்தார் (பார்க்கவும் யோனா 4:6-7).

பரிசுத்த பவுல் இவ்வாறு சில காரியங்களைக் குறித்துப் பேசுகிறார். அது என்னவென்றால் “எழுதியிருக்கிறபடி தேவன் தம்மில் அன்பு கூறுகிறவர்களுக்கு, ஆயத்தம் பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை. அவைகள் மனுஷனுடைய இருதயத்தில் தோன்றவுமில்லை. நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார். அந்த ஆவியானவர் எல்லாவற்றையும், தேவனுடைய ஆழங்களையும் ஆராய்ந்திருக்கிறார்” (1 கொரிந்தியர் 2:9-10). பரிசுத்த ஆவியானவர் ஆழங்களை ஆராய்ந்தறிகிறார். உயரங்களை அளவிட்டு அறிகிறார். வரப்போகிற காரியங்களையும் அறிகிறார். அவருடைய அநந்த ஞானமானது எல்லையற்றது.

அவருடைய ஞானமானது எல்லையற்றதாய் இருப்பதால், நம்மைக் குறித்து அவருக்குக் கணக்குக் கொடுக்க நாம் ஆயத்தமாய் இருக்க வேண்டும். “அவருடைய பார்வைக்கு மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லை, சகலமும் அவருடைய கண்களுக்கு முன்பாக நிர்வாணமாகவும், வெளியரங்கமுமாய் இருக்கிறது” என்று எபிரெயர் 4:13 ஆம் வசனம் கூறுகிறது.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில் வாழ்ந்த காலங்களில் செய்த ஊழியங்கள் முழுவதிலும் ஆவிக்குரிய அறிவும், ஞானமும் வெளிப்பட்டது. யூதாஸ்காரியோத்துக்கும், இயேசுவிற்கும் இருந்த பரிமாற்றங்களில் இது தெளிவாகக் காணப்படுகிறது. இயேசுவும் சீஷர்களும் பேசியது பின் வருமாறு: “நீர் ஜீவனுள்ள தேவனுடைய

குமாரனாகிய கிறிஸ்து என்று நாங்கள் விசுவாசித்தும், அறிந்தும் இருக்கிறோம்" என்றனர் (யோவான் 6:69). வசனம் 70, 71இல் "இயேசு அவர்களை நோக்கி: பன்னிருவராகிய உங்களை நான் தெரிந்து கொள்ளவில்லையா? உங்களுக்குள்ளும் ஒருவன் பிசாசாயிருக்கிறான் என்றார்." "சீமோனின் குமாரனாகிய யூதாஸ்காரியோத்து பன்னிருவரிலொருவனாயிருந்தும், தம்மைக் காட்டிக் கொடுக்கப் போகிறவனாயிருந்தபடியினால் அவனைக் குறித்து இப்படிச் சொன்னார்".

யூதாஸ் தன்னைக் காட்டிக் கொடுப்பான் என்பதை யூதாஸ் அறிவதற்கு முன்பே இயேசு அதை நன்கு அறிந்திருந்தார். யூதாஸ் காட்டிக்கொடுப்பதைக் குறித்து ஆண்டவர் ஒரு வார்த்தை சொல்லும் வரையிலும் யூதாஸ்காரியோத்தால் அவனுடைய திட்டத்தைச் செயல்படுத்த முடியவில்லை. இயேசுவின் வார்த்தைதான் யூதாஸ்காரியோத்து தன் திட்டத்தை நிறைவேற்ற அனுமதியளித்தது. கடைசிப் பந்தியில் இயேசு தம்முடைய சீஷர்களைப் பார்த்து, யோவான் 13:21இல் உங்களில் ஒருவன் என்னைக் காட்டிக் கொடுப்பான் என்று கூறினார். யார் என்ற கேள்வியெழுந்தபொழுது இயேசு பதிலளித்தார்.

> இயேசு பிரதியுத்தரமாக: நான் இந்தத் துணிக்கையைத் தோய்த்து எவனுக்குக் கொடுப்பேனோ, அவன்தான் என்று சொல்லி. துணிக்கையைத் தோய்த்து, சீமோனின் குமாரனாகிய யூதாஸ்காரியோத்துக்குக் கொடுத்தார். அந்தத் துணிக்கையை அவன் வாங்கின பின்பு, சாத்தான் அவனுக்குள் புகுந்தான். அப்பொழுது இயேசு அவனை நோக்கி: நீ செய்கிறதைச் சீக்கிரமாய்ச் செய் என்றார் என்பதே அந்த பதிலாகும்.

ஒரு சிறு துணிக்கை அப்பத்தை வாங்கிய பின்பு யூதாஸ்காரியோத்து அந்த இடத்தை விட்டுத் துரிதமாகப் புறப்பட்டுச் சென்றான். நான் ஒன்றை மட்டும் நன்றாக உணர்ந்து கொண்டேன். அது என்னவென்றால்: இயேசு தாமே காட்டிக்கொடுத்தலைப் பற்றிக் கூறி காட்டிக்கொடுக்க வழி வகுத்ததால் மட்டுமே யூதாஸ் இயேசுவைக் காட்டிக் கொடுக்கும் திட்டத்தை நிறைவேற்ற முடிந்தது. இந்த முழுக் காட்சியினையும் ஆராய்ந்து பார்க்கும் போது "காட்டிக் கொடுப்பவன்" இயேசுவின் அதிகாரத்திற்குள்ளாகவே இருந்தான் என்பது தெளிவாகப் புரிகிறது.

தேவன் முடிவிலிருந்து தொடக்கம் வரை எல்லாவற்றையும் அறிபவர் மட்டுமல்ல அவரே ஆதியும் அந்தமுமாய் இருக்கின்றார்.

முழுமையான தேவனின் அறிவையும் குறிப்பாக வரப்போகிற காரியங்களைக் குறித்து அறிந்துணரக்கூடிய தேவனின் அறிவையும், நாம் பார்க்கும்பொழுது, என்ன நடந்தாலும், எப்படி நடந்தாலும் அது தேவனுக்கு அதிசயமானதாக இருக்க முடியாது என்று நாம் அறுதியிட்டுக் கூறலாம். ஏனென்றால் நடக்கப்போவது எல்லாவற்றையும் அவர் அறிவார். இதைப் போன்றதொரு, அவசரமாய் நடைபெற வேண்டும் என்ற எந்தக் காரியங்களும் பரலோக இராஜ்யத்தில் கிடையாது. முடிவு முதல் தொடக்கம் வரையில் எல்லாவற்றையும் அறிபவர் மட்டுமல்ல. அவரே ஆதியும் அந்தமுமாய் இருக்கிறார் (பார்க்கவும் வெளி 21:6). அவர் எப்பொழுதும் ஒரு முழுமையான கட்டுப்பாட்டுக்குள் இருந்தார்.

குறிப்பாக, தன்னால் தெரிந்தெடுக்கப்பட்ட, தன்னோடு நித்தியத்தில் இருக்கப் போகின்றவர்கள் யார் என்பதைத் தேவன் அறிந்திருக்கிறார். ரோமர் 8:29 ஆம் வசனம் தம்முடைய குமாரன் அநேக சகோதரருக்குள்ளே முதற்பேரானவராய் இருக்கும் பொருட்டு, தேவன் எவர்களை முன் குறித்தாரோ அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன் குறித்திருக்கிறார் என்று கூறுகிறது.

தேவனுடைய இரக்கத்தினாலும் கிருபையினாலும், மகிமையும் நித்தியமுமான இலக்கை நாம் தெரிந்து கொண்டோம். நான் உன்னை இந்த இடத்தில் பார்ப்பேன் என்று ஒரு போதும் எதிர் பார்க்கவே இல்லை என்று இயேசு ஒருவரையும் பார்த்துக் கூறமாட்டார். மாறாக இயேசு என் குழந்தையே! உனக்காக, நான் காத்துக்கொண்டேயிருக்கிறேன் என்றுதான் கூறுவார்.

கலியாண விருந்திற்கு நீ வருமட்டும் நான் காத்திருக்க முடியாது. அந்த மகிமையான விருந்தில் ஒவ்வொரு இடத்திலும் ஆயத்தமாக்கப்பட்டோரின் பெயர் காணப்படும். இரட்சிப்பு நிறைவேறும் வரை மிகுந்த பொறுமையோடு தேவன் காத்திருக்கிறார். 2 பேதுரு 3:9ஆம் வசனத்தில் தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக் குறித்துத் தாமதமாயிராமல், ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராய் இருக்கிறார் என்று பார்க்கிறோம்.

அவர் சர்வ வியாபகர்

தேவன் *சர்வ வியாபகர்* என்று நாம் சொல்வதினால் அவர் எல்லா இடங்களிலும் நிறைந்திருக்கிறார் என்று அர்த்தங்கொள்கிறோம். ஆனால், அதே நேரத்தில் எரேமியா 23:23-24இல் நான் சமீபத்திற்கு மாத்திரமா தேவன் தூரத்திற்கும் தேவன் அல்லவோ என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எவனாகிலும் தன்னை நான் காணாதபடிக்கு மறைவிடங்களில் ஒளித்துக் கொள்ளக் கூடுமோ? என்று கர்த்தர் கேட்கின்றார். நான் வானத்தையும் பூமியையும் நிரப்புகிறவர் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இது எப்படியாகும்? பரலோகத்தில் இயேசு தமது வலது பாரிசத்தில் வீற்றிருக்கத் தேவன் அவருடன் தமது அரியணையில் வீற்றிருக்கிறார். அப்படியானால் எப்படி பரலோகத்தையும், பூலோகத்தையும் தன்னுடைய பிரசன்னத்தினால் நிரப்ப முடியும்?

தாவீது இதற்கான பதிலைக் கூறுகின்றார் சங்கீதம் 139:7இல் "*உம்முடைய ஆவிக்கு மறைவாக எங்கே போவேன்? உம்முடைய சமூகத்தை விட்டு எங்கே ஓடுவேன்*" எனக் கேட்கின்றார். இவ்வாறு தம்முடைய ஆவியின் மூலமாகத் தேவன் அனைத்து இடங்களிலும் வியாபித்திருக்கிறார் என்பதை நமக்கு வெளிப்படுத்துகின்றார்.

சங்கீதம் 139:8-12இல்

> நான் வானத்திற்கு ஏறினாலும், நீர் அங்கே இருக்கிறீர்; நான் பாதாளத்தில் படுக்கை போட்டாலும் நீர் அங்கேயும் இருக்கிறீர்.
>
> நான் விடியற்காலத்துச் செட்டைகளை எடுத்து, சமுத்திரத்தின் கடையாந்தரங்களிலே போய்த் தங்கினாலும், அங்கேயும் உமது கை என்னை நடத்தும், உமது வலது கரம் என்னைப் பிடிக்கும். இருள் என்னை மூடிக்கொள்ளுமென்றாலும் இரவும், என்னைச் சுற்றி வெளிச்சமாயிருக்கும். உமக்கு மறைவாக இருளும் அந்தகாரப்படுத்தாது; இரவும் பகலைப் போல வெளிச்சமாயிருக்கும்; உமக்கு இருளும், வெளிச்சமும் சரி.

எனத் தாவீது விளக்கமாகக் கூறுகின்றார். நாம் எங்கு சென்றாலும் தேவன் காணக்கூடாத வகையில் தன் ஆவியினால் எங்கும் நிறைந்திருக்கிறார். ஆனால் அவரிடமிருந்து தப்பித்துக்கொள்ள முடியாது. அவிசுவாசியானவனுக்கு இது பயமுறுத்தும் ஒரு காரியமாக உள்ளது. ஆனால் அதே நேரத்தில் இது ஒரு விசுவாசிக்கு ஆறுதல் அளித்து பெலப்படுத்தும் ஒரு நம்பிக்கையாக உள்ளது. நாங்கள் எங்கே காணப்பட்டாலும் உமது கரம் என்னைப் பிடிக்கும், உமது வலது கரம் என்னை வழிநடத்தும் எனக் காண்கிறோம்.

புதிய ஏற்பாட்டிலே இயேசு தாமே இதற்கான ஒரு நம்பிக்கையை நமக்குக் கொடுக்கிறார். எபிரெயர் 13:5இல் "நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை உன்னைக் கைவிடுவதுமில்லை" என்று கூறுகின்றார். ஒரு வகையில் அவருடைய பிரசன்னத்தைக் குறித்த உணர்வு உடையவர்களாக இல்லாவிட்டாலும், ஆவியானவராக எங்கும்

இருக்கின்றார். இருள் நம்மை மூடிக்கொள்ளும் என்றாலும், அந்த இருளானது அவரை ஒரு போதும் மறைத்துக்கொள்ள முடியாது என்பதை உணர வேண்டும்.

நம்மில் ஒவ்வொருவரும், பரிசுத்த ஆவியானவருக்கு இடங்கொடுத்து, இவ்வெண்ணத்தை உள்ளத்தில் பதித்தல் அவசியம். இதற்குச் சரீரப்பிரகாரமான நிரூபணங்கள் தேவையில்லை.

நம்முடைய சொந்த உணர்வுகள் பரிசுத்த ஆவியானவரின் பிரசன்னத்தைக் குறித்து உணராவிட்டாலும், ஒருவேளை அதை மறுப்பது போல் தென்பட்டாலும், நமக்குள் ஒரு பகுதியில் இருக்கும் நம் சொந்த ஆவியானது பரிசுத்த ஆவியானவரின் பிரசன்னத்தைக் குறித்ததான ஒரு விழிப்புணர்வு உள்ளதாகவே இருக்கும்.

யோவான் 14:26இல் உதவியாளர், தேற்றரவாளன் என்ற அடைமொழிகள் எல்லாம் ஏன் கொடுக்கப்பட்டுள்ளன என்பதை இப்பொழுது முற்றிலும் நன்றாகப் புரிந்துகொள்ள முடிகின்றது.

பரிசுத்த ஆவியானவராகிய, நபரைக் குறித்து நாம் அறிந்து கொண்ட, இந்தக் காரியங்களோடு, பரிசுத்த ஆவியானவர் எவ்விதமாக நம்மை வழிநடத்துகிறார் என்பதை இனிக் காண்போம்.

10

பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலுக்கு இணங்குதல்

பரிசுத்த ஆவியானவரின் மிகவும் முக்கியமான ஊழியம் என்னவென்றால், ஆவிக்குரிய யுத்தத்தில் நமக்கு வழிகாட்டியாய் செயல்படுவதாகும். நமது வாழ்நாள் முழுவதும் நமக்கு உதவி செய்யும்படி பிதாவாகிய தேவனால் அனுப்பப்பட்டவரே பரிசுத்த ஆவியானவர். யோவான் 16:13இல் "சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, உங்களைச் சகல சத்தியத்திற்குள்ளும் நடத்துவார்" என்று பார்க்கிறோம். நாம் எவ்வாறு தேவனுடைய பிள்ளைகளாக வாழமுடியும் என்பதைப் பரிசுத்த பவுல் மிகவும் அழகாக எடுத்துரைக்கின்றார். ரோமர் 8:14 ஆம் வசனம் "மேலும் எவர்கள் தேவனுடைய ஆவியினால் நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராய் இருக்கிறார்கள்" என்பதே பரிசுத்த பவுலின் கூற்று.

இங்கே பயன்படுத்தப்பட்டிருக்கும் வாக்கியம் தொடர்ச்சியான நிகழ்காலத்தைக் குறிக்கும் ஒரு வாக்கியமாகும். அநேக மக்கள் தொடர்ச்சியாகப் பரிசுத்த ஆவியானவரால் நடத்தப்படுகிறார்கள். அவர்கள் தேவனுடைய புத்திரராய் இருக்கிறார்கள். இங்கே புத்திரர் என்ற வார்த்தையானது முதிர்ச்சியடைந்த தன்மையைக் குறிக்கிறது. இந்த வார்த்தை குழந்தை என்ற பதத்தைக் குறிப்பதல்ல. ஆனால் இது வளர்ச்சியடைந்த மனிதனுக்கு உரித்தானதாகும். யோவான் 3ஆம் அதிகாரத்தில் இயேசு கிறிஸ்து இதனை மிகவும் தெளிவுபடுத்துகிறார். தேவனுடைய பிள்ளைகளாக மாற வேண்டுமானால் ஒருவன் தேவனுடைய ஆவியினால் பிறக்க வேண்டும், ஒருமுறை மறுபடியும் பிறந்துவிட்டால் வளர்ச்சியடையவும், முதிர்ச்சியடையவும், நிறைவைப் பெறவும் தொடர்ந்து பரிசுத்த ஆவியானவரால் நடத்தப்படவேண்டும்.

வருந்தத்தக்க ஒரு உண்மை என்னவென்றால், மறுபடியும் பிறந்த அநேகக் கிறிஸ்தவர்கள் பரிசுத்த ஆவியானவரின் வழி நடத்தலுக்குள் செல்வதில்லை. முழுவளர்ச்சியும் பெறுவதில்லை. தேவன் எதிர்பார்க்கின்ற நிறைவுபெற்ற கிறிஸ்தவர்களாக அவர்கள் ஒருபோதும் மாறுவதில்லை.

அவர்கள் யுத்தத்திற்கு முழுமையாய் தகுதி பெற்றவர்களாகவும் இருப்பதில்லை. எனவே பரிசுத்த ஆவியானவரால் வழிநடத்தப்பட வேண்டும் என்ற இத்தலைப்பு மிகவும் முக்கியமானதாக உள்ளது.

நீதியை அடைதல்

தேவனோடு நீதியை அடைவதற்கு வேதாகமம் இரண்டு விதமான முறைகளை வெளிப்படுத்துகின்றன. ஒன்று நியாயப்பிரமாணம். மற்றொன்று கிருபை. அது ஒன்றுக்கொன்று தனிப்பட்டதாகும். நியாயப்பிரமாணத்தின் வழியாக நீங்கள் நீதியை அடையத் தேடினால் அதை நீங்கள் கிருபையினால் பெற்றுக்கொள்ள முடியாது. கிருபையினால் நீங்கள் நீதியை அடையத் தேடினால் பிறகு நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளுவதினால் நீதியைப்பெற முடியாது. இதை அழுத்தமாகக் கூற வேண்டியது முக்கியமாக உள்ளது. ஏனென்றால் பெரும்பான்மையான கிறிஸ்தவர்கள் நியாயப்பிரமாணத்தையும், கிருபையையும் கலக்க முயற்சிக்கின்றார்கள். அவர்கள் தாங்கள் தேவனோடு நிலைத்து நிற்க பாதி நியாயப்பிரமாணத்தையும், பாதிக் கிருபையையும் தேடுகிறார்கள். உண்மையென்னவென்றால் அவர்கள் நியாயப்பிரமாணத்தைப் பற்றியோ, அல்லது கிருபையைப் பற்றியோ உண்மையாகப் புரிந்துகொள்ளவில்லை என்பதாகும்.

நியாயப்பிரமாணம் என்பது நாம் பின்பற்ற வேண்டிய பல விதிமுறைகளைக் கொண்டது. எல்லா நேரமும் எல்லா விதிமுறைகளையும் பின்பற்றினால் நீதி கிடைக்கும். *கிருபை* என்பது நம்மால் சம்பாதிக்க முடியாத ஒன்றாகும். கிருபையைத் தேவனிடமிருந்து மட்டுமே நாம் பெற்றுக்கொள்ள முடியும். கிருபையைப் பெற்றுக்கொள்ள ஒரே வழிதான் உள்ளது. எபேசியர் 2:8இல் கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள். இது உங்களால் உண்டானதல்ல. இது தேவனுடைய ஈவு என்று வாசிக்கிறோம்.

தனிப்பட்ட முறையில், தேவன் தாமே விசுவாசத்தின் மூலமாக நீதியைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வழியை ஏற்படுத்தியுள்ளார் என்று நான் நம்புகிறேன். இதைச் சுபாவ மனிதனிடம் ஒப்படைத்திருந்தால் இப்படிப்பட்ட நீதியைப் பெற்றுக்கொள்ளக் கூடிய வழியை அவன் கண்டுபிடித்திருப்பான் என்று நான் நம்பவில்லை. என் புத்திக்கு எட்டின வகையில் மற்ற மதங்கள் எல்லாம் இந்த நீதியைப் பெற்றுக்கொள்ள அவர்கள் ஏதாகிலும் செயல்களைச் செய்ய வேண்டும் என்று வலியுறுத்துகின்றனர். பல மதங்கள் நீதியைப் பெற பல்வேறு செயல்களைக் கைக்கொள்ள வேண்டும் என்கிறது. ஆனால் அந்தச் சாராம்சத்தை எல்லாம் கீழே கொடுக்கப்படும் ஒரு வரியில் அடக்கி

விடலாம். அதாவது “நான் சில செயல்களைச் செய்தும் சில செயல்களைச் செய்யாமல் இருப்பதாலும் நீதிமானாய் இருப்பேன்” என்பதாகும்.

கிறிஸ்தவ விசுவாசத்தை, நாம் சரியான முறையில் புரிந்து கொள்வோமானால் அதுவே நீதிமானாவதற்குரிய ஒப்பற்ற பூரண வழியாகும் என்பதை உணரலாம். கிருபையினால் விசுவாசத்தின் மூலமாக மட்டுமே நீதியைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று எந்த மதங்களும் சொல்லவில்லை. ஆனால், “நீ தேவனுடைய கிருபையை அணைத்துக் கொள்ளும்போது பாவத்தின் ஆளுகைக்குள் இருந்து விடுதலையாக்கப்பட்ட ஒரு நல்ல வாழ்வினுக்குள் நுழைவாய்”. யார் இந்த தேவனுடைய கிருபையைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதைக் குறித்துப் பவுல் பேசுகிறார். ரோமர் 6:14இல் “நீங்கள் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிராமல் கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறபடியால் பாவம் உங்களை மேற்கொள்ள மாட்டாது”. கவனித்துப் பாருங்கள். ஒன்றுக்கொன்று தொடர்பு உண்டு. நீங்கள் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிருந்தால், கிருபைக்குக் கீழ்ப்பட்டவர்கள் அல்ல. நீங்கள் கிருபைக்குக் கீழ்ப்பட்டிருந்தால் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்கள் அல்ல. ஒரே சமயத்தில் இரண்டிற்கும் கீழ்ப்பட்டிருக்க முடியாது.

நீங்கள் நீதிச்சட்டத்திற்குக் கீழ்ப்பட்டவர்கள் அல்லாததினாலே, பாவம் உங்களை மேற்கொள்ளமாட்டாது என்று பவுல் கூறியுள்ளதை நான் கவனத்தில் எடுக்கிறேன். இதின் அர்த்தம் என்னவெனில் நீங்கள் நீதிச்சட்டத்திற்குக் கீழ்ப்பட்டவர்களானால் பாவம் உங்களை மேற்கொள்ளும். சட்டத்தைக் கைக்கொள்வதன் மூலம் நீதியைப் பெற்றுக்கொள்ளக்கூடுமாயின் பாவத்தின் பிடியிலிருந்து தப்ப முடியாது.

தேவனுடைய கிருபையை முழுமையாக நம்புவது என்பது மக்களைப் பயப்படும்படிச் செய்கிறது என்பதை நான் கண்டுபிடித்துள்ளேன். நாம் யாவரும் ஒரு சில சட்டதிட்டங்களைக் கைக்கொள்ளுவதிலே நிலைத்திருப்பதை விரும்புகிறோம்.

மீண்டும் ஒருமுறை ரோமர் 8:14ஐப் பார்ப்போம், “மேலும் எவர்கள் தேவனுடைய ஆவியினால் நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராய் இருக்கிறார்கள்”. சில சட்டதிட்டங்களைக் கடைப்பிடிப்பதினால் மட்டும் தேவனுடைய புத்திரர்களாய் ஆக முடியுமா? இல்லை. தேவனுடைய ஆவியினால் நடத்தப்படும்பொழுது மட்டுமே தேவனுடைய புத்திரர்களாக முடியும்.

இப்பொழுது கலாத்தியர் 5:18ஐப் பார்ப்போம். கலாத்தியர் 5:18ஆம் வசனம் “ஆவியினால் நடத்தப்படுவீர்களானால், நீங்கள் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்கள் அல்ல”

இந்த வசனங்கள் மீண்டும் ஒருமுறை இந்தச் சத்தியத்தைத் தெளிவுபடுத்துகிறது. பரிசுத்தஆவியானவரால் நடத்தப்படும்பொழுது தேவனுடைய புத்திரர்களாய் மாறுகிறோம். பரிசுத்த ஆவியானவரால் நடத்தப்படும்பொழுது நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்களல்ல.

அநேகக் கிறிஸ்தவர்கள் குறிப்பிட்ட ஒரு சில விதிமுறைகளைக் கடைப்பிடிப்பதை ஒரு ஊன்றுகோலைப்போல பிடித்துக்கொண்டு அதைச் சுற்றியும், அதையே ஆதரவாகக் கொண்டவர்களாயும் இருக்கிறார்கள். ஊன்றுகோலை எறிந்துவிட்டு என்னை நம்புங்கள் என்று தேவன் சொல்லுகிறார். நான் கண்டுபிடித்தது என்னவென்றால், இது அவர்களைத் தேவனுடைய கிருபையை முற்றிலும் நம்பாதவாறு பயமுறுத்துகிறதாய் இருக்கிறது. நாம் பின்பற்றிக் கொண்டிருக்கின்ற ஒருசில விதிமுறைகளையே பற்றிப் பிடித்துக்கொண்டிருக்க விரும்புகிறோம். ஆனால் இது ஒருபோதும் பயன்படாது. நாம் முற்றிலும் பரிசுத்த ஆவியானவரையே சார்ந்திருப்பவர்களாக மாற வேண்டும்.

நீதியையும், பரிசுத்தத்தையும் போராட்டத்தின் மூலமாகவே பெற்றுக்கொள்ள வேண்டும் என்பது தேவனுடைய வழியல்ல. இதனைப் பரிசுத்த ஆவியானவருக்கு அர்ப்பணிப்பதின் மூலமாகவே பெற்றுக்கொள்ள முடியும். சுய முயற்சிகள் எல்லாம் பயனற்றுப் போகும்வேளை, நீங்கள் ஒரு இறுதிக்கட்டத்தை எட்டி, “பரிசுத்த ஆவியானவரே பொறுப்பெடுத்துக்கொள்ளும். இந்தச் சூழ்நிலையை என்னால் சமாளிக்க முடியாது. ஆனால் உம்மால் மட்டுமே முடியும்” என்று சொல்வீர்கள். இதற்கு மன தைரியம் வேண்டாம் என்பது பொருளல்ல. மனதைரியத்தை வேறுவிதமான வழியில் பயன்படுத்த வேண்டும் என்பதே. மனதைரியத்தை நம் சொந்த விருப்பப்படி, சொந்தக் காரியங்களுக்குப் பயன்படுத்தாமல், அதே நேரத்தில் முற்றிலும் பரிசுத்த ஆவியானவரையே நம்பி சார்ந்திருத்தல் வேண்டும். காரியங்களை நடப்பித்தல் வேண்டும்.

இயற்கையாகவே, நான் ஒரு தனிப்பட்ட உறுதியான மனதையுடைய ஒரு மனிதனாவேன். எந்த நேரத்தில் எனக்குப் பிரச்சனை வந்தாலும் நானே என் இயற்கையான உள்ளுணர்வுகளின் மூலம் அந்தப் பிரச்சனைக்குத் தீர்வு காண்பேன். ஒரு காலக் கட்டத்தில் என்னால் என்னுடைய பிரச்சனைக்குத் தீர்வு காண முடியாத ஒரு நிலை வந்தது. உடனே நான் தேவனே உம்முடைய தீர்வு என்ன என்று கேட்டேன். அநேக நேரங்களில் தேவனுடைய நடத்துதல் தீர்வுகாணும் முறை, என்னுடைய எண்ணங்களுக்கு முற்றிலும் வேறுபட்டதாய் இருக்கும். ஒரு

கிறிஸ்தவனின் வாழ்வு என்பது போராட்டமுள்ள ஒரு வாழ்வு அல்ல. நமக்குள் வாசஞ்செய்யும் பரிசுத்த ஆவியானவருக்கு இணங்கி வாழும் ஒரு வாழ்க்கையாகும்.

ஒரு திருமண உறவின் எடுத்துக்காட்டு மூலமாக பரிசுத்த பவுல் ரோமர் 7ஆம் அதிகாரத்தில் இதனை விளக்குகிறார். கனிகொடுக்கும் ஒரு வாழ்வு என்பது நாம் எந்த அளவுக்கு முயற்சி எடுத்துக் கொள்கிறோமோ அந்த அளவைப் பொறுத்தது. முடிவெடுக்கப்படுவதல்ல, ஆனால், கனி கொடுப்பது என்பது திருமணம் செய்து கொண்ட நபரைப் பொறுத்தே அமையும். மாம்ச சுபாவத்தை நீங்கள் தழுவினால், மாம்சத்திற்குரிய செயல்களையே வெளிப்படுத்துவீர்கள். பரிசுத்த ஆவியானவர் மூலமாக உயிர்த்தெழுந்த கிறிஸ்துவோடு இணைக்கப்பட்டால், அந்த ஐக்கியத்தின் மூலமாக ஆவியின் கனியை வெளிப்படுத்துவீர்கள். இணைக்கப்பட்டவர்களாய் நிலைத்திருப்போம்.

இயேசு நமக்கும் அவருக்கும் உள்ள உறவை ஒப்பிடும்பொழுது "நான் மெய்யான திராட்சச் செடி, என் பிதா திராட்சத் தோட்டக்காரர்" என்று யோவான் 15:14இல் கூறுகிறார். அதிகக் கனிகளைக் கொடுக்கும்படி அதைச் சுத்தம் பண்ணுகிறார். தொடர்ந்து இயேசு தமது சீஷர்களிடம் சொல்வதை யோவான் 15ஆம் அதிகாரம் 4ஆம் 5ஆம் வசனங்களில் காணலாம்.

> என்னில் நிலைத்திருங்கள், நானும் உங்களில் நிலைத்திருப்பேன்; கொடியானது திராட்சச் செடியில் நிலைத்திராவிட்டால் அது தானாய்க் கனி கொடுக்கமாட்டாதது போல, நீங்களும் என்னில் நிலைத்திராவிட்டால், கனிகொடுக்கமாட்டீர்கள். நானே திரட்சச் செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்; என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது.

என்று வசனம் கூறுகிறது. அதிக முயற்சியின்றி திராட்சக் கொடிகள் திராட்சக் கனிகளைக் கொடுக்க முடியாது. "நான் இப்பொழுது திராட்சக் கனிகளைக் கொடுக்கப்போகிறேன்" என்று அந்தக் கொடியானது தீர்மானம் பண்ணிக் கூறமுடியாது. கொடியானது திராட்சச் செடியில் நிலைத்திருந்தால் தானாகவே கனி கொடுக்க ஆரம்பிக்கும். செடியில் உள்ள உயிர் கொடிகள் வழியாக கடந்து செல்வதால் அந்தக் கொடிகளில் இருக்கும் ஆற்றல் உயரிய கனிகளைக் கொடுக்க உதவுகிறது. "நான் திராட்சச்செடி, நீங்கள் கொடிகள்". நீங்கள் என்னைச் சார்ந்து என்னில் நிலைத்திருந்தால் மிகுந்த கனிகளைக் கொடுப்பீர்கள் என்று இயேசு சொல்லுகிறார்.

இயேசு தொடர்ந்து சுத்தம் பண்ணுவதைக் குறித்துப் பேசுகிறார். அவர் கிளை நறுக்கி, களை பிடுங்கி அதனைச் சுத்தம் செய்கிறார். இனிமேல் அது கனி கொடுக்க மாட்டாது என்று நாம் நினைக்கின்றோம். ஆனால் மறு ஆண்டு, முன்பு இருந்ததைப் பார்க்கிலும் மிகவும் அதிகமான கனிகளைக் கொடுக்கும்.

நம்மிலே சிலருக்குண்டான வேதனையானப் போராட்டம் என்னவென்றால், கனி கொடுக்கும் முடிவைப் பற்றியதேயாகும். தற்பொழுது பிதாவானவர் சுத்தம்பண்ணுகிறார். ஆனாலும் முயற்சியை விட்டுவிடாதிருங்கள். “இது எனக்கு எவ்வாறு நடைபெறும்?” என்று சொல்லாதிருங்கள். ஒப்புக்கொடுங்கள். சுத்தம் பண்ணுகிறவருக்கு உங்களைக் கீழ்ப்படுத்துங்கள்.

பிதா, குமாரன், பரிசுத்த ஆவி ஆகிய திரியேக தேவன் இந்தக் கனி கொடுக்கச் செய்யும் பணியில் ஈடுபட்டு செயல்படுகின்றனர். பிதாவானவர் சுத்திகரிப்பவர். இயேசுவே திராட்சச்செடி, பரிசுத்த ஆவியானவர் திராட்சச் செடியிலும், கொடியிலும் கடந்து சென்று உயிர் கொடுக்கிறார். பரிசுத்த ஆவியானவரே உண்மையில் கனி கொடுக்கச் செய்கிறவராய் இருக்கிறார். இது நம்முடைய சுயமுயற்சியினால் உருவாகும் கனியல்ல. மதங்கள் உருவாக்கும் கனியல்ல. அது பரிசுத்த ஆவியின் கனியாகும்.

வரைபடம் அல்லது வழிகாட்டி

ஒரு சிறு உவமையின் மூலமாக இதை உங்களுக்குத் தெளிவுபடுத்தி விளக்க விரும்புகின்றேன். என்னுடைய சொந்த அனுபவத்திலிருந்தே பகிர்ந்துகொள்ள விரும்புகின்றேன். எனக்குத் தெரியும், சொந்த முயற்சியினால் தேவனைப் பிரியப்படுத்துவது என்பது மிகுந்த போராட்டமான ஒன்று. நான் சில நேரங்களில் மிகவும் பக்தியுள்ளவனாய் இருப்பதற்கு முயன்றேன். ஆனால், செய்வது யாது என அறியாது முயற்சியினைக் கைவிட்டேன். நான் ஒன்றைக் கற்றுக்கொண்டேன். எப்படியாகிலும் இந்த ஒரு பகுதி இயேசுவோடு நாம் நடைபோடத் தொடங்கும்போது உயிர் பெறுகிறது.

இந்த உவமை, வரைபடம் மற்றும் வழிகாட்டி ஆகிய இரண்டையும் குறித்ததாகும். ஒரு வேளை நீங்கள் சென்றிராத அயல் நாட்டிற்குச் செல்லும் வழியை அறிய வேண்டியதாயின் தேவன் இரண்டு வழிமுறைகளைத் தருகிறார். அதற்கு ஒரு வரைபடம் தேவைப்படும் அல்லது உங்களுக்கு ஒரு வழிகாட்டி தேவைப்படுவார்.

நீ வலிமையுள்ளவன், நீ மிகவும் புத்திசாலி. சுய திறமையைச் சார்ந்தவனாயிருக்கலாம். நான் வரைபடத்தை நன்றாகப் புரிந்து

கொள்பவன். சரியான திசையைத் தெரிந்து கொண்டு, சரியான சாலையிலே செல்லக் கூடியவன். சூரியன் பிரகாசிக்கின்றது, பறவைகள் பாடுகின்றன. நீ மகிழ்ச்சியாய் இருப்பதாக உணர்கின்றாய். *இது மிகவும் எளிதானது என்று உனக்குள்ளே சொல்லுகிறாய். இது ஒரு சிறிய துண்டு திண்பண்டம் போன்றது என்கிறாய்.*

மூன்று நாட்களுக்குப் பின், நீ ஒரு காட்டின் மையத்தில் இருக்கிறாய். அது நள்ளிரவு. மழை பெய்து கொண்டிருக்கிறது. கடினமான சூழ்நிலை. உன் முன் இருப்பது செங்குத்தான பாறை. கிழக்கோ மேற்கோ வடக்கோ, தெற்கோ எந்தத் திசையை நோக்கிக் கொண்டிருக்கிறாய் என்று உனக்கே தெரியவில்லை. அவ்வேளை மென்மையான குரல் ஒன்று “நான் உனக்கு உதவட்டுமா? வழி காட்டட்டுமா?” எனக் கேட்கிறது.

ஆம்! ஆம்! “நீர் எனக்குத் தேவை” “உம் உதவி எனக்கு வேண்டும்” என்று நான் பதில் கூறுகின்றேன்.

நான் சில நேரங்களில் மிகவும் தேவ பக்தி உள்ளவனாய் இருக்க முயற்சித்தேன். என்ன செய்ய வேண்டும் என்று தெரியாமல் காயப்பட்டு, மன சோர்வுக்கு உள்ளானேன்.

அந்த வழிகாட்டி “உன்னுடைய கரத்தைக் கொடு. நான் இதிலிருந்து உன்னை விடுவிப்பேன்” என்று கூறுகிறார். சற்று காலம் தாழ்த்தி நீயும் உனது வழித்துணையும் மீண்டும் நடந்து செல்கின்றீர்கள்.

அந்தக் காட்டில் நான் இருந்தபொழுது காரணமின்றி பயப்பட்டேன். *நான் சாதித்திருக்க முடியும்.* அதனால் நீ உன்னுடைய வழித்துணையிடம் அதை விளக்குவதற்குத் திரும்பினாய். ஆனால் அந்த வழித்துணை அங்கு இல்லை. நீ உன்னுடைய தோள்களைக் குலுக்கி நான் என் சொந்த முயற்சியைப் பயன்படுத்துவேன் என மறுபடியும் நீ தொடர்கின்றாய்.

இரு நாட்களுக்குப் பின் நீ சதுப்பு நிலத்தின் மையத்தில் இருக்கின்றாய். ஒவ்வொரு அடி எடுத்துவைக்கும் பொழுதும் சற்று ஆழத்திற்குள் செல்வது போல் தடுமாறுகிறாய். செய்வது யாது என உனக்குத் தெரியவில்லை. உனக்குள்ளாகவே நீ சிந்தித்துக் கொள்கிறாய்.

முன்பு வழிகாட்டியிடம் உதவியைப் பெற்றுக்கொண்டது போல நான் மீண்டும் உதவியைக் கேட்க முயல்கின்றேன். ஆனால் இப்பொழுதோ சரியான செயலை மேற்கொள்ளத் தவறிவிட்டேன் என உணர்கின்றேன்.

அந்நேரத்தில் தானே, அந்த வழிகாட்டி உன் வலது புறத்தில், அருகிலேயே இருக்கிறார் என்பதை மீண்டும் அறிகின்றாய். நான் உனக்கு

உதவட்டுமா? என்று அவர் கேட்க, நீ மீண்டும் அவருடன் ஒன்றாய் இணைந்து நடக்க ஆரம்பிக்கின்றாய்.

அந்நேரத்தில்தானே அவ்வரைபடம் உன்னிடம் இருந்தது என்பது ஞாபகத்திற்கு வருகின்றது. பின் நீ அவ்வரைபடத்தை வெளியே எடுத்து, அதை வழிகாட்டியிடம் காட்டி ஒருவேளை இவ்வரைபடத்தை நீங்கள் விரும்புகின்றீர்களா? என்று கேட்கிறாய்.

“நன்றி! எனக்கு வழி நன்றாகத் தெரியும். எனக்கு வரைபடம் தேவையில்லை. மெய்யாய் கூறப்போனால் இவ் வரைபடத்தை உருவாக்கியவனே நான் தான்” என அவர் கூறுகிறார்.

எத்தனை முறைகள் நம் சொந்த புத்திசாலித்தனத்தையும் ஞானத்தையும் நம்புவதற்கு நாம் திரும்பிவிடுகிறோம். இவ்வாறு நாம் தூய ஆவியானவரைத் துக்கப்படுத்துகிறோம்.

வரைபடம் ஒரு வழிகாட்டியாய் அமைகிறது. அவ்வரைபடம் முழுமையானது. அதில் வரையப்பட்ட அனைத்துக் குறிப்புகளும் மிகவும் துல்லியமானது. பூகோள ரீதியான அனைத்து நிலப்பரப்பும் சரியாக அதில் குறிக்கப்பட்டுள்ளது. அதைத் தீர்மானிக்க “நான் வரைபடத்தை எடுக்கமாட்டேன். என் வழிகாட்டியையே நம்புவேன்.”

யார் அந்த வழிகாட்டி? பரிசுத்த ஆவியானவரே அவ்வழிகாட்டி.

எத்தனை முறைகள் இதைப் போன்ற நிலைகள் நடக்கின்றன? எத்தனை முறை நம் சொந்த புத்திசாலித்தனத்தையும், ஞானத்தையும் நம்புவதற்குத் திரும்பிவிடுகிறோம். இவ்வாறு பரிசுத்த ஆவியானவரை நாம் துக்கப்படுத்துகிறோம்.

தனது வழித்துணையைச் சார்ந்த மணப்பெண்

ஆதியாகமம் 24ஆம் அதிகாரத்தில் ஆபிரகாம் தன் மகனான ஈசாக்கிற்கு எவ்வாறு மணவாட்டியைத் தெரிந்துகொண்டான் என்ற விவரம் வரையப்பட்டுள்ளது. தன் சொந்த நாடாகிய மெசபொத்தோமியாவிற்குத் தன் ஊழியக்காரனை அனுப்பித் தன் இனத்திலே பெண்ணைக் கொள்ளும்படியாக அனுப்பினான்.

அக்கால கலாச்சாரத்திற்கு அது அத்தியாவசியமானதாக இருந்தது. இது வரலாற்றிலே நடித்துக் காட்டப்பட்ட உவமையான ஒரு நிகழ்ச்சி. ஆபிரகாம் பிதாவாகிய தேவனுக்கு உதாரணமாய் இருக்கிறான். ஈசாக்கு குமாரனாகிய இயேசு கிறிஸ்துவுக்கு உதாரணமாய் இருக்கிறான்.

தெரிந்தெடுக்கப்பட்ட மணப்பெண் ரெபேக்காள், சபைக்கு மாதிரியாய் இருக்கிறாள். இன்னொரு பிரதான வேதபாத்திரம் பெயர் குறிப்பிடப்படாமல் உள்ளார்: அவர் ஊழியர். பரிசுத்த ஆவியானவர் ஒரு பணியாள் போல் உள்ளார். ஆதியாகமம் 24இல் பரிசுத்த ஆவியானவரின் சுயவடிவம் கொடுக்கப்பட்டுள்ளது. அவர் தன் பெயரைக்கூட கூறிக்கொள்ள மாட்டார். அவர் தன்னை நோக்கி பிறர் கவனத்தை ஈர்க்காமல் பிதாவையும் குமாரனையுமே மகிமைப்படுத்துவார்.

ஒரு பெண்ணைத் தெரிந்தெடுக்கப் போகிறோம் என்ற எண்ணத்தை மனதில் உடையவனாய், அந்த ஊழியக்காரன் தன்னோடு பத்து ஒட்டகங்களையும், அநேக வெகுமதிகளையும் உடையவனாய் இருந்தான். இவ்வாறு ஒரு பெண்ணைத் தெரிந்தெடுக்கச் செல்லும்பொழுது அவ்வுறவினை உறுதிப்படுத்த வெகுமதிகளை அளிப்பது மத்திய கிழக்குப் பகுதியின் வழக்கமாயிருந்தது. அவ்வாறு கொடுக்கப்படும் வெகுமதிகளைப் பெற்றுக்கொள்வது அந்நபரையே ஏற்றுக்கொண்டதற்கு அர்த்தமாகும். கொடுக்கப்பட்ட வெகுமானம் மறுக்கப்பட்டால் எவ்விதமான உறவுகளையும் ஏற்படுத்துவது அரிய செயலாகும்.

இப்பகுயில் நான் வசித்து வந்ததினால், ஒட்டகங்கள் மிகுந்த சுமையைச் சுமக்கக்கூடும் எனக் கூறமுடியும். அந்த வேலையாள் 10 ஒட்டகங்களுடன் தன் பயணத்தை மேற்கொள்கிறார். அந்த ஊழியக்காரன் ஒட்டகங்களுக்குத் தண்ணீர் வார்க்கக்கூடிய ஓர் இடத்திற்கு வந்தான். நான் “அங்குத் தண்ணீர் மொள்ள வரும் பெண்களுள், ஓர் இளம் பெண்ணிடம் குடிப்பதற்குத் தண்ணீர் தா எனக் கேட்பேன். நீங்களும் குடிக்கலாம். உங்களோடு வந்திருக்கும் ஒட்டகங்களுக்கும் சேர்த்துத் தண்ணீர் வார்ப்பேன் என்று சொல்லும் பெண்ணே, தெரிந்தெடுக்கப்படும் பெண்ணாகும்” என்று ஜெபித்தான். (ஓர் ஒட்டகம் 40 கேலன் தண்ணீர் குடிக்கும். அந்தப் பெண் தானே மனப்பூர்வமாய் கிணற்றிலிருந்து பத்து ஒட்டகங்களுக்கு நானூறு கேலன் தண்ணீர் வார்த்துக் கொடுக்க வேண்டும் என்று அந்த ஊழியக்காரன் தன் மனதில் நினைத்துக் கொண்டான்.

அப்பொழுது அங்கே ரெபேக்காள் வருகிறாள். அந்த ஊழியக்காரன் குடிப்பதற்கு ஏதாகிலும் கொடு என்று கேட்டான். “நிச்சயமாய்த் தருகிறேன்” என்று ரெபேக்காள் பதில் கூறினாள். உங்களோடு வந்திருக்கும் ஒட்டகங்களுக்கும் தண்ணீர் வார்ப்பேன். அவ்வேளை அவ்வூழியக்காரன் “இவளே அப்பெண்” எனத் தனக்குள் சொல்லிக்கொள்கின்றான். இங்கு ரெபேக்காள் கிரியை வெளிப்படும் விசுவாசத்திற்கு உதாரணம் எனக் கூற விரும்புகிறேன். பத்து ஒட்டகங்களுக்குத் தண்ணீர் வார்ப்பது எளிதான செயலன்று.

அதற்குப் பின் அந்த ஊழியக்காரன் அழகிய அணிகலன்களை வெளியே எடுத்தான். பொற்காதணிகளையும், கைகளுக்கு வளையல்களையும் ரெபேக்காளுக்கு முன்பாக வைத்தான். அவள் குறிக்கப்பட்ட மணப்பெண்ணாய் இருந்தபடியினால் அந்நேரத்திலே பொன்னால் செய்யப்பட்ட அணிகலன்களை அவள் ஏற்றுக்கொண்டாள். ரெபேக்காள் நகைகளை ஏற்றுக்கொள்ள மறுத்திருந்தால் என்ன நடந்திருக்கும்? அவள் மணப்பெண்ணாக ஆகியிருக்க முடியாது. பரிசுத்த ஆவியானவர் தரும் வெகுமதிகளை ஏற்றுக்கொள்ள மறுக்கும் சபைகளைக் குறித்து நாம் என்ன சொல்வது? இம்மணப்பெண்ணின் குணநலன்கள் சபைக்கு அத்தியாவசியமானது.

ரெபேக்காளுக்கு எப்பொழுதும் வரைபடம் இருந்ததில்லை. அவளோடு பேசக்கூடிய வழிகாட்டியும் அவளுக்கு ஒருபோதும் இருந்ததில்லை. ரெபேக்காளோ அல்லது அவளது தகப்பனோ அவள் திருமணம் செய்யப்போகும் மணமகனைப் பார்த்ததில்லை. சிறந்த வழிகளை அறிந்த ஒரு நல்ல வழிகாட்டி அவளுக்கு இருந்தார். அவள் பிதாவையும் குமாரனையும் அறிந்திருந்தாள். அவளுக்குத் தேவைப்பட்ட எல்லா செய்திகளையும் அவர் அவளுக்கு வழங்கினார்.

இதே மாதிரிதான் உனக்கும் எனக்கும். இவ்வரைபடத்தின் மூலம் மட்டும் சாதிக்க முடியாது, நமக்கு ஒரு வழிகாட்டியும் தேவை. நாம் இவ்வாழ்க்கையில் பொதுவாக பிதாவையோ, குமாரனையோ, நம்முடைய இலக்கையோ பார்க்க முடியாமற்போகலாம். ஆனால், பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலுக்கு நாம் இடம் கொடுக்கும்பொழுது அவர் நம்மை வழிநடத்துவார். நாம் செல்ல வேண்டிய வழியை அவர் காட்டுவார்.

11

மாய்மாலத்திற்கு இடம் இல்லை

''நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்கு சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார். உலகம் அந்தச் சத்திய ஆவியானவரைக் காணாமலும் அறியாமலும் இருக்கிறபடியால் அவரைப் பெற்றுக்கொள்ள மாட்டாது; அவர் உங்களுடனே வாசம்பண்ணி உங்களுக்குள்ளே இருப்பதால், நீங்கள் அவரை அறிவீர்கள்."

யோவான் 14:16-17

இயேசு தன்னுடைய சீடர்களுக்கு அவரது பிதாவிடம் ஒரு தெய்வீக உதவியாளரை அனுப்பும்படி வாக்குப் பண்ணியபோது அந்த உதவியாளருக்கு ஒரு சிறப்பான பெயரைச் சூட்டினார். அது "சத்திய ஆவியானவர்" என்பதாகும். அதே நேரத்தில் அவர் இந்த உலகம் அந்த உதவியாளரை ஏற்றுக்கொள்ள இயலாதவர்களாக இருப்பார்கள் என்று எச்சரித்தார்.

இதற்காக வேதம் இரண்டு காரணங்களைக் கொடுக்கிறது. முதலாவது மனிதன் தேவனுக்கு விரோதமாக எழும்பி தேவனை விட்டு பின்னோக்கிச் சென்றான். தங்கள் நீதியற்ற செயலை ஒத்துக்கொண்டு சத்தியத்திற்குக் கீழ்ப்படிய மனதில்லாதிருந்தார்கள். அதனால் "சத்தியத்தை அநியாயத்தினாலே அடக்கிவைக்கிற மனுஷருடைய எல்லாவித அவபக்திக்கும் அநியாயத்துக்கும் விரோதமாய், தேவ கோபம் வானத்திலிருந்து வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது" (ரோமர் 1:18).

இரண்டாவது தேவனுக்கு விரோதமான போராட்டம் என்னவென்றால் "உலகமனைத்தையும் மோசம் போக்குகிற பிசாசு என்றும் சாத்தான் என்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய பெரிய வலுசர்ப்பம் தள்ளப்பட்டது; அது பூமியிலே விழத்தள்ளப்பட்டது, அதனோடுகூட அதைச் சேர்ந்த தூதரும் தள்ளப்பட்டார்கள் (வெளிப்படுத்தின விசேஷம் 12:9).

சாத்தான், மனிதவர்க்கத்தைத் தன்னுடைய கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவருவதற்கு உபயோகிக்கும் பிரதான ஆயுதம் “வஞ்சித்தலே” ஆகும். ஒருமுறை அவனுடைய ஏமாற்றும் திறமை கண்டிக்கப்பட்டுத் தள்ளப்பட்டால் சாத்தான் தன்னோடுகூட அவனை நித்திய அக்கினிக் கடலுக்குள்ளான இடத்தில் தள்ளுவதைவிட அவனால் வேறு ஒன்றையும் கொடுக்க முடியாது.

அநேக நூற்றாண்டுகளாக மனிதனின் தத்துவம் “சத்தியம்” என்ற வார்த்தைக்குரிய திருப்திகரமான விளக்கத்தை அளிக்க ஒருபோதும் இயலவில்லை. இதற்கு மாறாக வேதம் மும்முனையான பதிலைக் கொடுக்கிறது. முதலாவதாக “நானே சத்தியமாயிருக்கிறேன்” (யோவான்14:6) என்று இயேசு சொன்னார். இரண்டாவதாக பிதாவாகிய தேவனிடத்தில் ஜெபித்து “உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும். *உம்முடைய வசனமே சத்தியம்*” (யோவான் 17:17) என்று சொல்லுகிறார். மூன்றாவதாக யோவான் “ஆவியானவர் சத்தியமாகையால் ஆவியானவரே சாட்சி கொடுக்கிறார்” என்று கூறுகிறார் (1யோவான் 5:6).

நமக்குச் சத்தியம் என்ன கொடுக்கிறது என்பதை நாம் ஏற்றுக்கொள்ளும் முன்பு ஒரே இடத்தில் மூன்று பொருட்கள் முறைப்படுத்தப்–படுகின்றன. அவை இயேசு, வேதம் மற்றும் பரிசுத்த ஆவியாகும்.

ஆகையால் ஆவிக்குரிய தளத்தில் அங்கே சத்தியத்தை மூன்று பொருட்கள் முறைப்படுத்துகின்றன. இயேசு, வேதாகமம் மற்றும் பரிசுத்த ஆவி. இந்த மூன்றோடும் ஒப்பந்தம் செய்யும் போது, நாம் சத்தியத்தை அடைந்துவிட்டதாக அறிவோம். அதாவது முழுமையான சத்தியம்.

நாம் ஒரு முடிவுக்கு வரும் முன்பாக இவை மூன்றும் எவ்வாறாக முறைப்படுத்துகின்றன என்பதைப் பரிசோதிப்பது அவசியமாகும். எந்த ஒரு ஆவிக்குரிய பிரச்சனையாக இருந்தாலும் அதைக்குறித்து நாம் மூன்று வினாக்களை எழுப்ப வேண்டும். இயேசு கிறிஸ்து எப்படி உண்மையுள்ளவராக இருக்கிறாரோ அது அதில் காணப்படுகிறதா? அது வேதத்திற்கு உகந்ததாக உள்ளதா? பரிசுத்த ஆவியானவரின் சாட்சி காணப்படுகிறதா? என்பன ஆகும்.

சத்தியத்தின் மூன்று கூறுகளையும் எப்பொழுதும் சோதித்துப் பார்த்திருந்தால் சரித்திரத்தில் சபை பல தவறுகள் செய்தது தவிர்க்கப்பட்டிருக்கும்; மாயைக்குள் கடந்து சென்றிருக்காது. ஒரு ஆசிரியர் இயேசு கிறிஸ்துவின் படத்தை நன்னடத்தைக்கான மாதிரியாக உள்ளத்தைத் தொடும்வகையில் பழுதில்லாமல் வரைந்தால் மட்டும்

போதாது. அல்லது ஒரு போதகர் தன்னுடைய சபையினருக்கு வேதவாக்கியங்களை வேகமாக எடுத்துக் கூறினாலும் போதாது. அல்லது ஒரு ஊழியக்காரர் அவரது பார்வையாளர்களிடத்தில் அவர்கள் அதிசயிக்கத்தக்கவிதமாக இயற்கைக்கு அப்பாற்பட்டவைகளை எடுத்துக்காட்டிக் கவர்ந்திழுத்தலும் போதாது. சத்தியம் என்பது என்ன என்று விளக்கப்படுவதை நான் ஏற்றுக்கொள்ளுவதற்கு முன்பாக இயேசு, வேதம் மற்றும் பரிசுத்த ஆவி ஆகிய மூன்றினால் நாம் வழிநடத்தப்பட வேண்டும்.

பரிசுத்த ஆவியின் முக்கியச் செயல்பாடு *சாட்சியாக இருக்க வேண்டும்* என்பதை நினைவில் கொள்ள வேண்டும். “ஆவியானவரே சாட்சி கொடுக்கிறார்” (1 யோவான் 5:6) இயேசுகிறிஸ்துவை தேவனுடைய நித்திய குமாரன் என்றும் நம்முடைய பாவத்திற்கான எல்லாவற்றிற்கும் போதுமான பலியாக சிலுவையில் அவர் இரத்தத்தைச் சிந்தினார் என்றும் பரிசுத்தஆவி சாட்சி கொடுக்கிறார் என்பதை சார்லஸ் வெஸ்லி பின்வருமாறு கூறுகிறார்.

ஆவி இரத்தத்திற்குப் பதில் உரைக்கிறது, நான் தேவனால் பிறந்தவன் என என்னிடம் கூறுகிறது.

சத்தியத்தைக் குறித்தும் பரிசுத்த ஆவியானவர் சாட்சி கொடுக்கிறார் என்பது வேதத்தில் அதிகாரப்பூர்வமாகச் சொல்லப்பட்டுள்ளது. தெசலோனிக்கேய சபைக்குப் பரிசுத்த பவுல் எழுதுவது, “எங்கள் சுவிசேஷம் உங்களிடத்தில் வசனத்தோடே மாத்திரமல்ல, வல்லமையோடும், *பரிசுத்த ஆவியோடும்,* முழு நிச்சயத்தோடும் வந்தது” (1 தெசலோனிக்கேயர் 1:5 முற்பகுதி) வேதத்தின் உண்மைத் தன்மையைப் பற்றி நாம் அடுத்த அத்தியாயத்தில் கவனிப்போம்.

மாய்மாலம் என்றால் என்ன?

சத்திய ஆவியாகிய பரிசுத்த ஆவிக்கும் சாத்தானுக்கும் இடையில் அங்கே ஒத்துப்போகுதல் என்பது கிடையாது. ஏனெனில் அவன் பொய்யனும் பொய்க்குப் பிதாவுமாயிருக்கிறான் (யோவான் 8:44). இது ஆதி சபையிலே தத்ரூபமாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. அதாவது அனனியாவும் சப்பீராளும் தாங்கள் சபைக்குக் காணிக்கையாகக் கொடுத்த பணத்தைப் பற்றிப் பொய் சொன்னார்கள். சொத்தை விற்று பெற்ற முழுக்கிரயத்தையும் கொண்டு வந்துவிட்டோம் என்றனர். ஆனால் உண்மை என்னவென்றால் அதில் ஒரு பங்கை வஞ்சித்து வைத்துக்கொண்டார்கள்.

பேதுருவுக்குள் இருந்த பரிசுத்த ஆவியானவர் வஞ்சிக்கப்படவில்லை. பேதுரு அனனியாவை நோக்கி: நீ மனுஷரிடத்தில் அல்ல தேவனிடத்தில் பொய் சொன்னாய். மேலும் சத்திய ஆவியானவராய் விளங்கும் அந்தப் பரிசுத்த ஆவியானவரிடத்தில்-அவரிடத்திலே பொய் கூறினாய் என்று குற்றப்படுத்தினார்.

> பேதுரு அவனை நோக்கி: அனனியாவே, நிலத்தின் கிரயத்தில் ஒரு பங்கை வஞ்சித்து வைத்து, பரிசுத்தஆவியினிடத்தில் பொய் சொல்லும்படி, சாத்தான் உன் இருதயத்தை நிரப்பினதென்ன? அதை விற்குமுன்னே அது உன்னுடையதாயிருக்கவில்லையோ? அதை விற்ற பின்பும் அதின் கிரயம் உன் வசத்தில் இருக்கவில்லையோ? நீ உன் இருதயத்திலே இப்படிப்பட்ட எண்ணங்கொண்டதென்ன? நீ மனுஷரிடத்தில் அல்ல, தேவனிடத்தில் பொய் சொன்னாய் என்றான். அனனியா இந்த வார்த்தைகளைக் கேட்கவே, விழுந்து ஜீவனை விட்டான். இவைகளைக் கேள்விப்பட்ட யாவருக்கும் மிகுந்த பயமுண்டாயிற்று.
>
> (அப்போஸ்தலர் 5:3-5)

ஆனால், மூன்று மணி நேரத்திற்குப் பின்பு சப்பீராள் உள்ளே வந்து தனது கணவனைப் போலவே அதே பொய்யைத் திரும்பவும் சொன்னாள். இதற்காக அவளும் கீழே விழுந்து ஜீவனை விட்டாள்.

சரியாகக் குறிப்பிட வேண்டுமானால் அனனியாவும் சப்பீராளும் செய்த இந்தப் பாவத்தில் குற்ற உணர்வு காணப்பட்டது. இதுவே *மாய்மாலம்* - மதரீதியான ஏமாற்றுதல். அவர்கள் உண்மையாகக் காணப்படும் நிலையை மறைத்து அதிகத் தாராள மனப்பான்மை உடையவர்கள் போலவும், அதிகமாக தேவனிடத்தில் அர்ப்பணிப்பு செய்தவர்கள் போலவும் நடித்து ஏமாற்றினார்கள். இயேசுகிறிஸ்து தான் வாழ்ந்த காலத்திலுள்ள மதத்தலைவர்களின் இப்படிப்பட்ட பாவத்தை அதாவது மாய்மாலத்தைத் தனது ஆணித்தரமான வார்த்தைகளால் கடிந்துரைக்கின்றார். அவர் அவர்களிடத்தில் “மாயக்காரர்களே உங்களுக்கு ஐயோ” என்று மத்தேயு 23ஆம் அதிகாரத்தில் அவர்களுக்கு ஏழு தடவைகள் கூறியுள்ளார்.

நம்முடைய ஆங்கில வார்த்தைகளான *மாயக்காரர்* மற்றும் *மாய்மாலம்* ஆகியவை கிரேக்கவார்த்தையான *ஹீபோக்ரைட்ஸ்* (Hupokrites) என்ற வார்த்தையிலிருந்து நேரிடையாகப் பெறப்பட்டதாகும். இதன் அர்த்தமாவது ‘நடிகர்’ என்பதாகும். இதுதான் மாய்மாலம் என்பதின் சாரமாகும். இதை மதரீதியான செயல்களில் ஏற்றுகிறார்கள். பெரும்பாலும் பக்தியுள்ள ஜனங்களுக்குள்

மாய்மாலத்தைச் செய்கிற பாவத்தைத் தவிர வேறு சாதாரண பாவங்கள் இல்லை. உண்மையாக இவ்வகையான மதங்கள் அதிகமாக அதைத் தேவையாகக் கருதுகின்றன.

ஜனங்கள் ஒரு மதத்திற்கான கட்டிடத்திற்குள் நுழையும்போது அவர்களுடைய முழு நடத்தையும் மாற்றமடைகின்றது. அவர்கள் இயற்கையாக, சுதந்தரமாக, வெளிப்படையாக மேற்கொண்டு இருப்பதில்லை. அவர்கள் ஒருவிதமான கண்ணுக்குப் புலப்படாத நெருக்கத்தைப் பற்றிக்கொண்டு தோற்றமளிக்கிறார்கள். தாங்கள் அணிந்து கொள்ளுவதற்கு மதம் என்ற ஒரு முகமூடி தேவைப்படுவதாக உணருகிறார்கள். வித்தியாசமான கிளைச் சபைகளுக்கு முகமூடிகள் தேவைப்படுகின்றன. ஆனால் அவர்களில் ஒரு சிலர் ஜனங்களைத் தங்களுடைய உண்மையான நிலையில் இருக்க அனுமதிக்கிறார்கள்.

போதகர் குறிப்பிட்ட ஒரு சில பாவங்களைக் குறித்துக் கடிந்துரைக்கும்பொழுது, இவர்கள் அதிகக் கடமையுணர்வுடன் “ஆமென்!” என்று பதில் உரைக்கின்றார்கள். ஆனால் ஆலயத்திலிருந்து வெளியே சென்ற பின்பு அதே பாவங்களை மனச்சாட்சியில் உறுத்துதல் இல்லாமல் செய்கிறார்கள். அவர்கள் சத்தமிட்டு ஜெபிக்கும்போது அவர்கள் வித்தியாசமான சத்தத்தால் சிறப்பான வார்த்தைகளைக் கூறி ஜெபிக்கிறார்கள். ஒரு தந்தை தனது மகன் வித்தியாசமான மொழியிலும் மாறுபட்ட நடத்தையுடன் நல்ல பெயர் எடுப்பதற்காக வித்தியாசமான காரியங்களைச் செய்தால் அந்தத் தந்தை எப்படியாகச் சஞ்சலப்படுவார் என்பதை அவர்கள் சிந்தித்துப் பார்ப்பதில்லை.

சத்திய வேதத்தின் தேவனிடத்தில் மாய்மாலக்காரர்களுக்கு நேரம் இல்லை. இது யோபுவின் சரித்திரத்தில் வெளிக்காட்டப்படுகிறது. யோபுவின் மூன்று நண்பர்களும் இடைவிடாமல் மதத்தைப்பற்றிய சம்பாஷணையில் வார்த்தைகளைக் கொட்டினார்கள். அவர்கள் “தேவன் எப்பொழுதும் நீதிமான்களை ஆசீர்வதிக்கிறார், அவர்கள் அநியாயமாகப் பாடுபடுவதில்லை”. மேலும் தேவன் எப்பொழுதும் பொல்லாதவர்களை நியாயந்தீர்க்கிறார். அவர்கள் ஒருபோதும் செழிப்பதில்லை, என்று கூறினார்கள். இருந்தாலும் சரித்திரத்தின் உண்மைகள் இது உண்மையல்ல என்று காட்டுகிறது. இது ஒரு மத ரீதியான பேச்சு மட்டுமேயாகும்.

பெரும்பாலும் பக்தியுள்ள ஜனங்களுக்குள் மாய்மாலம் செய்கிற பாவத்தைத் தவிர வேறு எந்தவொரு பாவமும் பரவலாகக் காணப்படுவதில்லை உண்மையாக சில வகையான மதங்கள் அதிகமாக அதைத் தேவையாகக் கருதுகின்றன.

யோபு வெளிப்படையாகக் கூறியிருக்கிறான். அவன், தேவன் என்னைச் சரியானபடி நடத்தவில்லை. இதையெல்லாம் அனுபவிக்க நான் எந்தத்தவறும் செய்யவில்லை. ஆனால் அவர் என்னைக் கொன்றுபோட்டாலும் நான் அவரில் நம்பிக்கையாயிருப்பேன் என்று கூறுகிறான்.

தேவன் யோபுவின் நடத்தையையும் அவனுடைய நண்பர்களின் நடத்தையையும் மதிப்பிட்டு வெளிப்படுத்துகிறார் என்று நான் முந்தின அத்தியாயங்களில் குறிப்பிட்டுள்ளேன்(யோபு 42:7). "கர்த்தர் தேமானியனாகிய எலிப்பாசை நோக்கி: உன் மேலும் உன் இரண்டு சிநேகிதர் மேலும் எனக்குக் கோபம் மூளுகிறது; என் தாசனாகிய யோபு பேசினது போல், நீங்கள் என்னைக் குறித்து நிதானமாய்ப் பேசவில்லை" என்றார்.

இப்படிப்பட்ட, மத சம்பந்தமான நடத்தை அனனியா, சப்பீராளின் பாவத்தினால் மரணத்தைச் சந்தித்த அந்தப் பாவத்திலிருந்து எப்படி வித்தியாசப்படுகிறது என்று நமக்கு நாமே கேள்வி கேட்டுக்கொள்வது அவசியமாகும்.

சத்தியத்தை உணரும் நேரம்

இவ்வண்ணமாக, தாவீது ராஜா பயங்கரமான இரண்டு பாவங்களால் குற்ற உணர்வு உடையவனாக இருந்ததை நாம் நினைவு கூறுவோம். முதலாவது அவன் பத்சேபாளோடு விபசாரம் செய்தான். பின்பு தன் பாவத்தை மறைப்பதற்காக உரியாவைக் கொலை செய்யத் தூண்டினான்.

இவ்வாறாகத் தாவீது தன் பாவங்களையெல்லாம் மறைத்துவிட்டதாகக் கருதினான். இன்னும் அவன் செய்யும் வழக்கமான முறையில் பிரார்த்தனை செய்தான். இன்னும் அவன் அரசனுக்குரிய கடமைகளையும் செய்து வந்தான். இன்னும் அரண்மனையில்தான் வாழ்ந்து வந்தான். தேவனுடைய தூதுவனாகிய தீர்க்கதரிசி நாத்தான் வந்து அவனுடைய பாவத்தை உணர்த்தும் வரைக்கும் வெளிப்படையாக அவனிடத்தில் ஒரு மாற்றமும் காணப்படவில்லை. பாவம் உணர்த்தப்பட்ட அத்தருணத்தில் தாவீதின் நித்தியத்தின் விதி இழுபறியாக இருந்தது. கர்த்தருடைய கிருபையினால் சரியான பதிலைத் தெரிந்தெடுத்தான். அவன் எந்தவிதச் சாக்குப்போக்கும் சொல்லவில்லை. பாவத்தை மறைக்க எந்தவித முயற்சியும் எடுக்கவில்லை. "நான் பாவம் செய்துவிட்டேன்" என்று ஒத்துக்கொண்டான் (2 சாமுவேல் 12:1-15ஐப் பார்க்கவும்).

பிறகு தனது சங்கீதம் 51இல் தாவீது ஒரு ஜெபத்தை ஏறெடுக்கிறான். அதன் பின்பு கிருபைக்காக வருந்தினான் (வசனம் 5, 6).

இந்த இரண்டு வசனங்களுமே "*இதோ*" என்று தொடங்குகிறது. தீடீரென்று ஒரு முக்கியமான உண்மையை ஒரு வெளிப்பாட்டைக் காட்டுகிறான்.

வசனம் 5 "இதோ, நான் துர்க்குணத்தில் உருவானேன்; என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பந்தரித்தாள்" என்று சொல்லுகிறது. தாவீது ஏதோ ஒன்றை நேருக்கு நேராக சந்தித்தான். இதைச் சத்திய ஆவியானவர் மட்டுமே அவனுக்கு வெளிப்படுத்த முடியும். இது அவன் செய்த பாவமான செயல்களைக் குறிப்பது மட்டுமல்லாமல் ஆதாமின் பின் சந்ததியாரான ஒவ்வொருவருக்குள்ளும் இருக்கும் ஜென்ம சுபாவமான உள்ளான மோசமான பிசாசின் வல்லமையினால் ஏற்படும் பாவங்களுமாகும்.

வசனம் 6இல் உள்ளான பாவத்தின் வல்லமையிலிருந்து தேவன் விடுவிக்கிறார். இது தேவனால் மட்டும் கூடும் என்று வெளிப்படுத்துகிறது.

"*இதோ உள்ளத்தில் உண்மை இருக்க விரும்புகிறீர்*". தான் செய்த பாவத்திற்குப்பின் தாவீது அரசனுக்குரிய தனது செயல்களையெல்லாம் வெளிப்படையாக தொடர்ந்து செய்துகொண்டிருந்தான். ஆனால் இப்பொழுது அவனுடைய வெளிப்படையான நடத்தைக்கும் அவன் இருதயத்தின் உண்மையான நடத்தைக்கும் இடையில் பெரிய இடைவெளி இருந்தது. அவன் ஒரு மாய்மாலக்காரனாய் ஆனான் - ஒரு நடிகனானான். தன் உள்ளத்திற்குள்ளாக சிறிதும் தொடர்பில்லாத ஒரு பாத்திரமாக நடந்து வந்தான். இந்நிலைக்கு ஒரே ஒரு பரிகாரம் மட்டும்தான் உண்டு. அதாவது உண்மையான பாவ அறிக்கையும் முழுமனதுடன் பெறும் மனந்திரும்புதலுமாகும்.

கர்த்தருடைய கிருபையினால் சரியான பதிலைத் தெரிந்தெடுத்தான். அவன் எந்தவித சாக்குப்போக்கும் சொல்லவில்லை. "நான் பாவம் செய்துவிட்டேன்" என்று ஒத்துக்கொண்டான்.

குருத்தோலை ஞாயிறு முதல் பெரிய வெள்ளி வரை

இந்த உண்மை வேதம் முழுவதிலுமாகக் காணப்படுகிறது. *தேவன் ஒரு போதும் பாவத்திற்கு ஒத்துப்போகமாட்டார்.* இது இயேசுவின் வாழ்க்கையில் இரண்டு நாட்களில் நாடக பாங்கில் எடுத்துக்காட்டப்படுகிறது. அதில் ஒன்று குருத்தோலை ஞாயிறு மற்றொன்று பெரிய வெள்ளி ஆகும்.

குருத்தோலை ஞாயிற்றில் இயேசு எருசலேமுக்குள் ஒரு புகழ்மிக்க வீரனாக நுழைந்தார். "அதற்கு ஜனங்கள், இவர் கலிலேயாவிலுள்ள நாசரேத்திலிருந்து வந்த தீர்க்கதரியாகிய இயேசு என்றார்கள்."

(மத்தேயு 21:11) அந்த நகரம் முழுவதும் அவருக்காகத் திறந்திருந்தது. அவர் எல்லா இடத்திற்கும் எளிதாகச் செல்ல முடிந்தது. அவருடைய கசப்பான விரோதிகள், மதத்தலைவர்கள் அவரை இராஜாவாக ஏற்படுத்தினார்கள். இதுவே மக்கள் அனைவரும் விரும்பிய செயலாகும்.

இருந்தாலும் அவர் வேறு வழியைத் தெரிந்து கொண்டார். ஐந்து நாட்களுக்குப் பின்பு அவர் தள்ளப்பட்டவராக ஆடையின்றி கொடுமையான சிலுவையில் தொங்கினார். ஏன்? ஏனென்றால் தேவன் ஒருபோதும் பாவத்திற்கு ஒத்துப்போக மாட்டார். பாவத்தைப் போக்குவதற்கு ஒரே ஒரு வழி சிலுவையில் தொங்கிய இயேசுவின் தியாகம்தான்.

இன்று அநேகக் கிறிஸ்தவர்கள் எழுப்புதலைப் பற்றிப் பேசவும் ஜெபிக்கவும் செய்கிறார்கள். எழுப்புதலுக்கு விரோதமான விட்டுவிடமுடியாத ஓர் தடை உண்டு அது பாவமே. பாவத்திற்குச் சரியான பதிலடி கொடுக்காவிடில் உண்மையான எழுப்புதல் ஒருபோதும் வராது. அதைச் சரி செய்வதற்கு ஒரே ஒரு வழிதான் உண்டு. “தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான், அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான்” (நீதிமொழிகள் 28:13).

வெளிப்படையாகச் சொல்லப் போனால் சமகால திருச்சபைகளின் பிரிவுகளில் மறைவான பாவங்கள் நிறைந்திருக்கின்றன. கிறிஸ்தவர்கள் அடிக்கடி “மறைக்கத் தேடும் சில பாவங்கள்” கீழே குறிக்கப்பட்டுள்ளன.

1. குழந்தை பலாத்காரம் சரீர, மனநிலை, பாலியல் சம்பந்தப்பட்டதாகும் - அல்லது இவை அனைத்தும் கலந்ததாகும்.

2. முறிபட்ட திருமண வாக்குமூலங்கள்

3. பணத்தைத் தவறான முறையில் செலவு செய்தல்

4. ஆபாசப் படங்களுக்கு அடிமையாகுதல் (இந்தப் பாவம் திருச்சபைத் தலைவர்களுக்கு மத்தியில் சாதாரணமாக நிலவுவதைக் கண்டுபிடித்து நான் மிகவும் அதிர்ச்சியடைந்தேன்.

5. பெருந்தீவனம் - சரீரப் பசியைத் தீர்ப்பதற்காக பெருந்திண்டியில் மூழ்குதல்.

தேவனுடைய பிராயச்சித்தம் இரண்டு விதமானது. முதலாவது அறிக்கையிடுதல். இரண்டாவது விட்டுவிடுதல் ஆகும். நம்முடைய பாவத்தை அறிக்கை செய்வது மாத்திரம் எளிதானதல்ல. இருந்தாலும் இதைத்தவிர வேறு பிராயச்சித்தம் இல்லை. “நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து, எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும்

நீதியுமுள்ளவராயிரக்கிறார்" (1 யோவான் 1:9). நாம் நம்முடைய பாவங்களை அறிக்கையிட முன்வராவிட்டால் தேவன் ஒருபோதும் நம்முடைய பாவத்தை மன்னிக்கத் தானாக முன்வரமாட்டார்.

ஆனால் பாவத்தை அறிக்கையிட்டால் மட்டும் போதாது. நாம் அதை "விட்டுவிடவும்" வேண்டும். நாம் ஒரு உறுதியான தீர்மானத்தையும் செய்து கொள்ள வேண்டும். அதாவது நாம் அறிக்கையிட்ட பாவங்களை மீண்டும் தொடர்ந்து செய்தல் கூடாது. தானியேல் நேபுகாத்நேச்சார் அரசனுக்குச் சொன்ன சின்ன ஆலோசனையை நாம் பின்பற்ற வேண்டும். "நீதியைச் செய்து உமது பாவங்களையும், சிறுமையானவர்களுக்கு இரங்கி உமது அக்கிரமங்களையும் அகற்றிவிடும்" (தானியேல் 4:27). நீதிக்கும் பாவத்திற்கும் இடையில் நடுநிலை இல்லை. "அநீதியெல்லாம் பாவந்தான்" (1 யோவான் 5:17). எவைகளெல்லாம் நீதியில்லாமல் இருக்கின்றதோ, அவைகள் எல்லாம் பாவந்தான்.

நீங்கள் நேருக்கு நேர் ஒரு கடினமான தீர்மானத்தை எதிர்நோக்கி இருக்கின்றீர்களா?

இந்த அத்தியாயம் உங்களுடைய வாழ்க்கையில் இதைக் குறித்து கேள்விகளை உண்டாக்கியிருந்தால் இக்கருத்துக்களை ஏற்றுக்கொள்கின்றீர்களா? அல்லது சில நேரங்களில் கீழ்ப்படியாமலிருந்தால் அதைச் சத்திய ஆவியானவருக்குத் திறந்த மனதுடன் தெரியப்படுத்துங்கள். அவர் உங்களுக்கு உதவி புரிவதற்குத் தயாராகவும், ஆயத்தமாகவுமிருக்கிறார்.

12

பரிசுத்த ஆவியும் வார்த்தையும்

நீங்கள் ஒரு மருத்துவரிடம் ஆலோசனைக் கேட்கச் செல்லும்போது அவர் நம்மிடம் என்ன பேசுகிறார் என்பதைத் தெரிவித்துக் கொண்டுள்ளார் என்ற உறுதியான நம்பிக்கை நமக்கு இருப்பது அவசியம். நாம் மருத்துவர்களிடம், அவர்கள் நோயை எப்படித் தடுப்பது என்றும் வலியையும் நோயையும் தேவையானபோது சரிப்படுத்துவது எப்படி என்பதையும் தெரிந்துகொண்டு அவற்றைப் பற்றி நம்மிடம் சொல்லுவதற்குத் திறமுடையவர்களாக இருக்க வேண்டும். இதன் மூலம் நாம் ஆரோக்கியமாகவும் தகுதியுடையவர்களாகவும் இருக்க விரும்புகிறோம். நாம், அவர்களை அந்தத் துறையில் அதிகமான அனுபவம் பெற்றவர்களாக இருக்க வேண்டும் என்று விரும்புகிறோம். ஆனால் அவர்களும் பொருத்தமான பயிற்சி பெற்றவர்களாகவும் இருப்பது அவசியம். நம்மில் எத்தனைபேர் ஒருபோதும் மருத்துவக் கல்லூரிக்குச் செல்லாமலும், ஒருபோதும் இது சம்பந்தமான புத்தகங்களைப் படிக்காமலும், முன்னேற்றம் அடைந்துள்ள மருத்துவ ஆய்வுகளைப் பற்றி அறியாமலும் இருக்கிற மருத்துவரைப் பார்ப்பதற்காகச் செல்லுவோம்? மற்றவர்களுக்கு உதவிபுரியக் கூடிய இந்த மனிதர் எப்படித் தன்னை அறிவிலும் ஆற்றலிலும் உகந்தவராக இருக்க வேண்டும்.

கிறிஸ்தவர்களாகிய நமக்கும், ஆவிக்குரிய யுத்தத்திற்கு நம்மைத் தயார்படுத்துவதற்கும் மேலே கூறிய கருத்துக்கள் பொருந்துவதாகும். கற்பனையில் பெற்ற "கள அனுபவங்கள்" நமக்கு இருக்கலாம். நன்னடத்தையில் வளருவதற்கு நாம் கடினமாக உழைக்கலாம். ஆனால் நாம் அந்த புத்தகத்தைப் படிக்காவிட்டால், அந்த அதிகாரமிக்க புத்தகத்தில் நம்பிக்கை வைத்து அதைச் சார்ந்திராவிட்டால் நாம் வெற்றி பெற்றவர்களாக இருக்க முடியாது. நீண்ட காலமாக நாம் பொருத்தமான தத்துவங்களை வெளிப்படுத்தவும், தேவனைப் பற்றிய உயர்ந்த எண்ணங்களை வெளிப்படுத்தவும் முடியும். ஆனால் நாம் அவருடைய வார்த்தையில் வேர் கொள்ளாவிட்டால் நம்முடைய வார்த்தைகள் நம்பக்கூடியவைகளாக இருக்க முடியாது. அதைச் சுற்றிலும் வேறு

வழியே இல்லை. நம்முடைய கிறிஸ்தவ வாழ்க்கையில் தேவனுடைய வார்த்தையில் அஸ்திபாரம் அமைக்கப்படாவிட்டால் நாம் நிலைத்திருப்போம் என்று நம்ப முடியாது.

“தேவனுடைய வார்த்தை” என்ற பதத்திற்கு இரண்டு அர்த்தங்கள் உண்டு. ஒன்று வேத புத்தகத்தைக் குறிக்கும் (எழுதப்பட்ட தேவ வார்த்தை) மற்றொன்று இயேசு கிறிஸ்துவைக் குறிக்கும் (தேவனுடைய சொந்த வார்த்தை) இவை ஒவ்வொன்றுமே தேவனுடைய வார்த்தை என்று அழைக்கப்படுகிறது. நாம் இயேசுவினிடத்தில் சரியான முறையில் உறவுகொள்ள வேண்டுமானால் நாம் சரியான முறையில் வேதத்தோடு உறவுகொள்ள வேண்டும். ஆகவே நாம் அந்த அதிகாரத்தையும், தேவனுடைய வார்த்தையின் வல்லமையையும், பரிசுத்த ஆவியானவர் தனது உண்மைக்கு உகந்த சாட்சியாகக் கனி கொடுத்தலையும் கண்டுபிடிக்க வேண்டும்.

அந்த வார்த்தை யாருடையது?

அதிகாரம் என்னும் வார்த்தையானது *ஆசிரியர்* என்ற வார்த்தையிலிருந்து பெறப்பட்டதாகும். எந்த ஒரு வேலையின் அதிகாரமும் அதை உருவாக்கினவரின் அதிகாரமாகத் திகழ்கிறது. வேறு விதமாகக் கூறப்போனால் ஆசிரியர் தான் எதையெல்லாம் உருவாக்கினாரோ அவற்றிற்கெல்லாம் அதிகாரம் கொடுப்பவராக இருக்கிறார். ஆகவே வேதத்தைப் படைத்தவரை அடையாளம் கண்டுகொள்வதும் அறிந்து கொள்வதும் மிக முக்கியமான ஒன்றாகும்.

> வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பித்தலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது.
>
> 2 தீமோத்தேயு 3:16-17

ஒவ்வொரு நல்ல வேலைக்கும் முழுமையான, தெளிவான திறமைகொள்ள விரும்பினால் அதற்குரிய எல்லா ஆதாரமும் வேதாகமமே ஆகும். பரிசுத்த பவுல்கூட வேதாகமத்திலுள்ளவைகளெல்லாம் தேவனின் ஏவுதலால் கொடுக்கப்பட்டது என்று சொல்லுகிறார். “தேவ ஆவியினால் அருளப்பட்டது” என்பது கிரேக்க மொழியில் “தேவ சுவாசம் ஊதினது” என்று விளக்கப்படுகிறது. “சுவாசம்” என்ற வார்த்தையும் “ஆவி” என்ற வார்த்தையும் ஒரே விதமாக உள்ளன. “எல்லா வேத வாக்கியங்களும் தேவ ஆவியினால் உட்சுவாசிக்கப்பட்டது என்று பவுல் சொல்லுகிறார்.

எல்லா வேத வாக்கியங்களுக்கான அதிகாரம் பரிசுத்த ஆவியானவரின் அதிகாரமே. அவரே இறுதியாக அவைகளின் ஆக்கியோன். அவரே பலவிதமான கருவிகளை (மனிதர்களை) உபயோகித்தார். தேவனாகிய அவரே ஒவ்வொருவரையும் இயங்கச் செய்தார். வேத வாக்கியங்களிலிருந்து நாம் எதையும் பெற்றுக்கொள்ளும்போது தேவனின் அதிகாரத்திலிருந்தே பெற்றுக்கொள்கிறோம்."

பவுலும் *எல்லா* வேதவாக்கியங்களும், (சில மட்டுமல்ல) தேவ ஆவியினால் அருளப்பட்டது என்று கூறுகிறார். சில பகுதிகள் முக்கியம் என்றும், சில முக்கியமில்லாதவை என்றும் பிரித்தாள முடியாது. பரிசுத்த ஆவியானவரே *எல்லா* வேத வாக்கியங்களும் தேவ ஆவியால் அருளப்பட்டது என்றும் *எல்லா* வேத வாக்கியங்களும் பிரயோஜனமானது என்றும் எடுத்துரைத்துவிட்டார். வேதத்திலே காணப்படும் எந்தப் புத்தகமும் அல்லது எந்த அதிகாரமும் அல்லது எந்த வார்த்தையும் கூட நாம் விட்டுவிடவோ அல்லது முக்கியமற்றதாகக் கருதவோ கூடாது. நமக்கு நன்றாய்த் தெரிந்த சில வேதப் பகுதிகளில் மட்டும் கவனம் செலுத்தி, அவைகளே போதும் என்று எண்ணக் கூடாது. தேவனுடைய வார்த்தையைப் படித்து, தியானித்து, நடைமுறைப்படுத்தும்போது பெலன்மேல் பெலன் கொள்ளுவோம். இயேசு, தேவனின் வார்த்தையைக் கேட்டு, அதன்படிச் செய்ய வேண்டும் என்றார்; வெறும் கேட்பது மட்டுமன்றி, கேட்டபடி நடப்பதாகும்.

வேதாகமத்தை, எழுதினவர்களில் அநேகர் பலவீனமானவர்களும், குறைவுள்ளகளென்றும் சிலர் கூறலாம். வேதாகமம் அவர்களின் அநேக பாவங்களையும் குறித்து வைக்கிறது எனச் சிலர் சொல்லலாம். அது சரியே. அது வேதத்தின் உண்மையைக் காட்டும் ஓர் அறிகுறி - அதை எழுதினவர்களின் பாவங்களையும் அது பதிவு செய்கிறது. இன்று அநேகர் தங்கள் பாவங்களைக் கூறாமல், தங்களைக் குறையற்றவர்களாகக் காண்பிக்க முயற்சி செய்வார்கள். வேத எழுத்தாளர்கள் அப்படியல்ல. பெரும்பாலான சங்கீதங்களை எழுதின தாவீது தனது துணிகரமான பாவங்களை மற்றவர்களும் வாசிக்க வேண்டும் என்று எழுதியுள்ளார்.

அப்படியானால், குறைவுள்ள மனிதர்களால் எழுதப்பட்ட வேதாகமம் எப்படி குறைவற்றதாய் இருக்க முடியும்? இக்கேள்விக்கு, தெளிவான, அழகான ஒரே பதில் வசனத்தில் உண்டு. "கர்த்தருடைய சொற்கள் மண் குகையில் ஏழுதரம் உருக்கி, புடமிடப்பட்ட வெள்ளிக்கொப்பான சுத்த சொற்களாயிருக்கிறது" (சங்கீதம் 12:6).

இது மக்கள் உலோகத்தைச் சுத்திகரிக்கும் முறையைப் படமாகக் காட்டுகிறது. அவர்கள் களி மண்ணால் ஒரு அடுப்பு கட்டி, தீ வளர்த்து, உலோகத்தை அங்கு வைத்து அதைப் புடமிட்டார்கள். எனவே இந்த ஒற்றுமையை நாம் உணரலாம். *களிமண் அடுப்பு*, மனிதனாகிய கருவி-

களிமண்தான், *நெருப்பு,* தூய ஆவியானவர். அவர் செய்தியாகிய *வெள்ளி*யைப் புடமிடுகிறார். இது குறைவான ஆண்களும், பெண்களும், ஆவியால் ஏவப்பட்ட அதிகாரமுடைய தேவனின் வார்த்தையை எழுதுவதற்கு வாய்க்காலாக செயல்படலாம் என்பதைக் கூறுகிறது. மனிதனாகிய பாத்திரம்-களிமண். நெருப்பு-தூய ஆவியானவர். ஏழுதரம் சுத்திகரிக்கப்பட்ட சுத்த வெள்ளி தேவனுடைய செய்தியே.

வேத வாக்கியங்களெல்லாம் தேவனால் ஏவப்பட்டு எழுதப்பட்டது என்றும் அவை நன்மைக்கேதுவானது என்றும் பரிசுத்த ஆவியானவரே அறிவித்திருக்கிறார்.

களிமண் பாத்திரத்தின் மூலமாக, பெலவீனரும், குறைவுள்ளோரும் பாவம் புரிந்த ஆண்கள், பெண்கள் மூலமாக - பரிசுத்த ஆவியானவரின் அக்கினியால் ஏழுதரம் புடமிடப்பட்டதாக வேதம் தெளிவுபடுத்துகிறது. அது முழுவதுமாக நம்பத்தக்கது.

இயேசுவும் வார்த்தையும்

வேதாகமத்தைப் பற்றி இயேசு கொண்டிருந்த நிலையைப் பற்றி நாம் சிந்திக்க வேண்டும். ஏனெனில் நாம் அவரது சீஷர்கள். அவர் நமது முன் மாதிரியானவர். எழுதப்பட்ட வார்த்தைக்கு அவர் எப்படித் தொடர்பு கொண்டார்? நாம் பழைய ஏற்பாடு என்று அழைக்கும் அவரது காலத்திய வேத வாக்கியங்களைப் பற்றி எப்படிப் போதித்தார் என்பதில் தொடங்குவோம்.

நடந்த உரையாடலில் யூதத் தலைவர்களோடு ஒருநாள் இயேசு இவ்வாறு பேசினார். “தேவ வசனத்தைப் பெற்றுக்கொண்டவர்களை தேவர்கள் என்று அவர் சொல்லியிருக்க (வேதவாக்கியமும் தவறாததாயிருக்க). . .” (யோவான் 10:35). இங்கே இயேசு வேதாகமத்திற்கு இரண்டு தலைப்புகள் தருகிறார். அவரது அடியார்கள் அதை அப்போதிருந்து பின்பற்றுகிறார்கள். அது தேவனுடைய வார்த்தையாகிய வசனமே. தேவனுடைய வசனம் என்பது தேவனிடமிருந்து புறப்படுகிறது. அது பரலோகத்திலிருந்து, தேவனிடமிருந்து வந்தது. வேத வாக்கியங்கள் என்று அவர் உபயோகித்த பதம் எழுத்து மூலமாகப் பதிவு செய்யப்பட்டதைக் குறிக்கும்.

தேவன் சொன்ன அநேக காரியங்கள் பதிவு செய்யப்படவில்லை. ஆனால் வேதாகமத்தில் பதிவு செய்யப்பட்டவை நமது சிறப்பான நன்மைக்காக எழுதப்பட்டன.

தேவன் சொன்ன அநேகக் காரியங்கள் பதிவு செய்யப்படவில்லை. ஆனால் வேதாகமத்தில் பதிவு செய்யப்பட்டவை நமது சிறப்பான நன்மைக்காக எழுதப்பட்டன. நமது இரட்சிப்புக்குத் தேவையான ஒவ்வொன்றும் அவைகளில் அடங்கியிருக்கிறது.

இயேசுவின் நோக்கு அந்த வசனத்தின் அடுத்த வார்த்தைகளில் தொகுத்து அளிக்கப்பட்டுள்ளது. “வேத வாக்கியமும் தவறாததாயிருக்கிறது.” வேத வாக்கியங்களின் அதிகாரத்தை அந்த சாதாரண சொற்றொடரைவிட முழுமையாக விளம்ப இயலாது. மத்தேயு எழுதின புத்தகத்திலிருந்து பின்வரும் வசனங்களில் பழைய ஏற்பாட்டைப் பற்றி இயேசு பேசுகிறதின் மூலம் மேலும் அறியலாம்.

> நியாயப்பிரமாணத்தையானாலும் தீர்க்கதரிசனங்களையானாலும் அழிக்கிறதற்கு வந்தேன் என்று எண்ணிக்கொள்ளாதேயுங்கள்; அழிக்கிறதற்கு அல்ல, நிறைவேற்றுகிறதற்கே வந்தேன். வானமும் பூமியும் ஒழிந்து போனாலும், நியாயப்பிரமானத்திலுள்ளதெல்லாம் நிறைவேறுமளவும், அதில் ஒரு சிறு எழுத்தாகிலும், ஒரு எழுத்தின் உறுப்பாகிலும் ஒழிந்து போகாது என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.
>
> மத்தேயு 5:17-18

வார்த்தையின் ஓர் உறுப்பு என்பது எபிரெயத்தில் யோத் (yod) என்ற எழுத்தின் சிறு பகுதியாகும். டிட்டில் (Keraia) என்பது எழுத்தின் ஒரு சிறு சுழி. இது ஒரு எழுத்திலிருந்து மற்ற ஒரு எழுத்தைப் பிரித்துக்காட்டுவதாகும். இவை இரண்டுமே எபிரெயத்தில் எழுதப்படும் மிகச் சிறிய எழுத்துக்கள். வேத வாக்கியங்களில் உபயோகிக்கப்படும் சிறு எழுத்தாகிலும் ஒழிந்து போகாது என்று இயேசு கூறினார். தேவனின் உரைக்கப்பட்ட வார்த்தையைக் குறித்து அவ்வமயம் அவர் பேசவில்லை. ஏனெனில் ஜாட் மற்றும் டிட்டில் என்ற வார்த்தைகள் எழுத்து வடிவத்தில் உள்ள வார்த்தைகளையே குறிப்பிடுகிறது. இதன் மூலமாக, தேவனின் எழுதப்பட்ட வார்த்தையின் முழு அதிகாரத்தையும் இயேசு ஒப்புக்கொள்ளுகிறார்.

பின்னர், அவரது ஊழியம் நிறைவேறும் காலத்தில் சதுசேயரோடு பேசுகிறார். சதுசேயர்கள் அந்நாளின் சுயாதீனர் ஆவர். எல்லா வேத வாக்கியங்களின் அதிகாரத்தையும் அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. உண்மையில் வேதத்தில் முதல் ஐந்து புத்தகங்களான மோசேயின் ஆகமங்களை மட்டும்தான் ஏற்றுக் கொண்டனர். மரித்தோரின் உயிர்த்தெழுதல் உண்டு என்ற கோட்பாட்டை எதிர்த்தனர். கவனத்தோடு அமைக்கப்பட்ட ஓர் கேள்வியோடு இயேசுவிடம் வந்தார்கள். இயேசு அவர்களுக்கு இவ்வாறு பதில் அளித்தார்.

> "மேலும், மரித்தோர் உயிர்த்தெழுதலைப் பற்றி: நான் ஆபிரகாமின் தேவனும், ஈசாக்கின் தேவனும், யாக்கோபின் தேவனுமாயிருக்கிறேன் என்று தேவனால் உங்களுக்கு உரைக்கப்பட்டிருக்கிறதை நீங்கள் வாசிக்கவில்லையா?தேவன் மரித்தோருக்கு தேவனாயிராமல், ஜீவனுள்ளோருக்குத் தேவனாய் இருக்கிறார் என்றார்."
>
> மத்தேயு 22: 31-32

அந்த வேத வாக்கியத்தை இயேசு எப்படி நடைமுறைப்படுத்தினார் என்பதைப் பாருங்கள். இந்த வார்த்தைகள் மோசேயால் பதினான்கு நூற்றாண்டுகளுக்கு முன்பாக எழுதப்பட்டது. அவைகள் தேவனால் மோசேக்கு பேசப்பட்ட அதே வார்த்தைகள் தான். ஆனால் இயேசு அவ்வார்த்தைகள் பதினான்கு நூற்றாண்டுகளுக்கு முன்னர் மோசேக்கு மட்டும் தான் பொருந்தும் என்று குறிப்பிடவில்லை. தேவனால் உங்களுக்கு உரைக்கப்பட்டிருக்கிறதை நீங்கள் வாசிக்கவில்லையா? என்று சொன்னார். வேத வாக்கியம் ஒருபோதும் காலம் கடந்தது அல்ல. அது ஒருபோதும் மனித புத்திசாலித்தனத்தின் பதிவேடல்ல. அது தேவனால் ஏவப்பட்டது. மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் எழுதப்பட்டதாய் இருந்தாலும், உங்களுக்கும், எனக்கும் அது இன்றும் தேவன் நம்மோடு பேசும் வார்த்தையே. அதுவே இயேசு அறிந்த வேதத்தின் அதிகாரம்.

பரிசுத்த ஆவியின் அதிகாரம்

பழைய ஏற்பாட்டைப் பற்றிய இயேசுவின் சொந்த வார்த்தைகளைப் பார்த்தோம். ஆனால் புதிய ஏற்பாடு பற்றிய கருத்து என்ன? புதிய ஏற்பாட்டின் அதிகாரம், பழைய ஏற்பாட்டின் அதிகாரத்தைப் போன்றதே. பின்வரும் வசனங்களில் இயேசு தமது சீஷர்களை, தாம் அவர்களை விட்டுப் பிரிந்து செல்வதைக் குறித்து ஆயத்தப்படுத்துகிறார்.

> "நான் உங்களுடனே தங்கியிருக்கையில் இவைகளை உங்களுக்குச் சொன்னேன். என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்."
>
> யோவான் 14:25-26

அப்போஸ்தலர்கள் எழுதியவைகளின் ஆதாரம் பரிசுத்த ஆவியானவரின் அதிகாரமே ஆகும். பரிசுத்த ஆவியானவர் இரண்டு காரியங்களைச் செய்வார் என்று இயேசு சொன்னார். "நான் உங்களுக்குக்

கற்றுக் கொடுக்காததை, அவர் உங்களுக்குப் போதிப்பார். நான் சொல்லியதில் நீங்கள் மறந்துபோனவற்றையும் அவர் உங்களுக்கு நினைப்பூட்டுவார்". எனவே சுவிஷேசத்தின் ஆவணம் மனித ஞாபகத்தின் மேல் சார்ந்திருக்கவில்லை; அது பரிசுத்த ஆவியின் சத்தியத்திலே சார்ந்திருக்கிறது.

மேலும் பரிசுத்த ஆவி 'அது' அல்ல 'அவர்' ஆவார். இயேசு இங்கே இலக்கணத்தில் சட்டத்தை மீறி தெளிவுபடுத்துகிறார். கிரேக்க இலக்கணத்தின்படி அவர் 'அது' என்ற வார்த்தையை உபயோகித்திருக்க வேண்டும். ஆனால் அப்படி உபயோகிக்காமல் 'அவர்' என்றார். இது முக்கியமாக அறிந்து கொள்ளப்பட வேண்டும். பரிசுத்த ஆவி 'அது' அல்ல. அவர், ஓர் நபர். ஆள்தத்துவமுடையவரிடமே நாம் தொடர்பு கொள்கிறோம்.

யோவான் 16ஆம் அதிகாரத்தில் பரிசுத்த ஆவியானவரின் மற்றொரு முக்கியக் குணாதிசயத்தை இயேசு வெளிப்படுத்துகிறார். "அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார். அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பதினால் என்னை மகிமைப்படுத்துவார்" (யோவான் 16:13-14).

பரிசுத்த ஆவியானவர் எப்போதும் இயேசுவை மகிமைப்படுத்துகிறார். இயேசுவை மகிமைப்படுத்தாமல், ஒரு தனி நபருக்கோ அல்லது ஏதாவது வேறு வழியில் செல்லும் ஆவிக்குரிய வெளிப்பாட்டை நீங்கள் காண்பீர்களானால், அது பரிசுத்த ஆவியானவர் இல்லை என்பதை நிச்சயமாக அறிந்து கொள்ளுங்கள். பரிசுத்த ஆவியானவரின் தலையாய ஊழியம் இயேசுவை வெளிப்படுத்தி, மகிமைப்படுத்துவதே ஆகும். ஆவிகளை சோதித்து அறிய வேண்டும் என்று வேதாகமம் கூறுகிறது. இயேசுவை மகிமைப்படுத்தி, பரிசுத்த ஆவியிடமிருந்து வரும் ஒன்றை நீங்கள் சோதித்து அறியலாம். நல்லதாகவும், ஆவிக்குரியதாகவும் ஒன்று இருந்து பலத்த சத்தத்தோடு பேசப்பட்டாலும், அது பரிசுத்த ஆவியானவரிடமிருந்து வந்தது இல்லை. ஏனெனில் அவர் இயேசுவைத் தவிர வேறொருவரையும் மகிமைப்படுத்தமாட்டார். அதைப் பற்றி நான் நன்கு உணர்வேன். நான் எப்போதும் என்னை சோதித்துப்பார்ப்பேன். நான் இயேசுவிற்கு மகிமையைக் கொடுக்கிறேனா? அல்லது டெரிக் பிரின்ஸ் முக்கியமானவர் என்று மக்களை நம்ப வைக்கிறேனா? என்று எப்போதும் கேட்டுக்கொள்வேன். டெரிக் பிரின்ஸ் என்பவர் தேவனின் கிருபையால் இரட்சிக்கப்பட்ட ஒரு பாவிதான்.

வசனத்தின் மேல் இன்று உறுதியாய்ச் சார்ந்திருத்தல்

தனது வாழ்வில் வேத வாக்கியங்களின் அதிகாரத்தை இயேசு எப்படி உபயோகித்தார் என்பதின் உதாரணங்களை வேதாகமம் நமக்குத் தருகிறது. அவைகள் நாம் பின்பற்ற வேண்டிய மாதிரிகள் ஆகும். வனாந்திரத்தில் சாத்தானால் சோதிக்கப்படும் இயேசுவின் கதை ஆற்றல் மிக்கதொன்று. இக்கதை தொடங்கும் முன், இயேசு யோர்தானில் ஞானஸ்நானம் பெற்றது மத்தேயு மூன்றாம் அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

> "இயேசு ஞானஸ்நானம் பெற்று, ஜலத்திலிருந்து கரையேறினவுடனே, இதோ, வானம் அவருக்குத் திறக்கப்பட்டது; தேவ ஆவி புறாவைப் போல இறங்கி தம் மேல் வருகிறதைக் கண்டார். அன்றியும், வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி: இவர் என்னுடைய நேச குமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன் என்று உரைத்தது."
>
> (மத்தேயு 3:16, 17)

இதற்குப் பின்னர், இயேசுவிற்கு இனி இலகுவான காலம் தான் என்று நீங்களும், நானும் நினைக்காமல் பிதா மற்றும் பரிசுத்த ஆவியாகிய இருவரும் தீர்க்கதரிசி யோவான் ஸ்நானகன், இவர்களின் ஒப்புதலையும் இயேசு பெற்றுவிட்டார். ஆனால், அது அப்படி இருக்கப் போவதில்லை.

இந்த அமைதி மற்றும் வல்லமையான நிகழ்வுகளுக்குப் பின்னர் இயேசு வனாந்திரத்தில் நாற்பது நாட்கள் உபவாசிப்பவராகவும், சாத்தானால் சோதிக்கப்படுபவராயும் தம்மைக் கண்டார். தேவனின் ஆசீர்வாதங்கள் எப்போதுமே வாழ்க்கையை உங்களுக்கு இலகுவாக்கும் என்று தயவு செய்து கற்பனை செய்யாதிருங்கள். உண்மையில் சில வழிகளில் அது வாழ்வைக் கடினமாக்கும். ஏனெனில், தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டவர்களைச் சாத்தான் அதிகமாய் எதிர்ப்பான்.

இயேசு ஆவியானவராலே வனாந்திரத்திற்குக் கொண்டு போகப்பட்டார் என்று லூக்கா கூறுகிறார். (லூக்கா 4:1ஐப் பார்க்கவும்) ஆனால் நாற்பது நாட்கள் முடிவில் அவர் ஆவியானவருடைய பலத்தினால் திரும்பிப்போனார் (14ஆம் வசனத்தைப் பார்க்கவும்) வித்தியாசத்தைக் கவனியுங்கள். ஆவியானவரைக் கொண்டு பேசப்படுவது ஒன்று, அவர் வல்லமையிலே செயல்படுவது மற்றொன்று. சாத்தானோடு போராடி, வெற்றி பெறும்வரை, அவர் இரண்டாவதை செய்யவில்லை. ஒரே அளவில் நாம் ஒவ்வொருவரும் அதே வழியில் தான் நடக்க வேண்டியதிருக்கும். நாம் சோதனையையும், எதிர்ப்பையும் மேற்கொண்டு பரிசுத்தஆவியின் வல்லமையில் கடந்து செல்ல வேண்டும்.

இயேசுவும் சாத்தான் வந்த போது, முதலில் அவர் சந்தேகப்படும்படி சோதித்தான். அதுதான் சாத்தானின் ஆரம்ப அணுகுமுறையாகும்.

சாத்தான் இயேசுவிடம் வந்தபோது, அவர் சந்தேகப்படும்படி, அவரைச் சோதித்தான். சாத்தானின் முதல் அணுகுமுறை பெரும்பாலும் அப்படியேதான். அவன் உடனடியாக தேவனின் வார்த்தையை மறுதலிக்கமாட்டான்; அதைத் தர்க்கிக்கவும், நீங்கள் சந்தேகிக்கவும் தூண்டுவான். "அப்பொழுது சோதனைக்காரன் அவரிடத்தில் வந்து; நீ தேவனுடைய குமாரனேயானால் இந்தக் கல்லுகள் அப்பங்களாகும்படி சொல்லும் என்றான்" (மத்தேயு 4:3).

பரலோகத்திலிருந்து தேவன் இப்போதுதான் பேசி இவர் என்னுடைய நேசகுமாரன் என்று சொன்னார். தான் தேவனிடமிருந்து கேட்டதைச் சந்தேகிக்கும்படி இயேசுவிற்கே சாத்தான் சவால் விடுகிறான். நீர் தேவனுடைய குமாரனேயானால் இந்தக் கல் அப்பமாகும்படி சொல்லும்.

இயேசுவின் பதில்: அவர் பிரதியுத்தரமாக: "மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே என்றார் (மத்தேயு 4:4)". எழுதப்பட்ட தேவனுடைய வார்த்தையின் பூரணமான, உறுதியான அதிகாரத்தை அவர் நம்பியிருந்தார். சோதிக்கப்படும் ஒவ்வொரு நேரமும் 'எழுதியிருக்கிறதே' என்று பதில் உரைத்தார். இயேசு அப்படிச் சொல்லும்போதெல்லாம், சாத்தான் பேச்சின் பொருளை மாற்றினான். வேத வாக்கியங்களுக்குத் தன்னிடம் பதில் இல்லை என்பது அவனுக்குத் தெரியும்.

இது இரண்டு முக்கிய அறிவுரைகளை நமக்குத் தருகிறது. ஒன்று, வேதவாக்கியங்களின் முழு அதிகாரத்தின் மேலும் நாம் சார்ந்திருக்க வேண்டும். இரண்டாவதாக, சோதனையைச் சந்திப்பதற்கு அவற்றை நாம் உபயோகிக்க வேண்டும்.

இப்போர் முறைகளைப் பற்றி பின்னர் அதிகம் கற்போம். பரிசுத்த ஆவி ஏவிய வேத வாக்கியங்கள் என்ற இந்த அத்தியாயத்தை ஒரு குறிப்போடு நிறைவு செய்ய விரும்புகிறேன்: பிசாசோடு வாக்குவாதம் பண்ணுவதற்குப் போதிய அறிவு எனக்கு உள்ளது என்று ஒருபோதும் நினைக்காதிருங்கள். அவன் உங்களைவிட அதிகப் புத்திசாலி. இத்தொழிலில் அவன் அதிக, அதிக காலமாய் ஈடுபட்டுள்ளான். உங்கள் தர்க்கிப்பினால் அவனைப் புரிய வைக்க முயற்சி செய்யாதிருங்கள். அதற்கு பதிலாக வேத வாக்கியங்களோடு அவனைச் சந்தியுங்கள். வேத

வாக்கியங்கள் அதிகாரம் உள்ளவை. அவற்றை ஏற்றுக்கொள்ளுங்கள். அதன்படி வாழுங்கள். அவற்றால் பிசாசிற்குப் பதில் கொடுங்கள்.

ஆனால் அதை நீங்கள் பேச வேண்டும். எபேசியர் 6:17ல் பவுல் கூறுகிறார். "தேவ வசனமாகிய ஆவியின் பட்டயத்தையும் எடுத்துக் கொள்ளுங்கள்." "வார்த்தை" என்பதற்கு இரண்டு கிரேக்கப் பதங்கள் உள்ளன. ஒன்று 'லோகோஸ்' மற்றது 'ரேமா'. லோகோஸ் என்பது கர்த்தருடைய நித்திய ஆலோசனைகள். ரேமா என்பது பேசப்பட்ட தேவனுடைய வார்த்தை. இதுதான் எபேசியர் 6:17இல் உபயோகிக்கப்பட்டிருக்கிறது. ஆவியின் பட்டயமாக (ரேமா, பேசப்பட்ட) தேவ வசனத்தை எடுத்துக் கொள்ளுங்கள் என்று பவுல் கூறுகிறார்.

வேதாகமத்தை உங்கள் புத்தக அடுக்கிலோ அல்லது படுக்கை மேஜையிலோ வைத்திருந்தால், அது உங்களைப் பாதுகாக்காது. அதைக் கூறும்போதுதான், அது கிரியை செய்யும். நீங்கள் அதை உங்கள் வாய்க்குக் கொண்டு போய், நீங்களே சொல்ல வேண்டும். அப்போது அது கூர்மையான பட்டயமாக மாறிவிடுகிறது. பிசாசும் பின்வாங்கிப் போகிறான். அதற்கு அவனிடத்தில் பதில் கிடையாது.

13

ஆவியின் வரங்களைப் பெற்றுக்கொள்ளுதல்

நாம் அத்தியாயம் 10இல் ஆபிரகாமின் வேலைக்காரனையும் இளம்பெண் ரெபேக்காளையும் பற்றிய வரலாற்றைக் கண்டோம். இது வரலாற்று சம்பந்தமாக பரிசுத்த ஆவிக்கும் திருச்சபைக்கும் இடையே உள்ள உறவை ஒப்பிட்டுக் காட்டுகிறது. நாம் மேலும் பார்த்தால் இந்த ஒப்புமையானது ஒரு குறிப்பிடத்தக்க பரிசுத்த ஆவியின் விருப்பத்தை வெளிக்காட்டுகிறது.

அந்த வேலையாள், ஈசாக்கின் மணப்பெண்ணாக வரவேண்டிய அந்த இளம் பெண்ணைக் கண்டுபிடித்தபோது அவனுடைய முதல் செய்கை என்னவென்றால் வெளிப்படையாக அவளுக்கு முன்பாக பொற்காதணிகளைக் கொடுத்தான். இந்தப் பரிசைப் பெற்றதினால், ரெபேக்காள் தன்னை ஈசாக்கின் மணப்பெண்ணாக அர்ப்பணித்தாள். ஒரு வேளை அவள் இந்தப் பரிசைப் பெற மறுத்திருந்தால் அவள் ஈசாக்கை மறுத்து அவமரியாதை செய்தது போலாகும். அவள் ஒருபோதும் அவனுடைய மணப்பெண்ணாக ஆகியிருக்கமாட்டாள்.

இன்றைக்கு இதேவிதமாகத் தேவன் தனது பரிசுத்த ஆவியை அனுப்பித் தனது குமாரனாகிய இயேசுகிறிஸ்துவிற்கு திருச்சபையானது மணவாட்டியாகும்படி அநேக வசதிகளை உண்டாக்கியுள்ளார். ஒன்பது அழகான ஆவியின் வரங்களும் இதில் அடங்கும். இந்த வரங்களை ஏற்றுக்கொள்வதின் மூலம் திருச்சபையானது கிறிஸ்துவின் மணவாட்டியாவதற்குத் தன்னை அர்ப்பணிப்பதற்கு உரிய அடையாளம் இதுவே ஆகும்.

இயற்கைக்கு அப்பாற்பட்ட ஒன்பது வரங்கள்

இந்த ஒன்பது வரங்களும் 1 கொரிந்தியர் 12:8-10 வரையிலான வசனங்களில் வரிசைப்படுத்தப்பட்டுள்ளது. இதன் சரியான அர்த்தத்தை உங்களுக்கு விளக்கும்படி நான் கீழே சரியான, துல்லியமான மொழிப் பெயர்ப்பில் கொடுத்துள்ளேன்.

1. ஞானத்தைப் போதிக்கும் வசனம்

2. அறிவை உணர்த்தும் வரம்

3. விசுவாசம்

4. குணமாக்கும் வரம்

5. அற்புதங்களைச் செய்யும் சக்தியும்

6. தீர்க்கதரிசனம் உரைத்தலும்

7. ஆவிகளைப் பகுத்தறிதலும்

8. பற்பல பாஷைகளைப் பேசுதலும்

9. பாஷைகளை வியாக்கியானம் பண்ணுதலும் ஆகியனவாகும்.

இந்த அனைத்து வரங்களும் வெளிப்பாடுகள் ஆகும். பரிசுத்த ஆவியானவர் கண்ணுக்குப் புலப்படாதவர். ஆனால் இந்த வரங்களின் மூலமாக அவர் தன்னை வெளிப்படுத்துகின்றார். நம்முடைய புலன்களின் வழியாக உணர்ந்து நாம் அவரைப் பார்க்கவும், கேட்கவும், உணர்ந்து கொள்ளவும் முடியும். அவைகள் எல்லாமே நம்முடைய உபயோகத்திற்கானவைகளாகும். இவைகளின் மூலமாக கிறிஸ்தவர்கள் ஒருவருக்கொருவர் ஊழியம் செய்ய முடியும். இந்த வரங்கள் யாவையும் செயல்முறையான நோக்கமாகச் செயல்புரிகிறது. அவைகள் ஆயுதங்களாகும். விளையாட்டு பொம்மைகள் அல்ல.

இந்த வரங்கள் அனைத்தும் இயற்கைக்கு அப்பாற்பட்ட சக்தி வாய்ந்தவைகளாகும். அவைகள் இயற்கையின் ஆற்றலினாலோ அல்லது தனிப்பட்ட கல்வியினாலோ உருவாக்கப்பட்ட பொருள் அல்ல. ஒரு படிக்காத மனிதன் கூட ஞானத்தைப் போதிக்கும் வசனமும் அல்லது அறிவை உணர்த்தும் வசனமும் பெற்றிருக்கலாம். இதைப் போல விசுவாச வரமானது, நாம் அனைவரும் இரட்சிப்படைவதற்குத் தேவையான விசுவாசத்தையும் கடந்து அப்பால் செல்லக் கூடியதாகும். இது விசுவாசம் என்னும் ஆவியின் கனியிலிருந்து கூட வேறுபட்டதாகும். இயற்கையின் வளர்ச்சியினால் இது வருகிறது. இது இயற்கைக்கு அப்பாற்பட்ட விசுவாசமாகும். இது நம்முடைய இயற்கையான சக்திக்கும் மேலாகச் சென்று இயற்கைக்கு அப்பாற்பட்ட விளைவுகளை உண்டாக்குகிறது.

அடிக்கடி ஒரு கருத்தாகச் சொல்லப்படுவது என்னவென்றால் இந்த வரங்கள், அப்போஸ்தலர்களின் கால இறுதியில் திரும்ப எடுத்துக்கொள்ளப்பட்டது. இன்று அவைகள் கிடைப்பதில்லை என்பதாகும். பரிசுத்த பவுல் எப்படியும் கொரிந்து சபையிலுள்ள கிறிஸ்தவர்களுக்காகத் தேவனுக்கு நன்றி செலுத்துகிறார். அப்படியே "நீங்கள் யாதொரு வரத்திலும் குறைவில்லாதவர்களாய், நம்முடைய

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வெளிப்படுவதற்குக் காத்திருக்கிறீர்கள்" (1கொரிந்தியர் 1:7). ஆகவே கிறிஸ்தவர்கள் ஆவியின் வரங்களை இயேசு கிறிஸ்து திரும்ப வரும்வரைக்கும் தொடர்ந்து கையாளுதல் வேண்டும்.

ஞானத்தைப் போதிக்கும் வரமானது ஒரு சூழ்நிலையைப் பற்றிய உண்மைகளைக் கொடுக்கிறது. பிறகு அறிவை உணர்த்தும் வசனம் எப்படி தேவன் அந்த சூழ்நிலையைச் சமாளிக்க உதவுகிறார் என்பதைக் காட்டுகிறது.

பரிசுத்த பவுல் வரிசைப்படுத்தும் முதல் இரண்டு வரங்களான ஞானத்தைப் போதிக்கும் வசனம், அறிவை உணர்த்தும் வசனம் ஆகியன ஒன்றுக்கொன்று செயல்படுத்தும் வழிகளில் தொடர்புடையதாக இருக்கிறது. ஞானத்தைப் போதிக்கும் வரமானது ஒரு சூழ்நிலையைப் பற்றிய உண்மைகளைக் கொடுக்கிறது. பிறகு அறிவை உணர்த்தும் வசனம் எப்படித் தேவன் அந்தச் சூழ்நிலையைச் சமாளிக்க உதவுகிறார் என்பதைக் காட்டுகிறது.

சில வரங்கள் இரு பாகங்களாக பன்மையில் இருக்கின்றன. உதாரணமாக குணமாக்கும் வரங்களும், அற்புதங்களைச் செய்யும் சக்தியும், ஆவிகளைப் பகுத்தறிதலும், பற்பல பாஷைகளைப் பேசுதலுமாகும். ஒவ்வொரு குணமாக்குதல், ஒவ்வொரு அற்புதம், ஒவ்வொரு பகுத்தறிதல் மற்றும் ஒரு குறிப்பிட்ட பாஷையில் (மொழியில்) பேசுதல் ஆகியவைகள் ஒவ்வொன்றும் ஒரு வரம்தான் என்று சுட்டிக்காட்டப்படுகிறது. ஒரு குறிப்பிட்ட வரம் ஒருவரில் தொடர்ச்சியாக வெளிப்படுமானால் அவர் அவ்வரத்தை உடையவர் என்று சொல்லலாம்.

சம்பாதிக்க முடியாத வரங்கள்

இவைகள் அனைத்தும் தேவனுடைய கிருபையின் வரங்களாகும் என்பது வலியுறுத்தப்பட வேண்டும். அவைகள் விசுவாசத்தினால் கிடைக்கப் பெறுகின்றன. அவைகளை நாம் சம்பாதித்துப் பெற்றுக்கொள்ள முடியாது. நாம் அவைகளைப் பயன்படுத்துவதில் "ஒருபோதும் திறமைமிக்கவர்கள்" அல்ல.

1941 ஆம் ஆண்டில் ஒரு நள்ளிரவில் பிரிட்டிஷ் படைகளின் போர் வீரர்கள் தங்கும் அறையில் நான் வல்லமையான எனது வாழ்க்கையை மாற்றக்கூடிய வகையில் இயேசு கிறிஸ்துவோடு ஒரு போராட்டத்தை நடத்தினேன். ஒரு வாரத்திற்குப் பின்பு அதே அறையில் ஒரு அறியாத அந்நிய பாஷையை முதன் முதலாகப் பேசினேன். பிறகு மிகவும்

எதிர்பாராத வகையில் கவிதை வடிவிலான ஆங்கிலத்தில் அதற்கான விளக்கத்தைக் கூறி "வியாக்கியானம்" செய்து பேசிக்கொண்டே இருந்தேன். இது என்னுடைய வாழ்க்கைக்கும் என்னுடைய ஊழியத்திற்கும் தேவையான ஒரு வரைபடமான திட்டத்தை வெளிப்படுத்துவதாக அமைந்திருந்தது, படிப்படியாக இந்நேரம் வரைக்கும் அது நிறைவாக அமைந்தது.

எனது நல்ல காலம், நான் அதிக பக்தியில்லாதவனாய் இருந்தபடியால், ஒரு ஆலயத்திற்குச் சென்றுதான் இரட்சிக்கப்பட வேண்டுமென்றோ அந்நிய பாஷை பேசிய பின்னர் ஆறு மாதங்கள் காத்திருந்துதான் வியாக்கியானம் செய்யும் வரத்தைப் பெற வேண்டும் என்றோ நான் அறியாதிருந்தேன்.

1957ம் ஆண்டிலிருந்து 1961ஆம் ஆண்டு வரை கென்யாவில் உள்ள ஆப்பிரிக்க ஆசிரியர்களுக்கான ஒரு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் நான் முதல்வராகப் பணியாற்றினேன். அந்தக் காலக் கட்டத்தில் எங்கள் கல்லூரியில் பரிசுத்த ஆவியின் வல்லமையான வரவை உணர்ந்தோம். என்னுடைய மாணவர்களோடு கூட்டம் நடத்துகின்ற வேளையில் இந்த எல்லா ஒன்பது வரங்களும் எங்கள் மத்தியில் பல சமயங்களில் செயல்பட்டன. வேறு சில நேரங்களில் என்னுடைய மாணவர்களில் இரண்டு பேர் மரணத்திலிருந்து உயிர் பெற்று எழுந்தனர். பின்பு அவர்கள் இருவரும் அவர்களது ஆவி சரீரத்தை விட்டுப் பிரிந்து சென்றபோது அவர்கள் பெற்ற அனுபவத்தைப் பற்றி சாட்சி பகர்ந்தார்கள்.

சில காலத்திற்குப் பின்பு அமெரிக்காவில், நொண்டியான மக்களிடத்தில் ஊழியம் செய்வதற்காக நான் ஒரு எதிர்பாராத வரத்தைப் பெற்றுக் கொண்டேன். அவர்களை ஒரு நாற்காலியில் உட்கார வைத்து அவர்களை என் கைகளால் அவர்கள் கால்களைத் தொடும்போது என்னுடைய கண்களுக்கு முன்பாகக் குட்டையான கால் வளர்ந்து, அவர்கள் சுகம் பெற்றார்கள். எப்படியும் சில மக்கள் இது அறிவுத் திறன்மிக்க, மதிப்பான ஒரு வேத போதகருக்குப் பொருத்தமான ஒரு ஊழியம் அல்ல என்று எடுத்துரைத்தார்கள். இதைப்பற்றி தேவனிடத்தில் கேட்பதற்கு நான் தீர்மானித்தேன். அவர் எனக்கு இந்த பதிலைக் கொடுத்ததை நான் உணர்ந்தேன். "*நான் உனக்கு ஒரு வரத்தைக் கொடுத்துள்ளேன். அதை வைத்துக் கொண்டு நீ இரண்டு செயல்கள் செய்யலாம். நீ அதை உபயோகித்து மேன்மேலும் அதிகமாகப் பெற்றுக்கொள்ளலாம் அல்லது நீ அதை உபயோகிக்கத் தவறினால் அதை இழந்து விடுவாய்*" என்பதாகும். அதே நேரத்தில் நான் தேவனால் எனக்குக் கொடுக்கப்பட்ட வரத்தைத் தொடர்ந்து உபயோகிக்கத் தீர்மானித்தேன். இதனால் நான் அதனை மென்மேலும் அதிகமாகப் பெற்றுக்கொண்டேன்.

ஒரு சமயத்தில், ஒரு குட்டையான காலானது இரண்டு அங்குலம் அளவு வளர்ந்ததை நான் பார்த்தேன். இவ்வாறாகத் தேவனுடைய இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையினால் மற்ற அதிசயங்களும் கூட கலந்து வெளிப்பட்டது. ஒரு இடத்தில் எந்த ஒரு ஜெபமும் ஏறெடுக்கப்படாமலே ஒரு மனிதனின் மூன்று முக்கிய சரீர பெலவீனங்கள் சுகமாக்கப்பட்டன. அது மாத்திரமல்லாமல் சிகரெட்டுக்கு அடிமையாயிருந்த அவர் அதிலிருந்து விடுவிக்கப்பட்டார்.

எனக்கு ஒன்று ஞாபகம் வருகிறது, ஒரு பெண்மணி தனது கையில் ஒரு காகிதப் பையை எடுத்துக்கொண்டு தனது ஒரு காலணியில் ஒன்றரை அங்குலம் உயர்த்தப்பட்ட நிலையில் வந்தாள். அவளது கால்களை நான் எனது கைகளில் பிடித்தபோது அவளது குட்டைக்கால் ஒன்றரை அங்குலம் வளர்ந்தது. பின்னர் அவள் தனது காகிதப் பையைத் திறந்து ஒரு ஜோடி புதிய காலணிகளைச் சாதாரண உயரமுள்ளதாக இருந்ததை அவள் வெளியே எடுத்தாள். அந்தக் காலணிகள் அவள் கால்களுக்குச் சரியாகப் பொருந்தின.

இவ்வாறு நான் சீக்கிரமாக நடக்கும் என்று தீர்மானித்தேன். என்னுடைய வரத்திற்கு வேதாகமத்தில் உள்ள பெயர் “அற்புதங்களைச் செய்யும் சக்தி” என்பதாகும். (இது வல்லமையானது.)

இதே சமயத்தில் தேவன் இதே வரத்தை வேறு விதமாகப் பயன்படுத்துவதில் வழிநடத்துவதை நான் உணர ஆரம்பித்தேன். அவர் என்னைப் பொது இடங்களில் பிசாசுகளைத் துரத்துவதற்காக உபயோகித்தார். அடிக்கடி இத்தகைய ஊழியத்தினோடு கூட சத்தம்மிக்க ஒழுங்கின்மை காணப்படுவதினால் திரும்பவும் அநேகர் இதை எதிர்த்தார்கள். சுவிசேஷங்களில் நான், இயேசு கிறிஸ்துவின் ஊழியங்களில் இதே போன்ற வெளிப்பாடுகள் அடிக்கடி கூடவே ஏற்பட்டதை கவனித்தேன். எனவே இந்த ஊழியத்தைத் தொடர்ந்து செய்ய நான் தீர்மானித்தேன். பின்வரும் காலங்களில் இதே வரம் தொடர்ந்து செயல்பட்டதால் ஆயிரக்கணக்கான மக்கள் பிசாசின் பிடியிலும் அதன் வல்லமையிலுமிருந்து அதிசயிக்கத்தக்க விதமாக விடுவிக்கப்பட்டார்கள்.

ஆவிக்குரிய வரங்கள் தடையில்லாமல் செயல்படுவதை நாம் விரும்பினால், திருச்சபையில் நாம் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்ற பாரம்பரிய எண்ணங்களிலிருந்து சிலவேளை நம்மை விடுவித்துக் கொள்ள வேண்டும்.

ஆவிக்குரிய வரங்களைப் பயன்படுத்துவதில் மற்றொரு திறவுகோலானது பரிசுத்த ஆவிக்கு உணர்ச்சிவசப்படுதலை உருவாக்க வேண்டும். அவர் அசைவாடுவதற்கு நாம் வழிவகுக்க வேண்டும்.

அவருடைய சித்தத்திற்கு இடம் கொடுக்க வேண்டும். மற்றொரு சந்தர்ப்பத்தில் நானும் எனது மனைவி ரூத்தும் ஒரு கிறிஸ்தவ தம்பதியர் வீட்டிற்கு விருந்திற்குச் சென்றிருந்தோம். அந்த பெண்மணி தனக்கு மருத்துவ ரீதியில் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு மரபணு சம்பந்தமான குறைபாடு உள்ளதாகவும் இதனால் அவள் குறிப்பிட்ட அமினோ அமிலங்களை உபயோகிக்க முடியவில்லை என்றும் பகிர்ந்து கொண்டாள். அவளுடைய மூளையானது படிப்படியாக செயலிழந்து கொண்டிருந்தது.

அந்தக் கணவன் எங்களைத் திரும்பவும் அழைத்தார். நாங்கள் அவர்கள் வீட்டிற்கு அந்த பெண்மணியோடுகூட திரும்பவும் நடந்து சென்றோம். பின்பு கார் நிறுத்தும் இடத்தில் ஒரு சிறிது நேரம் வழியனுப்புதற்காக நின்றோம். பரிசுத்த ஆவியினால் வழிநடத்தப்பட்ட ரூத் "நான் உங்களுக்காக ஜெபிக்கிறேன்" என்று சொல்லி ஜெபித்த பின்பு பிரிந்து சென்று விட்டோம்.

மூன்று வாரங்கள் சென்ற பின்பு அந்த கணவன் எங்களிடம் தனது மனைவி முழுமையாக சுகம் பெற்று விட்டதாகக் கூறினார். பின்பு அவளுடைய குறை கண்டுபிடிக்கப்பட்ட அதே மருத்துவமனையில் அவள் சுகம் பெற்றுவிட்டாள் என்பது உறுதியாக்கப்பட்டது.

இந்த சம்பவத்தில் தேவன் ஒரே இடத்தில் ஒரே நேரத்தில் இந்த சுகம் பெறுதலைக் கிடைக்கச் செய்தார். ஆவியானவரின் வழிநடத்துதலுக்கு ரூத் தன்னை அர்ப்பணித்ததினால் இந்த சுகம் வந்தது. இதனால் தேவனுடைய நாமம் மகிமைப்பட்டது.

ஆவியின் வரங்களுக்கான வரையறைகள்

நான் பின்னிட்டுத் திரும்பி நோக்கும்போது, ஆவியின் வரங்கள் சில வழிகளில் வெளிப்படும்போது ஒரு அறிமுகமான பொங்கி வரும் உற்சாகத்தை உணர்ந்தேன். அதே நேரத்தில் அங்கே ஆவியின் வரங்களிலிருந்து நாம் எதிர்பார்ப்பதில் ஒரு சில திட்டமான எல்லைகள் உண்டு என்பதை எப்படியும் புரிந்துகொள்ள வேண்டியது முக்கியமாகும்.

முதலாவதாக, தற்கால வாழ்க்கையில் ஆவியின் வரங்கள் குறைபட்டுள்ளன. தீர்க்கதரிசனம் சொல்லும் வரம் பல பாஷைகள் பேசும் வரம் மற்றும் அறிவை உணர்த்தும் வசனமாகிய வரம் பற்றி பவுல் கூறுகிறார்.

> அன்பு ஒருக்காலும் ஒழியாது. தீர்க்கதரிசனங்களானாலும் ஒழிந்து போம், அந்நிய பாஷைகளானாலும் ஓய்ந்துபோம், அறிவானாலும்

ஒழிந்துபோம். நம்முடைய அறிவு குறைவுள்ளது, நாம் தீர்க்கதரிசனஞ் சொல்லுதலும் குறைவுள்ளது. நிறைவானது வரும்போது குறைவானது ஒழிந்துபோம்.

1 கொரிந்தியர் 13:8-10

நாம் இன்னும் "ஒழுங்கீனமான" காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஆனால் நாம் இந்தக் காலத்திலிருந்து நித்திய வாழ்விற்குள் கடந்து செல்லும்போதும் பின்பு நம்முடைய சரீரங்கள் உயிர் பெற்று எழும்பும்போதும், பல பாஷைகள் மூலமாகவோ அல்லது தீர்க்கதரிசனம் மூலமாகவோ அல்லது அறிவை உணர்த்தும் வசனமாகவோ வரும் மணம் வீசக்கூடிய ஆசீர்வாதங்கள் நமக்கு அதன்பின்பு தேவைப்படமாட்டா. இதே வகையாக மற்ற வரங்களான குணமாக்குதல், அற்புதங்களைச் செய்தல் ஆகியவைகளுக்கும் இது பொருந்தும். அதாவது நம்முடைய உயிர்த்தெழுந்த சரீரங்களுக்கு அவைகள் ஒருபோதும் தேவைப்படுவதில்லை.

ஆவியின் வரங்களை உபயோகிப்பதில் ஒரு தனிப்பட்ட மனிதனின் நடத்தைக்கான அடையாளம் கொடுக்கப்படுவதில்லை.

மக்கள் ஆவியின் வரங்களில் அதிகமாக ஈடுபட்டிருந்தால் அது எதைக் குறிக்கிறதென்றால் அவர்கள் நித்திய வாழ்வைவிட அந்தக் காலக் கட்டத்தில் நடைபெறும் செயல்களில் அதிகம் அக்கறை காட்டுகின்றனர். இப்படிப்பட்டவர்கள் பரிசுத்த பவுலின் எச்சரிப்பைக் கவனிப்பது அவசியமாகும். "இம்மைக்காக மாத்திரம் நாம் கிறிஸ்துவின் மேல் நம்பிக்கையுள்ளவர்களாயிருந்தால், எல்லா மனுஷரைப் பார்க்கிலும் பரிதபிக்கப்படத்தக்கவர்களாயிருப்போம்" (1 கொரிந்தியர் 15:19).

மேலும் முக்கியமானதென்னவென்றால் ஆவியின் வரங்களை உபயோகிப்பதில் ஒரு தனிப்பட்ட மனிதனின் நடத்தைக்கான அடையாளம் கொடுக்கப்படுவதில்லை. ஒரு பொருத்தமான எடுத்துக்காட்டின் மூலம் நான் இதை விளக்குகிறேன். ஒருவேளை ஒரு மனிதன் சோம்பேறியாகவும், ஏமாற்றுக்காரனாகவும் தவறான எண்ணங்கொண்டவனாகவும் இருந்தும் அவன் தான் கஷ்டப்பட்டு உழைக்காமல் அவனுக்குப் பரிசாக 10,00,000 (One Million Dollars) டாலர்கள் கிடைத்தாலும் அவனுடைய நடத்தைக் கொஞ்சம் கூட மாறுபடுவதில்லை. அவன் இன்னும் சோம்பேறியாகவும், ஏமாற்றுக்காரனாகவும், தவறான எண்ணங்கொண்டவனாகவும்தான் இருப்பான். உண்மையாகச் சொல்லப்போனால் அவன் இன்னும்

அதிகமாக மோசமான நிலையில் இருப்பான். ஏனென்றால் அவனுடைய வங்கிக் கணக்கில் பத்துலட்சம் டாலர்கள் உள்ளன.

ஆவியின் வரம்பெற்ற ஒரு மனிதனுக்கும் இதே நிலை பொருந்தும். அவன் தீர்க்கதரிசனம் சொல்லும் வரம், சுகமளிக்கும் வரம் அல்லது அற்புதம் செய்யும் வரம் ஆகியவற்றைப் பெற்றிருக்கலாம். அவன் முன்பு பலவீனனாகவும் உறுதியற்றவனாகவும் இருப்பது போலவே வரங்களைப் பெற்ற பின்பும் பலவீனனாகவும் உறுதியற்றவனாகவும்தான் இருப்பான். ஆனால் அவனுடைய புதிய வரமானது மக்களுக்கு மத்தியில் அவனுக்குக் கீர்த்தியை அதிகமாக உண்டாக்கும். மேலும் அவனுக்கு பொறுப்பு அதிகரிக்கும். அவன் நீதியோடும், தேவனைப் பிரியப்படுத்தும் வகையிலும் அதை உபயோகித்தல் வேண்டும். வரம் பெற்றவர்களுக்கான ஒரு முக்கியப் பிரச்சனை என்னவென்றால் வரங்கள் புதுப்பிக்கப்படும்போது மக்கள் ஊழியக்காரர்களை அவர்களது நடத்தையை வைத்து மதிப்பிட விரும்பாமல் அவர்களது வரங்களைப் பற்றியே மதிப்பிட விரும்புகின்றனர். எனினும் நடைமுறையில் நாம் திரும்பத் திரும்பப் பார்ப்பது ஒருவர் பிறரை வியத்தகு வகையில் கவரக்கூடிய வரங்களைக் கையாண்டும், அவர் மிகவும் சீர்கேடான குணத்தை உடையவராக இருக்கலாம். அப்பேர்ப்பட்டோர் தங்களின் குணத்திலுள்ள குறைபாடுகளை மறைப்பதற்கு அவர்கள் வரங்களை சிலவேளைகளில் உபயோகிக்கலாம்.

ஆவியின் வரங்கள் என்பவை அவற்றின் பெயருக்கேற்ற அர்த்தங்கொள்ளும் உண்மையான வரங்களாகும். அவைகள் நிபந்தனைகளோடு வாங்கும் கடன்களல்ல. அல்லது காலவரையறையோடு திரும்ப செலுத்த வேண்டிய கடனுமல்ல.

ஸ்காண்டிநேவியாவிலுள்ள ஒரு தேசத்தில் ஒரு ஊழியக்காரர் இருந்தார். அவர் வல்லமையான வழியில் பரிசுத்த ஆவியின் “பின்மாரி” பற்றி பேசும்பொழுது அவருடைய சபையினர் உண்மையாகவே பரிசுத்த ஆவியானவர் மழைத்துளிகள் போல் தங்கள்மேல் பொழிவதை உணர்ந்தார்கள். எனினும் அவர் அந்த ஆராதனைகள் முடிந்த பின்பு நேராக விபசாரம் செய்வதற்காகச் சென்றார். இதைக் குறித்து அவர் மேல் குற்றஞ்சாட்டப்படும் போது மிகவும் வல்லமையாகப் பேசும் ஒரு மனிதன் இப்படிப்பட்ட பாவத்தைச் செய்ய முடியுமா? என்று மக்களால் நம்பமுடியவில்லை. ஏனென்றால், பின்னர் அவர் இந்தப் பாவத்தைச் செய்ததாகத் தாமாகவே ஒத்துக்கொண்டார்.

ஒரு இளம் போதகராக இருந்தபோதும் அற்புதம் செய்யும் வரங்களால் பலர் முன்பு ஊழியம் செய்யும் ஒரு மனிதனை நான் மிகவும் புகழ்ந்தேன். அவர் வலுக்கட்டாயமாக ஒரு கிறிஸ்தவ மனிதனால் ஒருபோதும் பாவம் செய்யாமல் வாழ முடியும் என்றும் போதித்தார்.

இருந்தாலும் பின்னர் அவரது மனைவியை விவாகரத்து செய்துவிட்டுத் தனது செயலாளரைத் திருமணம் செய்துகொண்டு மதுவிற்கு அடிமையாகி இறந்துபோய் விட்டார். எனக்கு நன்கு தெரிந்த மற்ற வெற்றிகரமான போதகர்களும் இதைப் போலவே தனிப்பட்ட முறையில் துக்ககரமான முடிவுகளை அனுபவித்தனர்.

இதைப் போன்ற சிலரை எதிர்பட்டு சந்திக்கும்போது மக்கள் அடிக்கடி பதிலுரைக்கிறார்கள். "ஆனால் நிச்சயமாக ஒரு மனிதன் இந்த வரங்களில் ஒன்றைத் தவறான வகையில் உபயோகித்தால் தேவன் அதைத் திரும்ப எடுத்துக் கொள்வார்!"

இருந்தாலும் இதற்குப் பதில் "இல்லை" என்பதே! ஆவியின் வரங்கள் என்பவை அவற்றின் பெயருக்கேற்ற அர்த்தம் கொள்ளும் உண்மையான வரங்களாகும். அவைகள் நிபந்தனைகளோடே வாங்கும் கடன்கள் அல்ல அல்லது கால வரையறையோடு திருப்பிச் செலுத்த வேண்டிய கடனுமல்ல. "தேவனுடைய கிருபைவரங்களும், அவர்களை அழைத்த அழைப்பும் மாறாதவைகளே" (ரோமர் 11:29).

ஒருமுறை இந்த வரங்களில் ஒன்றை நாம் பெற்றுக் கொண்டால் நாம் அதைச் சுதந்தரமாகப் பயன்படுத்தலாம். தவறான முறையிலும் பயன்படுத்தலாம். அல்லது அதை உபயோகிக்காமலே விட்டுவிடலாம். எப்படியும் முழுமையாக நாம் என்ன செய்தோம் அல்லது என்ன செய்யமாற்போனோம் என்பதற்கான கணக்கைத் தேவன் நம்மிடத்தில் கேட்பது அவசியமாகிறது.

நாம் எப்பொழுதும் இயேசு எச்சரிக்கைச் செய்ததை மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். ஆதலால், "*அவர்களுடைய கனி*களினாலே அவர்களை அறிவீர்கள்" (மத்தேயு 7:20). அவர்களுடைய வரங்களினாலல்ல. இந்த வார்த்தைகளுக்குப் பின்பு இயேசு வெளியரங்கமான எச்சரிப்பைக் கொடுக்கிறார். ஆவியின் வரங்களை உபயோகிப்பதினால் அது மோட்சத்திற்குச் செல்லும் அனுமதிச் சீட்டாக அமையும் என்பது அவசியமில்லை.

> பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக இராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை. அந்நாளிலே அநேகர் என்னை நோக்கி:

> கர்த்தாவே! கர்த்தாவே! உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள். அப்பொழுது, நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை; அக்கிரமச் செய்கைக்காரரே, என்னை விட்டு அகன்று போங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன்.
>
> மத்தேயு 7:21-22

இது ஒரு மனிதன் ஆவியின் வரங்களை உபயோகித்துக்கொண்டு அதே சமயத்தில் சட்டத்துக்கு விரோதமாகவும் நடக்க முடியும் என்பதைக் காட்டுகிறது. சட்ட ஒழுங்கின்மை என்றால் என்ன? தேவனுடைய சன்மார்க்கம் நல்வழிப்படுத்தும் தகவுகள் இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையை உபயோகிக்கும் வரம் பெற்றோருக்குப் பொருந்தாது என்று எண்ணுவது ஓர் அகந்தையான எண்ணமாகத்தான் இருக்கும்.

திட்டமாக இப்படிப்பட்ட ஊழியக்காரர்கள் ஒருசில வேளைகளில் கடினமான தன்னைச் சார்ந்த தீர்மானங்களை எடுப்பதில் அவசியம் ஏற்பட்டு நம்மைச் சந்தித்தால் நாம் எப்படியான பதிலைக் கொடுப்போம்?

முதலாவதாக நாம் பவுலடியார் தீமோத்தேயுவுக்குச் சொன்ன எச்சரிப்பை மனதில் கொள்ள வேண்டும். "ஒருவன் மேலும் சீக்கிரமாய்க் கைகளை வைக்காதே; மற்றவர்கள் செய்யும் பாவத்திற்கும் உடன்படாதே; உன்னைச் சுத்தவானாகக் காத்துக்கொள்" (1 தீமோத்தேயு 5:22).

இரண்டாவதாக இயேசு கொடுக்கும் எச்சரிப்பை மனதில் கொள்ள வேண்டும். அவர் சன்மார்க்க நிலையில் தவறிய ஊழியக்காரர்களைக் குறித்துக் கூறுகிறார். பரலோகத்திலுள்ள என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவர்களுக்கே பரலோகத்தில் இடம் உண்டு என்று சொல்லுகிறார். நாம் ஒவ்வொருவரும் நமக்குள்ளாக என்னுடைய வாழ்க்கையில் தேவனுடைய சித்தம் என்ன என்று கேட்பது அவசியமாகிறது! என்னுடைய பிதா என்னிடத்தில் என்ன எதிர்பார்க்கிறார்? என்றும் அறிய வேண்டும்.

என்னைப் பொறுத்தவரையில் தேவன் எனக்கு ஒரு தெளிவான எளிதான பதிலைக் கொடுத்தார்.

"நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாக வேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது" (1 தெசலோனிக்கேயர் 4:3). இதைக் குறித்துப் பரிசுத்த ஆவியானவரும் கூடுதலாக ஒரு எச்சரிப்பைக் கொடுக்கிறார். யாவரோடும் சமாதானமாயிருக்கவும், பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கவும் நாடுங்கள்;

பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே (எபிரெயர் 12:14) “பரிசுத்தத்தை நாடுவதே” என்னுடைய தீர்மானம் ஆகும்.

இப்பொழுது நாணயத்தின் மறுபக்கமாகிய ஆவியின் கனியைப் பற்றிப் பார்ப்போம்.

14

ஆவியின் கனியை விருத்தியாக்குதல்

வரங்களுக்கும் கனிக்கும் இடையே அதன் வகையில் அங்கே ஒரு வித்தியாசம் இருக்கிறது. ஒரு கிறிஸ்மஸ் மரத்தையும் ஒரு ஆப்பிள் மரத்தையும் ஒப்பிட்டுப் பார்த்து இதனை விளக்குவோம்.

இந்தக் கிறிஸ்மஸ் மரம் அடிக்கடி பரிசுகளை இலவசமாகக் கொடுக்கிறது என்று நாம் சொல்லுகிறோம். இதிலிருந்து பரிசுகளைப் பெறும் மனிதன் நேரத்தைச் செலவு செய்யவும் எந்த முயற்சி எடுக்கவும் அவசியமில்லை.

ஒரு ஆப்பிள் மரத்திலிருந்து பழங்களைப் பெறுவதற்கு நேரத்தை செலவு செய்வதும் முயற்சி எடுப்பதும் ஆகிய இரண்டும் அதனைப் பயிரிடுவதற்குத் தேவைப்படுகிறது. முதலாவதாக பூமியில் விதையை ஊன்ற வேண்டும். இதிலிருந்து ஒரு வேர் கிளம்பி மண்ணுக்குக் கீழே செல்லும். அதே நேரத்தில் பூமிக்கு மேலே ஒரு தளிர் மேல்நோக்கி வரும். சில வருடங்கள் சென்ற பின்பு இந்த துளிர் வளர்ந்து ஒரு மரமாகும். குறிப்பிட்ட காலத்தில் மரத்தின்மேல் மொட்டுகள் மலரும். பின்பு இவைகள் உதிர்ந்து பழங்களாகப் பெரிதாகும்.

இந்த மரம் வலுவுள்ளதாக வளரவேண்டுமானால் இளங்கனிகளோ அல்லது அதன் மொட்டுக்களோ பறிக்கப்படவேண்டும். முதல் வருடங்களில் இவ்வாறு செய்தால் இந்த மரத்தின் வேரின் பலம் மிகுந்து ஒரு பலமுள்ள மரமாக வளருவதற்கு உறுதுணையாக இருக்கும். ஆப்பிள் பழங்கள் உண்பதற்கு ஏற்றப் பக்குவ நிலையை அடைவதற்கு சில வருடங்கள் கழிய வேண்டும். மோசேயின் முறைமையின்படி குறைந்தது நான்கு ஆண்டுகள் தேவைப்படுகிறது. (லேவியராகமம் 19:23-25ஐப் பார்க்கவும்)

பல்வேறு நிலைகளில் ஒரு ஆப்பிள் மரம் வளர்ச்சியடைவதில் மென்மையாக இருக்கும். பலமான காற்று இளமையான மரத்தின் வேரினை அசைத்துவிடும் அல்லது பிற்கால நிலையில் பனியினால் மொட்டுக்களோ அல்லது பழங்களோ அழிக்கப்பட்டுவிடலாம்.

இவ்வாறான முறையில் விதையும் பழமும் ஒன்றையொன்று பிரிக்க முடியாத நிலையில் இணைக்கப்பட்டுள்ளது. ஒரு விதையிலிருந்து பழம் உண்டாகியது. ஆனால் பழத்திலிருந்து மேலும் மேலும் விதைகள் உண்டாகின்றன.

சிருஷ்டிப்பின் ஆரம்பத்தில் தேவன் ஒவ்வொரு கனி கொடுக்கும் மரமும் அதன் ஜாதியின்படி கனிகொடுக்கும்படி உண்டாக்கினார். "தங்களில் தங்கள் விதையையுடைய கனிகளைக் கொடுக்கும் விருட்சங்களையும் முளைப்பித்தது. தேவன் அது நல்லது என்று கண்டார்" (ஆதியாகமம் 1:12 பிற்பகுதி).

ஆவியின் கனியின் வகைகள்

ஆவியின் வரங்கள் புதிய ஏற்பாட்டில் பன்மையாகக் கூறப்பட்டுள்ளன. கடைசி அத்தியாயத்தில் நாம் பார்த்தபடி ஒன்பது வரங்கள் 1 கொரிந்தியர் 12:8-10இல் வரிசைப்படுத்தப்பட்டுள்ளது. ஆவியின் கனி புதிய ஏற்பாட்டில் ஒருமையில் சொல்லப்பட்டுள்ளது. ஒன்பது ஆவியின் கனி கலாத்தியர் 5:22-23இல் வரிசைப்படுத்தப்பட்டுள்ளது. அவையாவன அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் என்பவை ஆகும்.

அன்பு என்னும் கனி முதலாவதாகக் கூறப்பட்டுள்ளது. பின்வரும் மற்றவை, வித்தியாசமான பல வழிகளில் அறிந்து கொள்ளப்படுகிறது. ஆவியின் கனியாகிய அன்பு இதை வெளிப்படுத்துகிறது.

சந்தோஷம்	- அன்பில் மகிழ்வது
சமாதானம்	- அன்பில் இளைப்பாறுவது
நீடிய பொறுமை	- அன்பால் சகித்துக்கொள்ளுதல்
தயவு	- அன்பால் மற்றவர்களுக்கு சேவை செய்தல்
நற்குணம்	- அன்பால் பிறரின் நலனை விரும்புதல்
விசுவாசம்	- அன்பினால் கொடுத்த வாக்குறுதிகளைக் காப்பாற்றுதல்
சாந்தம்	- அன்பால் பிறரின் குற்றங்களைப் பொறுத்துக்கொண்டு வாழ்வது
இச்சையடக்கம்	- அன்பில் கட்டுப்பாடு செய்தல்

நாம் ஆவியின் கனியைப் பற்றி பார்க்கும்போது வேறு வகையிலும் விவரிக்கலாம். ஆவியானவர் தங்கியிருப்பவர்களின் உள்ளத்தில்

இயேசுவின் குணம் வெளிப்படும்பொழுது பல வழிகளில் ஆவியின் கனியைக் காணலாம். கனியின் எல்லாப்பாகங்களும் முழுமையாய் வளர்ச்சி பெறும்போது இயேசுவே அவரது அடியவர்களின் பரிசுத்த ஆவியினால் மனித அவரதாரம் எடுத்தது போல் அமையும். இது ஆப்பிள் மரத்தின் பழம் பல நிலைகளில் வளருவது போலாகும். இவ்வாறான நிலைகளில் நாமும் வளர நமது கவனத்தைச் செலுத்த வேண்டுமென்று நான் விரும்புகிறேன்.

வளர்ச்சியின் ஏழு நிலைகள்

பரிசுத்த பேதுரு இந்த நிலைகளை வரிசைப்படுத்துகிறார். ஆனால் ஆரம்பத்திலேயே நம்மை எச்சரிக்கிறார். இம்முறைப்படி சென்று வெற்றி பெறுவதற்கு நேர்மை அதிகம் தேவைப்படுகிறது. பரிசுத்த பவுல் இதனையே வேறு வழியில் வெளிப்படுத்துகிறார். அவர் கூறுகிறார் "*பிரயாசப்பட்டுப்* பயிரிடுகிறவன் பலனில் முந்திப் பங்கடைய வேண்டும்" (2 தீமோத்தேயு 2:6). கிறிஸ்தவ நன்னடத்தையை மேம்படுத்திக் கொள்ளுவதில் நேர்மையும் அல்லது கடின உழைப்பும் இல்லாமல் உண்மையான வெற்றியைப் பெற்றுக்கொள்ள முடியாது.

தேவனுடைய வார்த்தையாகிய விதை இருதயத்தில் விதைக்கப்படும் போது விசுவாசம் வளரத் தொடங்குகிறது. இதுவே இவ்வாறான முறைமையின் முக்கியமான தொடக்கக் கருத்தாகும். பின்பு விசுவாசத்திலிருந்து அங்கே வளர்ச்சியின் ஏழுநிலைகளில் வளர்ந்து கிறிஸ்தவ நன்னடத்தை முழுமையாக உருவாகும் வரைக்கும் செயல்பட வேண்டும். கிறிஸ்தவ நன்னடத்தைக்கான வெற்றிகரமான நிலைகளை பேதுரு வரிசைப்படுத்துகிறார். இது 2 பேதுரு 1:5-7இல் சொல்லப்பட்டுள்ளதைக் கீழே பெரிய எழுத்துக்களில் குறிப்பிட்டுள்ளேன்.

தேவனுடைய வார்த்தையாகிய விதை இருதயத்தில் விதைக்கப்படும்போது விசுவாசம் வளரத் தொடங்குகிறது.

ஆனாலும் கூட இதே காரணத்திற்காக நேர்மையுடன் இருந்து உங்களுடைய விசுவாசத்தோடு கூட ***விசுவாசத்தையும்*** *அறிவோடுகூட* ***அறிவையும்ம்****, இச்சையடக்கத்தோடுகூட* ***இச்சையடக்கத்தையும்****, நற்குணத்தோடு* ***நற்குணத்தையும்****, விடா முயற்சியோடுகூட* ***விடாமுயற்சியையும்****, தேவ பக்தியோடுகூட* ***தேவ பக்தியையும்****, சகோதர சிநேகத்தோடு கூட* ***சகோதர***

***சிநேகத்தையும்**, மற்றும் **அன்பையும்** விருத்தி செய்து கொள்ள வேண்டும்.*

நிலை ஒன்று பலவகையாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. அது *நற்குணம்* அல்லது *சன்மார்க்கத்தில் உயர்ந்த நிலையாகும்.* மதச் சார்பற்ற மூல கிரேக்க மொழியில் இந்த வார்த்தையானது வாழ்க்கையின் ஒவ்வொரு நிலையிலும் உன்னதமாக இருப்பதற்குப் பொருத்தமாக அமையும். இது ஒரு மண்பானையை வனைவது, ஒரு படகைத் தண்டுவலிப்பது அல்லது ஒரு புல்லாங்குழலை வாசிப்பது போன்றதாகும். இங்கே புதிய ஏற்பாட்டிலும்கூட, இதனுடைய அர்த்தமானது முழுமையாகச் சன்மார்க்க நன்னடத்தை என்ற அர்த்தத்தை மட்டும் கொண்டு வரையறைக்குட்படுத்தக்கூடாது என்று நான் நம்புகிறேன். அது வாழ்க்கையின் ஒவ்வொரு நிலையையும் உள்ளடக்கியதாக உள்ளது.

கிறிஸ்துவினிடத்தில் வரும் ஒரு ஆசிரியை ஒரு *உன்னத* ஆசிரியையாக மாற வேண்டும். ஒரு மருத்துவ தாதி ஒரு *உன்னதமான* மருத்துவத் தாதியாக மாற வேண்டும். ஒரு கிறிஸ்தவ வியாபாரி அல்லது வியாபாரம் செய்யும் பெண்மணி ஒரு உயர்ந்த நிலையில் தன்னுடைய துறையில் வியாபாரத்தை உண்மையாகச் செய்ய வேண்டும். அங்கு கவனக்குறைவிற்கோ அல்லது சோம்பேறித்தனத்திற்கோ கிறிஸ்தவ வாழ்க்கையில் எந்த வகையிலும் இடம் இல்லை. மதச்சார்பற்ற பணியில் தோல்வி அடைந்தவரை ஆவிக்குரிய பணியில் வெற்றி பெற தேவன் ஒருவரை அரிதாக அழைக்கிறார். கொஞ்சத்திலே உண்மையுள்ளவன் அநேகத்திலும் உண்மையுள்ளவனாயிருக்கிறான். கொஞ்சத்திலே அநீதியுள்ளவன் அநேகத்திலும் அநீதியுள்ளவனாயிருக்கிறான் (லூக்கா 16:10).

மதச்சார்பற்ற பணியில் தோல்வி அடைந்த ஒருவரை ஆவிக்குரிய பணியில் வெற்றி பெற தேவன் அரிதாக அழைக்கிறார்

ஆவிக்குரிய வளர்ச்சியின் இரண்டாவது நிலை *அறிவு*. நிச்சயமாக அங்கே பல வகையான அறிவு உண்டு. வேதத்தில் அறிவு உயர்ந்ததாகப் போற்றப்படுகிறது. அது ஆரம்பத்தில் எழுத்து வடிவில் அல்லது கொள்கை அளவில் இல்லாமல் நடைமுறையில் செயலில் காட்டுவதாக உள்ளது. அதில் அறிவே *செயல்புரிகிறது.* நான் நம்பிக்கைச் சார்ந்த தத்துவத்தின் பின்னணியிலிருந்து கிறிஸ்துவினிடத்தில் வந்தபோது வேதத்தைப் பற்றிய இதுதான் என்னை மிகவும் கவர்ந்தது. அது மிகவும் ஆழமாகச் செய்கையில் காட்டுவதாக உள்ளது.

இதற்கான ஆவிக்குரிய எடுத்துக்காட்டு இயேசு கிறிஸ்துவினுடைய போதனைகள் தான். நாம் இறையியல் என்று அழைக்கிற அந்த

வரிசையின் கீழ் இது வருவதில்லை. அவர் ஒருபோதும் குழப்பமான தெளிவற்றதாக உள்ள கொள்கைகளை ஏற்படுத்துவதில்லை. அவருடைய போதனைகள் நன்கு அறியப்பட்ட, நடைமுறையிலான செயல்களை அடிப்படையாகக் கொண்டுள்ளன. அவை விதை விதைத்தல், மீன் பிடித்தல், கால் நடைகளைப் பாதுகாத்தல் போன்றவையாகும்.

கிறிஸ்தவ வாழ்க்கையில் மிகவும் அவசியமான அறிவின் வடிவானது வேதத்தில் வெளிப்படுத்தப்பட்ட தேவனுடைய சித்தத்தை அறிந்துகொள்ளும் அறிவாகும். இது கூட நடைமுறையிலானது. இதற்கு முழு வேதத்தையும் தவறாமல், முறைப்படி வாசிப்பது அவசியம்.

> வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது.
>
> (2 தீமோத்தேயு 3:16-17)

தங்களை ஈடுபாடுள்ள கிறிஸ்தவர்கள் என்று உரிமை பாராட்டிக் கொள்ளுகிற எத்தனையோ மக்கள் வேதாகமம் முழுவதையும் ஒருமுறைகூட வாசிக்கவில்லை என்பதைக் கண்டறிந்து நான் மிகவும் அதிர்ச்சிக்குள்ளானேன். இத்தகைய மக்கள் தங்களின் ஆவிக்குரிய வளர்ச்சியைத் தாங்களாகவே ஒரு வரையறைக்குள்ளாக்கிக் கொள்கின்றனர்.

அறிவைப் பெற்றுக்கொண்ட பின் மூன்றாவது நிலையாக *இச்சையடக்கம்* என்னும் *சுயக்கட்டுப்பாடு* வருகிறது. 2 தீமோத்தேயு 1:7ஐப்பார்க்கவும். ஒரு கிறிஸ்தவன் ஒரு உண்மையான *சீடனாகத்* தன்னை நிரூபிப்பதே இந்த நிலையாகும். இப்படிப்பட்ட மனிதனே *கட்டுப்பாட்டின்* கீழ் இருப்பவனாவான். ஒரு சபையின் அங்கத்தினராக இருந்தால் மட்டும் போதாது. இவ்வகையான கட்டுப்பாடு எல்லா வகையிலும் நமது ஆளுமைத் தன்மையில் காணப்பட வேண்டும். இக்கட்டுப்பாடு நம்முடைய உணர்வுகள், நம்முடைய எண்ணங்கள், நம்முடைய ஆர்வங்கள், நம்முடைய சிந்தனைகள், நம்முடைய வாழ்வு ஆகியவற்றிலும் இருக்க வேண்டும். அது நம்முடைய செயல்களை மட்டும் ஆளுகை செய்யாமல் அதிக முக்கியமாக நம்முடைய உணர்வுகள், ஆவல்கள், விருப்பங்கள் ஆகியனவற்றைப் பொறுத்தலாகும்.

இவ்வகையான கட்டுப்பாட்டை நாம் வளர்த்துக்கொள்ளும் மட்டும் நாம் நான்காவது நிலையைச் சென்றடைய முடியாது. நான்காம் நிலை

விசுவாசத்தில் தரித்திருப்பது (விடா முயற்சி). அதாவது பலவிதமான சோதனைகளையும் போராட்டங்களையும் வெற்றி கொள்ளுவதற்குரிய திறமையைப் பெற்றுக்கொள்வது என்று அர்த்தம். இதனால் பெலவீனம் நம்முடைய தனித்தன்மையின் கட்டுப்பாடற்ற நிலையைத் தவிர்க்க முடியாதபடி வெளியாகும். இது ஒருசில கிறிஸ்தவர்களின் ஆவிக்குரிய வளர்ச்சியில் ஒரு குறிப்பிட்ட நிலைக்கு அப்பால் ஒருபோதும் முன்னேற முடியாமல் இருப்பதற்கான முக்கியக் காரணம் என்பதைச் சுட்டிக்காட்டுகிறது. *சுயக்கட்டுப்பாடு* மற்றும் *நேர்மை* ஆகியனவாகிய தேவையான இரண்டு தன்மைகளையும் அவர்கள் ஒருபோதும் நிறைவு செய்ய முடியாது. ஆப்பிள் மரத்திலிருந்து மற்றொரு உதாரணத்தை எடுத்துக் கொள்ளலாம். பலத்தக் காற்று வீசும்போது அவைகளின் மொட்டுக்கள் அடித்துக்கொண்டு செல்லப்படும். இளங்கனிகள் பனியின் கடுமையினால் அழிக்கப்பட்டுவிடும்.

மீதமுள்ள வளர்ச்சியின் மூன்று படிகளில் ஒரு உண்மையான கிறிஸ்தவனின் நன்னடத்தை வெளிப்படுகிறது. ஐந்தாவது நிலையானது *தெய்வ பக்தியாகும்*. இது தேவனை மையப்படுத்தி வாழும் ஒரு மனிதனுக்கு அடையாளமாகும். தேவனுடைய பிரசன்னத்தைக் காட்டும் ஒரு பாத்திரமாக மாறும் ஒரு மனிதனைக் காட்டுவதாகும். அப்பேர்ப்பட்ட நபர் செல்லுமிடமெல்லாம் ஒரு விதமான, வெளியே தெரியாத ஆனால் தனிச்சிறப்பான வீசும் நறுமணத்தால் நிறைந்திருக்கும். அங்கே எவ்விதமான பிரசங்கம் செய்தலோ மதச்சார்பான செயல்களோ இருக்காது. இருந்தாலும் மக்கள் நித்திய காரியங்களைக் குறித்து உணர்வுள்ளவர்களாக இருப்பார்கள்.

ஸ்மித் விக்கிள்ஸ்வொர்த் என்பவர் தேவனுடைய பிரசன்னம் தேவ பக்தியற்ற சூழ்நிலையிலும் உண்டாகும் என்பதை ஒரு நிகழ்வைத் தொடர்புபடுத்தி எடுத்துக்காட்டாக எடுத்து இயம்புகின்றார். சிறிது நேரம் தனி ஜெபத்திற்குப் பின்பு ஸ்மித் ஒரு இரயிலின் பெட்டியில் தன்னுடைய இடத்தில் உட்கார்ந்தார். அப்போது முழுவதும் அந்நியரான எதிரில் உள்ள இருக்கையில் அமர்ந்திருந்த ஒரு மனிதன், அவர் அவனோடு ஒரு வார்த்தைகூட பேசாமலிருந்தபோதும் உன்னுடைய வருகை என்னுடைய பாவத்தை எனக்கு உணர்த்துகிறது என்று சொல்லி கத்தினார். பின்பு ஸ்மித் இயேசு கிறிஸ்துவை அவனுக்கு அறிமுகப்படுத்த முடிந்தது.

வளர்ச்சியில் இரண்டு கடைசி நிலைகள் இரண்டு வித்தியாசமான அன்பைப் பற்றிக் கூறுகிறது. முதலாவது *சகோதர சிநேகம்* விளக்கப்படுகிறது. இயேசு கிறிஸ்துவின் விசுவாசிகள் தங்களுடைய சக விசுவாசிகளுடன் எந்த வகையில் தொடர்பு கொண்டார்கள் என்பதாகும். அதாவது கிறிஸ்துவுக்குள் சகோதரர்களாகவும் சகோதரிகளாகவும் இருப்பவர்களிடத்தில் ஆவிக்குரிய வளர்ச்சியின் இந்த ஏழு நிலைகளை

வரிசைப்படுத்தும்பொழுது நான் முதலாவதாக இந்த அன்பைத்தான் நினைத்தேன். சகோதர சிநேகம் அதாவது ஒருவரை ஒருவர் நேசிக்கும்படியாய் உள்ள இந்தக் கிறிஸ்தவ அன்பைக் குறித்து என்னை ஆச்சரியத்திற்குட்படுத்தியது. இதுவே இறுதி நிலைக்குப் பின்வரும் அடுத்த நிலை. ஆனால் பின்பு நான் வேதம் உண்மைத்தன்மை வாய்ந்தது என்பதை உணர்ந்துகொண்டேன். கிறிஸ்தவர்களாகிய நாம் ஒருவரோடு ஒருவர் உறவுகொள்ளும் விதத்தை உணர்ச்சி வசப்படும் மத சம்பந்தமான படத்தை அது வரைந்து காட்டவில்லை. உங்களுக்கு அதிர்ச்சி கொடுக்கக் கூடிய சிலவற்றை நான் கூறுகிறேன். *ஒருவரையொருவர் நேசிப்பது கிறிஸ்தவர்களுக்கு எளிதான செயல் அல்ல.*

இது இரண்டாயிரம் ஆண்டு சபை வரலாற்றால் சரியாக நிரூபிக்கப்பட்டுள்ளது. கசப்பான குழப்பம், போராட்டம் மற்றும் வெளிப்படையான விரோதம் ஆகியன இல்லாமல் ஒரு நூற்றாண்டு கூட கடந்து செல்லவில்லை. இவைகள் வெளிப்படையான வெறுப்பேயாகும். இவ்வாறு செய்பவர்கள் விரோதிகளாயிருக்கும் கிறிஸ்தவப் பிரிவுகளேயாகும். இவர்கள் தாங்கள் தான் “உண்மையான சபை” என்று அடிக்கடி உரிமை பாராட்டிக்கொள்ளுகிறார்கள்.

ஒரு மனிதன் தன் பாவங்களை அறிக்கையிட்டு இயேசு கிறிஸ்துவின் இரட்சிப்பைப் பெற்றுக் கொள்வதினால் அது அவனுடைய முழு நடத்தையிலும் உள்ளான மறுரூபமாகுதல் பெற்றுவிட்டான் என்று அர்த்தம் கொள்ள முடியாது. நிச்சயமாக ஒரு மிகவும் முக்கியமான மாற்றம் செயல்களில் காணப்பட வேண்டும். இப்படிப்பட்ட மாற்றம் பெறுவதற்கு அநேக வருடங்கள் ஆகும். இந்த மாற்றம் அந்த மனிதனின் நடத்தையின் ஒவ்வொரு பகுதியிலும் செயல்புரிய வேண்டும்.

தாவீதுக்குத் தன் கவணில் பொறுத்திக் கோலியாத்தைக் கொல்லுவதற்கு மென்மையான கற்கள் தேவைப்பட்ட போது அவன் பள்ளத்தாக்கை நோக்கிக் கீழே சென்றான். இது தாழ்மையின் நிலையைக் காட்டுகிறது. அங்கே ஆற்றில் அவன் தனக்குத் தேவையான மென்மையான கற்களைக் கண்டுபிடித்தான். (1 சாமுவேல் 17:40ஐப் பார்க்கவும்) அந்தக் கற்களை எது மிருதுவாக்கியது? இரண்டு காரியங்கள்: முதலாவதாக அவைகளின் மேல் தண்ணீர் பாய்ந்தது. இரண்டாவதாக அந்தக் கற்கள் ஒன்றோடொன்று உராய்ந்ததால் மென்மையானது.

இவ்வண்ணமாகவே கிறிஸ்தவ நன்னடத்தை உருவாகிறது என்று படம்பிடித்துக் காட்டப்படுகிறது. முதலாவதாக அங்கே தொடர்ந்து நாம் “அதைத் திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து பரிசுத்தமாக்குகிறதற்கும்” (எபேசியர் 5:26) என்ற வசனத்தின்படித் தண்ணீர் முழுக்கினால் சுத்திகரிக்கப்படுகிறோம். இரண்டாவதாக அந்தக் கற்கள் ஒன்றோடொன்று உராய்வது போல் தனிப்பட்ட உறவினால் உராய்ந்து

கடினமான ஓரங்கள் படிப்படியாக அவைகள் “மென்மை”யாகும் வரைக்கும் தேய்ந்து போகிறது.

நான் ஒன்றை எடுத்துக் காட்டுகிறேன். இயேசு கிறிஸ்துவிற்கு அவருடைய கவணுக்கு உயிருள்ள கற்கள் தேவைப்பட்டபோது அவரும்கூட தாழ்ந்த இடமான பள்ளத்தாக்கிற்குச் சென்றார். தேவனுடைய வார்த்தையின் செயலினாலும், மற்ற விசுவாசிகளோடு வழக்கமாகக் கொள்ளும் ஐக்கியத்தின் அழுத்தத்தினாலும் தெரிந்தெடுக்கப்பட்ட கற்கள் “மென்மை”யாக்கப்படுகிறது. இதுவே ஆவிக்குரிய முதிர்ச்சியின் அடையாளமாகும். இம்முதிர்ச்சியினால் நாம் சக கிறிஸ்தவர்களை உண்மையாக நேசிக்க வேண்டும். அவர்கள் எப்படிப்பட்டவர்களாக இருக்கிறார்கள் என்பதற்காக மட்டும் அல்ல அவர்கள் ஒவ்வொருவருக்காகவும் அவருடைய இரத்தத்தைச் சிந்தி வாழ்வை அர்ப்பணித்த இயேசுவுக்காக அவர்கள் எப்படி இருக்கிறார்கள் என்பதைக் குறித்தே அன்புகூருதல் வேண்டும்.

இதுவே ஆவிக்குரிய முதிர்ச்சியின் அடையாளமாகும். நம் சக கிறிஸ்தவர்களை உண்மையாக நேசிக்க வேண்டும். அவர்கள் எப்படிப் பட்டவர்களாக இருக்கிறார்கள் என்பதற்காக மட்டுமல்ல இயேசுவுக்காக அவர்கள் எப்படி இருக்கிறார்கள் என்பதற்காகவே ஆகும்.

வளர்ச்சியின் இறுதிநிலையானது *அகாப்பே அன்பாகும்* இது முழுமையாக முதிர்ச்சியடைந்த கிறிஸ்தவ நன்னடத்தைக்கான கனியைக் குறிக்கிறது. இது எப்படி நாம் நமது சக விசுவாசிகளோடு உறவு கொள்ளுகிறோம் என்பதல்ல. இது நன்றியுணர்வற்ற பரிசுத்தமில்லாதவர்கள் மீது தேவன் காட்டும் அன்பாகும். இந்த அன்புதான் பின்வரும் வசனத்திற்கு உரியதாகும்.

நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்; உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம்பண்ணுங்கள் (மத்தேயு 5:44).

இயேசு சிலுவையில் தொங்கும்போது அவரைச் சிலுவையில் அறைந்தவர்களுக்காகவும் அவர் வேண்டிக்கொண்ட இந்த அன்பை செயலில் காட்டினார். அப்பொழுது இயேசு பிதாவே இவர்களுக்கு மன்னியும் தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே என்றார் (லூக்கா 23:34). ஸ்தேவான் தன்னைக் கல்லெறிந்தவர்களுக்காக

வேண்டிக் கொண்டபோதும் இதே அன்பு வெளிப்பட்டது. அவனோ முழங்கால்படியிட்டு "ஆண்டவரே இவர்கள் மேல் இந்தப் பாவத்தைச் சுமத்தாதிரும்" என்று மிகுந்த சத்தமிட்டுச் சொன்னான். இப்படிச் சொல்லி நித்திரையடைந்தான் (அப்போஸ்தலர் 7:60). இதே அன்புதான் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தின சவுலைப் பவுலாக்கிக் கிறிஸ்துவின் ஊழியக்காரனாக மாற்றியது. பலவீனரை ஆதாயப்படுத்தும்படிக்குப் பலவீனருக்குப் பலவீனனைப் போலானேன். எப்படியாகிலும் சிலரை இரட்சிக்கும்படிக்கு நான் எல்லாருக்கும் எல்லாமானேன் (1 கொரிந்தியர் 9:22).

என்னைப் பொறுத்தவரையில் நான் வேதத்தில் காட்டப்பட்டுள்ள முழுமையான வளர்ச்சி பெற்ற ஆவியின் கனியைப் பற்றி நினைத்துப் பார்க்கும்போது நான் என்னைத் தாழ்த்தினேன், என்னை அது உற்சாகப்படுத்தியது. தாழ்த்தியது ஏனென்றால் நான் இன்னும் போக வேண்டிய தூரம் வெகு தூரமாக உள்ளது. ஆர்வமாக இருந்தேன் ஏனென்றால் நான் கொஞ்சம் அதிகமாக இந்த உலகம் கொடுக்க முடியாத, இதைவிட அதிகம் அழகானதைப் பற்றிய காட்சியைப் பெற்றமையால் நான் உற்சாகமடைகிறேன்.

பரிசுத்த பவுலின் வார்த்தைகளே அந்தக் காட்சி நான் தெளிவு பெற எனக்கு உதவியது. சகோதரரே, அதைப் பிடித்துக் கொண்டேனென்று நான் எண்ணுகிறதில்லை. ஒன்று செய்கிறேன், "பின்னானவைகளை மறந்து முன்னானவைகளை நாடிக் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன்" (பிலிப்பியர் 3:13-14). நீங்கள் என்னோடு கூட இருக்கிறீர்களா? நாம் முன்னேறிச் செல்வோம்.

பகுதி 3

வான மண்டலத்திலுள்ள போராட்டங்கள்

15

அந்திக்கிறிஸ்துவின் ஆவி

இதுவரை ஒரு போதும் இல்லாத அளவிற்கு தேவனுடைய இராஜ்யத்திற்கும் சாத்தானுடைய இராஜ்யத்திற்கும் இடையில் உச்சக் கட்டத்தில் யுத்தம் நடக்கும் ஒரு காலக் கட்டத்திற்குள் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இது ஏனென்றால் இயேசு கிறிஸ்துவின் வருகை நமக்கு மிகவும் சமீபத்தில் வருகிறதால்தான் என்று நான் நம்புகிறேன். இதனால் சாத்தானின் இராஜ்யம் முழுமையான அழிவுக்குள்ளாகும்.

இப்புத்தகத்தின் இந்தப் பகுதியில் முன்னேறிச் செல்லும் யுத்தங்கள், தேவ தூதர்களின் இடைப்பாடு, ஆவிக்குரிய பாதுகாப்பு, ஆயுதங்கள் ஆகிய சில தலைப்புகளை சில எண்ணங்கள் வழியாக நாம் கண்டு கொள்ளலாம். சாத்தானின் இராஜ்யத்தின் ஒரு முக்கியச் செல்வாக்கைக் குறித்து சோதனை செய்து பார்ப்பதில் நான் தொடங்க விழைகிறேன். ஏனென்றால் அது நம்முடைய ஆவிக்குரிய யுத்தத்தில் முக்கியமானதை விளக்குகிறது. தேவனையும், இயேசுகிறிஸ்துவின் சபையையும் எதிர்க்கும் சாத்தானின் (எதிர்ப்பை) தன்மையை வரையறுத்துக் காட்டுகிறார். இந்த எதிர்ப்புகள் வெளிப்படும்போது இந்த ஆவியை அந்திக்கிறிஸ்துவின் ஆவி என்று நான் அழைக்கிறேன். அந்திக்கிறிஸ்து என்று அழைக்கப்படும் நபரிடமிருந்து இது வித்தியாசமானது என்பதை நாம் பார்ப்போம். இந்த அந்திக்கிறிஸ்து வரலாற்றில் எழும்பின அநேக அந்திக் கிறிஸ்துக்களிடமிருந்து வேறுபட்டவன்.

இந்த ஆவியும் இந்த மனிதர்களும் யோவானுடைய போதகத்தில் ஆரம்பத்தில் விவரிக்கப்படுகிறது.

> பிள்ளைகளே, இது கடைசிக் காலமாயிருக்கிறது; அந்திக்கிறிஸ்து வருகிறானென்று நீங்கள் கேள்விப்பட்டபடி இப்பொழுதும் அநேக அந்திக்கிறிஸ்துகள் இருக்கிறார்கள்; அதினாலே இது கடைசிக்காலமென்று அறிகிறோம். அவர்கள் நம்மைவிட்டுப் பிரிந்து போனார்கள், ஆகிலும் அவர்கள் நம்முடையவர்களாய்

இருக்கவில்லை. நம்முடையவர்களாயிருந்தார்களானால் நம்முடனே நிலைத்திருப்பார்களே; எல்லாரும் நம்முடையவர்களல்லவென்று வெளியாகும்படிக்கே பிரிந்து போனார்கள். நீங்கள் பரிசுத்தராலே அபிஷேகம் பெற்று சகலத்தையும் அறிந்திருக்கிறீர்கள். சத்தியத்தை நீங்கள் அறியாததினாலல்ல, நீங்கள் சத்தியத்தை அறிந்திருக்கிறதினாலும், சத்தியத்தினால் ஒரு பொய்யுமுண்டாயிராதென்பதை நீங்கள் அறிந்திருக்கிறதினாலும், உங்களுக்கு எழுதியிருக்கிறேன். இயேசுவைக் கிறிஸ்து அல்ல என்று மறுதலிக்கிறவனேயல்லாமல் வேறு யார் பொய்யன். பிதாவையும் குமாரனையும் மறுதலிக்கிறவனே அந்திக்கிறிஸ்து. குமாரனை மறுதலிக்கிறவன் பிதாவையுடையவனல்ல, குமாரனை அறிக்கையிடுகிறவன் பிதாவையும் உடையவனாயிருக்கிறான்.

1 யோவான் 2:18-23

அந்திக்கிறிஸ்து என்ற வார்த்தையின் உண்மையான அர்த்தத்தை நான் உங்களுக்கு விளக்குகிறேன். கிறிஸ்து என்ற வார்த்தை “கிறிஸ்டாஸ்” என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து உண்டாகியது. இது சரியாக “மேசியாக்” என்ற எபிரெய வார்த்தையோடு தொடர்புடையது. இதிலிருந்துதான் நாம் “மேசியா” என்ற வார்த்தையைப் பெறுகிறோம். ஆகவே “அந்திக்கிறிஸ்து” என்ற வார்த்தையை நாம் சொல்லும்போது, அதற்கு மேசியாவை எதிர்ப்பவன் (Anti - Messiah) என்பது பொருளாகும்.

“எதிர்த்தல்” (anti) என்பது கிரேக்க வார்த்தை. அதற்கு இரண்டு அர்த்தங்கள் உண்டு. அவை இரண்டுமே உபயோகத்தில் உள்ளன. முதலாவதாக அதன் பொருள் எதிராக (against) என்பதாகும். ஆகவே முதலாவது செயல்பாடு என்பது மேசியாவை எதிர்த்தல் என்பதாகும். இரண்டாவது அர்த்தமாவது இந்த இடத்திற்குப் பதிலாக (in place of) என்பதாகும். இதன் முழு நோக்கமாவது உண்மையான மேசியாவின் இடத்தில் பொய்யான மேசியாவை வைத்தல் ஆகும். ஆகவே எல்லா செயல்பாடுகளும் இரண்டு பகுதிகளாக உள்ளன. இதை நீங்கள் உணர்ந்து கொள்ளும்போது அந்திக்கிறிஸ்துவின் ஆவி மிக அதிகமாகச் சுறுசுறுப்பாகச் சபைகளில் செயல்படுவதைக் காணலாம்.

நாம் முடிவு காலத்தை நெருங்கிச் செல்லுகையில் அந்திக்கிறிஸ்துவின் ஆவி தீவிரமாக வருகிறது.

புராதன சுவிசேஷ வழியில் வந்த ஒரு சபையில் எனக்கு நண்பர்கள் உண்டு. அவர்கள் “எங்களுடைய சபையில் நீங்கள் புத்தரைப் பற்றிப் பேசலாம், நீங்கள் சாக்ரடீசைப் பற்றிப் பேசலாம், நீங்கள் மார்டின்

லூதர் கிங்கைப் பற்றிப் பேசலாம், அப்போது ஒருவரும் பாதிப்படையமாட்டார்கள். ஆனால் இயேசுகிறிஸ்துவைப்பற்றிப் பேசினால் ஒவ்வொருவரும் பாதிப்படைகிறார்கள்" என்று என்னிடத்தில் சொன்னார்கள். அதுதான் அந்திக்கிறிஸ்துவின் ஆவி. ஆனால் அது சாத்தானுடைய நோக்கத்தின் முடிவு அல்ல என்பதை மனதிற்கொள்ள வேண்டும். அவனுடைய நோக்கமாவது உண்மையான மேசியாவுக்குப் பதிலாகப் பொய்யான மேசியாவை மாற்றி அமைத்தலே ஆகும்.

மேலும் யோவானுடைய போதகத்தில் நாம் வாசிக்கிறோம்.

> தேவ ஆவியை நீங்கள் எதினாலே அறியலாம் என்றால்: மாம்சத்தில் வந்த இயேசுகிறிஸ்துவை அறிக்கை பண்ணுகிற எந்த ஆவியும் தேவனால் உண்டாயிருக்கிறது. மாம்சத்தில் வந்த இயேசு கிறிஸ்துவை அறிக்கை பண்ணாத எந்த ஆவியும் தேவனால் உண்டானதல்ல; வருமென்று நீங்கள் கேள்விப்பட்ட அந்திக்கிறிஸ்துவினுடைய ஆவி அதுவே, அது இப்பொழுதும் உலகத்தில் இருக்கிறது.

1 யோவான் 4:2-3

ஆரம்பத்தில் சுட்டிக்காட்டப்பட்ட பகுதியோடு இந்தப் பகுதியைப் பார்க்கும்போது *அந்திக்கிறிஸ்துவின் மூவகையான வடிவத்தை* நாம் பார்க்கிறோம். முதலாவதாக அங்கே அநேக அந்திக்கிறிஸ்துகள் இருக்கிறார்கள். மனித வரலாற்றின் காலக் கட்டங்களிலே அநேக அந்திக்கிறிஸ்துகள் தோன்றி தங்களை வெளிப்படுத்தினார்கள்.

இரண்டாவதாக உள்ள *அந்திக்கிறிஸ்து* ஒரு குறிப்பிட்ட மனிதனாவான். அதுதான் இறுதி வெளிப்பாட்டுடன் இறுதியான உருவாக்கமாகிய அந்திக்கிறிஸ்துவின் ஆவியாகும். அவன் மனித வரலாற்றில் இன்றும் தன்னை வெளிப்படுத்திக் கொள்ளவில்லை. அவனுடைய நிழல் மேடையில் ஏற்கெனவே விழுந்துவிட்டது என்று நான் நம்புகிறேன். ஆனால் உண்மையான அந்த மனிதனை நாம் இன்னும் பார்க்கவில்லை. ஆனால் இக்காலத்தின் இறுதியில் அங்கே ஒரு இறுதியான மிக அதிகமான தீமைகளின் உருவாகவும், மிக அதிக வல்லமையுடையவனுமாகிய ஒரு ஆட்சியாளன் தோன்றி ஒரு குறுகிய காலம் வரைக்கும் மனித வர்க்கத்தை ஆளுகை செய்வான். அவனே அந்திக்கிறிஸ்து ஆவான். இதனை வேதம் மிகவும் அழகாகத் தெளிவுபடுத்துகிறது.

மூன்றாவது வடிவம் *அந்திக்கிறிஸ்துவின் ஆவியாகும்.* இந்த அந்திக்கிறிஸ்துவின் ஆவியானது ஒவ்வொரு அந்திக்கிறிஸ்துவின் ஆவியின் வழியாகவும் செயல்படும் ஒரு ஆவியாகும். நாம் இந்தக்

காலத்தின் முடிவிற்குள் நெருங்கிச் செல்லச் செல்ல அந்திக்கிறிஸ்துவின் ஆவியும் அதிகத் தீவிரமானதாக மாறும். மேலும் நாம் நம்மை அதிகமாக அந்தப் போராட்டத்தில் ஈடுபடுத்திக் கொள்ள வேண்டியதை அறிந்து கொள்ள வேண்டும்.

அந்திக்கிறிஸ்துவின் ஆவி

பரிசுத்த யோவான் அந்திக்கிறிஸ்துவின் அடையாளத்தைக் காட்டும் நான்கு குறியீடுகளைக் கொடுக்கிறார். இவைகள் மிகவும் முக்கியமானவைகள் ஆகும். முதலாவதாக இந்த ஆவியானது தேவனுடைய மனிதர்களோடே தொடர்புகொண்டு தன்னுடைய வேலையைத் தொடங்குகிறது.

> அவர்கள் நம்மைவிட்டுப் பிரிந்து போனார்கள், ஆகிலும் அவர்கள் நம்முடையவர்களாயிருக்கவில்லை; நம்முடையவர்களாயிருந்தார்களானால் நம்முடனே நிலைத்திருப்பார்களே; எல்லாரும் நம்முடையவர்களல்லவென்று வெளியாகும்படிக்கே பிரிந்துபோனார்கள்.
>
> 1 யோவான் 2:19

ஆகவே அந்திக்கிறிஸ்துவின் ஆவி எப்பொழுதும் ஏதாவது வழியில் தேவனுடைய மக்களிடத்தில் தொடர்பு கொள்ளத் தொடங்குவான். ஆனால் உண்மையாக உரியதாக தொடங்காமல் குறிப்பிட்ட காலக்கட்டத்தில் வெளிப்படுவான்.

இந்த ஆவியின் இரண்டாவது அடையாளமானது அது இயேசுவை மேசியா என்று அறிவிப்பதை மறுக்கிறது. இதை நாம் 1 யோவான் 2:22இல் பார்க்கிறோம். இயேசுவைக் கிறிஸ்து அல்ல என்று மறுதலிக்கிறவனேயல்லாமல் வேறே யார் பொய்யன்?

பின்பு யோவான் *மூன்றாவது அடையாளத்தைத்* தொடர்கிறார். "அந்திக்கிறிஸ்து, பிதாவையும் குமாரனையும் மறுதலிக்கிறான்". இதைக் கவனிக்க வேண்டும். அந்திக்கிறிஸ்துவின் ஆவி தேவன் உண்டு என்பதை மறுதலிப்பதில்லை. உண்மையாக அந்திக்கிறிஸ்து தான் தேவனுடைய பிரதிநிதி என்று உரிமைபாராட்டுவான். இந்த ஆவி எதை மறுத்துரைக்கிறது என்றால் பிதாவுக்கும் குமாரனுக்கும் உள்ள உறவை அந்த உன்னதத் தன்மையை மறுக்கிறது.

இந்த ஆவியின் நான்காவது அடையாளமானது 1 யோவான் 4ஆம் அதிகாரத்தில் சொல்லப்பட்டுள்ளது. அது *மேசியா வந்துவிட்டார்.* என்பதை மறுக்கிறது. அது வரப்போகிற மேசியாவை விசுவாசிக்கிறது. ஆனால் மேசியா வந்துவிட்டார் என்பதை மறுக்கிறது.

நான் இப்பொழுது ஒரு வரலாற்றுப் பூர்வமானதைப் பார்க்க விழைகிறேன். இருந்தாலும் அது அந்திக்கிறிஸ்துவைப் பற்றிய ஒரு எதிர்மறையான உதாரணமாகும். எனக்கு நிச்சயமாக யாரையும் குற்றப்படுத்தவோ அல்லது எந்த மதத்தையும் தாக்கிப் பேசவோ விருப்பமில்லை. நான் என்ன செய்ய விரும்புகிறேனென்றால் உண்மையை எடுத்துக் கூறவே விரும்புகின்றேன்.

அந்திக்கிறிஸ்துவின் ஒரு பிரதானமான வெளிப்பாடு முகமதுவின் மதமான இஸ்லாம் ஆகும். அமெரிக்காவில் செப்டம்பர் 11ம் தேதியன்று நடைபெற்ற நிகழ்ச்சியின் வாயிலாக கிறிஸ்தவர்களுக்கு இஸ்லாமியர்களைப் பற்றிச் சொல்லுவது மிக முக்கியம் என்று நான் நம்புகிறேன்.

அரேபியா தீபகற்பத்தில் ஏழாம் நூற்றாண்டில் முகமது தோன்றினார். அவர் தன்னை ஒரு தீர்க்கதரிசியாகக் கூறி உரிமை பாராட்டுகிறார். ஒரு பிரதான தூதனிடத்திலிருந்து பெற்ற வெளிப்பாடுகளே இஸ்லாம் மதமாக உருவாகியது என்றும் உரிமை கோருகிறார். அவர் இஸ்லாம்தான் பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாட்டின் உண்மையான நிறைவேறுதலைக் கொண்டுள்ளது என்றும் கூறுகிறார். கிறிஸ்தவர்களும் சுவிசேஷங்களும் உண்மையான உண்மைக்கு விரோதமாயுள்ளன. ஆனால் அவர்தான் அதை நிலைநாட்டினார். இதுதான் முகமதுவின் கோரிக்கையாகும். அவர் முதலாவதாக இதை நம்பினார். ஏனென்றால் அவர் விக்கிரக வணக்கத்தை விட்டுவிட்டார் ஏனென்றால் அவர் கிறிஸ்தவ மார்க்கத்தின் உரிமை கோருதலை மறுக்கிறார். யூத ஜனங்கள் அவரைப் பின்பற்றுகிறார்கள். அவரைப் பின்பற்றாமல் இருக்கிறவர்களுக்கு விரோதமாக எழும்பி அவர்களைத் துன்புறுத்தும் ஒருவராக மாறினார்.

இஸ்லாம் மதம் அந்திக்கிறிஸ்துவின் ஆவிக்குரிய பெரும்பாலான அடையாளங்களைக் கொண்டுள்ளது. அது பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் தொடர்புடையதாக ஆரம்பிக்கிறது.

மேற்கத்திய நாடுகளில் உள்ள அநேகக் கிறிஸ்தவர்கள் அதைத் தவறாகப் புரிந்துகொண்டு இஸ்லாமைப் பற்றிக் குறைத்து மதிப்பிடுவது ஒரு ஆபத்தான செயலாகும். அநேக நூற்றாண்டுகளாக முகமதிய நாடுகளில் கிறிஸ்தவர்களுக்கும் யூதர்களுக்கும் *தெளிவற்றவர்கள்* என்ற பெயர் கொடுக்கப்பட்டுள்ளது. இதன் பொருள் என்னவென்றால் *இரண்டாந்தரமான மனிதர்கள்* என்பதாகும். இது உண்மையாக இருக்கும்பொழுது இஸ்லாம் எதைக்குறித்தும் யூதர்கள் பெருமளவில் கொலை செய்யப்பட்ட

கொடுமையைப் போல குற்ற உணர்வு இல்லாமல் இருக்கிறது. அதற்கு நீண்டகாலமான அதாவது பதிமூன்று நூற்றாண்டுகளான பதிவு உண்டு. அதாவது கிறிஸ்தவமதம் மற்றும் யூத மார்க்கத்தின் மேல் வெறுப்பும் அவர்களை அடிமைப்படுத்துவதுமாகும்.

இஸ்லாம் மதம் அந்திக்கிறிஸ்துவின் ஆவிக்குரிய பெரும்பாலான அடையாளங்களைக் கொண்டுள்ளது. அது பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் தொடர்புடையதாக ஆரம்பிக்கிறது. தேவனுடைய வெளிப்பாடுகள் கிரியை செய்வது இதில்தான் என்கிறது. ஆனால் அது கிறிஸ்தவத்தின் ஒரு சில குறிப்பிட்ட அடிப்படையான உண்மைகளை மறுக்கிறது. அவைகளாவன பாவத்தின் பிராயச்சித்தமாக சிலுவையில் மரித்த இயேசு, முகமது, இயேசு மரிக்கவில்லை. ஆனால், அவரை ஒரு தேவதூதன் வந்து அவர் மரிப்பதற்கு முன்பாகவே அவரை அகற்றினார். அங்கு பிராயச்சித்தம் இல்லை. மேலும் பிராயச்சித்தம் இல்லாததினால் அங்கே பாவ மன்னிப்பும் இல்லை என்பதாகும். எந்த ஒரு முகமதியனுக்கும் எந்த நேரத்திலும் பாவமன்னிப்பின் நிச்சயம் என்பது இல்லை.

இரண்டாவதாக இஸ்லாமியம், இயேசு பிதாவின் குமாரன் என்பதையும் முழுமையாக மறுக்கிறது. நீங்கள் முகமதியர்களிடத்தில் இயேசுவை ஒரு தீர்க்கதரிசி என்று சொல்ல முடியும். அதை அவர்கள் கவனமாகக் கவனிப்பார்கள். உண்மையாக குரான் இயேசு ஒரு தீர்க்கதரிசி என்பதையும், ஒரு இரட்சகர் என்பதையும், ஏன் ஒரு மேசியா என்பதையும் கூட ஒத்துக்கொள்ளுகிறது. ஆனால் நீங்கள் இயேசு பிதாவின் குமாரன் என்று சொன்னால் அது அவர்களுக்கு ஒரு ஆணித்தரமான எதிர்ப்பையும் கசப்புணர்ச்சியையும் உண்டாக்குவதாக அமையும்.

எருசலேமிலுள்ள புகழ் வாய்ந்த மசூதியானது பாறைகளின் சிகரம் அல்லது உச்சிப்பகுதி என்று அழைக்கப்படுகிறது. இது சாலொமோன் கட்டிய ஆலயம் இருந்த இடத்தில் கட்டப்பட்டள்ளது. அதைச் சுற்றிலும் உள்ள அரேபிய எழுத்துக்களில் பொறிக்கப்பட்ட கல்வெட்டுக்களில் இரண்டு முறை, “தேவனுக்கு ஒரு குமாரன் அவசியமில்லை” என்று கூறப்பட்டுள்ளது.

எருசலேமிலுள்ள மிகவும் புகழ் வாய்ந்த மசூதியில், அதனைச் சுற்றியுள்ள அரேபியக் கல்வெட்டுக்களில் இரண்டு முறை தேவனுக்கு ஒரு மகன் அவசியமில்லை என்று கூறப்பட்டுள்ளது.

நீங்கள் இதைவிட இஸ்லாமின் போதனைகளையும் அதன் நம்பிக்கைகளையும் அதிகமாக அறிய வேண்டுமானல் என்னுடைய நண்பரான ஜிம் க்ராஃப்ட் எழுதிய

“The Muslim Masquerade” என்ற தலைப்பிலான புத்தகத்தைப் படிக்குமாறு நான் உங்களுக்குப் பரிந்துரை செய்கிறேன். ஜிம் இந்த புத்தகத்தில் இந்த தலைப்பைப் பற்றி ஆழமாக ஆராய்ச்சி செய்துள்ளார். மேலும் இந்த புத்தகத்தில் அவரது கருத்துக்களை குரானிலிருந்து நேரடியாக எடுத்துரைக்கின்றார்.

அந்திக்கிறிஸ்து என்று அழைக்கப்படும் மனிதன்

அந்திக்கிறிஸ்துவின் ஆவியின் இறுதியான வெளிப்பாடே அந்திக்கிறிஸ்து ஆகும். இது வருங்காலத்தில் இனிமேல் வெளிப்படும் என்று நான் நம்புகிறேன். வேதத்தின் சில பகுதிகளைக் கொண்டு இதைச் சோதிக்க விரும்புகிறேன். ஆகவே சாத்தானின் திட்டங்கள் என்ன என்பதை நீங்கள் அறிந்து விழிப்புணர்வோடு இருத்தல் வேண்டும். 2 தெசலோனிக்கேயர் 2ஆம் அதிகாரத்தில் பரிசுத்த பவுல் அந்திக்கிறிஸ்துவின் தோற்றம் வெளிப்படுதல், ஆளுகைத் தன்மை இவற்றைப் பற்றிக் கூறுகிறார். அவனும் தேவனுடைய வருகைக்காக ஆயத்தப்படும்படி முகவரியிடப்பட்டுள்ளான். இந்தச் செயல்கள் நெருக்கமாக இணைந்திருக்கின்றன. ஏனென்றால் இயேசு கிறிஸ்து வரும் முன்பாக சாத்தானின் இறுதி செயலாவது அந்திக்கிறிஸ்துவாகத் தன்னை வெளிப்படுத்துவதாகும். பரிசுத்த பவுல் உண்மையாக தேவன் அந்திக்கிறிஸ்துவை அவர் வரும்பொழுது உள்ள பிரகாசத்தினால் அழித்துவிடுவார் என்று சொல்கிறார்.

இதை நாம் 2 தெசலோனிக்கேயர் அதிகாரம் 1, 2ஆம் வசனங்களில் காண்கிறோம்.

> அன்றியும், சகோதரரே, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வருகையையும், நாம் அவரிடத்திலே சேர்க்கப்படுவதையுங்குறித்து, நாங்கள் உங்களை வேண்டிக் கொள்ளுகிறது என்னவென்றால், ஒரு ஆவியினாலாவது, வார்த்தையினாலாவது, எங்களிடத்திலிருந்து வந்ததாய்த் தோன்றுகிற ஒரு நிருபத்தினாலாவது கிறிஸ்துவினுடைய நாள் சமீபமாயிருக்கிறதாகச் சொல்லப்பட்டால், உடனே சஞ்சலப்படாமலும் கலங்காமலும் இருங்கள்.
>
> 2 தெசலோனிக்கேயர் 2:1, 2

இங்கே வருகிற வார்த்தை என்பது கிரேக்க மொழியில் “*பரோசியா*” என்பதாகும். பொதுவாக இந்த வார்த்தை இயேசுவின் இரண்டாம் வருகைக்காக உபயோகிக்கப்படும் வார்த்தையாகும்.

பரிசுத்த பவுல் எழுதுகிறார் ஒரு ஆவியினாலாவது, வார்த்தையினாலாவது, எங்களிடமிருந்து வந்த ஒரு நிருபத்தினாலாவது சஞ்சலப்படவோ கலங்கவோ வேண்டாம் என்பதாகும். ஏனென்றால் அநேகக் கிறிஸ்தவர்கள் எப்பொழுது இயேசு திரும்ப வருவார் என்பதைக் குறித்துக் குறிப்பிட்ட முன்னறிவுப்புகளைப் பற்றி நம்புவதற்கு ஆயத்தமாய் இருக்கிறார்கள். என்னுடைய ஊழியத்தின் காலத்தில் இதைக் குறித்த முன்னறிவிப்புகளைப் பற்றி நான் நிச்சயமாக நிறையக் கேட்டிருக்கிறேன். திரள் கூட்டமான கிறிஸ்தவர்கள் இவற்றைப் பற்றி அறிய ஆர்வமாக இருக்கிறார்கள் என்பதைக் குறித்து நான் மிகவும் ஆச்சரியப்படுகிறேன்.

பரிசுத்த பவுல் தொடர்ந்து கூறுகிறார்,

> கிறிஸ்துவினுடைய நாள் சமீபமாயிருக்கிறதாகச் சொல்லப்பட்டால், உடனே சஞ்சலப்படாமலும் கலங்காமலும் இருங்கள். எவ்விதத்தினாலும் ஒருவனும் உங்களை மோசம் போக்காதபடிக்கு எச்சரிக்கையாய் இருங்கள்; ஏனெனில் விசுவாச துரோகம் முந்தி நேரிட்டு, கேட்டின் மகனாகிய பாவ மனுஷன் வெளிப்பட்டாலொழிய, அந்த நாள் வராது.

2 தெசலோனிக்கேயர் 2:2-3

"விழுந்து போகுதல்" என்ற சொல் கிரேக்கத்தில் "*அப்போஸ்டேஷியா*" என்பதின் அர்த்தமாவது *அப்போஸ்டசி* என்பதாகும். அதாவது வெளிப்படுத்தப்பட்ட உண்மையை அப்பட்டமாக வேண்டுமென்றே மறுத்துரைப்பதாகும்.

இந்த வார்த்தை அந்திக்கிறிஸ்துவின் இரண்டு பெயர்களைக் கொடுக்கிறது. முதலாவது அவன் "பாவ மனுஷன்" அல்லது "சட்ட ஒழுங்கு இல்லாத மனுஷன்" எனப்படுவான். மிகவும் அதிகமாகத் தேவனுக்கு விரோதமான மனிதனின் எதிர்ப்பின் உருவமானவன். மேலும் தேவனுடைய நியாயப்பிரமாணத்தையும் மறுக்கிறவனாவான். அவன் கேட்டின் மகன் என்றும்கூட அழைக்கப்படுகிறான். இழந்து போகும் நித்திய வாழ்விற்குத் தலைமை ஏற்கும் ஒருவனாவான். புதிய ஏற்பாட்டில் வரும் யூதாஸ்காரியோத் "கேட்டின் மகன்" என்று அழைக்கப்படும் ஒரே ஒரு மற்றொரு மனிதனாவான். அவன் ஒரு பொய்யான அப்போஸ்தலன் ஆவான்.

ஆகவே ஒரே மனிதனுக்கு மூன்று வித்தியாசமான பெயர்களை நாம் காண்கிறோம். அந்திக்கிறிஸ்து, சட்ட ஒழுங்கு இல்லாத மனிதன், கேட்டின் மகன் என்பவையாகும். மேலும் நமக்கு வெளிப்படுத்தின விசேஷம் 13ஆம் அதிகாரத்தில் மற்றுமொரு முக்கியமான பெயர்

கொடுக்கப்பட்டுள்ளது. இது யோவான் கண்ட தரிசனத்தின் ஒரு பகுதியாகும்.

> பின்பு நான் கடற்கரை மணலின் மேல் நின்றேன். அப்பொழுது சமுத்திரத்திலிருந்து ஒரு மிருகம் எழும்பி வரக் கண்டேன்; அதற்கு ஏழு தலைகளும் பத்துக் கொம்புகளும் இருந்தன; அதின் கொம்புகளின் பத்து முடிகளும், அதின் தலைகளின் மேல் தூஷணமான நாமமும் இருந்தன. நான் கண்ட மிருகம் சிறுத்தையைப் போலிருந்தது; அதின் கால்கள் கரடியின் கால்களைப் போலவும், அதின் வாய் சிங்கத்தின் வாயைப் போலவும் இருந்தன; வலுசர்ப்பமானது தன் பலத்தையும், தன் சிங்காசனத்தையும் மிகுந்த அதிகாரத்தையும் அதற்குக் கொடுத்தது. அதின் தலைகளிலொன்று சாவுக்கேதுவாய்க் காயப்பட்டிருக்கக் கண்டேன்; ஆனாலும் சாவுக்கேதுவான அந்தக் காயம் சொஸ்தமாக்கப்பட்டது. பூமியிலுள்ள யாவரும் ஆச்சரியத்தோடே அந்த மிருகத்தைப் பின்பற்றி, அந்த மிருகத்திற்கு அப்படிப்பட்ட அதிகாரம் கொடுத்த வலுசர்ப்பத்தை வணங்கினார்கள். அல்லாமலும்: மிருகத்திற்கு ஒப்பானவன் யார்? அதினோடே யுத்தம் பண்ணத்தக்கவன் யார்? என்று சொல்லி மிருகத்தையும் வணங்கினார்கள்.
>
> (வெளிப்படுத்தின விசேஷம் 13:1-4)

இங்கே நாம் காணும் நான்காவது பெயர் "***மிருகம்***" என்பதாகும். இது இனி எழும்பப் போகிற ஒரு மனிதனைக் குறிக்கும். வலுசர்ப்பமாகிய சாத்தான் தனது அதிகாரத்தை அவனுக்குக் கொடுப்பான். ஏனென்றால் அதனால் இந்த மனிதன் மொத்த மனித வர்க்கத்தையும் ஆளுகை செய்வதற்காகப் பயன்படுத்திக் கொள்வான். சாத்தான் இவர்கள் ஒரு காரியம் செய்ய வேண்டுமென்று அதிகமாக விரும்புகிறான். அது என்னவென்றால் அனைவரும் அவனை வணங்க வேண்டும் என்று வற்புறுத்துவதாகும். இதுதான் அவனுடைய இலக்கு ஆகும். இதற்காக அவன் பொறுமையுடன் அநேக நூற்றாண்டுகளாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறான். அவன் அதை அடைந்துவிடும் காலம் நெருங்கிக் கொண்டிருக்கிறது.

அவனுடைய தலைகளில் ஒன்று "சாவுக்கேதுவான காயம்பட்டு" அது சொஸ்தமாக்கப்பட்டது. அங்கே ஒருவிதமான பொய்யான உயிர்த்தெழுதல் உண்டாகிறது. இந்த மனிதன் கொல்லப்படுவானா என்பதை நான் அறியேன். ஆனால் அவன் இறந்தது போல் காணப்படுவான். ஆனால் அவன் திரும்பவும் உயிர் பெறுவான்.

பரிசுத்த யோவான் தன்னுடைய தரிசனத்தில் தேவனுடைய கையில் ஒரு புத்தகத்தைப் பார்த்தான். ஆனால் அதைத் திறப்பதற்குரிய தகுதி ஒருவனிடத்திலும் இல்லாமல் இருந்ததை அவன் கண்டான். ஆகவே, யோவான் அழுதான்.

> அப்பொழுது மூப்பர்களில் ஒருவன் என்னை நோக்கி: நீ அழ வேண்டாம்; இதோ, யூதா கோத்திரத்துச் சிங்கமும் தாவீதின் வேருமானவர் புஸ்தகத்தைத் திறக்கவும் அதின் ஏழு முத்திரைகளையும் உடைக்கவும் ஜெயங்கொண்டிருக்கிறார் என்றான். அப்பொழுது, இதோ, அடிக்கப்பட்ட வண்ணமாயிருக்கிற ஒரு ஆட்டுக்குட்டி சிங்காசனத்திற்கும், நான்கு ஜீவன்களுக்கும், மூப்பர்களுக்கும் மத்தியிலே நிற்கக் கண்டேன்; அது ஏழு கொம்புகளையும் ஏழு கண்களையும் உடையதாயிருந்தது; அந்த கண்கள் பூமியெங்கும் அனுப்பப்படுகிற தேவனுடைய ஏழு ஆவிகளேயாம்.
>
> (வெளிப்படுத்தின விசேஷம் 5:5-6)

யோவான் ஒரு சிங்கத்தை எதிர் நோக்கியிருந்தான். ஆனால் அந்தச் சிங்கம் ஒரு ஆட்டுக்குட்டியாயிருந்தது. அது ஒரு தெளிவான வேறுபாடாயிருந்தது. தேவனால் நியமிக்கப்பட்ட ஆட்சியாளர் மிருகத்தின் தன்மையை உடையவராக இருக்கமாட்டார். அவரிடத்தில் ஆட்டுக்குட்டியானவரின் தன்மை இருக்கும். மற்ற எல்லாரைப் பார்க்கிலும் மேலானவராக மிகவும் மகிமைப்படுத்தப்படுவார், ஏனென்றால் அவர் தன்னுடைய ஜீவனைக் கொடுத்தார். அவர் தன்னைத்தான் தாழ்த்தினார். அவர் எளிமையும் தாழ்மையுமான வழியில் சென்றார். ஏனென்றால் அவர் தன்னைக் கைது செய்தவர்களையும் அவரைக் துன்பப்படுத்தினவர்களையும் எதிர்த்து நிற்கவில்லை. இந்நாட்களில் உள்ள சபையில் இதே போன்ற தன்மையை வெளிப்படுத்துவது அவசியம் என்று நான் நம்புகிறேன். ஆனால் அது எளிது என்று நாம் நம்பவில்லை.

தேவனால் நியமிக்கப்பட்ட ஆட்சியாளர் மிருகத்தின் தன்மையை உடையவராக இருக்கமாட்டார். அவரிடத்தில் ஆட்டுக்குட்டியானவரின் தன்மை இருக்கும்.

ஜனங்கள் அந்த மிருகத்தை வணங்குவதை நாம் பார்க்கிறோம். அந்த மிருகத்தோடு சண்டையிடுவதில் பயன் இல்லை என்று அவர்கள் யாவரும் ஆறுதல் அடைந்தார்கள். எந்த வகையான சூழ்நிலைகள்

அவர்களை இவ்வாறு செய்ய வைத்தது? “முழு உலகத்தையும்” எதிர்த்து சண்டை செய்வது உபயோகமற்றது என்று ஆறுதல் அடையச் செய்தது என்பதைக் குறித்து நான் நிச்சயமாகக் கூற முடியவில்லை. தொழில் மயமான யுத்தத் தளவாடங்கள் நிறைந்த காலத்தில் தற்போது நாம் வாழ்ந்து கொண்டிருப்பதை நாம் நினைத்துப் பார்க்கும்பொழுது இங்கே சுட்டிக்காட்டப்பட்டுள்ள நிலைமை நமக்கு மிக அருகில் உள்ளது என்பதை நாம் எளிதில் நம்பலாம்.

வெளிப்படுத்தின விசேஷம் 13:6-7இல் அந்திக்கிறிஸ்து செயலில் ஈடுபடுவதை நாம் காண்கிறோம்.

> அது தேவனைத் தூஷிக்கும்படி தன் வாயைத் திறந்து, அவருடைய நாமத்தையும், அவருடைய வாசஸ்தலத்தையும், பரலோகத்தில் வாசமாயிருக்கிறவர்களையும் தூஷித்தது. மேலும், பரிசுத்தவான்களோடே யுத்தம்பண்ணி அவர்களை ஜெயிக்கும்படிக்கு அதற்கு அதிகாரங் கொடுக்கப்பட்டதுமல்லாமல், ஒவ்வொரு கோத்திரத்தின் மேலும் பாஷைக்காரர் மேலும் ஜாதிகள் மேலும் அதற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டது.

அவன் தேவனிடத்தில் வெளிப்படையாக சவால் விடுகிறவனாவான். அவன் ஒரு ரகசியமான எதிரி அல்ல. அவன் தன்னுடைய மூடின கையை சர்வ வல்லவராகிய தேவனுடைய முகத்திற்கு நேராக அசைத்தவனாவான். அவனுக்குப் பரிசுத்தவான்களோடே யுத்தம் பண்ணி அவர்களை ஜெயிக்கும்படிக்கு அதிகாரம் கொடுத்தவர் யார் என்று நினைக்கிறீர்கள்? அதைக் கொடுத்தவர் தேவன்தான் என்று நான் யூகிக்கிறேன். இது ஒரு நிதானமான எண்ணமாகும். கிறிஸ்தவ மார்க்கத்தில் வெற்றி பெறுவது எளிதானதல்ல என்பதை நாம் ஒருபோதும் மறந்துவிடுதல் கூடாது.

நாம் இன்னும் முன்பாகச் சென்று 8ஆம் வசனத்தைப் பார்ப்போம். “உலகத் தோற்றமுதல் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியினுடைய ஜீவ புஸ்தகத்தில் பெயரெழுதப்பட்டிராத பூமியின் குடிகள் யாவரும் அதை வணங்குவார்கள்.” எப்படிப்பட்ட நாடக வடிவிலான வாசகம். தேவன் தனக்காகத் தெரிந்து கொள்ளப்பட்டவர்களைத் தவிர மற்ற எல்லா மனிதவர்க்கமும் அவனை வணங்குவார்கள்.

அந்த நாள் நெருங்குவதால்

நம்முடைய யுத்தத்தின் திட்டம் இப்பொழுது தெளிவாய் விளங்குகிறது. திரும்பவும் 2 தெசலோனிக்கேயர் 2:3ஐப் பார்க்கவும். “எவ்விதத்தினாலும் ஒருவனும் உங்களை மோசம் போக்காதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்;

ஏனெனில் விசுவாச துரோகம் முந்தி நேரிட்டு கேட்டின் மகனாகிய பாவ மனுஷன் வெளிப்பட்டாலொழிய அந்த நாள் வராது."

திருச்சபையில் வீழ்ச்சி ஏற்படுதல் ஆரம்பமாயிற்று என நான் நம்புகிறேன். பல நூற்றாண்டுகளாக திருச்சபையில் தலைவர்கள் மோசமாயிருந்தபோதிலும் வெளிப்படையாக;ச் கிறிஸ்தவ விசுவாசத்தின் சத்தியத்தை மறுக்கவில்லை. ஆகவேதான் அவர்களுடைய வல்லமைக்கு ஆற்றல் உள்ளது. ஆனால் இருபதாம் நூற்றாண்டின் சபைத்தலைவர்கள் அடிப்படைக் கிறிஸ்தவக் கோட்பாடுகளை மறுக்க ஆரம்பித்துள்ளனர். கிறிஸ்துவின் தெய்வீகத்தன்மை, அவருடைய கன்னிப் பிறப்பு, நம்மை மன்னிப்பதற்காக அவர் மரித்தது, அவருடைய சரீர உயிர்த்தெழுதல், அவருடைய இரண்டாம் வருகை போன்றவற்றை மறுக்கின்றனர். இது கடந்த நூற்றாண்டுகளில் நடைபெறாத காரியம். இந்தக் கொள்கை மறுப்பினை நாம் ஏற்கெனவே சந்தித்துள்ளோம் என விசுவாசிக்கிறேன். எப்பொழுதுமே தவறுகளைத் தடுத்து நிறுத்தும் ஆற்றலாக சபை உள்ளது. சாத்தான் திருச்சபையில் நுழைந்தால்தான் தனது திட்டத்தை நிறைவேற்ற முடியும்.

திருச்சபை குற்றங்களைத் தவிர்க்கும் பாதுகாப்பாக உள்ளது. சாத்தான் சபைக்குள் பிரவேசித்தால் தான் தனது திட்டத்தை நிறைவேற்ற முடியும்.

அவன் தனித்து வேலை செய்யவில்லை. சரித்திரம் முழுவதிலும் வீழ்ந்து போன தேவதூதர்கள் மனித வாழ்வில் செயல்பட்டுள்ளனர். அவர்கள் மனுக்குலத்தைத் தாக்குவதைப் பற்றிய சிறிய விவரத்தை அடுத்த அதிகாரத்தில் பார்ப்போம். அவ்வேளையில் நாம் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதும் குறிக்கப்பட்டுள்ளது.

16

மனித வாழ்க்கையில் தேவ தூதர்களின் இடைப்பாடு

புதிய ஏற்பாட்டு சபையில் ஆராதித்தலை நடத்தும் முறையைப் பற்றி அறிவுரைகள் வழங்கும்போது தேவதூதர்களின் நிமித்தமாகச் சில குறிப்பிட்ட செய்கைகளைச் செய்ய வேண்டும் என்று பரிசுத்த பவுல் எழுதுகிறார். "ஆகையால் தூதர்களினிமித்தம் ஸ்திரீயானவள் தலையின்மேல் முக்காடிட்டுக் கொள்ள வேண்டும்" (1 கொரிந்தியர் 11:10). கிறிஸ்தவர்கள் ஒன்று கூடி துதிக்கும்பொழுது தேவதூதர்களும் அங்கு வருகை புரிந்து அதில் பங்குபெறுவார்கள் என்று பவுல் உரிமை பாராட்டிக் கொள்கிறார்.

ஒரு தடவைக்கு மேலாக ரூத்தும் நானும் ஆராதித்த வேளையில் அவள் தேவதூதர்கள் பாடுவதைக் கேட்டாள். அவ்வேளையில் பரலோகத்தையும் பூலோகத்தையும் இணைத்த ஓர் ஆராதனையின் அனுபவத்தைப் பெற்றுக்கொள்ளும் சிலாக்கியத்தைப் பெற்றோம் என அறிந்துகொண்டோம். மற்றக் கிறிஸ்தவர்களும் இதைப் போன்றதொரு சாட்சியினைக் கொடுத்துள்ளனர்.

எபிரெய ஆக்கியோன் "தேவனுடைய தூதர்கள் இரட்சிப்பைச் சுதந்தரிக்கப்போகிறவர்களின் நிமித்தமாக ஊழியஞ்செய்யும்படிக்கு அவர்களெல்லாரும் அனுப்பப்படும் பணிவிடை ஆவிகளாய் இருக்கிறார்கள் அல்லவா?" (எபிரெயர் 1:14) என்று சொல்லுகிறார். கிரேக்க வார்த்தை "பணிவிடையின் ஆவிகள்" சிறப்பாக புதிய ஏற்பாட்டு சபையில் ஆசாரியத்துவமான ஆராதனையை நடத்தும் ஆவிகளாகும் என்று வருணிக்கப்பட்டு மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. புதிய ஏற்பாட்டு சபையில் பரலோகமும் பூலோகமும் ஆராதனை மூலமாக ஒன்றாக இணைக்கப்படுகிறது.

ஒன்றன்பின் ஒன்றாக உண்டாகும் தேவதூதர்களின் போராட்டம்

வேதாகமம், ஒன்றன்பின் ஒன்றாக உண்டாகும் தேவதூதர்களின் போராட்டத்தைக் குறித்து வெளிப்படுத்துகிறது. முதலாவதானதும் மிகவும் முக்கியமானதுமாவது பிரதான தூதனாகிய லூசிபரின் ஆரம்ப எதிர்ப்பு. இது ஏசாயாவில் வருணிக்கப்பட்டுள்ளது.

> அதிகாலையின் மகனாகிய விடிவெள்ளியே, நீ வானத்திலிருந்து விழுந்தாயே! ஜாதிகளை ஈனப்படுத்தினவனே, நீ தரையிலே விழ வெட்டப்பட்டாயே! நான் வானத்துக்கு ஏறுவேன், தேவனுடைய நட்சத்திரங்களுக்கு மேலாக என் சிங்காசனத்தை உயர்த்துவேன்; வட புறங்களிலுள்ள ஆராதனைக் கூட்டத்தின் பர்வதத்திலே வீற்றிருப்பேன், என்றும் நான் மேகங்களுக்கு மேலாக உன்னதங்களில் ஏறுவேன்; உன்னதமானவருக்கு ஒப்பாவேன் என்றும் நீ உன் இருதயத்தில் சொன்னாயே.
>
> ஏசாயா 14:12-14

என்னைப் பொறுத்த வரையில் தெய்வீக மனிதனின் நிலையை சாத்தான் அடைய வேண்டுமென்று ஆசைப்பட்டான். யாருடைய இடத்தை என்றால் தேவனாகிய பிதாவின் இடத்தை அல்ல. ஆனால் தேவனாகிய குமாரனின் இடத்தையே ஆகும். (மனித வரலாற்றில் இது நசரேயனாகிய இயேசுவைக் குறிக்கிறது என்பது பின்பு வெளிப்படுத்தப்பட்டது.) இந்த இருவருக்கும் இடையில் நடைபெறும் இந்தப் போராட்டம் சிலுவையில்தான் உச்சக் கட்டத்தை எட்டியது. அங்கேதான் சாத்தான் இயேசுவை வெளிப்படையாகத் தோற்கடித்தது போல தோன்றியது. ஆனால் உண்மை என்னவென்றால் இயேசு சாத்தானையும் அவனுடைய எல்லா ஆயுதங்களையும் உரிந்து கொண்டு, அவனை முழுமையாகத் தோற்கடித்தார். "துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் உரிந்துகொண்டு, வெளியரங்கமான கோலமாக்கி, அவைகளின் மேல் சிலுவையில் வெற்றி சிறந்தார்" (கொலோசெயர் 2:15). இயேசு சாத்தானின் அதிகாரங்களை உரிந்து கொண்டார்.

தேவனுக்கு விரோதமாக தொடர்ச்சியாக தேவதூதர்களின் எதிர்ப்பு இருந்துள்ளதை வேதம் சுட்டிக் காட்டுகிறது.

வெளிப்படுத்தின விசேஷம் 12:3-4இல் சாத்தான், ஒரு பெரிய அக்கினிமயமான சிவப்பான வலுசர்ப்பம் என்று

வருணிக்கப்பட்டுள்ளான். அதின் வால் வானத்தின் நட்சத்திரங்களில் மூன்றிலொரு பங்கை இழுத்து அவைகளைப் பூமியில் விழத் தள்ளிற்று. ஒரு பிரதான தூதனாக விளங்கிய லூசிபர் (இப்பொழுது சாத்தான்) வானத்தில் உள்ள தேவதூதர்களில் மூன்றில் ஒரு பங்கின் மேல் அவன் அதிகாரம் செலுத்துகின்றான். இவர்கள் அவனுடைய போராட்டத்தில் அவனைப் பின்பற்றி, அவனோடுகூட பரலோகத்திலிருந்து தள்ளப்பட்டவர்கள். சாத்தானும் அவனோடுகூட அவனைப் பின்பற்றியதால் தள்ளப்பட்ட தூதர்களும் சேர்ந்து போட்டியான ஒரு இராஜ்யத்தை ஸ்தாபித்தார்கள் (பார்க்கவும்: எபேசியர் 6:12).

சிலுவையில் சாத்தானுடைய தோல்வியும் அவனுடைய முடிவும் மாற்ற முடியாதபடி தீர்த்துவைக்கப்பட்டாலும் அவன் மேல் ஆன நியாயத்தீர்ப்பு ஆயிரம் வருட அரசாட்சி முடிவுறும் முன் வழங்கப்படுவதில்லை. அச்சமயத்தில் சாத்தானும் அந்திக்கிறிஸ்துவும் ஒன்றாக அக்கினியும் கந்தகமுமான கடலிலே தள்ளப்படுவார்கள். அவர்கள் இரவும் பகலும் சதாகாலங்களிலும் வாதிக்கப்படுவார்கள் (வெளிப்படுத்தின விசேஷம் 20:10).

ஜலப்பிரளயத்திற்கு முன் தள்ளப்பட்ட தேவதூதர்கள்

ஆதியாகமம் 6:1-2இல் தேவ தூதர்களின் தொடர் மீறுதல்கள் விவரிக்கப்பட்டிருக்கிறது.

> மனுஷர் பூமியின் மேல் பெருகத் துவங்கி அவர்களுக்குக் குமாரத்திகள் பிறந்த போது தேவ குமாரர் மனுஷ குமாரத்திகளை அதிக சௌந்தரியமுள்ளவர்களென்று கண்டு அவர்களுக்குள்ளே தங்களுக்குப் பெண்களைத் தெரிந்து கொண்டார்கள்.

இந்தத் தேவ குமாரர்கள் யார்? யோபுவின் புத்தகத்தில் அவர்களைப் பற்றி இரண்டு முறை கூறப்பட்டுள்ளது. முதலாவதாக, ஒருநாள் தேவ புத்திரர் கர்த்தருடைய சந்நிதியில் வந்து நின்றபோது சாத்தானும் அவர்கள் நடுவில் வந்து நின்றான் (யோபு 1:6). மேலும் தேவன் திரும்பவும் யோபுவைக் கேட்கும்பொழுது ‘‘நான் பூமியை அஸ்திபாரப்படுத்துகிறபோது நீ எங்கே இருந்தாய்? நீ அறிவாளியானால் அதை அறிவி. அப்பொழுது விடியற்காலத்து நட்சத்திரங்கள் ஏகமாய்ப் பாடி தேவபுத்திரர் எல்லாரும் கெம்பீரித்தார்களே” (யோபு 38:4, 7). திட்டமாக, இந்த இரண்டு பகுதிகளிலும் தேவபுத்திரர் என்பவர்கள் தேவ தூதர்கள்தான். தேவன் பூமியின் அஸ்திபாரத்தைப் போடும்போது மனித இனம் உருவாக்கப்படவில்லை.

மனித இனப் பெண்களோடு இவ்வாறு பாவம் செய்த தேவ புத்திரர் மேல் வந்த தேவனின் நியாயத் தீர்ப்பை விளக்கும் இரண்டு பகுதிகள் புதிய ஏற்பாட்டில் உள்ளன. யூதா 1:6 இவ்வாறு கூறுகிறது.

> தங்களுடைய ஆதி மேன்மையைக் காத்துக்கொள்ளாமல், தங்களுக்குரிய வாசஸ்தலத்தைவிட்டுவிட்ட தூதர்களையும், மகாநாளின் நியாயத்தீர்ப்புக்கென்றுநித்திய சங்கிலிகளினாலே கட்டி, அந்தகாரத்தில் அடைத்து வைத்திருக்கிறார்கள்.

தேவதூதர்கள் செய்த பாவமாவது அவர்களுக்கென்று பரலோகத்தில் நியமிக்கப்பட்ட இருப்பிடத்தை விட்டுப் பூலோகத்திற்கு வந்து மானிடப் பெண்களுடன் கூடி வாழ்ந்ததாகும்.

இவைகள் சாத்தானின் மூல புரட்சியில் பங்கேற்றவைகள் அல்ல. ஏனெனில் சாத்தானும் அவன் தூதர்களும் இன்றும் கட்டி வைக்கப்படவில்லை. அவைகள் சுயாதீனமாக வானமண்டலங்களில் கிரியை செய்து வருகின்றன. யூதா கூறும் தேவ தூதர்களின் பாவம் என்னவெனில், அவர்கள் பரலோகத்தில் தங்களுக்கு நியமிக்கப்பட்ட இடத்தை விட்டு (வாசஸ்தலத்தை விட்டு) பூலோகத்திற்கு வந்து மனித இனப் பெண்களிடம் கூடி வாழ்ந்ததே.

யூதா மேலும் கூறுகிறார்:

> அப்படியே சோதோம் கொமோரா பட்டணத்தார்களும், அவைகளைச் சூழ்ந்த பட்டணத்தார்களும், அவர்களைப் போல் விபசாரம் பண்ணி, அந்நிய மாம்சத்தைத் தொடர்ந்து, நித்திய அக்கினியின் ஆக்கினையை அடைந்து, திருஷ்டாந்தமாக வைக்கப்பட்டிருக்கிறார்கள்.
>
> (யூதா 1:7)

யூதா நோவாவின் காலத்தில் வீழ்ந்த தேவ தூதர்களை சோதோம் கொமோரா பட்டணத்து மக்களோடு ஒப்பிடுகிறார். இரு பிரிவினரும் ஒழுக்கமற்ற பாலியல் வேறுபாடு விரோதமான பாவத்திற்கு குற்றமுள்ளவர்களாய் இருந்தனர்.

அதே போன்று பேதுருவும் நோவா காலத்தில் வீழ்ந்த தேவதூதர்களை சோதோம் கொமோரா பட்டணத்து மக்களோடு ஒப்பிட்டுப் பேசுகிறார்.

> பாவஞ்செய்த தூதர்களைத் தேவன் தப்பவிடாமல், அந்தகாரச் சங்கிலிகளினாலே கட்டி நரகத்திலே தள்ளி நியாயத்தீர்ப்புக்கு வைக்கப்பட்டவர்களாக ஒப்புக் கொடுத்து; பூர்வ உலகத்தையும் தப்பவிடாமல், நீதியைப் பிரசங்கித்தவனாகிய நோவா முதலான எட்டுப்பேரைக் காப்பாற்றி, அவபக்தியுள்ளவர்கள் நிறைந்த உலகத்தின் மேல் ஜலப்பிரளயத்தை வரப்பண்ணி; சோதோம் கொமோரா என்னும் பட்டணங்களையும் சாம்பலாக்கிக் கவிழ்த்துப் போட்டு, ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்து, பிற்காலத்திலே அவபக்தியாய் நடப்பவர்களுக்கு அவர்களைத் திருஷ்டாந்தமாக வைத்து; அக்கிரமக்காரருக்குள் வாசமாயிருக்கையில் அவர்களுடைய காமவிகார நடக்கையால் வருத்தப்பட்டு; நாள்தோறும் அவர்களுடைய அக்கிரமக் கிரியைகளைக் கண்டு கேட்டு நீதியுள்ள தன்னுடைய இருதயத்தில் வாதிக்கப்பட்ட நீதிமானாகிய லோத்தை அவர் இரட்சித்திருக்க . . .
>
> 2 பேதுரு 2:4-8

இரண்டு நிகழ்வுகளிலும் அவர்கள் பாவம் இயற்கைக்கு விரோதமான பாலியல் வேறுபாட்டு முரணே. நான்காம் வசனத்தில் ஆங்கில மொழிபெயர்ப்பு நரகத்திலே தள்ளி எனக் கூறுகிறது. மூல கிரேக்க வார்த்தை “டார்டரஸ்” என்னும் கிரேக்க இலக்கியத்தில் அடிக்கடி கூறப்படும் பதம் ஆகும். டார்டரஸ் பூமியின் கீழ் உள்ள ஹேடிஸ்க்கும் கீழ் உள்ள இடத்தைக் குறிக்கும்.

உலகத்தின் சில பாவங்களை எவ்வளவு காலம் தேவன் பொறுத்துக் கொள்வார் என்பது ஆச்சரியமாய் இருக்கிறது. சில எல்லைகளைத் தேவன் விழிப்புடன் கவனித்துக் கொண்டிருக்கிறார். அப்பேர்ப்பட்ட ஓர் எல்லை தேவதூதர்களுக்கும் மனித இனத்தவர்களுக்கும் ஒரே பாலரிடம் தடை செய்யப்பட்ட பாலியல் உறவே. எல்லையைத் தாண்டும்போது, தேவனின் பயங்கர நியாயத்தீர்ப்பு சீக்கிரம் வரும். ஓர் நிகழ்வில் ஜலப்பிரளயமாகவும் மற்றதில் இரண்டு பட்டணங்களின் மக்கள் அழிக்கப்பட்டும் போயினர்.

நமது காலத்தில் இதைப் போன்ற பாவங்கள்

ஜலப்பிரளயத்தின்போதும் தூதர்களுக்கும் மனித இனப் பெண்களுக்குமுள்ள சஞ்சாரம் நின்றபாடில்லை என வேதாகமம் காட்டுகிறது.

> அந்நாட்களில் இராட்சதர் பூமியிலே இருந்தார்கள்; பின்பு தேவகுமாரர் மனுஷ குமாரத்திகளோடே கூடுகிறதினால், இவர்கள் அவர்களுக்குப் பிள்ளைகளைப் பெற்ற போது, இவர்களும் பூர்வத்தில் பேர் பெற்ற மனுஷராகிய பலவான்களானார்கள்.
>
> ஆதியாகமம் 6:4

"நெபிலிம்" என்ற எபிரெய வார்த்தை "வீழ்ந்து போ" என்று அர்த்தம் கொள்ளும் நாபால் என்னும் எபிரெய பதத்திலிருந்து நேரிடையாக வருகிற வார்த்தையாகும். எனவே நெபிலிம் தள்ளப்பட்ட தூதர்களே. அந்த நாட்களில் (ஜலப்பிரளயக் காலத்தில்) மற்றும் பின்பு (ஜலப்பிரளயத்திற்குப் பின்னர்) பூமியிலே நெபிலிம் இருந்தனர்.

இந்த வழக்கத்திற்கு மாறான உறவினால் பிறந்தவர்கள் பலவான்கள் என அழைக்கப்பட்டனர். இப்பேர்ப்பட்ட வீரர்களைப் பற்றி கிரேக்க புராணக்கதைகள் அதிகமாகக் கூறுகின்றன. கிரேக்கப் புராணத்தில் தேவன் என அழைக்கப்பட்ட இவர்கள் மனிதப் பெண்களோடு உறவு கொண்டபோது பிறந்தவர்கள். இந்தக் கடவுள்கள் உயர் இடத்திலிருந்து கீழே வந்த மிகுந்த பலமுள்ளவர்கள். வேதம் அவர்களை "நெபிலிம்" என்று அழைக்கிறது.

உண்மையில் அவர்கள் கீழே தள்ளப்பட்ட தேவ தூதர்கள்தான். சில எடுத்துக்காட்டுகளைக் காண்போம். சீயஸ் (கடவுள்களின் தகப்பன்) ஒரு வாத்து வடிவம் எடுத்து லீடா என்ற பெண்ணோடு சேர்ந்து, மூன்று பிள்ளைகளைப் பெற்றான். மற்றொரு கட்டத்தில் எருது போன்ற உருவம் எடுத்து யூரோபாவுடன் சேர்ந்து மூன்று மகன்களைப் பெற்றான். கடல் கடவுளான போசைடான் ஓர் மனுஷியோடு சேர்ந்து தீசியஸ் என்ற கிரேக்க வீரர்களில் பிரசித்தி பெற்றவன் பிறந்தான்.

அநேக உதாரணங்களைக் கூறலாம். இந்தக் கட்டுக்கதைகள் உடைந்த கண்ணாடி போல், ஆதியாகமம் 6:4இல் கூறியுள்ள நிகழ்வுகளை மாறாட்டமாகக் காட்டுகின்றன.

தேவன் இவ்வுலகத்திலுள்ள சில வகையான பாவங்களை சகித்துக்கொள்வார் ஆனால் குறிப்பிட்ட வரையறைக் -குள்ளானதை தேவன் உன்னிப்பாக கவனித்துக் கொண்டிருக்கிறார்.

நோவாவின் காலத்தில் இருந்தது போல

லூக்கா 17:26இல் இயேசு எச்சரிக்கிறார். நோவாவின் நாட்களில் நடந்தது போல, மனுஷ குமாரனுடைய நாட்களிலும் நடக்கும். வேறு வார்த்தைகளில் கூறின், நோவாவின் நாட்களில் உள்ள நிலை இக்காலம் முடிவுறுமுன் உள்ள காலத்தில் மறுபடியும் நிலவும்.

நோவாவின் நாட்களில் பூமியானது தேவனுக்கு முன்பாகச் சீர்கெட்டதாயிருந்தது; பூமி கொடுமையினால் நிறைந்திருந்தது (ஆதியாகமம் 6:11). இவ்விரு தோற்றங்களும் நமது கண்களுக்கு முன்பாகத் தெளிவாய் இன்று திரும்பக் காணப்படுகின்றன; அவை ஒழுங்கற்ற சீர்கேடும், தொடரும் விரிவான வன்முறையுமே.

நோவாவின் நாட்களில், வெளி மண்டலத்திலுள்ள தேவ குமாரர்களினால், மனிதப் பெண்கள் இச்சிக்கப்பட்டு மனித சமுதாயம் தாக்கப்பட்டது. அரை நூற்றாண்டிற்கு மேல் வெளியிலிருந்து வந்தவர்களின் செயல், கண்கூடாகச் சொல்லப்பட்டுள்ளது.

இவைகளில் சில பிசாசைப் போல் இருந்திருக்கக் கூடுமோ? இவ்விவரங்களை நாம் பொய்க் கதைகள் என்று தள்ளிவிட்டாலும், அது வேதம் சொல்லுகிறபடி நோவாவின் நாட்களில் நடந்தது திரும்பவும் நடக்கும் என்ற உண்மையை மாற்ற முடியாது. தள்ளப்பட்ட தூதர்கள் மறுபடியும் பூமியாகிய கோளத்தில் கிரியை செய்கின்றன என்று நம்புகிறேன்.

மேற்கூறிய வேதாகமப் பொருள்விளக்கம் சரியாக இருக்கும் போது, 1 கொரிந்தியர் 11:2-16இல் பவுல் கூறிய எச்சரிக்கைகளுக்குப் புதிய அவசர நிலை ஏற்படுகிறது. பவுல் அங்கே மனிதர்கள் மேல் கிறிஸ்துவின் தலையாய நிலைமையையும், பெண்களின் மேல் ஆண்களின் நிலைமையையும் பற்றிக் கலந்துரையாடுகிறார். பவுல் சபையை மதவாதக் கட்டிடத்தில் கூடும் சிறு கூட்டமாகக் கருதவில்லை. மாறாக சபையைப் பூலோகத்தையும், பரலோகத்தையும் இணைக்கின்ற செயலாக்கம் நிறைந்த நாடகத்தின் ஓர் பங்காகக் கருதுகிறார். அவர்கள் கூட்டங்களில் கலந்து கொள்ளுதல் மனிதர்களிடம் மட்டுமல்ல, நல்ல தூதர்களோடும், தீய தூதர்களோடும் கலந்து கொள்ளுதல் ஆகும்.

பவுல் சபையைப் பூலோகத்தையும் பரலோகத்தையும் இணைக்கின்ற செயலாக்கம் நிறைந்த நாடகத்தின் ஒரு பங்காகக் கருதுகிறார்.

குறிப்பாக, சபை ஆராதனைகளில் பங்கு பெறும் பெண்கள் நல்ல, தீய தேவ தூதர்களின், பிரசன்னத்தை அறிந்திருக்க வேண்டும். தங்கள்

தலையைச் சுற்றி மூடியிருக்க வேண்டும். இந்த அத்தியாயத்தின் ஆரம்பத்தில் இந்த வசனத்திற்கு கவனத்தை ஈர்த்தேன். ஆகையால் தூதர்களினிமித்தம் ஸ்திரீயானவள் தலையின் மேல் முக்காடிட்டுக் கொள்ள வேண்டும் (1 கொரிந்தியர் 11:10). இினிமித்தம், அவர்கள் சபையில் கிறிஸ்துவின் அதிகாரத்திற்கு அடங்கியிருக்கிறார்கள். இருக்கக்கூடிய நல்ல தேவ தூதர்களுக்கு அவர்கள் மரியாதை செலுத்தினர். தீய தேவ தூதர்களிடமிருந்து வரக்கூடிய கெட்ட ஆவிக்குரிய உள் ஆற்றலிலிருந்து தங்களை அதே நேரத்தில் காத்துக் கொண்டனர்.

1 கொரிந்தியர் 11:2-16இல் ஆராதனையைக் குறித்துக் கூறும் அறிவுரைகளைப் *பயபக்தி* என்ற வார்த்தையில் அடக்கலாம்.

என்னுடைய பயபக்தி எங்கே?

மல்கியாவின் காலத்தில் கர்த்தர் தன்னுடைய ஜனங்களின் மேல் குற்றம் சுமத்துகிறார். தேவனை ஆராதிப்பதில் அசட்டையாக இருப்பதாகக் கூறுகிறார். அவர்கள் மிகவும் தெய்வப் பக்தியுள்ளவர்களாக இருந்தும் அவர்கள் பக்தியற்றவர்களாக இருந்தார்கள். மல்கியா 1:6இல் கர்த்தர் சொல்லுகிறார். “குமாரன் தன் பிதாவையும், ஊழியக்காரன் தன் எஜமானையும் கனம் பண்ணுகிறார்களே; நான் பிதாவானால் என் கனம் எங்கே? நான் எஜமானானால் எனக்குப் பயப்படும் பயம் எங்கே?” என்று சேனைகளின் கர்த்தர் தமது நாமத்தை அசட்டைப் பண்ணுகிற ஆசாரியர்களாகிய உங்களைக் கேட்கிறார். பின்பு மல்கியா 1:14இல் “என் நாமம் ஜாதிகளுக்குள்ளே பயங்கரமாயிருக்கும்; நான் மகத்துவமான ராஜா என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்” என்று முடிக்கிறார்.

பெரும்பாலும் எல்லாப் பண்பாடுகளிலும், இராஜாவினுடைய ஜனங்களின் நன்னடத்தைக்காக சில சட்ட திட்டங்களைக் கையாள வேண்டியது அவசியம். இந்தச் சட்டங்களை நாம் *உடன்படிக்கை* என்று அழைக்கிறோம்.

பரலோகத்திற்குத் தேவயையான சில *உடன்படிக்கை* 1 கொரிந்தியர் 11:2-16 வரை கூறப்பட்டுள்ளது. கிறிஸ்தவர்கள் தங்களது ஆராதனையில் தங்களுடைய சொந்த எண்ணப்படி தனிப்படுத்தப்பட்ட ஒரு சிறிய குழுவல்ல என்பதை அவைகள் நமக்கு நினைவூட்டுகின்றன. இதற்கு மாறாக பவுல் சொல்லுகிறார் நாங்கள் உலகத்துக்கும் தூதருக்கும் மனுஷருக்கும் வேடிக்கையானோம் (1 கொரிந்தியர் 4:9). இந்த வசனத்திலிருந்து “தூதர்கள்” என்று குறிக்கப்படுவது நல்ல தூதர்கள், கெட்ட தூதர்கள் ஆகிய இருவரையும் உள்ளடக்குவதாக உள்ளது. பரலோகத்தின் உடன்படிக்கையைப் படிப்பதும் அதைப் பின்பற்றுவதும் தேவையானதாகவும் அவசியமானதாகவும் உள்ளது. இது நமது தேவனை

நாம் கனம் பண்ணுவதன் அடையாளமாக இருப்பது மட்டும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமையாமல் நம்முடைய சொந்த சிறந்த ஆர்வங்களும்கூட இதற்குத் தேவைப்படுகிறது.

17

வான மண்டலங்களிலுள்ள போர்

முந்தின அத்தியாயத்தில், கிறிஸ்தவர்கள் தங்கள் ஆராதனையின்போது தேவ தூதர்களும் அதாவது நல்ல தேவதூதர்களும், கெட்ட தேவதூதர்களும் கூட அதில் கலந்து கொள்வார்கள் என்று கருத வேண்டும் என்பதை நான் சுட்டிக் காட்டினேன். வேதத்தின் குறிப்பிட்ட சில பகுதிகள், நோவாவின் நாட்களில் ஏற்பட்ட பிரளயத்திற்கு முன்னும் பின்னுமாக விழுந்த தேவ புத்திரர்கள் பூமியில் செயல்படுவதை வெளிப்படுத்துகிறது.

தற்பொழுது சாத்தான் என்று அறியப்படும், தொடக்கம் முதலே உள்ள போராட்டம் செய்யும் லூசிபரைக் குறித்தும் கூட குறிப்பிட்டுள்ளேன். இது ஏசாயா 14:12-15 முதல் வருணிக்கப்பட்டுள்ளது. இந்த அத்தியாயத்தில் நான் போராட்டத்தைப் பற்றியும் அதன் விளைவுகளைப் பற்றியும் ஆராயப் போகிறேன். லூசிபரின் போராட்டத்தைப் பற்றிய உள் நோக்கம் எசேக்கியேல் 28:1-19 வரை தீருவின் இளவரசன் மற்றும் தீருவின் அரசன் ஆகிய இரண்டு பேரைப் பற்றியும் படமாக்கித் தெளிவுபடுத்தப்படுகிறது.

சாத்தானின் எண்ணங்களும் அதன் வழிகளும்

தீருவின் இளவரசன் வெளிப்படையாகத் தன்னை தேவனாகப் பாவித்தான். ஆனால் எசேக்கியேல் புத்தகத்தில் முற்றுகையிடும் பிற தேசத்தாரான மனிதர்களின் கையினால் அவன் கொல்லப்பட்டது தெளிவாகிறது.

> உன்னைக் கொல்லுகிறவனுக்கு முன்பாக: நான் தேவனென்று நீ சொல்வாயோ? உன்னைக் குத்திப் போடுகிறவன் கைக்கு நீ மனுஷனேயல்லாமல் தேவனல்லவே.
>
> (எசேக்கியேல் 28:9)

இதற்கு மாறாக தீருவின் அரசன் பரலோகத்தில் மிகவும் கனத்திற்குரிய இடத்தைப் பெற்று மூலத்தில் தேவ புத்திரனாயிருந்தவனாவான்.

நீ தேவனுடைய தோட்டமாகிய ஏதேனில் இருந்தவன்; பத்மராகம், புஷ்பராகம், வைரம், படிகப்பச்சை, கோமேதகம், யஸ்பி, இந்திரநீலம், மரகதம், மாணிக்கம் முதலான சகலவித இரத்தினங்களும் பொன்னும் உன்னை மூடிக்கொண்டிருக்கிறது; நீ சிருஷ்டிக்கப்பட்ட நாளில் உன் மேள வாத்தியங்களும் உன் நாகசுரங்களும் உன்னிடத்தில் ஆயத்தப்பட்டிருந்தது.

நீ காப்பாற்றுகிறதற்காக அபிஷேகம் பண்ணப்பட்ட கேரூப்; தேவனுடைய பரிசுத்த பர்வதத்தில் உன்னை வைத்தேன். அக்கினி மயமான கற்களின் நடுவே உலாவினாய். நீ சிருஷ்டிக்கப்பட்ட நாள் துவக்கி உன்னில் அநியாயம் கண்டுபிடிக்கப்பட்டது மட்டும், உன் வழிகளில் குறையற்றிருந்தாய்

எசேக்கியேல் 28:13-15

லூசிபர் ஓர் பிரகாசமுடைய ஆள். அவன் தன்னைப் படைத்தவருக்கு எதிராகப் போரிட்டவன்.

லூசிபரின் அளவற்ற ஞானத்தினாலும், அழகினாலும் அவனுடைய இருதயம் பெருமையினால் நிறைந்தது. அவனுடைய விழுதலுக்கு இதுவே காரணமாகும்.

16ம் வசனத்தைத் தொடர்ந்து, “உன் வியாபாரத்தின் மிகுதியினால், உன் கொடுமை அதிகரித்தது. நீ பாவஞ்செய்தாய்.'' லேவியராகமம் 19:16இல் அதே அடி வேர் வார்த்தையாகிய “வியாபாரம்” அங்கும் இங்கும் தன் ஜனங்களுக்குள், “கோள் சொல்லித் திரிபவன்” என விளக்கப்படுகிறது. லூசிபர் தனது கீழே உள்ள தூதர்களின் மத்தியில் தேவன் பால் அவர்கள் வைத்திருந்த பற்றுறுதியைக் கெடுத்து, தன்னோடு சேர்ந்து எதிர்த்துப் போராடச் செய்தான் என்பதைக் காட்டுகிறது. ஒருவேளை அவன் இப்படிச் சொல்லியிருப்பான். “தேவன் உன்னை உண்மையாக போற்றவில்லை. அவரிடத்தில் நான் இருந்தால், உனக்கு உயர் பதவி கொடுத்திருப்பேன்”.

தேவன் - அவர் கண்களுக்கு முன்பாக சகலமும் நிர்வாணமாயும் வெளியரங்கமாயுமுள்ளது (எபிரெயர் 4:13) - லூசிபரின் நடவடிக்கைகளை

நிச்சயமாய் அறிந்திருந்தார். அவனுக்கு தன் எதிர் எழுச்சியைத் திட்டமாய் நடத்த கால அவகாசம் கொடுத்து பின்னரே நடவடிக்கையை தேவன் எடுப்பார். உன் அழகினால் உன் இருதயம் மேட்டிமையாயிற்று; உன் மினுக்கினால் உன் ஞானத்தைக் கெடுத்தாய் (எசேக்கியேல் 28:17). லூசிபரின் சிறந்த ஞானமும் அழகும் அவன் இருதயத்தை பெருமையினால் நிறைத்தது. அவன் வீழ்ச்சிக்கு அதுவே காரணமாயிற்று.

இதுகூட லூசிபரை செயல்படும்படித் தூண்டியது. ஏசாயா 14:13-14இல் "நான் வானத்துக்கு ஏறுவேன், தேவனுடைய நட்சத்திரங்களுக்கு மேலாக என் சிங்காசனத்தை உயர்த்துவேன்; வட புறங்களிலுள்ள ஆராதனைக் கூட்டங்களின் பர்வதத்திலே வீற்றிருப்பேன் என்றும் நான் மேகங்களுக்கு மேலாக உன்னதங்களில் ஏறுவேன்; உன்னதமானவருக்கு ஒப்பாவேன் என்றும் நீ உன் இருதயத்தில் சொன்னாயே."

அநேக மனிதர்களும் பெண்களும் பெருமையின் காரணமாக விழுந்து போகிறார்கள். மற்ற எல்லாப் பாவத்தையும் சேர்த்துப் பார்த்தாலும் அதைவிடப் பெருமை கொடியது.

லூசிபரின் விழுதலுக்குத் தொடர்ந்து பெருமையே காரணம் என்பதை நாம் எல்லோரும் மனதில் கொள்ளுவது அவசியம். சாத்தான் மனித வர்க்கத்தைப் பாவம் செய்ய வைப்பதற்கு அவர்களைச் சோதனைக்கு உட்படுத்துவது அவனுடைய முக்கிய நோக்கமாக இருக்கிறது. அநேக மனிதர்களும் பெண்களும் பெருமையின் காரணமாக விழுந்து போகிறார்கள். மற்ற எல்லாப் பாவங்களையும் சேர்த்துப் பார்த்தாலும் அதை விடப் பெருமை கொடியது.

தீருவின் இளவரசன் (ஒரு மனிதன்), தீருவின் அரசன் (ஒரு வானமண்டல வாசி) ஒரு எடுத்துக்காட்டாகக் காணப்பட்டு வரலாறு முழுவதிலும் வான மண்டலங்களிலுள்ள சாத்தானின் தேவ புத்திரர்கள் இவ்வுலகத்தை ஆளுகைச் செய்பவர்களின் செயல்களைக் கட்டுப்படுத்துவதில் இடைப்படுகிறார்கள்.

அவர்களுடைய உறவுகள் கூட முன்னோட்டமான உறவுகளாகச் சாத்தானுக்கும் அந்திக்கிறிஸ்துவுக்கும் இடையில் விரிவாக்கப்படுகிறது. நாம் சென்ற அத்தியாயத்தில் பார்த்தவாறு, சாத்தான் அந்திக்கிறிஸ்துவை இந்த முழு உலகத்திலுள்ள மக்கள் செய்யும் ஆராதனைகளையும் தனக்குச் சாதகமாக்கிக் கொள்ள உபயோகப்படுத்துவான். "அந்த மிருகத்திற்கு அப்படிப்பட்ட அதிகாரம் கொடுத்த வலுசர்ப்பத்தை வணங்கினார்கள். அல்லாமலும்: மிருகத்திற்கு ஒப்பானவன் யார்? அதினோடே யுத்தம்பண்ணத்தக்கவன் யார்? என்று சொல்லி, மிருகத்தையும் வணங்கினார்கள்" வெளிப்படுத்தின விசேஷம் 13:4.

எப்பொழுதும் ஆராதனை செய்வது அவசியமாவதால் அதனை தேவனுக்கு மட்டுமே செய்ய வேண்டும். சாத்தான் இந்த முழு உலகத்தின் எல்லா ஆராதனைகளையும் நானே ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று தான் முதலிலேயே தீர்மானித்தபடி இறுதியாக உரிமை பாராட்டுவான். இதனால் தேவனுக்குச் சரிசமமாக இருக்க விரும்புவான்.

சாத்தானின் இராஜ்யத்தின் இருப்பிடம்

தேவனுக்கு விரோதமாகப் போராட்டம் செய்த சாத்தானும் அவனோடு சேர்ந்த தேவ புத்திரர்களும் பரலோகத்திலிருந்து தள்ளப்பட்டார்கள். ஆனால் அவர்கள் இன்னும் கீழே பூமியில் தள்ளப்படவில்லை. பரிசுத்த பவுல் அவர்களை “வான மண்டலத்திலுள்ள பொல்லாத ஆவிகள்” என்று குறிப்பிடுகிறார் (எபேசியர் 6:12).

கொலோசெயர் 1:16இல் பரிசுத்த பவுல், இயேசு கிறிஸ்துவின் மூலமாக தேவனால் படைக்கப்பட்ட நான்கு முக்கிய வானமண்டல வாசிகளைப் பற்றி வரிசைப்படுத்துகிறார். சிங்காசனங்கள், கர்த்தத்துவங்கள், துரைத்தனங்கள், அதிகாரங்கள். எபேசியர் 6:12இல் சாத்தானுடைய எதிர்ப்பில் இரண்டு உயர்ந்த வரிசையில் சாத்தானோடு சேர்ந்து போரிடுகிற துரைத்தனங்களையும், அதிகாரங்களையும் பவுல் குறிப்பிடுகிறார். சிங்காசனங்களும் ஆளுகைகளும் சாத்தானுடைய சூழ்ச்சியில் வீழ்ந்துபோகவில்லை என்பதை இதன் மூலம் அறிந்து கொள்ளலாம்.

வேதத்தின் ஆரம்ப வசனத்தில் பூமியை ஒருமையாகவும் பரலோகத்தைப் பன்மையாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. “ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்.” (ஆதியாகமம் 1:1) பவுல் “மூன்றாம் வானம் வரை எடுக்கப்பட்ட ஒரு மனிதனைப்” பற்றி பேசுகிறார் (2 கொரிந்தியர் 12:2). நிச்சயமாக அங்கே முதலாம் வானம், இரண்டாம் வானம் இல்லாமல் மூன்றாவது வானம் மட்டும் இருக்க முடியாது.

பவுல் சொல்லுகிறார்: இந்த மனிதன் மூன்றாவது வானத்திற்குள் சென்று ‘‘அந்த மனுஷன் பரதீசுக்குள் எடுக்கப்பட்டு மனுஷர் பேசப்படாததும் வாக்குக்கெட்டாததுமாகிய வார்த்தைகளைக் கேட்டானென்று அறிந்திருக்கிறேன்’’ (2 கொரிந்தியர் 12:3). இது எதைக்காட்டுகிறதென்றால் மூன்றாவதும் மிக உயர்ந்ததுமான வானமாகிய இந்த இடம்தான் மிக மிகப் பரிசுத்தமான இடமாகவும், தேவன் வசிக்கும் இடமாகவும் உள்ளது. முதலாவது வானம், பூமியிலிருந்து பார்க்கக்கூடியதாக இருக்கும்பொழுது, இரண்டாவது வானம் பூமியிலிருந்து பார்க்கக்கூடிய முதல் வானத்திற்கும் தேவன் வசிக்கும் இடமாகிய மூன்றாவது வானத்திற்கும் மத்தியில் எங்காவது ஒரு இடத்தில்

இருக்க வேண்டும் என்பது நிச்சயம். இவ்வாறான இரண்டிற்கும் நடுவிலான வானம் சாத்தானின் இராஜ்யத்திற்கு இருப்பிடமாகும் என்று நான் நம்புகிறேன்.

இந்தக் கருத்தைத் தானியேலின் புத்தகத்திலிருந்து உறுதிப்படுத்தலாம். தானியேல் 10:2-12இல் தானியேல் தன்னை மூன்று வாரம் துக்கங்கொண்டாடுவதிலும் சில வேளைகளில் உபவாசத்திலும் தரித்திருந்தபொழுது ஒரு தேவ புருஷன் அவனுக்கு முன்பாகத் தோன்றி அவனிடத்தில் பேசினான்.

> அப்பொழுது அவன் என்னை நோக்கி: தானியேலே, பயப்படாதே; நீ அறிவை அடைகிறதற்கும், உன்னை உன்னுடைய தேவனுக்கு முன்பாக சிறுமைப்படுத்துகிறதற்கும், உன் மனதைச் செலுத்தின முதல் நாள் துவக்கி உன் வார்த்தைகள் கேட்கப்பட்டது; உன் வார்த்தைகளினிமித்தம் நான் வந்தேன்.
>
> (தானியேல் 10:12)

பிறகு இந்த வானுலக மனிதன் வேறு மூன்று தேவ புத்திரர்களைக் குறிக்கிறது-தேவனுடைய பிரதான தூதனாகிய மிகாவேல், பெர்சியாவின் அதிபதி மற்றும் கிரேக்கத்தின் அதிபதி. இறுதியாகக் குறிப்பிடப்பட்ட இந்த இரண்டு தூதர்களும் சாத்தானின் தூதர்களாகும் (தானியேல் 10:13-21 வரை பார்க்கவும்).

பூமிக்குத் தானியேலினிடத்தில் வருவதற்காக தேவனிடத்திலிருந்து அனுப்பப்பட்ட தூதன் தன்னை எதிர்த்து நின்ற சாத்தானுடைய தூதர்களைச் சந்திக்கவும் மேற்கொள்ளவும் வேண்டியதாயிற்று. இது சாத்தானுடைய இராஜ்யம் வானமண்டலங்களில் அமைந்திருக்கிறது என்பதை உறுதிப்படுத்துகிறது. அதாவது தேவன் வாழுமிடமாகிய வானத்திற்கும், நாம் பூமியிலிருந்து காணும் வானத்திற்கும் நடுவில் ஏதாவது ஒரு இடத்தில் இருக்க வேண்டும். இது ஜெபத்தைக் குறித்த உண்மைகளையும் ஆவிக்குரிய யுத்தத்தையும் கூட வெளிப்படுத்துகிறது.

ஜெபத்தைக் குறித்த உண்மைகளும் ஆவிக்குரிய யுத்தமும்

1. இந்த நிகழ்வுகள் பூமியில் தானியேலிடத்திலிருந்து வந்து தொடங்கியது. அவனுடைய ஜெபத்தினாலும் உபவாசத்தினாலும் வான மண்டலங்களிலுள்ள தேவனுடைய தூதர்களின் செயல்கள் செயல்படத் தொடங்கியது.

2. சாத்தானின் இராஜ்யத்திலுள்ள தூதர்கள் மூன்றாவது வானத்திலிருந்து (தேவன் வசிக்கும் இடம்) தானியேலிடத்திற்கு அனுப்பப்பட்ட தூதனை எதிர்த்து நின்றார்கள்.

3. இந்தச் சாத்தானின் தூதர்கள் மிகவும் சக்தி வாய்ந்தவர்கள் இதனால்தான் தேவனுடைய தூதர்களுக்கு அவர்களுடைய எதிர்ப்பைத் தகர்த்தெறிய மூன்று வாரங்கள் ஆகியது.

4. முழுமையான வெற்றியை அடைவதற்குத் தானியேலுடைய ஜெபங்கள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்தது.

நாம் கற்றுக் கொள்ள வேண்டிய பாடங்கள்

தானியேலினுடைய ஜெபத்தைப் பற்றிச் சொல்லும்போது அதில் முக்கியமாகக் கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள் அடங்கியிருக்கின்றன. போரில் நம்முடைய ஜெபம் அதிக வல்லமையான பங்கை உண்டாக்கக் கூடும்.

வல்லமையான ஜெபத்திற்கான முக்கியப் பாடங்கள்

1. நம்முடைய ஜெபத்தின் மூலமாக வானத்திலுள்ள தேவனை அசைவாடச் செய்ய முடியும். சில வேளைகளில் தேவன் இப்பூவுலகில் நமக்காகக் காத்திருந்து உதவுவதற்கு ஆரம்பிப்பார்.

2. நம்முடைய ஜெபங்கள் வானத்திலுள்ள தேவனுடைய சிங்காசனத்தை எட்டுவதற்கு வான மண்டலங்களிலுள்ள சாத்தானின் இராஜ்யத்தின் வழியாகக் கடந்து செல்ல வேண்டும். இதற்காக அவர்கள் இயற்கைக்கு அப்பாற்பட்ட அதிகாரத்தைப் பெற்றிருக்க வேண்டும். “தேவனுடைய இராஜ்யம் பேச்சிலே அல்ல பெலத்திலே உண்டாயிருக்கிறது” (1 கொரிந்தியர் 4:20).

3. ஆதலால் நம்முடைய ஜெபங்களில் துதித்தலும் நன்றி செலுத்துதலும் நிறைந்திருப்பதாக நடைமுறைப்படுத்துவது அவசியமாகும். நம்முடைய ஜெபத்தைத் தேவனுடைய சிங்காசனத்திற்கு எடுத்துச் செல்வதற்கு இது ஒரு துணை உந்துகலத்தினால் “உந்தப்படும் ஏவுகணை” போல செயல்படுகிறது.

எல்லா மனுஷருக்காகவும் விண்ணப்பங்களையும் ஜெபங்களையும், வேண்டுதல்களையும், ஸ்தோத்திரங்களையும் பண்ண வேண்டும். (1 தீமோத்தேயு 2:1ஐப் பார்க்கவும்)

4. உபவாசமானது நமது ஆவிக்குரிய உணர்வுத்திறத்தை அதிகப்படுத்துகிறது. மேலும் ஜெபிப்பதற்கும் இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையையும் கூடுதலாகப் பெற முடியும். சில சாத்தானுடைய சேனைகள், உபவாசத்தோடு கூடிய ஜெபத்திற்குத்தான் அடிபணியும்.

அடுத்த அத்தியாயத்தில் சாத்தானுடைய இராஜ்யத்தின் எதிர்க்கும் தூதர்களோடு நமக்கு உள்ள போராட்டத்தில் தேவனால் நமக்குக் கொடுக்கப்பட்ட பலவகையான ஆவிக்குரிய பாதுகாப்பைப் பற்றிக் காணலாம்.

18

ஆவிக்குரிய பாதுகாப்பிற்கான கோட்பாடுகள்

தேவனுடைய இராஜ்யத்திற்கான கிறிஸ்தவர்களான நாம் மறுபிறப்பு அடையும்பொழுது, எதிர்க்கும் ஒரு ஆவிக்குரிய இராஜ்யம் அதாவது சாத்தானுடைய இராஜ்யத்தோடு போரிடுவதற்காகப் பிடிக்கப்படுகிறோம் என்பதைக் கண்டுபிடிக்க வேண்டும். இதில் நம்முடைய சொந்த விருப்பம் எதுவும் இல்லை. ஏனெனில் நாம் சொந்தம் பாராட்டும் இராஜ்யமானது போரிடுவதில் உள்ளது. நாமும் அந்தப்போரின் ஒரு பகுதியாவோம். நமக்குப் பல வகையான விரோதிகள் இருக்கின்றனர் என்பதையும் கண்டு கொள்ள வேண்டும். ஆனால் மிகவும் வல்லமையான எதிர்த்து நிற்கமுடியாத வான மண்டலங்களிலுள்ள தேவ தூதர்களின் கூட்டமான ஒரு இராஜ்யம் உள்ளது. அது தேவனுடைய அதிகாரத்தின் கீழ் உள்ள பிரதான விரோதியான சாத்தானின் இராஜ்யமாகும்.

நமக்கு இப்படிப்பட்ட வல்லமையான விரோதிகள் இருப்பதினால் தேவனால் நமக்கு அருளப்பட்ட பாதுகாப்பை நாமாகவே எடுத்துக் கொள்ளுவது மிகவும் அத்தியாவசியமாகிறது. இந்த அத்தியாயத்தில் கிறிஸ்தவர்களுக்குப் பொருந்தக் கூடிய மூன்று மாற்ற முடியாத தேவைகளைப் பற்றி மீள்பார்வையாகக் காணலாம்.

அதிகாரத்தைப் புரிந்து கொள்ளுதல்

நாம் அறிந்து கொண்டபடி, கிறிஸ்தவப் பெண்களுக்கு தங்கள் மேல் ஆன ஆவிக்குரிய அதிகாரத்திற்கான பாதுகாப்பு தேவைப்படுகிறது. இதற்கு அடையாளமாகப் பெண்கள் தங்கள் தலையில் முக்காடிட்டுக் கொள்ள வேண்டும். ஆனால் இது கொள்கையளவிலான ஒரே ஒரு உதாரணமாகப் பொதுவாக, எல்லா கிறிஸ்தவர்களுக்கும் பெண்கள் மற்றும் ஆண்கள் இருவருக்கும் பொருந்துவதாக அமைந்துள்ளது. ஒவ்வொரு கிறிஸ்தவனும் பொருத்தமான வசனத்திற்குரிய அதிகாரத்தின் பாதுகாப்பிற்குள் வருவது அவசியமாகிறது.

லூக்கா 7:1-10 வரையிலான வசனங்களில் எப்படி ஒரு ரோமனான நூற்றுக்கதிபதி, மரணப்படுக்கையில் இருக்கும் தனது வேலைக்காரன் சுகம் பெறுவதற்காக இயேசுவினிடத்தில் சில யூத மூப்பர்களை அனுப்புகிறார் என்பது குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த வேலைக்காரனுக்கு சுகம் அளிப்பதற்காக இயேசு அங்கே வருகிறேன் என்று சொன்னதற்கு அந்த நூற்றுக்கதிபதி கீழே வருமாறு பதில் கூறுகிறார்:

> அப்பொழுது இயேசு அவர்களுடனே கூடப் போனார். வீட்டுக்கு சமீபமானபோது, நூற்றுக்கதிபதி தன் சிநேகிதரை நோக்கி; நீங்கள் அவரிடத்தில் போய், ஆண்டவரே! நீர் வருத்தப்பட வேண்டாம்; நீர் என் வீட்டு வாசலுக்குள் பிரவேசிக்க நான் பாத்திரன் அல்ல; நான் உம்மிடத்தில் வரவும் என்னைப் பாத்திரனாக எண்ணவில்லை; ஒரு வார்த்தை மட்டும் சொல்லும். அப்பொழுது என் வேலைக்காரன் சொஸ்தமாவான். நான் அதிகாரத்திற்குக் கீழ்ப்பட்டவனாயிருந்தும், எனக்குக் கீழ்ப்பட்டிருக்கிற சேவகருமுண்டு; நான் ஒருவனைப் போவென்றால் போகிறான், மற்றொருவனை வாவென்றால் வருகிறான்; என் வேலைக்காரனை, இதைச் செய்யென்றால் செய்கிறான் என்று நான் சொன்னதாகச் சொல்லுங்கள் என்று அவர்களை அனுப்பினான்”.
>
> (லூக்கா 7:6-8)

நானும் “அதிகாரத்திற்குட்பட்ட ஒரு மனிதனாயிருக்கிறேன்” என்று சொன்னதினிமித்தம் நூற்றுக்கதிபதி, ஆவிக்குரிய மண்டலத்தில் இயேசுவின் அதிகாரத்தைப் போன்று ரோமப் படையில் நூற்றுக்கதிபதியாக இருக்கும் தனது ஒத்திசைவான மண்டலத்திலுள்ள அதிகாரத்தை அறிந்து கொண்டார். இந்த ஒவ்வொருவரின் நிலையிலும் அவர்களின் அதிகாரம் மற்றொரு உயர்ந்த அதிகாரத்திற்குக் கீழ்ப்பட்டதிலிருந்து உண்டாகிறது. இந்த நூற்றுக்கதிபதியின் உயர் அதிகாரி ரோம சக்கரவர்த்தியாவார். இயேசுவின் அதிகாரி தேவனாகிய பிதாவானவர் ஆவார்.

‘‘எனக்கு அதிகாரம் இருந்தாலும்’’ நான் ‘‘அதிகாரத்திற்குக் கீழ்ப்பட்டிருக்கிறேன்’’ என்கிறான். அவன் வேதத்தின் ஒரு அடிப்படையான கொள்கையை உறுதிப்படுத்துகிறான். ஒருவன் அதிகாரத்தைப் பெற்றுக்கொள்ளுவதற்கு அவன் மற்றொரு அதிகாரத்தின் கீழே இருக்க வேண்டும். அதிகாரம் எப்பொழுதும் கீழ் நோக்கி வருகிறது.

இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்குப் பின்பு வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று அவர் சொன்னார் (மத்தேயு 28:18). அங்கே அதிகாரம் தொடர்ச்சியாக

வருகிறது. தேவனாகிய பிதாவின் வழியாக குமாரனாகிய இயேசு கிறிஸ்துவுக்கு வருகிறது. குமாரனிடத்திலிருந்து இந்தப் பிரபஞ்சத்தின் ஒவ்வொரு சூழ்நிலையிலும் காணப்படுகிறது. இவ்வுலகத்திலுள்ள ஒவ்வொரு குடும்பத்திலும் அதற்குரிய, கீழ்நோக்கித் தொடர்ச்சியாக வரும் அதிகாரத்தை வரையறுத்துப் பரிசுத்த பவுல் விளக்குகிறார். “ஒவ்வொரு புருஷனுக்கும் கிறிஸ்து தலையாயிருக்கிறாரென்றும், ஸ்திரீக்குப் புருஷன் தலையாயிருக்கிறானென்றும், கிறிஸ்துவுக்குத் தேவன் தலையாயிருக்கிறாரென்றும், நீங்கள் அறிய வேண்டுமென்று விரும்புகிறேன்” (1 கொரிந்தியர் 11:13). உதாரணமாக ஒரு மணமான தம்பதியரைப் பொறுத்த வரையில் அதிகாரம் தேவனாகிய பிதாவினிடத்திலிருந்து அவர் வழியாக குமாரனாகிய இயேசுவினிடத்திற்கும், அவரிடத்திலிருந்து புருஷனுக்கும், புருஷனிடத்திலிருந்து ஸ்திரீக்கும் கீழ்நோக்கி வருகிறது.

ஆனால் வீட்டிலே எது உண்மையாக இருக்கிறதோ? அது வாழ்க்கையின் ஒவ்வொரு துறைக்கும் பொருந்துவதாகும். இது எல்லா கிறிஸ்தவர்களுக்கும் உரியதாகும். ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் உரிய அதிகாரத்தின் பாதுகாப்பிற்குட்பட்டு இயங்குவது தேவைப்படுகிறது. ஒரு கிறிஸ்தவன் அதிகாரத்திற்குட்படாவிட்டால் அவன் பாதுகாப்பற்ற கிறிஸ்தவனாவான்.

சபையில் உள்ள அதிகாரம்

தேவனுடைய முதலாவது தேவை என்னவென்றால் நமது பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் கிரியை செய்யும் கிறிஸ்துவின் அதிகாரத்திற்கு ஒவ்வொரு ஸ்தல சபையும் மதிப்புக் கொடுக்க வேண்டும். பரிசுத்த பவுல், ‘‘தேவன் எல்லாவற்றையும் இயேசுவினுடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தி” என்று எபேசியர் 1:22இல் கூறுகிறார். சபை என்பதற்கு கிரேக்க வார்த்தை ‘‘ எக்ளீசியா’’ (Ekklesia). அதனுடைய மூல அர்த்தம்-எக்ளீசியா என்பது ஒரு மாநில நகரத்திலுள்ள ஒரு குழுவான நகரவாசிகளாகும் (ஏதென்ஸ் போல) அவர்கள் அந்த நகரத்தின் கூட்டப்பட்ட அரசியல் அமைப்பாவார்கள். கிறிஸ்தவர்களுக்காகப் பார்க்கும்போது இயேசு தனது மீட்புப் பணியில் அதிகாரத்தைத் தமது சபையின் மூலம் செயல்படுத்துவதைக் குறிக்கிறது. இதுதான் எக்ளீசியா என்பதன் உள்ளான பொருளாகும்.

அதிகாரத்தின் கீழ் இல்லாத ஒரு கிறிஸ்தவன் பாதுகாப்பு இல்லாத ஒரு கிறிஸ்தவன் ஆவான்.

ஆதலால் தேவனின் அதிகாரத்தின் கீழ் இருப்பது என்பது தேவனுடைய சபைக்குக் கீழ் இருப்பதற்கு ஒப்பாகும். சபைக்கு அவரால் கொடுக்கப்பட்ட அதிகாரத்திற்கு நாம் மதிப்பு கொடுக்காவிட்டால் நம்மேல் உள்ள கிறிஸ்துவின் அதிகாரத்திற்கு நாம் உரிமை பாராட்ட முடியாது.

இது பரிசுத்த பவுலை அப்போஸ்தலனாக நியமிக்கப்பட்டதை விளக்குகிறது. “நம்முடைய இரட்சகராயிருக்கிற தேவனும், நம்முடைய நம்பிக்கையாயிருக்கிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவும் கட்டளையிட்டபடியே, இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலனாயிருக்கிற பவுல்” என்பதால் பவுல் தன்னை அப்போஸ்தலனாக அழைக்கிறார். பரிசுத்த பவுலின் அப்போஸ்தலத்துவத்தின் முழுமையான அதிகாரமும் பரலோகத்தில் தேவனாகிய பிதா, குமாரனாகிய கிறிஸ்து ஆகியவர்களால் தீர்மானிக்கப்பட்டதாகும். ஆனால் “அப்போஸ்தலன்” என்பதற்கான விளக்கம் என்னவென்றால் “அனுப்பப்பட்டவன்” என்பதாகும். ஆகையால் பவுலினுடைய அப்போஸ்தலத்துவம் ஸ்தல சபையான அந்தியோகியாவிலிருந்து ‘‘அனுப்பப்படும்வரை’’ பயனுள்ளதாக அமையவில்லை.

அப்போஸ்தலர் 13:1இல் பவுல் (இன்னும் சவுல் என்றே அழைக்கப்படுகிறவர்) ஐந்து வகையான மனிதர்களை வரிசைப்படுத்துகின்றார். அவர்களில் ஒருவரை தீர்க்கதரிசி என்றும் போதகர் என்றும் கூறுகிறார். அதன் பிறகு பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலால் மற்ற மூன்று மனிதர்களும், பர்னபாவின் மேலும் சவுலின் மேலும் கைகளை வைத்து ஊழியத்திற்கு அனுப்பி வைத்தார்கள். அதன் பின்பு இருவரும் அப்போஸ்தலர்கள் என்று அழைக்கப்பட்டார்கள் (அப்போஸ்தலர் 14:4,14 ஐப் பார்க்கவும்). பரிசுத்த பவுல் அப்போஸ்தலனாக நியமிக்கப்பட்டது பரலோகத்தில் முடிவெடுக்கப்பட்ட ஒன்றாகும். ஆனால் அவனது ஊழியம் இவ்வுலகத்திலுள்ள ஒரு ஸ்தல சபையினால் ஒத்துக்கொள்ளப்பட்டு அதன் மூலம் செயல்பட ஆரம்பித்தபொழுதுதான் ஆற்றல்மிக்கதாக அமைந்தது.

உலகளாவிய ஊழியத்தின் ஐம்பது ஆண்டுகளுக்கு மேலான காலத்தில் நான் எப்பொழுதும் கிறிஸ்துவின் அதிகாரத்திற்குள் இயங்கும் ஒரு ஸ்தல சபைக்கு மதிப்புக்கொடுத்து அதனால் அறிந்து கொள்ளப்படுவதையே தேடினேன். முதலாவது நானும் எனது முதல் மனைவி லிடியாவும், பின்பு நானும் எனது இரண்டாவது மனைவி ரூத்தும் எங்கெல்லாம் நாங்கள் குடியிருக்கிறோமோ அங்கெல்லாம் ஒரு ஸ்தல சபையின் அங்கத்தினர்களால் அறிந்துகொள்ளப்படுவதை விரும்புவோம். நாங்கள் ஊழியத்திற்காகப் பயணம் செய்யும்பொழுது நாங்கள் ஒரு ஸ்தல சபையின் மூலமாகத்தான் அதிகாரப்பூர்வமாக

அனுப்பப்படுவோம். நாங்கள் திரும்பி வரும்பொழுது எங்களை அனுப்பிய சபைக்கு ஒரு அறிக்கையைச் சமர்ப்பித்து விடுவோம். இதுவேதான் பரிசுத்த பவுலினாலும் பர்னபாவினாலும் உருவாக்கப்பட்ட ஒரு முறைமையாகும் (அப்போஸ்தல் 13:3 மற்றும் 14:26-27).

சில கிறிஸ்தவர்கள் பரிபூரணமான சபையைத் தேடுகின்றனர். நான் இதுவரை அப்படிப்பட்ட ஒரு சபையைக் காணவில்லை என்று ஒத்துக்கொள்கிறேன். அப்படிப்பட்ட ஒரு சபையைக் கண்டுபிடித்தாலும் நான் அதில் சேரமாட்டேன் என்பதைச் சொல்ல விரும்புகிறேன். ஏனென்றால், நான் அந்தச் சபையில் சேர்ந்த பின் அந்தச் சபை பூரணப்பட்ட சபையாக இருக்காது. இருந்தபொழுதிலும், பூரணமற்ற ஸ்தல சபைகளின் மூலமாக நான் பெற்றுக்கொண்ட சகல நன்மைகளுக்காகவும் நன்றியுள்ளவனாக இருக்கின்றேன்.

பரிசுத்த பவுல் மறுபடியும் இங்கே இவ்வுலகத்தில் உள்ள தேவ ஜனங்களைப்பற்றி இரண்டாவதாக படம் பிடித்துக் காட்டுகிறார். அவர் "சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார்" (எபேசியர் 1:22-23). பவுல் இதே கருத்தை 1 கொரிந்தியர் 12:27இல் விரிவாகக் கூறுகிறார். "நீங்களே கிறிஸ்துவின் சரீரமாயும், தனித்தனியே அவயவங்களாயுமிருக்கிறீர்கள்" (1 கொரிந்தியர் 12:27). சரீரத்தைக் குறித்து அவர் பலவகையான எடுத்துக்காட்டுகளைக் கூறி ஆணித்தரமாகக் கூறுவது என்னவென்றால் கிறிஸ்தவர்களாகிய நாம் ஒருவரையொருவர் சார்ந்தும் ஒருவருக்கொருவர் உதவிபுரிந்தும் இருப்பது தேவையாகும்.

மிகவும் முழுமையான கிறிஸ்துவின் சரீரமாகிய சபையின் அதிகாரத்தைப் பற்றி எபேசியரில் கூறப்பட்டுள்ளது. அது மிகவும் முக்கியமானது. ஆகையால் இந்த நிருபம் முழுவதிலுமாகப் பவுல் அடிக்கடி கிறிஸ்தவர்களைப் பற்றி பன்மையிலேயே குறிப்பிடுகிறார். அவர் தனிப்பட்ட கிறிஸ்தவர்களைப் பற்றி எதுவும் கூறவில்லை. எடுத்துக்காட்டாக எபேசியர் 1:3-12 வரை பவுல் கீழே வருமாறு குறிப்பிடுகிறார். தேவன் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார் - நம்மைத் தெரிந்து கொண்டிருக்கிறார் - நம்மை முன்குறித்திருக்கிறார் - அவரை நாம் ஏற்றுக்கொள்ளும்படி செய்தார் - பாவ மன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டு - தம்முடைய தயவுள்ள சித்தத்தின் இரகசியத்தை நமக்கு அறிவித்திருக்கிறார்- கிறிஸ்துவுக்குள் அவருடைய சுதந்தரமாகும்படி தெரிந்துகொள்ளப்பட்டோம் - நாம் அவருடைய மகிமைக்குப் புகழ்ச்சியாயிருக்க வேண்டும்.

மற்ற நிருபங்களையும் கவனமாக வாசிக்கும்பொழுது, ஆரம்பம் முதல் முடிவு வரை இதே செய்தி கூறப்படுவதை உறுதி செய்யலாம். அங்கே தனிப்பட்டவர்களுக்கு வாக்குத்தத்தமோ, ஜெபமோ இல்லை.

கடைசி ஆறு வசனங்கள் மட்டும் ஒரு சின்ன விதிவிலக்காக அமைகிறது. பவுல் தனக்காகச் சிறப்பான ஜெபங்களை ஏறெடுக்குமாறு கேட்டு இதனை முடிவுறச் செய்கிறார்.

கிறிஸ்துவின் சரீரத்தின் அவயவங்களை ஒருமுகப்படுத்துதல் எபேசியர் 6:10-18இல் உச்சக் கட்டத்தை எட்டுகிறது. 12 ஆம் வசனத்தில் பவுல் ஆவிக்குரிய யுத்தத்தைப் பற்றிப் பேசுகிறார். இதன் எல்லா முக்கியமான வார்த்தைகளும் அதாவது தேவனுடைய ஜனங்களைப் பற்றிக் குறிப்பிடுவதாக இருந்தாலும் அவர்களை எதிர்த்து நிற்கும் சக்திகளாக இருந்தாலும் பன்மையில் கூறப்பட்டுள்ளன. நாம் மாம்சத்தோடும், இரத்தத்தோடும், துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும் பொல்லாத ஆவிகளோடும் அவைகளுக்கு எதிராகப் போரிட வேண்டியதாயுள்ளது.

இப்படியாக ஆவிக்குரிய யுத்தமானது தனிப்பட்ட நபர்களுக்கு மத்தியில் உள்ள போராட்டமாக இல்லாமல் இருப்பது உறுதியாகக் கூறப்பட்டுள்ளது. ஆனால் எதிர்க்கும் படைகளுக்கு மத்தியில் உள்ள ஒரு விரிவான போராக உள்ளது. சுற்றித்திரிபவர் தனிப்பட்ட முறையில் தங்களுடைய இலக்கை அடைவதற்கு வழிவகையே கிடையாது. வெற்றி பெறுவதற்கு கட்டுப்பாடும் கூட்டு முயற்சியும் தேவனுடைய மனிதர்களுக்கு தேவைப்படுகிறது. அவர்கள் ஒரு சரீரத்தின் அவயவங்களாகச் சேர்ந்து செயல்பட வேண்டும். இதற்குக் கட்டுப்பாடும் ஆவிக்குரிய அதிகாரத்திற்கு அர்ப்பணிக்கத் தயாராக இருப்பதும் அவசியமாகிறது.

ஒழுங்கின்மையைப் புரிந்து கொள்ளுதல்

இந்தத் தற்காலம் முடிவுறும்பொழுது இயேசு தனது சீஷர்களுக்கு எச்சரித்த அக்கிரமங்கள் பொங்கி எழும் என்பது கவனத்தில் கொள்ள வேண்டிய ஒரு அம்சமாகும். “அக்கிரமம் மிகுதியாவதினால் அநேகருடைய அன்பு தணிந்துபோம்'' (மத்தேயு 24:12). அநேகக் கிறிஸ்தவர்கள் இப்படிப்பட்ட அக்கிரமங்களினால் பாதிக்கப்பட்டு அதன் விளைவாகத் தேவனிடத்திலும், தேவனுடைய ஜனங்களிடத்திலுமுள்ள அவர்களுடைய அன்பு தணிந்து போகும் என்பதை இயேசு சுட்டிக் காட்டுகிறார்.

அக்கிரமத்தின் முக்கிய அம்சம் என்னவென்றால், நாம் கீழ்ப்படிய வேண்டிய காரியங்களைக் குறித்து கவனமற்றிருப்பதே. இது நம்முடைய தற்கால பண்பாட்டில் தெளிவான அம்சமாக வளர்ந்து கொண்டிருக்கிறது. எந்தச் சட்ட திட்டங்களும் ஒவ்வொரு மனிதனுடைய தனிப்பட்ட சுதந்தரத்தில் தலையிடுவதாக இருந்தால் அதற்குப் பரந்த அளவில் எதிர்ப்பு உண்டாகிறது. மக்கள் தங்களுடைய “உரிமைகளை” நிலை நிறுத்துவதில்

ஸ்திரமாக இருக்கின்றனர். இருந்தாலும் தங்களுக்குரிய தொடர்புள்ள பொறுப்புகளை ஏற்றுக்கொள்வதற்குத் தயங்குகின்றனர். சில வேளைகளில் இதன் விளைவு என்னவென்றால் இதனால் குழப்பத்தை அடைய வேண்டியதாகும். இந்த வகையான எண்ணங்களிலிருந்து கிறிஸ்தவர்களாகிய நாம் நம்மைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும். நியாயமான மதச் சார்பற்ற அதிகாரத்திற்கு மதிப்புக் கொடுப்பது அவசியமாகும்.

ஒழுங்கின்மையின் முக்கிய அம்சம் என்னவென்றால், நாம் கீழ்ப்படிய வேண்டிய காரியங்களைக் குறித்து கவனமற்றிருப்பதே.

ஆனால் முதலாவதாகவும் முக்கியமானதாகவும் நாம் நம்முடைய பிதாவாகிய தேவனுக்கும் நம்முடைய இரட்சகராகிய இயேசுவிற்கும் மதிப்பு கொடுத்து கீழ்ப்படிதலையும் உண்டாக்கி அதனைக் காத்துக்கொள்ள வேண்டும். இதனால் தேவனுடைய வார்த்தையாகிய வேதத்திற்கு மதிப்பையும் கீழ்ப்படிதலையும் கொடுத்து நம்முடைய எண்ணத்தையும் வெளிப்படுத்த வேண்டும்.

இயேசு சொல்கிறார்: “ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான் . . . என்னில் அன்பாயிராதவன் என் வசனங்களைக் கைக்கொள்ளமாட்டான்” (யோவான் 14:23-24). தேவனிடத்தில் அன்புகூருவதற்கு நாம் உரிமை பாராட்ட வேண்டும். நாம் நீண்ட ஜெபம் பண்ணலாம், சொல் திறமிக்க ஜெபங்களை ஏறெடுக்கலாம், நீண்ட போதகங்களைப் போதிக்கலாம், சொல் திறமிக்க பிரசங்கங்களைப் பண்ணலாம், ஆனால் இறுதியில் நாம் உண்மையாக தேவனை மகிமைப்படுத்துவதும் அவருக்குக் கீழ்ப்படிவதும் இல்லை. அதற்கு மேலாக அவருடைய வசனத்திற்கு மதிப்புக் கொடுப்பதும் அதற்குக் கீழ்ப்படிவதும் இல்லை. மிகுந்த அக்கிரமங்களுக்கு மத்தியில் இருக்கும் நாம் ஒவ்வொருவரும் ஒரு புதிதான தீர்மானத்தை எடுத்துக்கொண்டு வேதத்தின் அதிகாரத்திற்கு முழுமையாக ஒப்புக்கொடுக்க வேண்டும். ஏனெனில் “வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது” (2 தீமோத்தேயு 3:16).

நம்முடைய தனிப்பட்ட உறவில் ஒழுங்கின்மை

தேவன் நம்மிடத்தில் எதிர்பார்க்கிற இரண்டாவது மற்றும் மூன்றாவது காரியங்கள் நம்முடைய வாழ்வின் பாதுகாப்பையும் தனிப்பட்ட உறவுகளையும் குறித்ததாகும். அவைகள் யாதெனில் மன்னிக்கும் தன்மை மற்றும் அர்ப்பணிப்பாகும். தேவனுக்கும் தேவனுடைய வார்த்தைக்கும் நம்முடைய அர்ப்பணிப்பானது மேலே கூறப்பட்ட இரண்டு

முக்கியமானவையாகும். இவைகளினால் நாம் பரிசோதிக்கப்படுகிறோம். தேவனும் நமக்கு மிகவும் கண்டிப்பான சட்டங்களை நமக்காக வகுத்து வைத்திருக்கிறார். மற்றவர்களை நாம் மன்னிக்க வேண்டும்.

இதற்கு உதாரணமாக அவர்:

> நீங்கள் நின்று ஜெபம் பண்ணும்பொழுது, ஒருவன் பேரில் உங்களுக்கு யாதொரு குறை உண்டாயிருக்குமானால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களை உங்களுக்கு மன்னிக்கும்படி, அந்தக் குறையை அவனுக்கு மன்னியுங்கள். நீங்கள் மன்னியாதிருப்பீர்களானால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவும் உங்கள் தப்பிதங்களை மன்னியாதிருப்பார் என்றார்.
>
> மாற்கு 11:25-26

மீண்டுமாக, இயேசு தனது சீஷர்களுக்குக் கற்பித்த மாதிரி ஜெபத்தின் இறுதியில் மத்தேயு 6:9-13இல் அவர் ஒரே ஒரு கட்டளையைக் கொடுக்கிறார். "மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னித்தால், உங்கள் பரமபிதா உங்களுக்கும் மன்னிப்பார். மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னியாதிருந்தால் உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களையும் மன்னியாதிருப்பார்'' (மத்தேயு 6:14-15).

மற்றவர்களை மன்னிக்கும் மனப்பான்மை நம்முடைய உணர்வுகளை வெளிப்படுத்துவது அல்ல. ஆனால், சுயக் கட்டுப்பாட்டிற்கான செயலாகும் என்பதை நாம் எப்பொழுதும் நினைவிற்கொள்ள வேண்டும். இதற்காக வல்லமையின் ஆவியாகிய பரிசுத்த ஆவியானவரை நாம் சார்ந்திருக்க வேண்டும். "பலமும் அன்பும் தெளிந்த புத்தியுமுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார்" (2 தீமோத்தேயு 1:7).

ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து அடிபணியும் இந்த மனப்பான்மையானது வீட்டிலும் சபையிலுமான இரண்டு இடங்களிலுள்ள உறவுகளுக்கும் திறவுகோலாகும்.

இந்த எண்ணத்தை உருவாக்குவதற்கு சுயக்கட்டுப்பாடும் தேவைப்படுகிறது. எபேசியர் 5:21இல் பவுல் "தெய்வ பயத்தோடே ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருங்கள்'' என்று கூறுகிறார். ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து அடிபணியும் இந்த

மனப்பான்மையானது வீட்டிலும் சபையிலுமான இரண்டு இடங்களிலுமுள்ள உறவுகளுக்கும் திறவுகோலாகும்.

மற்றவர்களை மன்னிக்க மறுப்பவர்களும் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையற்றவர்களுமாகிய கிறிஸ்தவர்கள் வேதத்தை எதிர்த்து நிற்கிறவர்களாவர். அவர்களுடைய ஆணித்தரமான பிரச்சனையானது சட்ட திட்டங்களுக்குக் கீழ்ப்படியாமையேயாகும். அவர்கள் தங்களைச் சுற்றியிருக்கிற ஆவிகளுக்கு இடங்கொடுக்கிறார்கள். இது எதிர்ப்பைத் தாங்க முடியாத வான மண்டலங்களிலுள்ள அவர்களுடைய இரக்கமற்ற விரோதிகளால் அதாவது பொல்லாத தேவ தூதர்களால் (Evil Angels) குற்றம் உண்டாகத்தக்கதாக அவர்கள் மாறுவார்கள்.

கீழ்ப்படிதலும் பாதுகாப்பும்

பின்பு நாம் அனைத்து கிறிஸ்தவர்களுக்கும் பொருந்தக்கூடிய ஒப்புரவாக முடியாத தேவனுடைய தேவைகளை வேதம் தெளிவாக மூன்று கோணங்களில் வெளிப்படுத்துவதை சந்திக்கிறோம். முதலாவதாக ஸ்தல சபைகளின் உள்ளும் புறம்பும் செயல்படும் கிறிஸ்துவினுடைய அதிகாரத்திற்கு மதிப்புக் கொடுக்க வேண்டும். இரண்டாவதாக நமக்கு விரோதமாக தவறு செய்தவர்களும் நமக்குத் தீங்கு செய்தவர்களுமாகிய தகுதியில்லாத அவர்களை மன்னிக்க வேண்டும். மூன்றாவதாக நம்முடைய உடன் சகோதரர்களாகிய கிறிஸ்தவர்களிடம் ஒத்துப்போகக்கூடிய எண்ணம் உடையவர்களாக இருக்க வேண்டும்.

இந்த மூன்று பகுதிகளில் கீழ்ப்படியும்போது அது கிறிஸ்தவர்களுக்கு வசனத்திற்குரிய அதிகாரத்தைக் கொடுக்கிறது. இது அவர்களை வான மண்டலங்களிலுள்ள சாத்தானின் தேவ புத்திரர்களின் தாக்குதல்களிலிருந்து பாதுகாக்கிறது. இதற்கு மாறாக கீழ்ப்படியாமையானது கிறிஸ்தவர்களை இப்படிப்பட்ட தாக்குதல்கள் வரும்போது தவிர்க்க முடியாத குற்றம் செய்பவர்களாக மாற்றுகிறது.

இந்த அத்தியாயமானது தனிப்பட்ட கரிசனையோடு எழுதப்பட்டதாகும். கிறிஸ்துவின் சரீரத்தின் அவயவமாக இருந்து அநேக வருட அனுபவங்களைக் கொண்டு அதனடிப்படையில் நான், வேதத்தின் தேவையான இந்த மூன்று நிலைகளிலும் கீழ்ப்படியாமல் இருப்பதின் விளைவு மிக அதிகமான நிலையில் துக்ககரமாக முடியும் என்பதை ஒத்துக்கொள்ளுகிறேன். ஏன்? அநேக அருமையான, அபிஷேகிக்கப்பட்ட தேவனின் ஊழியர்கள் தீயவர்களாக மாறுவதற்கு இதுதான் முக்கியமான காரணம் என்று நான் நம்புகிறேன். கிறிஸ்துவால் அவருடைய சபைகளுக்கு வழங்கப்பட்ட அதிகாரத்திற்கு எல்லா வகையிலும் மதிப்புக் கொடுப்பதற்கு

தேவன் அருள்புரிய வேண்டுமென்று நான் ஜெபிக்கிறேன். நம் ஒவ்வொருவரிலும் மன்னிக்கும் மனப்பான்மையையும் அடங்கியிருக்கும் மனப்பான்மையையும் புதுப்பித்துக்கொள்ள வேண்டும்.

19

ஆவிக்குரிய போராயுதங்கள்

நாம் கிறிஸ்தவர்களான போது, வானத்திலும் பூமியிலும் மிகப்பெரிய ஆவிக்குரிய யுத்தம் நமக்கு உண்டு என்பதை நாம் அறிவோம். உன்னதங்களைத் தன் தலைமையிடமாகக் கொண்ட தீய தூதர்களும், அவனுடைய இராஜ்யமும்தான் நம்முடைய வல்லமையுள்ள, அபாயகரமான எதிரிகளாக உள்ளனர்.

தேவன், தம்முடைய ஞானத்தினாலும், கிருபையினாலும் நாம் வெற்றியைச் சுதந்தரித்துக் கொள்ளத்தக்கதாக, நமக்குத் தேவையான எல்லாவிதமான ஆயுதங்களையும் நமக்குத் தந்திருக்கின்றார். ஏனென்றால், நம்முடைய யுத்தமானது ஆவிக்குரிய தளத்தில் உள்ளது. நம்முடைய போராயுதங்களும் ஆவிக்குரியவைகளே! பவுல் அப்போஸ்தலன் 2 கொரிந்தியர் 10:4இல் "எங்களுடைய போராயுதங்கள் மாம்சத்துக்கேற்றவைகளாயிராமல், அரண்களை நிர்மூலமாக்குகிறதற்குத் தேவபலமுள்ளவைகளாய் இருக்கிறது" என்று உரைக்கின்றார்.

நம்மால் தாக்கப்படுகின்ற அரண்களும் ஆவிக்குரியவைகளே. வலிமையான அரண்களை நாம் நிர்மூலமாக்க வேண்டியதாய் உள்ளது. அநேக நூற்றாண்டுகளுக்கு முன்னதாகவே, சாத்தான் மனித இனத்தின் இருதயத்திலும், மனதிலும் அரண்களைக் கட்டி எழுப்பியுள்ளான். அந்தப் பலமான அரண்களாவன: பயம், வெறுப்பு, விக்கிரகாராதனை, பகைமை, மத பாரம்பரியம் இவை போன்ற அநேகக் காரியங்களாகும்.

அரசியல்வாதிகள் சமாதானத்திற்காக ஏறெடுக்கும் முயற்சிகளை வாய்க்காதபடிச் செய்து அவர்களை விரக்தியடையச் செய்கின்ற சக்திகள் இத்தகைய அரண்களே. அரசியல் ரீதியிலும், அறிவுப்பூர்வமாகவும் சமாதானத்திற்காக ஏறெடுக்கப்படும் முயற்சிகள், மற்றும் வாதங்கள் இத்தகைய அரண்களை நிர்மூலமாக்க சக்தியற்றவைகளாக உள்ளன.

இயேசு கிறிஸ்துவின் இராஜ்யம் நிறுவப்பட்டால் மாத்திரமே உண்மையான சமாதானம் பூவுலகத்திற்கு வரும். கிறிஸ்தவர்களுக்கு இதுதான் முக்கியக் குறிக்கோளாக இருத்தல் வேண்டும். அந்த

நோக்கத்திற்காகத்தான் நாம் ஆவிக்குரிய போராயுதங்களைப் பயன்படுத்துகிறோம். இது, ஆண்கள், பெண்கள் ஆகியோரின் மனதில் உள்ள தீய அரண்களை நிர்மூலமாக்கி இயேசு கிறிஸ்துவின் இராஜ்யத்தை நிறுவ வழிவகுக்கிறது. முதலாவது மனதிலும், முடிவாக பூமி அனைத்திலும் தேவனுடைய இராஜ்யத்தை நிறுவ உதவுகிறது.

பவுல் எபேசியர் 6:13-18இல் இதை வரிசைப்படுத்திக்காட்டுகின்றார். ஏழு ஆவிக்குரிய ஆயுதங்கள் அல்லது நமக்குத் தேவைப்படும் சர்வாயுதவர்க்கங்கள் இதில் வரிசைப்படுத்திக் கூறப்பட்டுள்ளது. அக்காலத்திலுள்ள ரோமானிய இராணுவப் பிரிவின் ஆயுதங்களையே எடுத்துக்காட்டுகளாக பயன்படுத்தியுள்ளனர். அந்த வரிசை பின்வருமாறு:

1. சத்தியம் என்னும் கச்சை

பவுல் அப்போஸ்தலர் காலத்தில் பொதுவாக ஆண்களும் பெண்களும் நீண்ட, தளர்ந்த, முழங்கால் வரையிலும் தொங்கக் கூடிய ஆடைகளையே அணிந்தனர். எந்தக் கடினமான செயல்களைச் செய்யத் தொடங்கும் முன்பும் தங்கள் தளர்ந்த ஆடைகளைச் சேர்த்து, இடையில் அதை எடுத்து சொறுகிக்கொள்வார்கள். இவ்வாறு செய்த பின்புதான் அவர்களால் பலதரப்பட்ட பணிகளை எளிதாகச் செய்ய முடியும். இதனால்தான் " உங்கள் அரைக் கச்சைகளைக் கட்டிக்கொண்டு" என்ற தொடர் வேதத்தில் பல தடவை இடம் பெற்றுள்ளது.

சத்தியம் என்னும் கச்சையை அணிய வேண்டுமானால் எல்லாவிதமான உண்மையற்றத் தன்மைகளையும் நம்மைவிட்டுக் களைந்து நல் மனம் பொருந்த வேண்டும்.

சத்தியம் என்னும் கச்சையை அணிய வேண்டுமானால் எல்லாவிதமான உண்மையற்ற தன்மைகளையும் நம்மைவிட்டுக் களைந்து நல் மனம் பொருந்த வேண்டும். உண்மையற்ற நிலைமைகளை நம்முடைய வாழ்க்கையிலிருந்து எடுத்துப்போடாவிட்டால் அது நம்முடைய ஆவிக்குரிய முன்னேற்றத்திற்குத் தடையாய் அமைந்துவிடும். அது விவாதத்திற்குரியதாய் இருந்தாலும், மக்களால் விரும்பப்படத்தக்கதாய் இல்லாவிட்டாலும், வேதத்தில் கூறப்பட்டபடி உண்மையைக் காத்துக்கொள்வதில் நாம் கருத்துடையவர்களாய் இருத்தல் வேண்டும்.

நாம் நமது எல்லாத் தனிப்பட்ட உறவுகளிலும் வெளிப்படையாகவும், முற்றிலும் உண்மையுள்ளவர்களாயும் இருத்தல் வேண்டும். இதுவே ஆவிக்குரிய வளர்ச்சிக்குத் தேவையான

நிபந்தனையாக உள்ளது. 1 பேதுரு 2:1-3இல் "இப்படியிருக்க, கர்த்தர் தயையுள்ளவரென்பதை நீங்கள் ருசிபார்த்ததுண்டானால் சகல துர்க்குணத்தையும், சகலவித கபடத்தையும், வஞ்சகங்களையும், பொறாமைகளையும், சகலவித புறங்கூறுதலையும் ஒழித்து விட்டு, நீங்கள் வளரும்படி, புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப் போல, திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின் மேல் வாஞ்சையாயிருங்கள்" என்று கூறப்பட்டுள்ளது.

எல்லாவற்றிற்கும் மேலாக ஆண்டவருக்கும் நமக்கும் உள்ள தொடர்பில் நாம் முற்றிலும் வெளிப்படையாகவும், உண்மையுள்ளவர்களாகவும் இருத்தல் வேண்டும். ஆவிக்குரிய வெளிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு இது ஒரு நிபந்தனையாக உள்ளது. சங்கீதம் 51:6இல் "இதோ உள்ளத்தில் உண்மையிருக்க விரும்புகிறீர்; அந்தக்கரணத்தில் ஞானத்தை எனக்குத் தெரியப்படுத்துவீர்" என்று தாவீது கூறுகின்றார்.

உள்ளத்தில் உண்மையுள்ளவர்களாய் இருப்பவர்களுக்கே கர்த்தர் தம்முடைய மறைவான ஞானத்தை வெளிப்படுத்துகிறார்.

2. நீதி என்னும் மார்க்கவசம்

நம் இருதயத்தைக் காத்துக் கொள்ளக்கூடிய மார்க்கவசத்தைப் பற்றி நீதிமொழிகள் 4:23இல்"எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள், அதினிடத்தினின்று ஜீவ ஊற்று புறப்படும்'' என்று வாசிக்கின்றோம். நம் வாழ்க்கையில் வெற்றியானது நாம் தேவனோடும், மனிதனோடும் உண்மையான இருதயத்தோடு-கூடிய உறவினைக் கடைப்பிடிப்பதில் உள்ளது. நாம் பவுலின் மாதிரியைப் பின்பற்ற வேண்டும். அப்போஸ்தலர் 24:16இல் "இதனால் நான் தேவனுக்கும் மனுஷனுக்கும் முன்பாக குற்றமற்ற மனசாட்சியை உடையவனாய் இருக்கப் பிரயாசப்படுகிறேன்" என்று பவுல் கூறுகிறார்.

நம் வாழ்க்கையில் வெற்றியானது நாம் தேவனோடும், மனிதனோடும் உண்மையான இருதயத்தோடு கூடிய உறவினைக் கடைப்பிடிப்பதில் உள்ளது.

தேவன் எதிர்பார்க்கும் நீதியானது வெறும் கொள்கைகளுக்கு இசைந்து போவது மட்டுமல்ல. இது சிந்தனைக்கு அல்ல இருதயத்திற்குரிய நிபந்தனையாகும். ரோமர் 10:10இல் ''நீதியுண்டாக இருதயத்தில்

விசுவாசிக்கப்படும். இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கைபண்ணப்படும்" என்று வலியுறுத்துகிறது.

இது மதத்திற்குரிய விதிமுறையாகும். பவுலும் இதையே நீண்ட நாட்களாகக் கைக்கொண்டு வந்தார். இயேசுவை சந்தித்த பின் அவரது விருப்பம் மாறியது.

> அது மாத்திரமல்ல, என் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் மேன்மைக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ணிக் கொண்டிருக்கிறேன். நான் கிறிஸ்துவை ஆதாயப்படுத்திக்-கொள்ளும்படிக்கும், நியாயப்பிரமாணத்தினால் வருகிற சுயநீதியை உடையவனாயிராமல், கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினால் வருகிறதும், விசுவாசம் மூலமாய் தேவனால் உண்டாயிருக்கிறதுமான நீதியை உடையவனாயிருந்து, கிறிஸ்துவுக்குள் இருக்கிறவனென்று காணப்படும்படிக்கும் . . ."
>
> பிலிப்பியர் 3:8-9

3. சமாதானத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சை

ரோம இராணுவப் படையினர் மிகவும் வலிமையான பாதரட்சைகளை அணிந்திருப்பார்கள். இது அவர்கள் எளிதாக நடப்பதற்கு வழிவகுக்கும் குறைந்த நேர அறிவிப்பிலே, நீண்ட நேர அணிவகுப்பு நடத்துவார்கள்.

தேவன் தம்முடைய சித்தத்தை நிறைவேற்ற எங்கு, எப்பொழுது அழைத்தாலும் கிறிஸ்தவர்கள் குறைந்த நேர அறிவிப்பிலும், எதிர்பாராத சூழ்நிலைகளிலும் அவரால் உபயோகப்படுத்தப்பட தயார் நிலையிலிருத்தல் வேண்டும். அதற்கு ஆயத்தம் தேவைப்படுகிறது. வேதத்தில் உள்ள அடிப்படை உண்மைகளை நாம் புரிந்துகொள்ள வேண்டும். அதில் தெளிவுள்ளவர்களாக நம்மை அதில் பழக்கப்படுத்திக்கொள்ள வேண்டும். அவிசுவாசிகளுக்குச் சத்தியத்தை எவ்வாறு எடுத்துக்கூற வேண்டும் என்பதையும் அறிய வேண்டும்.

மேலும் அது *சமாதானத்தின்* அருட்செய்தியாகும். உண்மையான சமாதானம் நம் இருதயத்தில் இருந்தால்தான், இந்தச் சமாதானத்தின் சுவிசேஷத்தை நாம் மற்றவர்களுக்கு எடுத்துச் செல்வதில் வெற்றி பெற முடியும். அது, நமது புறம்பான சூழ்நிலைகளைப் பொறுத்ததல்ல. பிரச்சனையிலிருக்கும் கலக்கமுற்ற ஒரு பாவிக்கு, சாதாரணமாக நாம் பேசும் வார்த்தைகளைவிட நம்முடைய சத்தத்தைத் தொனிக்கப்பண்ணுதலே மிகவும் சக்தி வாய்ந்த செய்தியாக இருக்கும்.

4. விசுவாசம் என்னும் கேடயம்

'கேடயம்' என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள இந்த வார்த்தையானது *'கதவு'* என்ற வார்த்தையோடு தொடர்புள்ளதாய் உள்ளது. அகலத்தைவிட அதன் நீளம் அதிகமானதாய் இருக்கும். ஒரு பயிற்சி பெற்ற போர் வீரன் தன் உடல் முழுவதையும் அதற்கு உட்படுத்தித் தன்னை முழுவதுமாகப் பாதுகாத்துக்கொள்கின்றான். ஆனால் அப்படிச் செய்வதற்கு தகுதியுள்ளவனும், பலசாலியுமாய் அவன் இருக்க வேண்டும். அதிக எடையுள்ள மனிதன் இவ்வாறு தன்னைப் பாதுகாத்துக்கொள்ள முடியாது.

நம்முடைய விசுவாசம் என்னும் கேடயம் இதைப் போன்றே முழுமையான உருவமைப்பில் இருக்கிறது. அது முழு ஆள்தத்துவத்தையும், ஆவி, ஆத்துமா, சரீரத்தையும் மூடிக்கொள்கிறது. நாம் ஆவியினால் பயிற்சி பெற்றுத் தகுதியுடையவர்களாய் மாறும்போது வேதத்தில் உள்ள வாக்குத்தத்தங்களுக்குக் கீழ்ப்பட்ட மிகவும் பாதுகாப்பான பகுதிக்குள் இழுத்துக் கொள்ளப்படுகின்றோம். ஆனால் அதே நேரத்தில் தேவைக்கதிகமான சுய திருப்தி போன்ற ஏதாகிலும் நம் வாழ்க்கையில் இருக்குமானால் அந்தப் பாதுகாப்பின் கேடயத்திற்குள் வரமுடியாது. வெளியில் தான் நாமிருப்போம்.

சில நேரங்களில் சாத்தான் நமக்கு விரோதமாகப் பயன்படுத்தும் அம்பு "அக்கினியாஸ்திரமாக" உள்ளது. அது எவற்றையெல்லாம் குறி வைத்தனவோ, அவற்றையெல்லாம் காயப்படுத்துகின்றது. பரியாசம்பண்ணவும் அவதூறு பேசவும் தூண்டுகிறது. குடும்பங்களில் பிரிவினைகளை உண்டாக்குகிறது. முழுச்சபையாரின் மேலும் கூடத் 'தீ'க்கொளுத்துகிறது. அதே நேரத்தில் சக்தி வாய்ந்த விசுவாசம் என்னும் கேடயத்தைப் பயன்படுத்தும் பொழுது, அந்த அம்பினைத் தடுத்து நிறுத்தி ஒன்றுமற்றதாக்கி விடுகிறது. அந்த அக்கினியினை அணைத்துவிடுகிறது.

5. இரட்சணியம் என்னும் தலைச்சீரா

நம்முடைய *இருதயத்தை* மார்க்கவசம் காப்பது போல இரட்சண்யம் என்னும் தலைச்சீரா நம் *சிந்தையைக்* காக்கிறது. இந்த 'மனது' என்னும் பகுதியில்தான் கிறிஸ்தவர்கள் தொடர்ச்சியாகத் தாக்கப்படுகிறார்கள். மனதின் உள் பகுதியில் தொடர்ச்சியாக ஒரு யுத்தம் நடந்து கொண்டேயிருக்கிறது. நம் எண்ணங்களில் சாத்தான் தவறான கருத்தைப் புகுத்துகிறான். அது நம்மைத் துயரத்தில் ஆழ்த்துகிறது அல்லது திசை திருப்புகிறது. இன்னும் பலவழிகளில் சாத்தானுக்கு எதிராக நாம் செய்யும் யுத்தத்தைப் பெலவீனப்படுத்துகிறது.

இந்த ‘மனதின்’ பகுதியைக் குறித்துத் தேவன் தனிப்பட்ட முறையில் பல காரியங்களை எனக்குக் கற்றுத் தந்தார். நான் முதன் முதலாகப் பிறந்தபொழுது தொடர்ச்சியாக என் மனதிலே சோர்வும், ஏமாற்றமும் அடைந்தேன். இந்த ‘மனதிற்கு’ சக்திவாய்ந்த பாதுகாப்புத் தேவைப்படுகிறது என்பதை அறிந்தேன். நான் எபேசியர் 6:13-18 வசனங்களில் பவுல் கூறிய சர்வாயுதவர்க்கத்தைப் பற்றிப் படித்தேன். அப்பொழுது ‘இரட்சண்யம் என்னும் தலைச்சீரா’ தான் எனக்கு மிகவும் அத்தியாவசியமானது என்பதை உணர்ந்தேன். ஆனால், அதற்குப்பின்பு *நான் இரட்சிக்கப்பட்டவன் என்றது எனக்குத் தெரியும் அப்படியானால் நான் இந்த இரட்சணியம் என்னும் தலைச்சீராவைப் பெற்றுக்கொண்டேனா அல்லது இரட்சிக்கப்பட்ட பின் இது பெற்றுக்கொள்ளப்படவேண்டிய ஒன்றா? என்று எனக்குள்ளே நான் கேட்டுக்கொண்டேன்.*

இதை நான் அதிகமாக வாஞ்சித்தபடியால், எபேசு சபையில் உள்ள இரட்சிக்கப்பட்ட கிறிஸ்தவர்களுக்குப் பவுல் எழுதியிருப்பதை நான் பார்த்தேன். பவுல் அங்கே “இரட்சணியம் என்னும் தலைச்சீரா”வை எடுத்துக்கொள்ளுங்கள் என்று உணர்த்துவதை வாசித்தேன். எனவே எனக்கும் இந்த “இரட்சணியம் என்னும் தலைச்சீரா” தேவைப்படுகிறது என்பதைத் தெளிவாகப் புரிந்துகொண்டேன். இரட்சணியம் என்னும் தலைச்சீராவே என் மனதைப் பாதுகாக்கக் கூடிய சிறந்த பாதுகாப்பான ஆயுதமாக அமையக்கூடும்.

நல்ல வேளையாக, ஒத்து வாக்கியம் அடங்கிய வேதாகமத்தை நான் பயன்படுத்திக் கொண்டிருந்தேன். எபேசியர் 6:17ம், 1 தெசலோனிக்கேயர் 5:8மே என்னைக் கவர்ந்த பகுதியாகும். அது “இரட்சிப்பின் நம்பிக்கை என்னும் தலைச்சீராவைத்” தரித்துக்கொள்வதேயாகும். இந்த வசனங்கள் என்னுடைய சிந்தனைகளில் ஒரு பெரிய புரட்சியை உண்டாக்கியது. எதையும் எதிர்மறையாகச் சிந்திப்பதே என்னுடைய பிரச்சனையாயிருந்தது. இந்தப் பிரச்சனையைத் தீர்ப்பதற்கான வழி என்னவென்றால் நேர்மறையாக சிந்திப்பதேயாகும்.

கிறிஸ்தவர்கள் பெரும்பாலும் தொடர்ச்சியாக தாக்கப்படும் தளம் மனதாகும்.

நான் வேதத்தின் பல பகுதிகளைத் தேடிக் கண்டுபிடிப்பதில் ஆர்வம் கொண்டு கண்டுபிடித்து அதில் சில பகுதிகளை மனப்பாடம் செய்தேன். அந்தச் செயலானது எல்லாவற்றையும் நேர்மறையாகச் சிந்திக்கக்கூடிய திறமையை எனக்கு நல்கியது. “இன்று என் மனது” சக்தி வாய்ந்த பாதுகாப்பிற்குள் உள்ளது.

இதுவரையிலும் கூறப்பட்ட ஆயுதங்களின் விவரமானது என்னவென்றால் அந்த ஆயுதங்கள் எல்லாம் பாதுகாப்பிற்கானதாகவும், தற்காப்பிற்கானதாகவுமே உள்ளன. இந்தக் கட்டத்தில்தான் பவுல் தாக்கக்கூடிய ஒரு ஆயுதத்தைப் பற்றிக்கூறத் தொடங்குகிறார். இதில் உய்த்துணரக்கூடிய நடைமுறைக்குத் தேவையான ஒரு குறிப்பு உள்ளது. தற்காப்புக்கான ஆயுதத்தைத் தரிப்பதற்கு முன் நாம் எதிரியைத் தாக்குவதற்கு முயற்சி செய்வோமானால் நாம் சாத்தானுடைய எதிர் தாக்குதலுக்கு ஆயத்தமற்றவர்களாய் இருக்கிறபடியினால் எதிரியால் காயப்படுத்தப்பட்டு இழப்புக்குள்ளாகிறோம். அநேகக் கிறிஸ்தவர்கள் காயப்படுத்தப்பட்டு, இழப்புக்குள்ளாவதற்கு இதுவே முக்கியக் காரணமாக உள்ளது.

இப்பொழுது நாம் அடுத்த இரண்டு ஆயுதங்களுக்குத் திரும்புவோம்.

6. ஆவியின் பட்டயம்

பவுல் குறிப்பிடும் அடுத்த ஆயுதம் தேவனுடைய ஆவியின் பட்டயமாகும். அது எதிரியைத் தாக்கவும் நம்மைப் பாதுகாக்கவும் பயன்படுகிறது. எதிரியைத் தாக்குவதற்கு முதன்மையாகப் பயன்படுகிறது. "ஒரு நல்ல தாக்குதலை எதிர்க்க முற்படுவது மிகச் சிறந்த பாதுகாப்பாகும்" என்று ஒருவர் கூறுகின்றார். இது ஆவிக்குரிய உலகில் எப்பொழுதுமே உண்மையாக உள்ளது.

"வார்த்தை" என்று இங்குக் கூறப்பட்ட சொல் "*ரேமா*"வாகும். அது *உரைக்கப்பட்ட* வார்த்தையைக் குறிக்கிறது. 12வது அத்தியாயத்தில் நாம் பார்ப்பதுபோல இந்த வார்த்தை என்பது மிகவும் இன்றியமையாத ஒன்றாகவுள்ளது. வேதத்தைப் புத்தகம் வைக்கும் அலமாரியில் வைப்பதினாலோ, மேலும் மேஜையில் வைப்பதினாலோ அது வல்லமையுள்ளதாய் மாறிவிடாது. வேதத்தை நம்முடைய வாயினால் தைரியமாக உதடுகளின் மூலமாக அறுதியிட்டு, உறுதியாகக் கூறும்பொழுது அது ஒரு இருபுறமும் கருக்குள்ள பட்டயமாய் மாறுகிறது.

இது "(பரிசுத்த) ஆவியானவரின் பட்டயம்" என்பதை நாம் மனதிற்கொள்ளவேண்டும். நாம் தேவனுடைய வார்த்தையை வாயின் வார்த்தைகளாகப் பயன்படுத்தலாம். பரிசுத்த ஆவியானவர் நமக்குள் இருந்தால் மட்டுமே நாம் பயன்படுத்தும் தேவ வார்த்தைகளின் முழுப் பயனையும் பெற்றுக் கொள்ளமுடியும்.

இயேசு தேவனுடைய உரைக்கப்பட்ட வார்த்தையைப் பயன்படுத்தினார். தேவன் அதே ஆயுதத்தை ஒவ்வொரு கிறிஸ்தவனும் பயன்படுத்தும்படி உரிமையாக்கியுள்ளார்.

இயேசு தேவனுடைய சொல்லப்பட்ட வார்த்தையைப் பயன்படுத்தினார். தேவன் அதே ஆயுதத்தை ஒவ்வொரு கிறிஸ்தவனும் பயன்படுத்தும்படி உரிமை –யாக்கியுள்ளார்.

இயேசு வனாந்தரத்திலே சாத்தானால் சோதிக்கப்பட்டார். அப்பொழுது சாத்தானோடு எதிர்த்துப் போராட, இந்த ஆவியின் பட்டயத்தை எவ்வாறு பயன்படுத்தினார் என்பது எல்லோருக்கும் நல்ல மாதிரியாய் அமைந்துள்ளது. இதை நாம் மீண்டும் நம் நினைவுக்குக் கொண்டுவர வேண்டும். மூன்று முறை சாத்தான் இயேசுவைச் சோதித்தான். இயேசு உரைக்கப்பட்ட வார்த்தைகளைக் கொண்டே "என்று எழுதியிருக்கிறதே" என்று சொல்லி சாத்தானைத் துரத்தினார் (மத்தேயு 4:4-7,10). இயேசு உரைக்கப்பட்ட தேவனுடைய "ரேமா" வார்த்தைகளைத் தவிர வேறு எந்த ஆயுதத்தையும் பயன்படுத்தவில்லை. தேவன் ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும், இந்த ஆயுதத்தின் வல்லமையை இலவசமாக வழங்கியுள்ளார்.

எப்படியாகிலும் இரு கருத்துக்களை மனதிற்கொள்ள வேண்டும். முதலாவது: இயேசு பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டிருந்தார். (லூக்கா 4:1) என்பது. இயேசுவுக்குள் இருந்த அந்தப் பரிசுத்த ஆவியானவரே அந்தப் பட்டயத்தைப் பயன்படுத்த அவரை வழிநடத்தினார்.

இரண்டாவது: இயேசு அவருடைய காலத்தில் வாழ்ந்த மற்ற யூதப் பிள்ளைகளைப் போலவே வேதத்திலுள்ள நீண்டப் பகுதிகளை எல்லாம் மனப்பாடம் செய்திருந்தார் என்பதாகும். சாத்தான் இயேசுவை எதிர்த்து நின்ற போது, அவருக்குச் சாத்தானை எதிர்க்க ஒத்து வாக்கியச் அகராதியைப் பார்க்க வேண்டிய தேவை ஏற்படவில்லை. அல்லது நூல் நிலையததிற்குச் செல்ல வேண்டிய அவசியமும் ஏற்படவில்லை. ஏனென்றால் இயல்பாகவே தேவ வசனத்தினால் நிறைந்தவராய், எல்லாவற்றையும் ஞாபகத்தில் வைத்திருந்தார். நாமும் இன்றே, இயேசு செய்ததைப் போல வேத வசனங்களை மனப்பாடம் செய்து பயன்படுத்தக் கடமைப்பட்டுள்ளோம்.

7. சகலவிதமான ஜெபங்கள்

இந்த ஏழாவது ஆயுதம் இதற்குமுன் கூறப்பட்ட ஆறு ஆயுதங்களைப் போல வரிசைப்படுத்தப்படவில்லை. ஒரு கிறிஸ்தவப் போர்வீரன் முழுமைப் பெற்ற நிலையை எய்த, இந்த ஆயுதம் மிகவும் இன்றியமையாததாகும். ஆறு ஆயுதங்களிலும் கடைசியாகக்

கூறப்பட்டுள்ள ஆவியின் பட்டயமே எதிரியைத் தாக்கக்கூடிய ஆயுதமாகும். எந்த அளவுக்கு இந்த ஆயுதம் போர் வீரனின் இதயத்தில் உள்ளதோ அந்த அளவுக்கு இந்தப் பட்டயம் சக்தி வாய்ந்ததாக அமையும்.

ஆனால் இந்த ஏழாவது ஆயுதமாகிய பலநிலை ஜெபங்களுக்கு ஒரு குறிப்பிட்ட வரையறை கிடையாது. இதை நாம் கண்டம் விட்டுக் கண்டம் தாவும் ஏவுகணையாகக் கருதலாம். பரலோகத்திற்கு நேராக திருப்பப்படும் ஜெபங்கள் பரிசுத்த ஆவியானவரால் வழிநடத்தப்படுகின்றது. அது கண்டங்கள், கடல்கள் ஆகியவற்றினூடேச் செல்லும். அதுமட்டுமல்ல குறிதவறாத, சரியான அதற்கென்று வரையறுக்கப்பட்ட இலக்கினைத் தாக்கும். கிறிஸ்தவர்கள் மத்தியில் இந்த ஏழாவது ஆயுதமே மிக வல்லமையுள்ளதாகவும், மிகவும் சக்திவாய்ந்ததாகவும் உள்ளது என்பதில் சிறிதும் ஐயமில்லை.

இதற்குமுன் சொல்லப்பட்ட பட்டயம் என்னும் ஆயுதத்தைப் போலவே இந்த ஏழாவது ஆயுதமாகிய பலநிலை ஜெபங்களும், பரிசுத்த ஆவியானவரைச் சார்ந்தே பயன்படுத்த வேண்டும். “ஆவியில் நிறைந்து” ஜெபிக்க வேண்டும் (எபேசியர் 6:18). தன் சொந்த விருப்பங்களுக்காக, உணர்ச்சிகளுக்கு அடிமைப்பட்டு வழிநடத்தப்படும் கிறிஸ்தவர்களுக்குத் தேவன் இந்த ஆயுதத்தை உண்டாக்கவில்லை.

எல்லா ஜெபங்களிலும், பலநிலையான ஜெபங்கள் உள்ளடங்கியுள்ளன. அப்படிப்பட்ட ஜெபங்கள் 1தீமோத்தேயு 2:1இல் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன. அவையாவன: எல்லா மனுஷருக்காகவும் பண்ணும் விண்ணப்பங்கள், ஜெபங்கள், வேண்டுதல்கள், ஸ்தோத்திரம் பண்ணுதல் என்பனவாகும். ஒரு கிறிஸ்தவன் தனக்கு விருப்பமான முறையில் ஜெபிப்பதற்கு, ஜெபமானது தனி மனிதன் இசைக்கும் இசைக்கருவி போன்றதன்று. பல இசைக்கருவிகள் ஒருங்கிணைந்து இசைக்குழுவில் இயங்குவது போல பரிசுத்த ஆவியானவரால் இயக்கப்படவேண்டும்.

இந்த வகையான ஜெபம் வெளிப்படையான தடைகளையும், எரிச்சல்களையும் தோற்றுவிக்கக் கூடியதாயுள்ளது. அப்போஸ்தலர் 4:15-18இல் இவ்வாறு வாசிக்கிறோம். அப்போஸ்தலர்கள் சத்துருவானவனின் தந்திரத்தினால் தொடர்ந்து முன்னேறிச் செல்ல முடியவில்லை. எல்லாவிதமான சுவிசேஷ ஊழியத்திற்கான செயல்களையும் தடைசெய்கின்றான். ஆலோசனை சங்கத்தாரும், அக்காலத்தில் மத சம்பந்தமான வல்லமையான அதிகாரம் படைத்த யூதர்களும் “இயேசுவின் நாமத்தைக் குறித்து எவ்வளவும் பேசவும் போதிக்கவும் கூடாதென்று’’ வெளிப்படையாகவே அப்போஸ்தலர்களுக்குக் கட்டளையிட்டார்கள்.

அருட்செய்திக்கு எதிரிகள் கூட இயேசுவின் நாமத்தின் முக்கியத்துவத்தினை போதுமான அளவு அறிந்துள்ளனர். சுவிசேஷத்தின் வல்லமையும், இயேசு என்னும் நாமத்திற்குள்தான் அடங்கியுள்ளது. பேதுருவும் ஆலோசனை சங்கத்தாரிடம் அப்போஸ்தலர் 4:12இல் ''அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவுமில்லை'' என்று வலியுறுத்தினார். இப்படிப்பட்ட ஆலோசனை சங்கத்தின் கட்டளையின் மூலமாக சத்துரு தன் சூழ்ச்சியால் அப்போஸ்தலர்களின் முன்னேற்றத்தையும், சபை வளர்ச்சியினையும் வலிய அரண்களை எழுப்பித் தடைசெய்ய முற்பட்டான்.

இந்தச் சத்துருவின் திட்டத்தை முறியடிக்க எல்லா விசுவாசிகளும் ஒன்றாகச் சேர்ந்தனர். அநேக இசைக்கருவிகள் வாசிப்போர் ஒன்றாக இணைந்து செயல்படும் இசைக்குழுவைப் போல ஒருங்கிணைந்து தேவனுடைய உதவியை நாடினர். அவர்கள் தேவனை நோக்கிக் கதறி முறையிட்டு தேவனுடைய பதிலுக்காகக் காத்திருந்தனர். தேவன் மனமிரங்கி அப்போஸ்தர் 4:31ம் வசனத்தை எடுத்துக்காட்டி தமது வல்லமையை நிரூபித்தார். அப்போஸ்தலர் 4:31இல் "அவர்கள் ஜெபம் பண்ணினபோது, அவர்கள் கூடியிருந்த இடம் அசைந்தது. அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு, தேவ வசனத்தைத் தைரியமாய்ச் சொன்னார்கள்" என வசனம் கூறுகிறது. இந்த ஆயுதமான பல்வகையான ஜெபம் சாத்தானுடைய வல்லமையான அரண்களை முற்றிலும் ஒன்றுமில்லாமலாக்கிவிடும், முற்றிலும் அழித்துவிடும்.

இன்று உலகின் பல பகுதிகளில் தடைகளையும், எதிர்ப்புகளையும் சாத்தான் உண்டாக்குகிறான். எளிதாகச் சுவிசேஷம் செல்வதற்கான வழிமுறைகளைத் தடுத்து அதன்மூலம் சுவிசேஷம் பரவாதபடி சாத்தான் தடைசெய்ய முயல்கின்றான். வல்லமையான இந்த ஆயுதத்தைச் சபையார் பயன்படுத்தக்கூடிய சரியான நேரம் இதுவே! அந்த வல்லமையான ஆயுதம் *சகலவிதமான ஜெபங்களைப்* பயன்படுத்துவதேயாகும்.

20

யுத்தத்தின் உச்சக்கட்டம்

தேவனுக்கு எதிரியான வன்முறையாளனாகிய சாத்தானையும், அவனுடைய தூதர்களையுங்குறித்து வேதத்தில் பல வெளிப்பாடுகள் உள்ளன. அவற்றையெல்லாம் நாம் பார்ப்பது நல்லது! தேவன் அந்த வன்முறையாளன் சாத்தானை அவன் இருக்கிற இடத்தில்தானே செயலிழக்கச்செய்யட்டுமே. சாத்தானையும் அவனுடைய தூதர்களையும் அவனுக்குச் சொந்தமான அக்கினிக் கடலில் தள்ளட்டுமே என்று சொல்லத் தூண்டப்படுகிறோம்.

தேவன் அவ்வாறு செய்திருக்கலாம். ஆனால் அப்படிச் செய்வது அவருடைய நோக்கமல்ல. அவனது வன்முறைகளைத் தமது சொந்த நோக்கங்களுக்காகப் பயன்படுத்தும் கருவியாக, சாத்தானைத் தேவன் விட்டுவைத்துள்ளார். தேவன், தன்னுடைய அளவில்லாத ஞானத்தினால்தான் இப்படிச் செய்துள்ளார். ஆங்கிலக் கிரிக்கெட் வீரனாக இருந்து ஊழியக்காரராக மாறிய சி.டி.ஸ்டட் என்பவர் “எல்லா உருவாக்கப்பட்ட படைப்புகளைப் போலவே சாத்தான் உள்ளான்” என்று கூறியுள்ளார்.

தேவன் நமக்கென்று நியமித்துள்ள ஒரு சில சோதனைகளில் நாம் நிச்சயம் கடந்து செல்ல வேண்டும். அப்பொழுதுதான் தேவனுக்கும், நமக்கும் இடையேயுள்ள உறவு உறுதிப்படுத்தப்படும். இது தேவனுடைய கொள்கைகளில் ஒன்றாய் உள்ளது. இதுவே தூதர்களுக்கும், மனித இனத்துக்கும் உரித்தானதாகும். சோதிக்கப்படாத உறவுகள் சுத்திகரிக்கப்படாத பொன்னைப் போன்றதாகும். பரலோகத்தில் அது ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

இதனால்தான் இயேசு லவோதிக்கேயாவில் உள்ள கிறிஸ்தவர்களுக்குச் சொல்லும்போது வெளி 3:18இல் ‘‘நான் நீ ஐசுவரியவானாகும்படிக்கு நெருப்பிலே புடமிடப்பட்ட பொன்னையும்”, என்று சொல்கின்றார். வேறு வார்த்தையில் இதனைச் சொல்ல வேண்டுமானால் நீங்கள் சோதைனையில் வெற்றி பெறும் வரையிலும் என்னுடைய மக்கள் என அழைக்கப்படமாட்டீர்கள் என்று கூறுவதாக

உள்ளது. அந்த வகைப் பொன்னானது தரம் குறைந்ததன்று. அதை நாம் *வாங்க* வேண்டும் அப்படியானால் அதற்கு ஒரு விலைக்கிரயம் செலுத்தப்படவேண்டும்.

சாத்தான்–சோதனைக்காரன்

நம்மைச் சோதிப்பதற்காகத் தேவன் பயன்படுத்தும் முக்கியமான கருவி சாத்தானே. இரண்டு முறை வேதத்தில் (பார்க்கவும் மத்தேயு 4:3; 1 தெசலோனிக்கேயர் 3:5) சாத்தான் “சோதனைக்காரன்” என்று அழைக்கப்படுகின்றான். சோதனைக்காரன் என்று நேர்ப்பொருளாக மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது.

முதலாவது, பரலோகத்தில் இருக்கும் தூதர்களைச் சோதிக்கும்படி தேவன் சாத்தானையே பயன்படுத்தினார். வன்முறையாளனாகிய அந்தச் சாத்தானோட சேர்ந்து கொள்வதற்கு அந்தத் தூதர்கள் மறுத்துவிட்டனர். அப்படிச் செய்ததின் மூலமாக அவர்களுக்கு வைக்கப்பட்ட சோதனையில் வெற்றி பெற்றார்கள். நியாயாதிபதியாகவும், மகிமைப் பொருந்தினவராகவும் இயேசு கிறிஸ்து மீண்டும் வரப்போகிறார். அவருடைய வருகையைக் குறிப்பிடும்பொழுது மனுஷகுமாரன் தமது மகிமைபொருந்தியவராய்ச், சகல பரிசுத்த தூதர்களோடும் வரும்போது (பார்க்கவும் மத்தேயு 25:31, மாற்கு 8:38, லூக்கா 9:26) என்று மூன்று முறை கூறப்பட்டுள்ளது. இதில் குறிப்பிடப்பட்டுள்ள பரிசுத்த தூதர்கள், சாத்தானுடன் இணைந்து தன்னுடைய பரிசுத்தத்தை இழந்துபோன தூதர்களிடமிருந்து முற்றிலும் வேறுபட்டவர்கள்.

நம்மைச் சோதிக்கும் படியாகத் தேவன் பயன்படுத்தும் முக்கிய கருவி சாத்தானே யாவான்.

மனித இனத்தைச் சோதிக்கும்படி தேவன் பயன்படுத்தும் கருவி சாத்தானே. ஆதிமனிதனாகிய ஆதாம் ஏவாளிடமே இந்தச் சோதனை முதலில் ஆரம்பமானது. ஒரு எதிர்மறையான கட்டளையோடு தேவன் ஆதாமுக்கும், ஏவாளுக்கும் அந்தத் தோட்டத்தின் உரிமையை வழங்குகின்றார். நீ தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனிகளையும் புசிக்கலாம். ஆனால், நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசித்தல் கூடாது என்பதே அந்தக் கட்டளையாகும். தேவன் எதைச் செய்யக்கூடாது என்று தடுத்திருந்தாரோ அந்தச் செயலைச் செய்ய வைப்பதற்காகச் சாத்தான் அந்தத் தோட்டத்தில் நுழைந்து ஏவாளின் ஆவலைத் தூண்டினான். அவர்கள் அந்தச் சோதனைக்குத் தங்களை ஆளாக்கிக்கொண்டார்கள். சோதனைக்காரன் என்று தனக்குக்

கொடுக்கப்பட்ட கதாபாத்திரத்திற்கு ஏற்றவாறு சாத்தான் தன் பணியை நிறைவேற்றினான்.

சாத்தான் சோதனைக்காரன் என்ற கதாபாத்திரத்தைச் செயல்படுத்த இயேசுவின் வாழ்விலும் அனுமதிக்கப்பட்டான். வனாந்தரத்திலே நாற்பது நாட்கள் தன் உபவாசத்தை முடித்த பின்பு சோதனைக்காரன் இயேசுவினிடத்தில் வந்து அவரை மூன்று முறை சோதித்தான் (மத்தேயு 4:1-11). முதலாம் ஆதாம் சோதனையில் விழுந்து போனான். கடைசி ஆதாமாகிய இயேசுவோ சோதனையில் வெற்றி பெற்றார். அந்த மூன்று சோதனைகளிலும் இயேசு வெற்றி பெற்றார். சாத்தானோ வெட்கப்பட்டு பின்வாங்கிப் போனான்.

மூன்றரை ஆண்டுகளுக்குப் பின்பு, மீண்டுமாய் அந்தச் சோதனைக்காரன் தேவனுக்கு எதிராகச் செயல்பட முற்பட்டான். முதலாவது சாத்தான் யூதாஸ்காரியோத்தின் உள்ளத்தில் புகுந்து தன் திட்டத்தை நிறைவேற்ற அவனைப் பயன்படுத்தினான் (பார்க்கவும் லூக்கா 22:3). அதற்குப் பின்பு தேவ பக்தியில்லாத திரள் கூட்ட மக்களைச் சேர்த்துக்கொண்டு இயேசுவை சிலுவையில் அறையும்படி ஏவத் தூண்டினான். அந்தச் சோதனையில் மீண்டும் இயேசுவே வெற்றி பெற்றார். உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கும் தியாக பலியாகும்படியாக சிலுவையின் மரணத்திற்கு விருப்பமுடன் தன்னைத்தானே இயேசு அர்ப்பணித்தார்.

இந்த இடத்தில்தான் அளப்பறிய தேவனுடைய உச்சக்கட்ட ஞானம் வெளிப்படுகிறது. விழுந்துபோன மனித இனம் தனக்கே சொந்தம் என்று உரிமை பாராட்டிய சாத்தானுடைய எல்லாச் செயல்களும் இயேசுவின் சிலுவை மரணத்தின் மூலமாக அழிக்கப்பட்டது. சாத்தானுடைய மேலோட்ட வெற்றி, அவனுடைய தோல்விக்குக் காரணமாய் அமைந்தது.

அடிமைகள் வெற்றி வாகை சூடியவர்களாகுதல்

தேவனுடைய அளப்பறிய ஞானத்தினால் வேறு ஒரு வழியின் மூலமாக சாத்தானை சாதனைக்குப் பயன்படுத்தும் முறையினைத் தேவன் நிரூபிக்கின்றார். தேவனுக்கு எதிரான வன்முறை செயல்களைச் சாத்தான் செய்வதின் மூலமாகச் சாத்தான் அவர்களைத் தங்களுக்கு அடிமைகளாக்குகின்றான். ஆனாலும் சிலுவையில் தியாக பலியாகி இயேசு தம் ஜீவனைத் தந்ததினால், பாவங்களை மன்னிக்கிறவராய் மட்டுமல்ல தேவனுடைய இராஜ்யத்திற்கும் நம்மை சுதந்திரவாளியாக்கியுள்ளார். உண்மையில் நம்மை ஒரு கருவியாகப் பயன்படுத்தி, சாத்தானுடைய இறுதித் தோல்விக்குத் தேவன் வித்திட்டுள்ளார்.

வான மண்டலங்களில் வாசஞ்செய்யும் சாத்தானுடைய இராஜ்யத்திற்கும், அவனது தூதர்களுக்கும் முற்றுப்புள்ளி வைக்கின்ற, வரும் காலத்தில் நடக்கப்போகும் நிகழ்ச்சிகளை யோவான் கோலமிட்டுக் காட்டுகிறார்.

> வானத்திலே யுத்தமுண்டாயிற்று; மிகாவேலும் அவனைச் சேர்ந்த தூதர்களும் வலுசர்ப்பத்தோடே யுத்தம்பண்ணினார்கள்; வலுசர்ப்பமும் அதைச் சேர்ந்த தூதரும் யுத்தம்பண்ணியும் ஜெயங்கொள்ளவில்லை. வானத்தில் அவர்கள் இருந்த இடமும் காணப்படாமற்போயிற்று. உலகமனைத்தையும் மோசம்போக்குகிற பிசாசு என்றும் சாத்தான் என்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய பெரிய வலுசர்ப்பம் தள்ளப்பட்டது; அது பூமியிலே விழத்தள்ளப்பட்டது, அதனோடேகூட அதைச் சேர்ந்த தூதரும் தள்ளப்பட்டார்கள். அப்பொழுது வானத்திலே ஒரு பெரிய சத்தமுண்டாகி: இப்பொழுது இரட்சிப்பும் வல்லமையும் நமது தேவனுடைய இராஜ்யமும், அவருடைய கிறிஸ்துவின் அதிகாரமும் உண்டாயிருக்கிறது; இரவும் பகலும் நம்முடைய தேவனுக்கு முன்பாக நம்முடைய சகோதரர் மேல் குற்றஞ்சுமத்தும்பொருட்டு அவர்கள் மேல் குற்றஞ்சாட்டுகிறவன் தாழத் தள்ளப்பட்டுப்போனான். மரணம் நேரிடுகிறதாயிருந்தாலும் அதற்குத் தப்பும்படி தங்கள் ஜீவனையும் பாராமல், ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும் தங்கள் சாட்சியின் வசனத்தினாலும் அவனை ஜெயித்தார்கள்.
>
> வெளி 12:7:11

மேலே குறிப்பிடப்பட்டுள்ள சம்பவங்கள் மிகமிக முக்கியமான உண்மைகளை வெளிப்படுத்துகின்றன.

1. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள சம்பவங்கள் நிறைவேறும் வேளை வரை சாத்தானும் அவனுடைய தூதர்களும் வான மண்டலங்களிலிருந்து தங்கள் ஆளுகையை நடப்பிப்பார்கள்.

2. பரலோகத்தில் இருந்து வந்த சத்தமானது “எங்கள் சகோதரர்களே” என்று பேசியது. இது பூமியில் உள்ள விசுவாசிகளைக் குறிப்பதாக உள்ளது.

3. பரலோகத்தில் தேவனுடைய தூதர்களும், பூலோகத்தில் உள்ள விசுவாசிகளும் ஒருங்கிணைந்து சாத்தானைத் தோற்கடிக்கும் வரையிலும் சாத்தானும், அவனுடைய தூதர்களும் துரத்தப்படவில்லை.

இந்தக் கருத்துக்களே அந்த யுத்தத்தின் பரவசப்படுத்தும் உச்சக்கட்டமாக உள்ளது. *அவர்கள்* (பூமியிலுள்ள விசுவாசிகள்) அவனை (சாத்தானை) *மேற்கொண்டார்கள்.* உன்னதமான இடங்களில் தன்னுடைய இராஜ்யத்தை உண்டாக்கி, அதைக் காத்துக்கொண்டு வரும் சாத்தானை வெளியேற்றும் பொறுப்பு மீட்கப்பட்ட பூலோகத்திலுள்ள விசுவாசிகளிடம் உள்ளது. சாத்தானின் பிணைக்கைதிகள் இறுதியில் வெற்றி வீரராக மாற்றப்படுகின்றனர். தேவனே அதைத் தீர்மானிக்க முடியும்.

ஆவிக்குரிய ஆயுதங்களைக் கொண்டுதான் அந்த யுத்தம் நடைபெறும். சாத்தானுடைய முக்கிய ஆயுதம் குற்ற உணர்வை உண்டாக்குவதாகும். அதனால்தான் அவன் நம்மை இரவும் பகலும் தேவனிடத்தில் குற்றப்படுத்திக்கொண்டேயிருக்கிறான். அவனுடைய நோக்கமே நம்முடைய குற்றங்களைத் தொடர்ச்சியாக தேவனிடம் சொல்லிக்கொண்டே இருப்பதாகும். நாம் மெய்யாகவே குற்றமுடையவர்களாக இருப்போமாயின் அவனை எதிர்க்கும் வல்லமை நமக்கு இராது. வான மண்டலங்களில் அவன் இருந்த இடத்தை நாம் எடுத்துக்கொள்வதற்கான உரிமையும் நமக்கு இருக்காது.

தேவன் நமக்குக் கொடுத்திருக்கும் ஆயுதங்கள் எல்லாவற்றிலும் மேன்மையான, வல்லமையுள்ள ஆயுதங்களை நாம் உரிமையாக்கிக் கொண்டால்தான் வெற்றி நம்மைக் கிட்டிச்சேரும். அந்த வல்லமையான ஆயுதங்கள் என்ன? *அது தேவாட்டுக்குட்டியின் இரத்தமும், சாட்சியின் வசனமும் ஆகும்.* நமக்காக இயேசு கல்வாரி சிலுவையில் விலைமதிப்பற்ற தியாகத்தைச் செய்திருக்கின்றார். தேவாட்டுக்குட்டியின் இரத்தம் அதனை நிலைநாட்டுகிறது. எபிரெயர் 10:14இல், *"ஏனெனில் (நம்மை) பரிசுத்தமாக்கப்படுகிறவர்களை ஒரே பலியினாலே (தியாகம்) இவர் என்றென்றைக்கும் பூரணப்படுத்தியிருக்கிறார் என்று கூறுகிறார்."* நமக்காக இயேசு செய்திருக்கும் தியாகம் யுகாயுகத்திற்கும் போதுமானது. அதனோடு ஒன்றையும் சேர்க்கவோ அல்லது அதிலிருந்து ஒன்றையும் எடுக்கவோ இயலாது. தேவன் சிலுவையில் இறுதியாகச் சொன்ன வார்த்தையானது யோவான் 19:30இல், "**முடிந்தது** என்று சொல்லி, தலையைச் சாய்த்து ஆவியை ஒப்புக்கொடுத்தார்" என்பதாகும். அது முழுமையாய் முழுமையாக்கப்பட்டது, பூரணமாய் பூரணமாக்கப்பட்டது என்பதே இதன் பொருள்.

நமக்காக இயேசு செய்த தியாகங்கள், யுகா யுகத்திற்கும் போதுமானது.

பஸ்காவின் மாதிரி

எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து இஸ்ரவேல் மக்களை பஸ்கா பண்டிகையின் மூலமாக தேவன் விடுவித்தார். சாத்தானுக்கும், நமக்கும்

உள்ள இறுதிக்கால யுத்தத்திற்காக, தேவன் நமக்கு ஆயத்தப்படுத்தியவைகள் எல்லாவற்றிற்கும் இந்தப் பஸ்கா பண்டிகையானது ஒரு தீர்க்கதரிசன முன்னறிவிப்பாய் உள்ளது. அந்தப் பண்டிகையில் ஆட்டுக்குட்டி பலியிடப்படவேண்டும். இயேசு நமக்காக “பலியான தேவாட்டுக்குட்டியாவார்”. இதுவும் ஒரு முன்னறிவிப்பாக உள்ளது.

ஒரு ஆட்டுக்குட்டியைத் தெரிந்தெடுத்து அதைப் பலியிட்டு அதன் இரத்தத்தைப் பாத்திரத்தில் பிடிக்க வேண்டும். இது ஒவ்வொரு இஸ்ரவேல் குடும்பத்தில் உள்ள இல்லத் தலைவனின் முக்கியப் பொறுப்பாய் உள்ளது. பாத்திரத்தில் இரத்தத்தைப் பிடித்தவுடன் அந்தப் பணி முற்றுப்பெறுவதில்லை. ஏனென்றால் பாத்திரத்தில் உள்ள இரத்தமானது எந்த இஸ்ரவேலனையும் பாதுகாப்பதில்லை. பாத்திரத்தில் உள்ள இரத்தமானது வாசல் நிலைக்கால்களின் மேற்சட்டத்திலும், வாசலின் நிலைக்கால்கள் இரண்டிலும் பூசப்பட வேண்டும். யாத்திராகமம் 12:13 என்ற வசனத்தின்படி தேவனுடைய வாக்குத்தத்தம் என்னவென்றால், “பூசப்பட்ட இரத்தத்தைக் கண்டவுடன் நான் கடந்து செல்வேன். அப்படி நான் கடந்து செல்வதால் என் நியாயத்தீர்ப்பு உங்கள் மேல் வராது என்பதாகும்.”

இந்தப் பண்டிகைக்குத் தேவைப்படும் இன்னுமொரு முக்கியமான பொருள் உள்ளது. அது என்னவென்றால் மத்திய கிழக்குப் பகுதிகளில் அதிகமாக வளரும் ஈசோப்பு என்னும் குத்துச்செடியாகும். ஒவ்வொரு குடும்பத்தின் தலைவனும் ஈசோப்புக்கொத்தை எடுத்து கிண்ணியில் இருக்கும் இரத்தத்தில் தோய்த்து, அதிலிருக்கும் அந்த இரத்தத்தை வாசல் நிலைக்கால்களின் மேற்சட்டத்திலும் வாசலின் நிலைக்கால்கள் இரண்டிலும் தெளிக்க வேண்டும். அப்படிச் செய்யும்பொழுதுதான் அந்த வீடு பாதுகாக்கப்படும்.

இயேசு கிறிஸ்து கல்வாரி சிலுவையில் பலியாகித் தன்னுடைய ஜீவ இரத்தத்தை நமக்காகச் சிந்தினாரே! இந்த இரத்தம் பூசுதலாகிய நிகழ்ச்சிக்கும், இயேசுவின் மரணத்திற்கும் என்ன சம்பந்தம்? இந்தப் பஸ்கா பண்டிகையை ஒரு படமாக நம் மனக்கண் முன் கொண்டுவந்து பார்க்க வேண்டும். இரத்தம் பாத்திரத்தில் இருக்கும்பொழுது அது ஒருவரையும் பாதுகாப்பதில்லை. ஆனால் ஒவ்வொருவருடைய வாழ்வையும் பாதுகாக்கக்கூடிய இடத்திற்கு அந்த இரத்தமானது மாற்றப்படவேண்டும்.

பஸ்கா பண்டிகையில் தேவையான இடத்தில் இரத்தத்தைத் தெளிப்பதற்கு இந்த ஈசோப்பு பயன்பட்டது. ஈசோப்புக்கும், நம்முடைய வாழ்க்கைக்கும் உள்ள தொடர்பு என்ன? இயேசுவின் இரத்தத்தை, நமக்குத் தேவைப்படும் விதத்தில் எப்படிப் பயன்படுத்த முடியும்?

சாத்தானுடைய தந்திரம் என்னவென்றால், நமக்குக் குற்ற உணர்வுகளை உண்டாக்கி, முடக்கிப்போடுவதும், நாம் முற்றிலும் பயனற்றவர்கள், குறைவுள்ளவர்கள் என்ற உணர்வை ஏற்படுத்துவதும்தான்

மேலே கேட்கப்பட்ட வினாக்களுக்கெல்லாம் பதில் வெளி 12:11இல் கொடுக்கப்பட்டுள்ளது. "அவர்கள் (பூமியில் உள்ள விசுவாசிகள்) *இயேசுவின் இரத்தத்தினாலும் சாட்சியின் வசனத்தினாலும்* அவனை (சாத்தானை) மேற்கொண்டார்கள்'' என்று வலியுறுத்தப்படுகிறது. சாட்சியின் வசனம் நமக்கு என்ன செய்கிறதோ, அதையே ஈசோப்புத் தண்டும் இஸ்ரவேல் மக்களுக்குச் செய்தது. இயேசு கிறிஸ்துவின் இரத்தம் நமக்காக என்ன நன்மைகளைச் செய்கிறது என்பதைத் தனிப்பட்ட முறையில் நாம் அறிக்கையிட வேண்டும். இயேசு கல்வாரி சிலுவையில் தமது இரத்தத்தைச் சிந்தியதின் மூலமாக நமக்கு ஏற்படுத்தியுள்ள நன்மைகளை எல்லாம் நாம் கேட்டுப் பெற்றுக்கொள்ள வேண்டும். நம்முடைய தைரியமான தொடர்ச்சியான தனிப்பட்ட அறிக்கை ஈசோப்பாக மாறி, இயேசுவின் இரத்தத்தை நம்முடைய வாழ்க்கையில் பயனுள்ளதாக மாற்றுகிறது.

சாத்தான், வேதத்தில் நம்மை எப்படிக் குற்றப்படுத்துகிறான் என்பதை நாம் நினைவுகூற வேண்டும். தேவனுடைய நோக்கங்களாக வேதத்தில் வெளிப்பட்ட அனைத்தையும் சாத்தான் திட்டமும் தெளிவுமாக அறிவான். சாத்தானுடைய இறுதித் தோல்விக்காகத் தேவன் பூமியில் உள்ள ஒவ்வொரு விசுவாசியையும் முக்கியமான கருவியாகப் பயன்படுத்துவார் என்பதையும் அறிவான். சாத்தானுடைய தந்திரம் என்னவென்றால் குற்ற உணர்வை உண்டாக்கி நம்மைச் செயலிழக்கச் செய்வதாகும். நாம் முற்றிலும் பயனற்றவர்கள், குறைவுள்ளவர்கள் என்ற உணர்வை நம்மில் தோற்றுவிப்பதாகும். இந்த நோக்கத்தோடுதான் தேவனுக்கு முன்பாக ''இரவும், பகலும் அவன் குற்றப்படுத்திக்கொண்டேயிருக்கிறான்" (வெளி 12:10)

சாத்தானின் குற்றச்சாட்டைத் தேவன் ஏன் அமைதிப்படுத்தாமல் இருக்கிறார்? என்று நாம் கேட்கலாம் "நமக்காகச் செய்யவேண்டிய எல்லாவற்றையும் செய்து முடித்துவிட்டபடியாலும் நாம் செய்யவேண்டியவற்றை நாமே செய்யவேண்டும் என்பதாலும் தேவன் ஒன்றும் செய்யமாட்டார்"என்பதே இதற்குரிய பதிலாகும். அவர் நமக்கு ஆவிக்குரிய ஆயுதங்களைத் தந்திருக்கின்றார். சாத்தான் நமக்கு எதிராகக் கொண்டுவரும் எல்லாக் குற்றங்களையும், தேவன் நமக்களித்த ஆயுதங்களைக் கொண்டு முறியடித்து மேற்கொள்ள நம்மால் முடியும். கல்வாரி சிலுவையில் இயேசு சிந்திய இரத்தம் நமக்கு முழுமையான

பூரணமான விடுதலையைக் கொடுத்துள்ளது அதன் மூலம் சாத்தான் நம்மேல் சுமத்தும் ஒவ்வொரு குற்றத்தையும் அர்த்தமற்றதாக்கி அவனை நாம் மேற்கொள்ள வேண்டும். அப்படிச் செய்யும்பொழுது நாம் குற்றமற்றவர்களாகின்றோம்.

இறுதிக்கால போர் வீரர்களுக்கான செயற்திட்டங்கள்

இந்தப் பூமியில் உள்ள இராணுவம், போர் வீரர்களுக்குத் தேவையான ஆயுதங்களைக் கொடுக்கிறது. அதற்குப்பின் அவ்வீரனுக்குத் தேவையானப் பயிற்சியினைக் கொடுத்து ஒரு சிறந்தப் போர்வீரானாக்கிப் பயன்படுத்துகின்றது. அதைப் போலவே இந்தக் கடைசிக் காலத்தில் கிறிஸ்துவுக்குப் போர் வீரர்களாக வாழும் நாம், தேவன் நமக்கு அருளின ஆயுதங்களைப் பயன்படுத்துவதில் திறமையானவர்களாக இருத்தல் வேண்டும். இயேசுவின் இரத்தமும், சாட்சியின் வசனமுமே அந்த ஆயுதங்களாகும். இயேசுவின் இரத்தத்தினாலே நமக்கு அளிக்கப்பட்ட ஒவ்வொரு நன்மையையும் சரியான முறையிலே சாட்சியிட நாம் கற்றுக்கொள்ள வேண்டும்.

இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் கிடைக்கப்பெற்ற நன்மைகளை எப்படிச் சரியான முறையில் பயன்படுத்துவது என்பதற்கான குறிப்புகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. அதற்கு நாம் வேத வசனங்களில் நன்றாகப் பழக்கப்பட்டவர்களாய் இருத்தல் வேண்டும். அதை மனப்பாடம் செய்து கொள்வது அதைவிட மேலானதாகும். இப்பொழுது இருக்கிற காலம் முடிவுறும்போது நடக்கப்போகும் மகா பெரிய யுத்தத்தில் பங்கெடுக்க நம்மை நாமே ஆயத்தப்படுத்திக்கொள்ள வேண்டும்.

> மரணம் நேரிடுகிறதாய் இருந்தாலும் அதற்குத் தப்பும்படி தங்கள் ஜீவனையும் பாராமல், ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும் தங்கள் சாட்சியின் வசனத்தினாலும் அவனை ஜெயித்தார்கள்.
>
> (பார்க்கவும்: வெளிப்படுத்தின விசேஷம் 12:11)

> அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது.
>
> (பார்க்கவும் : எபேசியர் 1:7)

> இயேசுவின் இரத்தத்தினாலே, என் பாவங்கள் எல்லாம் மன்னிக்கப்பட்டது.

(பார்க்கவும்: 1 யோவான் 1:9)

இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினாலே, தொடர்ச்சியாகப் பாவங்களிலிருந்து சுத்திகரிக்கப்படுகிறோம்.

(பார்க்கவும்: 1 யோவான் 1:7)

அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப்படுகிறோம். பாவமே செய்யாத ஒரு நீதிமானைப் போல மாற்றப்படுகிறோம்.

ரோமர் 5:9

இயேசுவின் இரத்தத்தினாலே நான் சுத்திகரிக்கப்பட்டு பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறேன். அவருக்காக நான் பிரித்தெடுக்கப்பட்டிருக்கிறேன்.

(பார்க்கவும்: எபிரெயர் 13:12)

இயேசுவின் இரத்தத்தின் மூலமாக, அவருடைய பிரசன்னத்தில் பிரவேசிக்கக் கூடிய தைரியம் உண்டாகிறது.

(பார்க்கவும்: எபிரெயர் 10:19)

இயேசுவின் இரத்தத்தின் மூலமாக, இயேசு பரலோகத்தில் உள்ள பிதாவினிடத்தில் எனக்காகத் தொடர்ந்து பரிந்து பேசிக்கொண்டிருக்கிறார்.

(பார்க்கவும்: எபிரெயர் 12:24)

நமது இறுதி முக்கியத் தேவை

வெளி 12:11ஆம் அதிகாரத்தில் யுத்தத்தில் ஜெயமெடுத்தவர்களின் முக்கியமான ஒரு குணநலனை வெளிப்படுத்துவதோடு அந்த யுத்தம் முடிவடைகிறது. *“அவர்கள் தங்கள் ஜீவனையும் பாராமல் தங்களை மரணத்திற்கு ஒப்புக்கொடுத்தார்கள்”.*

இக்கருத்தினை நமக்காக எடுத்துக்கொள்வது எப்படி? இதற்கான பொருள் யாதெனில் நாம் உயிரோடிருப்பதைப் பார்க்கிலும் தேவனுடைய சித்தத்தை செய்வதே மிக மிக முக்கியம். நம்முடைய தேவனுக்குக் கீழ்ப்படியக்கூடிய ஒரு சூழ்நிலைக்குள் நாம் வருகிறோம் என்று வைத்துக்கொள்வோம். அந்தச் சூழ்நிலையில் நம்முடைய ஜீவனையே அர்ப்பணம் செய்ய வேண்டிய நிலையே நம்மைக் குறித்த தேவனுடைய

சித்தமாய் இருக்கிறது என்பதை அறிய வேண்டும். அப்படியானால் நாம் என்ன செய்ய வேண்டும்? தேவனுக்குக் கீழ்ப்படிய வேண்டும்.

நம்மிலே எல்லோரும் இந்தத் திட்டமும், தெளிவுமான முடிவுக்கு வரவேண்டும். ஆனால் நம்முடைய அர்ப்பணிப்பிலே அது அடங்கியுள்ளது. அந்த அர்ப்பணிப்பு. ஒரு தரமான சாட்சியை நமக்கு வழங்குகிறது. அதைச் சாத்தான் தன்னைத் தற்காத்துக்கொள்ள முடியாத நிலைக்குத் தள்ளும்படியான ஒரு ஆயுதமாக நாம் பயன்படுத்தலாம். நமக்கு முன் நாம் ஒரு வினாவை எழுப்ப வேண்டும். "*என் ஜீவனையும் பாராமல் மரணத்திற்கு என்னை ஒப்புக்கொடுப்பேன் என்று உண்மையாகவே நமக்குள்ளே சொல்லிக்கொள்வோமா?*"

பகுதி 4

முடிவு வரை நிலைத்திருப்பது

21

மனித இன நலம்: அந்திக்கிறிஸ்துவின் முன்னோடி

> எபேசியர் 6:12இல் “ஏனெனில், மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டமுண்டு” என்று வேதம் தெளிவாகக் கூறுகிறது.

இயேசுவைப் பின்பற்றும் கிறிஸ்தவர்களுக்கு வானத்திலும், பூமியிலும் சந்திக்க வேண்டிய ஒரு யுத்தம் உள்ளது. அந்த யுத்தத்தில் அவர்கள் பங்கெடுக்க வேண்டும். நமக்கு முன் வைக்கப்பட்டுள்ள அந்தச் சக்திகளாவன: “உடலுருவம் இல்லாத” காணப்படாத உலகத்தின் தீய ஆவிகளின் வல்லமைகள் என்பவைகளே. அவைகள் மெய்யான நீதியை எதிர்த்து உலகம் முழுவதும் சாத்தானுடைய அரசை நிறுவ வகை தேடிக்கொண்டிருக்கின்றன.

இந்த யுத்தத்தில் நம்முடைய பொறுப்பு மிகவும் ஒப்பற்றதாகும். ஏனென்றால், கிறிஸ்து நமக்கு ஆவிக்குரிய ஆழ்ந்த அறிவைக் கொடுத்திருக்கிறார். யுத்தத்திற்குரிய ஆயுதங்களையும் வழங்கியுள்ளார். இந்த உலகத்தில் உள்ள அரசாங்கங்களும், இராணுவமும் இயற்கையின் தளத்திலே யுத்தத்தை நடத்துகின்றனர். இந்த யுத்தத்தைப் பற்றி அவர்கள் சரியாகப் புரிந்துகொள்வதில்லை. உன்னதங்களில் உள்ள சத்துருவின் வல்லமை இந்த யுத்தத்தில் இடம் பெறுவதில்லை, என்றாலும் தாங்கள் அறியாத வகையிலே அந்தச் சக்திகளால் கட்டுப்படுத்தப்படுகின்றனர்.

தங்களுக்குக் கொடுக்கப்பட்ட எந்தச் சூழ்நிலையிலும் செயல்படக்கூடிய அந்தச் சக்திகளின் தன்மைகளை நாம் இனம் கண்டுகொள்ள வேண்டும். அவ்வாறு அறிந்துகொள்வது யுத்தத்தில் வெற்றிபெறுவதற்கான ஒரு வழியாகும். சமீப காலமாக நான் உலகத்தின் முன்னேற்றத்தைப் பற்றித் தியானித்துக் கொண்டிருந்தேன். சிறப்பாக ஐக்கிய நாடுகளைப் பற்றியும், இஸ்ரவேல் நாட்டைப் பற்றியும்

அதிகமாகத் தியானித்தேன். இந்தக் கடைசி காலத்தில் வாழும் மக்களிடம் தீமைகளையும், சாத்தான் தன்னுடையத் திட்டங்களையும், நோக்கங்களையும், நிறைவேற்றுவதற்காகப் பயன்படுத்தும் அவனது ஏமாற்றும் திறமைகளையும் எனக்குக் காண்பித்தார். அதுவே அவனுடைய "மனித நலக் கோட்பாடாகும்".

மனித நலக்கோட்பாட்டை ஒப்பிட்டுப் பார்க்கையில் தீங்கற்ற கோட்பாடாகவே எனக்குத் தோன்றியது. நான் அகராதியினைப் பார்த்த பொழுது அதன் வரையறையைக் கண்டு அதிர்ச்சியடைந்தேன். "மனித நலக்கோட்பாட்டிற்கு எதிரான வல்லமையை அல்லது ஒழுக்க நெறிகோட்பாட்டினைப் புறக்கணித்தல்; மனுக்குலம் தன்னிலே முன்னேற்றம் அடைவதற்கு எதிரான மத நம்பிக்கைகளைப் புறக்கணித்தல் என அர்த்தம் கொடுக்கப்பட்டிருந்தது".

மனித நலக்கோட்பாட்டுடன் ஆவிக்குரிய நிலையை ஒப்பிடமுடியாது என்பதைப் புரிந்து கொண்டேன். அது தேவனுடைய வல்லமையையும், அவருடைய அதிகாரத்தையும் வெளிப்படையாக மறுக்கிறது. அதோடுமட்டுமல்ல அதைப் புறக்கணிக்கிறது. தன்னுடைய சொந்த முயற்சியால் முன்னேறிவிடலாம் என்ற நம்பிக்கையே அவர்கள் மதத்தைப் புறக்கணிக்கக் காரணமாய் அமைகின்றது. இதனால்தான் அமெரிக்கா போன்ற நாடுகளில் மதச் சம்பந்தமான கல்வியை, கல்வி நிலையங்களில் அனுமதிப்பதில்லை.

நான் மீண்டும் இந்த மனித நலக்கோட்பாட்டை வரலாற்றின் மூலமாக ஆராயத் தீர்மானித்தேன். நேபுகாத்நேச்சாரின் கனவிலிருந்து என் ஆராய்ச்சியைத் தொடங்கினேன். (தானியேல் 2:31-40) "அந்தச் சிலையின் தலை பசும்பொன்னும், அதின் மார்பும், அதின் புயங்களும் வெள்ளியும், அதின் வயிறும் அதின் தொடையும் வெண்கலமும், அதின் கால்கள் இரும்பும், அதின் பாதங்கள் பாதி இரும்பும், பாதி களிமண்ணுமாயிருந்தது." இதுவே நேபுகாத்நேச்சாரின் கனவாகும். பிற்காலத்தில் வரப்போகின்ற நான்கு சாம்ராஜ்யங்களை முன்குறிப்பதாக இது உள்ளது என்று தானியேல் வியாக்கியானம் பண்ணினார். தலை - பாபிலோன் சாம்ராஜ்யமாகும், மார்பும் அதின் புயமும் - மேதிய பெர்சிய சாம்ராஜ்யமாகும், வயிறும், தொடையும் - கிரேக்க சாம்ராஜ்யமாகும். கால்கள் - ரோம சாம்ராஜ்யமாகும்.

இதில் அடங்கியுள்ள உண்மை என்னை மிகவும் பரவசப்படுத்தியது. வயிறும், தொடையும் கிரீஸைக் குறிக்கிறது. ஏற்கெனவே கிரேக்கத் தத்துவத்தை நான் அறிந்திருந்தபடியால் ஒரு உண்மை எனக்குத் தெளிவாகியது. அதாவது கிரீஸ் மற்ற எல்லா இராஜ்யங்களையும்விடத் தன்னுடைய தத்துவத்தின் மூலம் அநேகப் புதிய கலாச்சாரங்களை உருவாக்கியுள்ளது என்பதே அந்த உண்மையாகும்.

ஹிராகிளீட்டசும் பித்தாகோரசும் ஆரம்ப கிரேக்க தத்துவ ஞானிகள். அவர்களின் முக்கிய மூன்று கூற்றுகளாவன. “அனைத்தும் கடந்து செல்லக்கூடியவையே” “மாறாத ஒரே ஆற்று நீரின்மேல் இருமுறை கால்வைக்க இயலாது'' ''மனிதன் தான் எல்லா அளவீட்டையும் நிர்ணயிக்கின்றான்”. இம்மூன்று கூற்றுகளும் மனித நலக் கோட்பாட்டை நன்கு விளக்குகிறது. ஒவ்வொன்றும் மற்றொன்றைத் தழுவியே இருக்கின்றது. முழுமையாகக் கலப்பற்றது என்று ஒன்றுமில்லை. இப்பிரபஞ்சத்தில் மனிதனே தலையாய அதிகாரம் உள்ளவன்.

முதலாவது ஐரோப்பிய சிந்தனையையும் பின்பு ஐரோப்பா மூலம் நாம் வாழும் நாட்களின் கலாச்சாரத்தையும் இப்படிப்பட்ட எண்ணம் எவ்வாறு ஆதிக்கம் செலுத்தியது என இந்நூலில் விளக்க முற்படவில்லை. கிரேக்கர்கள் மனித மனத்தை அதிமுக்கியப்படுத்தினர். பூரண மனதின் தியானம் தேவனாயிருக்கும் என்பது அரிஸ்டாடிலின் கொள்கை - ஏனென்றால் தியானம் செய்வதற்கு அதைவிட பெரியதொன்றும் இல்லை. இதிலிருந்துதான் பகுத்தறிவு வாதம் (rationalism) உருவானது.

இந்தத் தத்துவத்தைத் தவிர, மற்றுமொரு முக்கியமான கிரேக்கக் கலாச்சாரம் ஒன்று உள்ளது. அது என்னவென்றால், விளையாட்டுகளில் அவர்கள் காட்டும் ஆர்வமாகும். அவர்களுடைய விளையாட்டுத் திறமையே அவர்களுடைய விக்கிரகமாகிவிடுகிறது. இந்த நூற்றாண்டில் வாழ்கின்ற மக்களுக்கு அதுவே வாழ்வின் நெறியாகி விடுகிறது. இன்றைக்கு உலக அளவிலான விளையாட்டுப் போட்டிகள் தொலைக்காட்சியில் அதிகமாக ஒளிபரப்பப்படுகிறது.

மனித நலக் கோட்பாடோடு ஆவிக்குரிய நிலையை ஒப்பிடமுடியாது. அது தேவனின் வல்லமையையும் அவருடைய அதிகாரத்தையும் அப்படியே மறுக்கிறது.

கிரேக்க நாடுகள் ஒரு ஆணுக்கும் ஒரு பெண்ணுக்கும் உள்ளத் திருமண உறவை தரக்குறைவாக மதிப்பிடுகிறது. அதே நேரத்தில் இரு ஆண்களுக்கும் இடையில் உள்ள உறவே (Homosexual) “நிறைவான இன்பத்தைத்'' தருகிறது என்று மதிப்பிட்டுள்ளனர். அவர்களது கலாச்சாரத்தின்படி ஆண்களின் உருவம் பொதுவாக நிர்வாணமாகவும், பெண்களின் உருவம் சிறு துணியினால் மூடப்பட்டதாகவும் இருக்கிறது.

கிரீஸின் தெய்வங்களே அவர்களின் நன்னடத்தையின் வீழ்ச்சிக்குக் காரணமாகவுள்ளன. மனித நலக்கோட்பாட்டில் இச்சை, ஒழுக்கமின்மை, பொறாமை, வழிதவறி நடத்தல், ஏமாற்றுதல், பழிக்குப் பழிவாங்கும் இயல்பே நிறைந்துள்ளன. அவர்களது தெய்வத்தைப்

போலவே சுயாதீனமாக இருக்கவும் தங்களுக்கு விருப்பான வழிகளை வகுத்துக் கொள்ளவும் அவர்கள் உரிமையுள்ளவர்களாய் தங்களைக் கருதுகின்றனர். தங்களது தெய்வத்திற்கும் மேலானதொரு வாழ்க்கை வாழ்வதற்கு அவர்கள் விரும்புவதில்லை.

கிரேக்க மனித நலக்கோட்பாட்டில் காணப்படுகின்ற இந்த முயற்சிகள் எல்லாம் நன்றாக வளர்ந்து, மேற்கத்திய கலாச்சாரத்திற்கு இணையாகவுள்ளது. தேவனுடைய நியாயப்பிரமாணங்களையும், முதலாவது மோசேயின் மூலமாகவும், அதற்குப்பின் இயேசு கிறிஸ்துவின் மூலமாகவும் கொடுக்கப்பட்ட உடன்படிக்கைகள் எல்லாவற்றையும் புறக்கணிப்பவர்களாய் அவர்கள் உள்ளனர். மேலே கூறப்பட்ட எல்லாவற்றையும் பார்க்கும்பொழுது, மனித நலக்கோட்பாடு என்பது என்னவென்றால் உண்மையைத் தவிர எல்லாவற்றையும் நம்புவதாகும். நீதியைத் தவிர எல்லாவற்றையும் அனுமதிப்பதாகும்.

மனித சக்தியே இறுதியாக அந்திக்கிறிஸ்து உருவாக இடமளிக்கிறது. (வெளிப்படுத்தின விசேஷம் 13:18ஐப் பார்க்கவும்) “அந்த மிருகத்தின் இலக்கத்தைப் புத்தியுள்ளவன் கணக்குப் பார்க்கக்கடவன்; அது மனுஷனுடைய இலக்கமாயிருக்கிறது” என்று கூறுகிறது. அவன் பாவம் நிறைந்தவன் (நீதியற்றவன்). 2 தெசலோனிக்கேயர் 2:4இல் ‘‘அவன் எதிர்த்து நிற்கிறவனாயும், தேவனென்னப்படுவதெதுவோ, ஆராதிக்கப்படுவதெதுவோ, அவையெல்லாவற்றிற்கும் மேலாகத் தன்னை உயர்த்துகிறவனாயும், தேவனுடைய ஆலயத்தில் தேவன் போல உட்கார்ந்து, தன்னைத்தான் தேவனென்று காண்பிக்கிறவனாயும் இருப்பான்” என்று அந்திக்கிறிஸ்துவைப்பற்றிக் கூறுகிறது.

மனிதயியல் உண்மையைத் தவிர எல்லாவற்றையும் நம்பும், நீதியைத் தவிர எல்லாவற்றையும் சகிக்கும். இதுவே மனிதயியலைப் பற்றித் திட்டவட்டமாய் எடுக்கப்பட்ட முடிவாகும்.

தேவ நீதியை மறுக்கிற யாவரையும் அந்திக்கிறிஸ்து தன்னுடைய ஆளுகைக்குக் கீழே கொண்டுவருவான் என்று வேதம் வெளிப்படுத்துகிறது. இந்தக் காரணத்தினால் தேவன் சக்திவாய்ந்த ஏமாற்றத்தின் ஆவியை அவர்களுக்குள் அனுப்புவார். அதனால் அவர்கள் அந்தப் பொய்யான போலித் தோற்றத்தை அப்படியே நம்புவார்கள். சாத்தான் நமது ஆதிப் பெற்றோர் ஆதாமையும், ஏவாளையும் இந்தப் பொய்யைச் சொல்லியே ஏமாற்றினான். “நீங்கள் தேவனைப் போல் இருப்பீர்கள்” “நீங்கள் தேவர்களாவீர்கள்” என்று கூறி ஏமாற்றினான்.

தேவனுடைய இடத்தை மனிதனுக்குக் கொடுப்பேன் என்று சொல்லி ஏமாற்றியதால், அது ''எல்லோரையும் பெரிய உபத்திரவத்திற்குட்படுத்தியது". உலக அளவிலான ஒரு நீண்ட கால கட்டத்திற்கு ஒரு மிகக் கொடிய துன்பம் நீடித்தது. படுகொலைக் காலக்கட்டம் 1939-1945 வரையிலும் நீடித்தது (பார்க்கவும்: மத்தேயு 24:21-22).

இந்த உபத்திரவத்தின் காலம் முடிவதற்கு முன்பு, இஸ்ரவேல் மக்களிடமும், சபையிலும் தேவனுக்கு ஒரு பெரிய திட்டத்தை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு இருந்தது. கிருபையின் அறுவடைக்காலம், நீதியின் அறுவடைக் காலத்திற்கு வழிவகுத்தது. தேவனுடைய ஆயத்தப்பணி சகரியா 9:13இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. "சீயோனே, உன் புத்திரரைக் கிரேக்குதேசப் புத்திரருக்கு விரோதமாக எழுப்பி, பராக்கிரமசாலியின் பட்டயத்திற்கு ஒப்பாக்குவேன்" என்பதே அந்த வெளிப்பாடாகும்.

"கிரேக்குதேசப் புத்திரர்" என்பவர்கள் மனித நலக்கோட்பாட்டைத் தழுவிக்கொண்டவர்கள் ஆவார்கள். "சீயோன் புத்திரர்" என்பவர்கள் என்றும் மாறாத தேவனுடைய வார்த்தையின்படி நடந்து, தேவனுடைய வாக்குத்தத்தங்களையும், உடன்படிக்கைகளையும் தழுவிக் கொண்டவர்கள் ஆவார்கள். அவர்கள் இஸ்ரவேலிலிருந்தும், சபைகளிலிருந்தும் வந்தவர்கள். அவர்களைக் குறித்து அவர்கள் அவனை மேற்கொண்டார்கள் (சாத்தானை) என்று கூறப்பட்டுள்ளது எப்படி? வெளி 12:11இல் "மரணம் நேரிடுகிறதாயிருந்தாலும் அதற்குத் தப்பும்படி தங்கள் ஜீவனையும் பாராமல், ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும், தங்கள் சாட்சியின் வசனத்தினாலும் அவனை ஜெயித்தார்கள்." அவர்கள் தங்கள் வாழ்க்கையைக் காட்டிலும் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவதையே தங்கள் முக்கியக் குறிக்கோளாகக் கொண்டிருந்தனர் அதற்கே முதலிடம் கொடுத்தனர்.

"மனித நலக் கோட்பாடு" என்ற சக்திக்கே அநேகர் அடிமைப்பட்டுள்ளனர். நாம் யூதாவின் அரசனாகிய ஆசாவின் எடுத்துக்காட்டின் மூலமாக நம்மைத் தைரியப்படுத்திக் கொள்ளலாம். தன்னைக் காட்டிலும் மிகுந்த வல்லமையுள்ள படைகளோடு எதிர்த்துப் போராடும் நேரத்தில் அவன் ஜெபம் பண்ணினான். அப்பொழுது அவனால் எதிர்பார்க்கப்பட்ட தோல்வி ஒரு முழு வெற்றியாக மாறியது. "மனித நலக்கோட்பாட்டை" முறியடிக்கலாம் என்பதற்கு இந்த ஆசாவின் ஜெபமானது ஒரு நல்ல மாதிரியாக உள்ளது.

> "ஆசா தன் தேவனாகிய கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டு: கர்த்தாவே, பலமுள்ளவனுக்காகிலும், பலனற்றவனுக்காகிலும் உதவி செய்கிறது உமக்கு லேசான காரியம்; எங்கள் தேவனாகிய கர்த்தாவே,

எங்களுக்குத் துணை நில்லும்; உம்மைச் சார்ந்து உம்முடைய நாமத்தில் ஏராளமான இந்தக் கூட்டத்திற்கு எதிராக வந்தோம்; கர்த்தாவே, நீர் எங்கள் தேவன்; மனுஷன் உம்மை மேற்கொள்ளவிடாதேயும் என்றான்".

2 நாளாகமம் 14:11

"சீயோன் புத்திரர்" என்று நாம் அழைக்கப்படுவதற்கு ஆயத்தமா? இந்த வினாவை நமக்கு நாமே கேட்டுக்கொள்ளக் கூடுமா?

22

சாத்தான் தேவனோடு ஒப்புரவாகுவதற்கு வாய்ப்பு உள்ளதா?

தற்கால கிறிஸ்தவர்களாக நாம் கற்றுக்கொண்டது என்னவென்றால் நாம் அறியாத வண்ணமாகவே *மனித நலக்கோட்பாடு* என்னும் தத்துவத்தால் தொடர்ந்து தாக்கப்படுகிறோம். தற்கால மனிதன் நல்லொழுக்கத்திற்கும் ஆவிக்குரிய உண்மைக்கும் நடுவராக தேவனுக்கும் தீய சக்திகளுக்கும் மத்தியில் ஒப்புரவாகுமா என நிதானிக்கும் நிலையில் இருக்கிறான். இந்த ஒப்புரவுச் செயலில் சாத்தான், வீழ்ந்துபோன தேவ தூதர்கள், பிசாசுகள் மேலும் தேவனுக்கு விரோதமாகச் செயற்படும் மனிதர்களும் உள்ளடக்கம் என இக்கொள்கை கூறுகிறது.

இப்படிப்பட்ட ஒப்புரவாகுதல் என்னும் கோட்பாடு நேர்மையான நல்லெண்ணம் உள்ள கிறிஸ்தவர்களையும் பாதிக்கிறது. இது வேத வசனத்திற்கு விரோதமான கருத்து. இதற்காகப் பொதுவாகக் கூறப்படும் ஒரு வசனம் கொலோசெயர் 1:19-20.

> “சகல பரிபூரணமும் அவருக்குள்ளே வாசமாயிருக்கவும், அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி, பூலோகத்திலுள்ளவைகள் பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் அவர் மூலமாய்த் தமக்கு ஒப்புரவாக்கிக்கொள்ளவும் அவருக்குப் பிரியமாயிற்று”.

இதில் “அவர் மூலமாய்த் தமக்கு ஒப்புரவாக்கிக்கொள்ளவும் அவருக்குப் பிரியமாயிற்று” என்ற மத்திய வசனத்தின் அடிப்படையில் இக்கொள்கையை முக்கியப்படுத்துகின்றனர். “யாவையும்” என்று வரும் பதத்திற்குப் பின்பு “பூலோகத்தில் உள்ளவைகள் பரலோகத்தில் உள்ளவைகள்” என்னும் வார்த்தைகள் தொடர்கின்றன. ஆகவே, இந்த ஒப்புரவு பூலோகத்தில் உள்ளவைகளுக்கும் பரலோகத்தில் உள்ளவைகளுக்கும் மட்டுமே பொருந்தும்.

தற்கால மனிதன் நல் ஒழுக்கத்திற்கும் ஆவிக்குரிய உண்மைக்கும் நடுவராக தேவனுக்கும் தீய சக்திகளுக்கும் மத்தியில் ஒப்புரவாகுமா என நிதானிக்கும் நிலையில் இருக்கிறான்.

இந்தக் கருத்து வெளிப்படுத்தின் விசேஷம் 20:7-15இல் உள்ள வசனங்களில் குறிக்கப்பட்டுள்ள தேவனுடைய இறுதி நியாயத்தீர்ப்பின் விளக்கத்தால் உறுதி செய்யப்படுகிறது. 11ம் வசனத்தில் தேவப்பிரசன்னதிலிருந்து “பூமியும் வானமும் அகன்றுபோயின” என்று அறிகிறோம். பின்பு 15ம் வசனத்தில் ‘‘ஜீவ புஸ்தகத்திலே எழுதப்பட்டவனாகக் காணப்படாதவனெவனோ அவன் அக்கினிக் கடலிலே தள்ளப்பட்டான்’’ என்று கூறப்பட்டுள்ளது. பூமியும் வானமும் அகன்று போன பின்பும் அக்கினிக்கடல் தொடர்ந்து இருக்கும் என்பது உறுதியாகிறது. சொல்லப்போனால் அக்கினிக்கடல் பூமியிலோ அல்லது வானத்திலோ இல்லை. ஆகவே, கொலோசெயர் 1:20இல் அக்கினிக்கடலில் தள்ளப்பட்டவர்கள் தேவனுடன் ஒப்புரவாகுவதற்கு வாய்ப்பேயில்லை என்று சொல்லப்பட்டுள்ளது. வேறு வார்த்தைகளில் சொன்னால் ஒப்புரவாகுதல் இவ்வசனத்தில் குறிக்கப்படாத ஒன்று எனத் தெளிவுறலாம்.

நித்தியம் என்பது எவ்வளவு காலம்?

இறுதியான நிரந்தர தண்டனை இல்லை என்பதனைக் கூற முற்படும் மற்றொரு தருக்கம் கிரேக்கச் சொல்லான (aionios) ‘எயோநியாஸ்’ என்ற சொல், பொதுவாக ‘‘நித்தியமான’’ ‘‘நிரந்தரமான’’ என மொழிபெயர்க்கப்படுவதிலிருந்து எழுந்துள்ளது. இந்தச் சொல் கிரேக்கப் பெயர்ச்சொல்லான (aion) “ஏயான்” என்ற சொல் “தொடர்புடைய” “காலம் மட்டும் தொடரும்” என்ற அர்த்தம் உள்ளது. இதிலிருந்து எயோநியாஸ் என்ற சொல் தொடர்ந்து காலாகாலமாக எனக் குறிப்பிடாமல் ஒரு காலத்தை மட்டும் குறிப்பிடும் என்கின்றனர்.

இந்த விளக்கம் இயேசுவின் வார்த்தைகளில் மறுத்துக் கூறப்படுகிறது. “அந்தப்படி, இவர்கள் (தீயவர்கள்) நித்திய ஆக்கினையை அடையவும், நீதிமான்களோ நித்திய ஜீவனை அடையவும் போவார்கள் என்றார்’’ (மத்தேயு 25:46). நித்திய ஆக்கினை இல்லை என்னும் கொள்கையினை பரப்புவோர் “நித்திய ஆக்கினை” என்பது முடிவற்ற தண்டனையன்று. ஆனால் ஒரு காலம் வரைக்கும் தொடரும் தண்டனையே என்று கூறி அதன் பின்பு சும்மா இருந்து விடுகின்றனர். அப்படியானால் அறிவு சார்ந்த விளக்கமளிப்பவர்கள் நித்திய ஆக்கினை

எங்கே மனந்திரும்புதல் இல்லையோ அங்கே ஒப்புரவாகுதலும் இருக்காது.

என்பது கால வரையறைக்கு உட்பட்டது என்று கூறுவார்களா? இதுதான் இயேசு சொல்ல விரும்பியது என எவராவது கூறுவார்களா?

மறுதலையாக இவ்வசனம் அறுதியிட்டுக்கூறுவது எயோநியாஸ் (aionios) என்னும் உரிச்சொல் 'ஒரு காலத்தையே குறிக்கும்' என்கின்றனர்; அது காலாகாலத்தைக் குறிக்குமேயன்றி குறிப்பிட்ட குறைந்த காலத்தைக் குறிக்காது. இக்கருத்து "வாழ்விற்கும்", "தண்டனைக்கும்" நித்திய காலத்தையே குறிக்கும்.

இது கிரேக்கப் புதிய ஏற்பாட்டில் வரும் இன்னொரு கிரேக்கச் சொல்லாலும் உறுதி செய்யப்படுகிறது. "eis (tous) aionas ton aionon'' இதற்கும் "நித்திய காலம்" என்றுதான் பொருள். சுமார் 20 முறை கிரேக்கப் புதிய ஏற்பாட்டில் வரும் இப்பதம் "நித்திய நித்தியமாக" என்றுதான் மொழிபெயர்க்கப்படுகிறது. கிரேக்கத்தில் வேறு எந்தப் பதமும் இதைப்போல நிரந்தரமான முடிவற்ற காலத்தை அழுத்தமாகக் கூறவில்லை.

இதே பதம் வெளி 20:10இல் பயன்படுத்தப்பட்டுள்ளது. அதில் பிசாசு, மிருகம், கள்ளத்தீர்க்கதரிசி ''அவர்கள் இரவும் பகலும் *சதாகாலங்களிலும்* வாதிக்கப்படுவார்கள்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. தண்டனை என்பது முடிவுற்றது என்பதற்கு இதைவிடத் தெளிவாகக் கூற முடியாது.

ஒப்புரவாகுதலுக்கான ஒரே அடிப்படை

சாத்தானும் தேவனும் ஒப்புரவாகுவார்கள் என்று பேசுபவர்கள் ஒப்புரவாகுதல் என்ற சொல் எந்த அர்த்தத்தில் வேதத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதை அறியாதவர்களே. பேதுரு "கர்த்தர் . . . ஒருவரும் கெட்டுப்போகாமல் மனந்திரும்பவேண்டுமென்று விரும்பி நம்மில் நீடிய பொறுமையுள்ளவரயிருக்கிறார் (2 பேதுரு 3:9). நீடிய பொறுமை ''நமக்காகக் காட்டப்படுவது என்பதைக் கவனிக்கவும். தேவனுடைய கிருபைக்கும் ஒப்புரவாகுதலுக்கும் அடிப்படையில் தேவையான மாறாத பெரிய நிபந்தனை, மனந்திரும்புதலாயிருக்கிறது என்பதைக் கவனிக்கவும். மனந்திரும்புதல் என்பது தவறு செய்ததைத் தாழ்மையுடன் ஒப்புக்கொள்வது, தவறு செய்வதிலிருந்து விட்டுவிலகுவது, நிபந்தனையின்றி தேவனுக்கு ஒப்புக்கொடுப்பது. எங்கே மனந்திரும்புதல் இல்லையோ அங்கே ஒப்புரவாகுதலும் இருக்காது.

படைக்கப்பட்டவர்களின் சித்தம் முரட்டாட்டமுள்ளதாய் இருக்கும்போது அது மாறுவதற்கு இயலாத காரியம். இப்படிப்பட்ட சூழ்நிலையில் மனந்திரும்புதலுக்கு வழியில்லை. எபிரெயர் 12:17இல் ஏசா "பிற்பாடு அவன் ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக்கொள்ள விரும்பியும் ஆகாதவனென்று தள்ளப்பட்டதை அறிவீர்கள்" என்று வருகிறது. அவன் "மனம் மாற இடமளிக்கவில்லை" என்பது தெளிவு. பிறப்புரிமை பற்றிய காரியத்தில் அவன் மாறாத தீர்மானத்தில் இருந்தான். ஆகவே ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ள முடியாதபடி அதை இழந்தான்.

சாத்தான் அவனைச் சார்ந்த தூதர்கள் பற்றிய காரியமும் இவ்வாறே உள்ளது. தேவனுக்கு விரோதமாக ஆரம்பத்தில் எதிர்த்து நின்றதில் நீக்கமுடியாத மாறாத எண்ணமுடையவர்களாயிருந்தது வெளிச்சமிட்டுக் காட்டப்பட்டுள்ளது. அவர்கள் சித்தம் நித்தியமாக மாறாத நிலையில் சர்வ வல்ல தேவனுக்கு விரோதமாக நிலைத்திருந்ததால் அங்கு ஒப்புரவிற்கு இடமேயில்லை.

கிறிஸ்து மனிதர்கள் சார்பில் செயற்பட்டாரேயன்றி தேவதூதர்களின் சார்பில் அல்ல

கிறிஸ்துவின் தியாக மரணம் மனுக்குலத்திற்கு மட்டுமே உரியது என்பது தெளிவான கருத்து. இயேசு "உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி" (யோவான் 1:29). அவர் "நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதாரபலி அவரே; நம்முடைய பாவங்களை மாத்திரம் அல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்தி செய்கிற பலியாயிருக்கிறார்" (1 யோவான் 2:2). இவ்விரண்டு வசனத்திலும் ஆங்கிலச் சொல்லான உலகம் என்பது கிரேக்கத்தில் காஸ்மாஸ் (kosmos) என்று வருகிறது. நன்றாக ஆராய்ந்து பார்த்தால் "காஸ்மாஸ்" என்னும் சொல் புதிய ஏற்பாடு முழுவதிலும் பூமியையும் அதன் குடிகளையும் மட்டுமே குறிக்கும்.

இதனை உறுதிப்படுத்தும்படி புதிய ஏற்பாட்டில் மூன்று வசனங்களைக் கூறலாம். ரோமர் 5:12இல் பவுல்: "இப்படியாக, ஒரே மனுஷனாலே பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்திலே (kosmos) பிரவேசித்ததுபோலவும், எல்லா மனுஷரும் பாவஞ்செய்தபடியால், மரணம் எல்லாருக்கும் வந்ததுபோலவும் இதுவுமாயிற்று'' என்று கூறுகிறார். அந்த ஒரு மனிதன் ஆதாம். பாவம் ஏற்கெனவே சாத்தானாலும் அவன் தூதர்களாலும் பரலோகத்தில் செய்யப்பட்டது. அது உலகத்திற்குப் புறம்பான செயல். பாவமானது மனித இனம் இவ்வுலகில் செய்தது. நோவாவின் நாட்களிலே மனுக்குலத்தின்மேல் தேவன் செய்த நியாயத்தீர்ப்பைக் குறித்து "பூர்வ உலகத்தையும் தப்பவிடாமல், நீதியைப்

பிரசங்கித்தவனாகிய நோவா முதலான எட்டுப்பேரைக் காப்பாற்றி, அவபக்தியுள்ளவர்கள் நிறைந்த உலகத்தின்மேல் ஜலப்பிரளயத்தை வரப்பண்ணி" என்கிறார். ஆகவே "அப்பொழுது இருந்த "உலகம்" ஜலப்பிரளயத்தினாலே அழிந்ததென்பதையும் மனதார அறியாமலிருக்கிறார்கள்" (2 பேதுரு 3:6) என்று கூறுகிறது. இவ்விடங்களில் "இவ்வுலகம்" என்பது பூமியில் உள்ள மனிதர்களையே குறிக்கும்.

இதிலிருந்து சிலுவையில் இயேசு மரணமடைந்து மனுக்குலத்தை மீட்டது இவ்வுலகில்தான். சாத்தானுக்கும் அவனுடைய தூதர்களுக்குமல்ல. இதனை எபிரெயரில் வரும் வசனம் தெளிவுபடுத்துகிறது.

> ஆதலால், பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க, அவரும் அவர்களைப்போல மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார்; மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கும் . . . ஆதலால், அவர் தேவதூதருக்கு உதவியாகக் கைகொடாமல், ஆபிரகாமின் சந்ததிக்கு உதவியாகக் கைகொடுத்தார்.
>
> எபிரெயர் 2:14,16

இயேசு மாம்சமாக வந்தபோது ஆபிரகாமின் சந்ததியில் அதாவது ஆதாமின் சந்ததியில் தோன்றினார். அவர் "பிந்தின ஆதாம்" என 1 கொரிந்தியர் 15:45இல் குறிக்கப்பட்டுள்ளது. அவர் ஆதாமின் சந்ததியினை மீட்கத்தான் சிலுவையில் மரணமடைந்தார். அவர் தேவதூதரின் சாயலில் வந்து தேவதூதர்களை மீட்கவில்லை. ஆகவே தேவதூதர்களின் மன்னிப்பிற்கு இடமேயில்லை. சொல்லப்போனால் இயேசு சிலுவையில் மரித்ததின் காரணம் பிசாசை இரட்சிக்க அல்ல பிசாசின் கிரியைகளை அழிக்கவே (எபிரெயர் 2:14). இதைவிட வேறு தெளிவான வசனம் வேண்டுமா?

இந்த ஆவிக்குரிய தளத்தில் நடுநிலை கிடையாது. இயேசு சொல்கிறார்: "என்னோடே இராதவன் எனக்கு விரோதியாய் இருக்கிறான்"

இதன் காரணமாகவே, கிறிஸ்து, இவ்வுலக முடிவில் மகிமையோடே திரும்பும்போது - "வெள்ளாடுகளைத்" தமது இடது பக்கம் நிறுத்துவார் என்று வெளிப்படுத்தப்பட்டுள்ளது: "அப்பொழுது, இடது பக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து அவர்: சபிக்கப்பட்டவர்களே, என்னைவிட்டு, பிசாசுக்காகவும் அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற நித்திய

அக்கினியினிலே போங்கள்" (மத்தேயு 25:41). இந்த நித்திய அக்கினி - ஹெகன்னா (Gehenna) அல்லது அக்கினிக்கடல் என்று அழைக்கப்படுகிறது. இது பிசாசுக்கும் அவனுடைய தூதர்களுக்கும் ஆயத்தம் செய்யப்பட்டது. இது அவர்களின் நிச்சயமான, தவிர்க்க முடியாத, நித்திய முடிவாகும். இப்பகுதி மனுக்குலத்திற்காக படைக்கப்பட்டது அல்ல. மனிதர்கள் இங்குச் செல்ல வேண்டியதில்லை. அவர்கள் மனந்திரும்பி தேவனுக்குத் தங்களை ஒப்புக்கொடுப்பார்களாயின், இவ்விடத்திற்குச் செல்லமாட்டார்கள். ஒப்புக்கொள்பவர்களுக்கு வேறு இடம் நியமிக்கப்பட்டுள்ளது. ஆனால், சாத்தானுக்கும் அவனுடைய தூதர்களுக்கும் வேறொரு இடம் நியமிக்கப்படவில்லை.

சாத்தானுக்கு வழக்காடுபவர்கள் தேவனுடைய விரோதிகள்

இந்த ஆவிக்குரிய தளத்தில் நடுநிலை கிடையாது. இயேசு "என்னோடே இராதவன் எனக்கு விரோதியாயிருக்கிறான்; என்னோடே சேர்க்காதவன் சிதறடிக்கிறான்" என்று மத்தேயு 12:30இல் கூறியுள்ளார். இரண்டுவித தீர்மானங்களே உண்டு: ஒன்று தேவனுக்கு ஒப்புக்கொடுப்பது, மற்றது எதிர்த்து நிற்பது. மனந்திரும்புதல் மூலம் தேவனுக்குத் தம்மை ஒப்புக்கொடுப்பவர்கள் அக்கினிக்கடலில் தள்ளப்படுவதிலிருந்து தப்பித்து விடுவர். மற்றவர்கள் அனைவரும் தேவனுக்குத் தங்களை ஒப்புக்கொடாதவர்கள் தேவனுக்கு விரோதமானவர்கள். இப்படிப்பட்டவர்கள் தங்களைப் பிசாசுடனும் அவனுடைய தூதர்களுடனும் தங்களை இணைத்துக்கொண்டவர்கள். இந்த இணைப்பின் காரணமாக அவர்கள் அந்த இடத்திற்கே அனுப்பப்பட உள்ளனர் - அது அக்கினிக்கடல். இந்த அக்கினிக்கடலில் பிரவேசிப்பவர்களுக்கு மீட்கப்பட வழியேயில்லை. "நித்திய நித்தியமாய்" அங்கே இருப்பர்.

இங்குதான் ஒப்புரவாகுதலின் கொள்கையைப் பின்பற்றும் பெயர்க்கிறிஸ்தவர்களுக்கு ஆபத்து உள்ளது. தேவன் வேதத்தில் இரண்டு காரியங்களைத் தெளிவாகக் கூறுகிறார். தேவன் நீதியுள்ளவர் பட்சபாதம் பார்ப்பவரல்ல. இரண்டாவதாக தேவன் பிசாசையும் அவன் தூதர்களையும் நித்திய எரிநரகத்திற்கு நியமித்துள்ளார். இந்த இரு காரியங்களில் இரண்டாவது காரியத்தின்மேல் கேள்விக்குறி எழுப்பினால் முதல் காரியத்தையும் ஒப்புக்கொள்ளாததாகவே ஆகும்.

இதை இவ்வாறு சிந்தித்து ப்பார். தேவனுடைய பண்பும் அவர்

சாத்தானுக்கு வழக்காடுபவன் தேவனுக்கு நண்பனாய் இருக்க முடியாது.

செயல்படுவதும் ஒரு நாணயத்தைப் போல் உள்ளது. அதற்கு எதிரான இரு பக்கங்கள் உள்ளன. இரு பக்கங்களும் சேர்ந்ததுதான் முழு நாணயம். இவ்விருபக்கங்கள் பற்றி பவுல்: “தேவனுடைய தயவையும் கண்டிப்பையும் பார்; விழுந்தவர்களிடத்திலே கண்டிப்பையும், உன்னிடத்திலே தயவையும் காண்பித்தார்; அந்தத் தயவிலே நிலைத்திருப்பாயானால் உனக்குத் தயவுகிடைக்கும்; நிலைத்திராவிட்டால் நீயும் வெட்டுண்டுபோவாய்” என்று ரோமர் 11:22இல் கூறுகிறார். அவை தயவும் கண்டிப்பும். ஒரு பக்கத்தில் இரக்கமும் கிருபையும். மறுபக்கத்தில் கோபமும் நியாயத்தீர்ப்பும்.

நாணயத்தில் ஒரு பக்கம் மட்டும் சரியாக இருந்தால், அது செல்லாது. அதைப்போலவே தேவன் வேதாகமத்தில் கூறுவதும் உள்ளது. நீதியைப்பற்றியே பேசி நியாயத்தீர்ப்பை விட்டால் அல்லது கிருபையையும் இரக்கத்தையும் பற்றியே பேசி கோபத்தையும் நியாயத்தீர்ப்பையும் ஒதுக்கித் தள்ளினால் அது நாணயத்தின் ஒரு பக்கத்தை அழித்தது போலாகும். இதனால் வேதத்தில் கூறப்பட்டுள்ளதை அரைகுறையாக மதிப்பது வசனத்தைப் பயனற்றதாக்கும். இப்படிப் பேசுபவர்கள் தேவனுக்கு உண்மையற்றவர்கள் மனிதனுக்கும் வேண்டாதவர்கள்.

இந்தக் கொள்கையைப் பின்பற்றுவது எவ்வளவு ஆபத்தானது என்று புரிகிறதா? எவராவது பிசாசு நித்திய நரகத்திற்கு அனுப்பப்படமாட்டான் என்று சொல்வார்களானால் அவர்கள் தேவனுடைய இரு சத்தியங்களையும் மறுதலிக்கிறவர்களாக அவரது நீதியைப் புறக்கணிக்கிறவர்களாவார்கள். இவ்வித தந்திர போதனையால் சாத்தான் நல்ல எண்ணமுள்ள கிறிஸ்தவர்களைத் தன் பக்கம் இழுத்துத் தேவனுக்கு விரோதமாக்கி விடுகிறான். எவனொருவனும் சாத்தானுக்கு வழக்காடுபவனாகவும் பிசாசுக்கு நண்பனாகவும் இருக்க முடியாது.

இந்த எண்ணம் உன்னில் உதித்திருக்கிறதா? அப்படியானால் நீ அதை மாற்றிக் கொள்ளவேண்டும். பிசாசுடன் உன் தொடர்பினைத் துண்டித்துவிடு. தேவனுக்கு விரோதமான உன் போக்கை மாற்று. உன்னைத் தாழ்த்து. உன்னைச் சத்தியத்திற்கும் தேவ நீதிக்கும் ஒப்புக்கொடு. இப்படிச் செய்வதால் அவருடைய கிருபையும் இரக்கமும் சமாதானமும் மீண்டும் உன்னை மேற்கொள்ளும். தாவீதின் வார்த்தைகளை மனதிற்கொள்.

> கர்த்தாவே, உம்மைப் பகைக்கிறவர்களை நான் பகையாமலும், உமக்கு விரோதமாய் எழும்புகிறவர்களை அருவருக்காமலும் இருப்பேனோ? முழுப்பகையாய் அவர்களைப் பகைக்கிறேன்; அவர்களை எனக்குப் பகைஞராக எண்ணுகிறேன். தேவனே, என்னை ஆராய்ந்து, என் இருதயத்தை அறிந்துகொள்ளும்; என்னைச் சோதித்து, என் சிந்தனைகளை அறிந்துகொள்ளும். வேதனை உண்டாக்கும் வழி என்னிடத்தில் உண்டோ என்று பார்த்து, நித்திய வழியிலே என்னை நடத்தும்.
>
> சங்கீதம் 139: 21-24

சாத்தானையும் அவனுடைய தூதர்களையும் பற்றிய தாவீதின் இந்த அறிக்கையை நீயும் செய். உன் இருதயத்தைச் சோதித்துப் பார்க்கும்படி கேள். பொல்லாத வழிகளை விட்டு ஒழி. நிலைத்து நிற்பவர்களுக்கு இதுவே கட்டளை.

23

யூதப்பகைமையும் இயேசுவின் வருகையும்

ஒரு ரோமன் கத்தோலிக்க சரித்திர ஆசிரியர் இரண்டாயிரத்து முந்நூறு ஆண்டுகளில் தொடர்ந்து நிலவி வந்த யூதப்பகைமையைப் பற்றிச் சுருக்கமாகவும் தெளிவாகவும் எழுதியுள்ளார்:

> அந்தச் சரித்திர ஆசிரியர் நூற்றுக்கணக்கான ஆண்டுகளில் நடந்த யூதப்பகைமையைப் பற்றி எழுதியுள்ளதில் கீழ்க்கண்ட தவிர்க்க முடியாத முடிவுக்கு வருகின்றோம்; மனித சரித்திரத்திலேயே யூதப்பகைமை என்பது ஆழமான நீண்ட பகைமையாகும். சரித்திரத்தின் சில கட்டங்களில் மற்ற பகைமைகள் வலுவுள்ளதாய் இருந்திருக்கலாம். ஆனால் இப்பொழுது பார்க்கும்பொழுது அவை சரித்திரத்தின் குப்பைத்தொட்டியில் போட்டதுபோலாகிவிட்டது. வேறு எந்தப் பகைமை, இருபத்து மூன்று நூற்றாண்டுகளாய்த் தொடர்ந்து அறுபது லட்சம் மக்களைப் பழி வாங்கியுள்ளது. இப்பகைமை இருபத்து மூன்று நூற்றாண்டுகள் தொடர்ந்து இன்றும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்த விபரங்களை முழுமையாய்ப் பார்க்கும் போது ஏன் இப்படி நடந்தது எனக் கேட்கத் தோன்றுகிறது. இப்படிப்பட்ட வெறுப்பும் தாக்குதலும் எவ்வாறு வந்தது? இதன் உள் அர்த்தம் என்ன? எது? அல்லது யார் இதற்குக் காரணம்?.

"யூதர்களின் கடுந்துயரம்" (The Anguish of this Jews-Paulist Press, 1985) என்ற புத்தகத்தில் மைக்கேல் ஃபிளானரி என்னும் எழுத்தாளர் யூதப் பகைமைக்கான விளக்கத்தைத் தருகின்றார். இறையியலுக்கடுத்த, தத்துவத்திற்கடுத்த, சமுதாயத்திற்கடுத்த, பொருளாதாரத்திற்கடுத்த பல விளக்கங்கள் கொடுக்கப்பட்டாலும் இவரது விளக்கம் தெளிவானதாயும் அர்த்தமுள்ளதாயும் இருக்கிறது.

1946ஆம் ஆண்டு இந்தக் கேள்வியை எருசலேமில் மவுண்ட் ஸ்கோபஸில் உள்ள எபிரெய சர்வ கலாசாலையின் எனது முதல் எபிரெய ஆசிரியரான திரு. பென் சீயோன் சீகல் (Mr. Ben Zion Segal) என்பவரிடம் விசாரித்தேன். திரு. சீகல் யூதப்பகைமையான இப்பிரச்சனை சமுதாயத்திற்கடுத்தது என்றார். யூதர்கள் பிற நாட்டவரின் கலாச்சாரத்திலிருந்து மாறுபட்ட தங்களுக்கென்று வித்தியாசமான கலாச்சாரத்தைப் பின்பற்றினர். யூதர்கள் தங்களுக்கென்றே ஒரு தனித்த மாகாணத்தை அமைத்துக்கொண்டால் - இந்த யூதப்பகைமைத் தீர்ந்துவிடும் என்றார். இது இரண்டு ஆண்டுகளுக்குப் பின்பு நடந்தது.

இந்த விபரங்களை முழுமையாய்ப் பார்க்கும் போது ஏன் இப்படி நடந்தது எனக் கேட்கத் தோன்றுகிறது. இப்படிப்பட்ட வெறுப்பும் தாக்குதலும் எவ்வாறு வந்தது? இதன் உள் அர்த்தம் என்ன? எது? அல்லது யார்? இதற்குக் காரணம்

இதற்கு நான் கொடுத்த பதில் சமுதாயக் காரணம்தான் யூதப்பகைமைக்கு அடிப்படையான காரணம் என நீங்கள் சொல்வது சரியானால் யூதர்களுக்குரிய தனி நாடு அமைக்கப்பட்டால் காலப்போக்கில் இப்பிரச்சனை தீர்ந்து போயிருக்கும். நான் நம்புவது சரியானால் யூதருக்குத் தனி நாடு அமைக்கப்படுமானால் இப்பிரச்சனை தீராது. ஏனெனில் இது ஆவிக்குரிய பிரச்சனை. அதற்கு மாறாக புதிதாக உருவாக்கப்படும் யூத நாடு இப்பிரச்சனையைத் தீவிரமானதாக்கும்.

நான் பின்னிட்டுப் பார்க்கும்பொழுது வருத்தத்துடன் கூறுகிறேன். சரித்திரம் நான் சொன்னது சரியென்று நிரூபித்துள்ளது. இஸ்ரவேல் நாடு நிறுவப்பட்டதால் யூதப்பகைமைக்குக் கொடுக்கப்பட்ட அடுத்த “சரியான பெயர்” “சீயோன் பகைமை” (Anti-Zionism) இப்பிரச்சனை தீவிரம் அடைந்துள்ளது.

யூதப்பகைமைக்கு அடிப்படையான காரணம் ஆவிக்குரியதே எனச் சரியாகக் கணித்தாலும் இதனுடைய வேர் என்ன என்பது தெளிவுபடுத்தப்பட வேண்டும். சமீபகாலத்தில் நான் இதைக்குறித்து ஆராய்ச்சி செய்யாத போதிலும் தொடர்ந்து வேதத்திலிருந்து யூதப்பகைமையின் வேரை எடுத்துக்காட்டக்கூடிய இரண்டு காரியங்கள் மின்னல் வெட்டுப்போல் தோன்றியது.

எருசலேமில் உள்ளூர் சபையில் பிரசங்கித்தபொழுது எதிர்பாராத விதமாக “யூதப்பகைமையினை மேசியா என்னும் ஒரு வார்த்தையில் கூறிவிட முடியும்” என எனக்கு நானே சொல்லிக் கொண்டேன்.

நாம் வாழும் இவ்வுலகில் ஏற்படும் அனைத்துப் பிரச்சனைகளுக்கும் பின்னால் இருப்பது இயேசுவின் வருகைக்குரிய சாத்தானுடைய எதிர்ப்பாகும்.

அந்த வேளையிலிருந்து யூதப் பகைமை சாத்தானிலிருந்து ஆரம்பமானது. அவனுடைய பயம் தன்னை தோற்கடிக்க இருப்பவர் மேசியா என்றும் அவர் தேவனால் ஆயத்தம் பண்ணப்பட்ட மக்கள் மூலம் தோன்றுவார் என்றும் பயந்தான். இந்த மக்களுக்கு உள்ள தனிச் சிறப்பு என்னவென்றால் இந்த மேசியா பூலோகப் பெற்றோருக்கு ஒரு கீழ்ப்படிதலின் மாதிரியைப் பின்பற்றும் வேளையிலும் விக்கிரக ஆராதனை அற்ற நிலையில் பரலோகத் தந்தையை கனவீனப்படுத்தாமலும் இருப்பார். தேவனால் பல நூற்றாண்டுகளாக ஆயத்தம்பண்ணப்பட்ட யூத மக்கள் மட்டுமே இந்நிபந்தனையை நிறைவேற்றக்கூடும்.

பின்பு இஸ்ரவேல் ஒரு நாடாகப் பிறந்த வேளையிலிருந்து சாத்தான் இடைவிடாது இரு காரியங்களைச் செய்ய துணிந்தான்: ஒன்று சிலை வணக்கத்தில் அவர்களை வீழ்த்துவது அது தோற்றுப்போனால் அந்த நாட்டையே முற்றும் அழிப்பது. சாத்தானுடைய சிலை வணக்கத்திற்குள்ளாக இஸ்ரவேலர்களைத் தள்ளும் முயற்சி அந்த நாட்டு சரித்திரத்தில் மீண்டும் மீண்டும் நடைபெற்றுள்ளது.

சாத்தான் இஸ்ரவேல் நாட்டை அழிப்பதற்கு சரித்திரத்தில் செய்த இரு முயற்சிகள் குறிக்கப்பட்டுள்ளன. எகிப்திலே பார்வோன் அந்நாட்டின் ஆண்பிள்ளைகளையெல்லாம் அழிக்கக் கட்டளையிட்டான். இம்முயற்சி தொடர்ந்தால் அந்நாடே முற்றிலும் அழிக்கப்பட்டிருக்கும். பின் பெர்சிய சாம்ராஜ்யத்தில் அக்காலத்தில் வாழ்ந்த யூதர்கள் அனைவரையும் அழித்து விடுவதற்கு ஆமான் கட்டளை பெற்று அதனை நிறைவேற்றும் நிலைக்கு வந்துவிட்டான்.

கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் அந்தியோகியஸ் எஃபிபனேஸ் என்ற சீரிய நாட்டு சர்வாதிகாரி இராணுவ பலம்கொண்டு யூதர்களின் நாட்டுக்கொள்கையை மறந்து அவர்களைச் சுற்றிலுமுள்ள கிரேக்கக் கலாச்சாரத்திற்கு உட்படுத்த முற்பட்டான். ஆனால் மக்கபேயர்களின் தைரியம் நிறைந்த எதிர்ப்பு அம்முயற்சியைத் தோற்கடித்ததினாலே ஒன்றரை நூற்றாண்டிற்குப் பின்பு யூத குலத்திலே இயேசு மேசியாவாகப் பிறந்தார்.

அவருடைய சிலுவையின் தியாக மரணத்தின் மூலமாக இயேசு தாம் இந்த உலகத்திற்கு வந்த நோக்கத்தை நிறைவேற்றினார். இஸ்ரவேலின் பிரதிநிதியாகவும் மற்ற நாடுகளின் பிரதிநிதியாகவும் நமது

சார்பில் தேவ நீதியை நிறைவேற்றி நம்மைச் சொந்தம் பாராட்டிய சாத்தானின் எண்ணத்தைத் தோற்கடித்தார். இதன் மூலம் அவர் சாத்தானின் முழுமையான நித்திய திட்டத்தை மாற்ற முடியாதபடி தோற்கடித்தார். இந்தத் தோற்கடிப்பின் முழு பலன் *இயேசுவின் இரண்டாம் வருகையில்தான் உச்சக் கட்டத்தை அடையும்.*

அநேகப் பிரசங்கிமார்களை விடச் சாத்தான்தான் வேதத்தின் தீர்க்கதரிசனங்களை நன்கு அறிந்தவனாயிருக்கிறான். இயேசு வரும் வரை சாத்தான் தனது தீய கிரியைகளைச் சுயாதீனமாய் நடத்தித் தன்னை "இப்பிரபஞ்சத்தின் அதிபதியாக" காட்டிக்கொள்வான் (2 கொரிந்தியர் 4:4).

ஆகவே சாத்தான் எல்லாவற்றையும்விட ஒரு காரியத்திற்கு அதிகமாகப் பயப்படுகின்றான். அதனைத் தனது ஆற்றல் முழுவதும் கொண்டு எதிர்க்கின்றான். அதென்னவெனில் சாத்தானை இவ்வுலகிலிருந்து முற்றிலும் அழித்து, இயேசு திரும்பி வந்து வல்லமையோடும் மகிமையோடும் தமது அரசினை நிறுவுவதாகும். நாம் வாழும் இவ்வுலகில் ஏற்படும் அனைத்துப் பிரச்சனைகளுக்கும் பின்னால் இருப்பது இயேசுவின் வருகைக்குரிய சாத்தானின் எதிர்ப்பாகும்.

எருசலேமில் இயேசு தீர்க்கதரிசனமாக உரையாற்றினதில் இவ்வுலகத்திற்கு வருவதற்கு முன்பு நடைபெறக்கூடிய இரு காரியங்களை கோடிட்டுக் கூறினார். முதலாவதாக அவர் "இராஜ்யத்தினுடைய இந்தச் சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும். *அப்போது முடிவு வரும்"* (மத்தேயு 24:14). அவருடைய பூலோக ஊழியத்தின் இறுதிக்கட்டத்தில் இயேசு தமது சீஷர்களுக்கு ஒரு முக்கிய கட்டளையைக் கொடுத்தார். "நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்" (மாற்கு 16:15). "நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்குங்கள்" (மத்தேயு 28:19).

இக்கட்டளையை இயேசு விலக்கிக்கொள்ளவே இல்லை. அது இன்றும் நடைமுறையில் இருக்கிறது. அவருடைய சீஷர்கள் இதனை நிறைவேற்றும் வரை திரும்பி வரமாட்டார். ஆகவே பிசாசு தனது வல்லமை முழுவதையும் சபைக்கு விரோதமாகப் பயன்படுத்தி இச்செயல் நிறைவேறாத வண்ணம் திசை திருப்புகிறான். இச்செயலை சபை காலம் தாழ்த்துகின்றவரை சாத்தானும் சுதந்திரமாய்ச் சுற்றித் திரிவான்.

இதற்கு முன்பு இயேசு எருசலேமில் உள்ள யூதர்களைப் பார்த்து: "இதோ உங்கள் வீடு (அது ஆலயம்) உங்களுக்குப் பாழாக்கி விடப்படும். கர்த்தருடைய நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்தரிக்கப்பட்டவர்" (மத்தேயு 23:38-39).

யூதர்களின் இருதயத்தைக் கர்த்தர் ஆயத்தப்படுத்துவது சகரியா 12:10ல் சொல்லப்பட்டுள்ளது.

> நான் தாவீது குடும்பத்தாரின் மேலும் எருசலேம் குடிகளின் மேலும் கிருபையின் ஆவியையும் விண்ணப்பங்களின் ஆவியையும் ஊற்றுவேன்; அப்பொழுது அவர்கள் தாங்கள் குத்தின என்னை நோக்கிப் பார்த்து, ஒருவன் தன் ஒரே பேறானவனுக்காகப் புலம்புகிறதுபோல எனக்காகப் புலம்பி, ஒருவன் தன் தலைச்சன் பிள்ளைக்காகத் துக்கிக்கிறது போல எனக்காக மனங்கசந்து துக்கிப்பார்கள்.

தங்களது மேசியாவை கைவிட்டு சிலுவையில் அறைந்ததற்கான மனமுடைந்த மனந்திரும்புதலை இயற்கைக்கு அப்பாற்பட்ட நிலையில் யூத மக்களின் இருதயங்களில் பரிசுத்த ஆவியானவர் ஒரு வெளிப்பாட்டினைத் தருவார். இதைத் தான் "தாவீதின் குடும்பத்தாரின் மேலும் எருசலேமின் குடிகள் மேலும்'' என்று விளக்கிச் சொல்லப்பட்டுள்ளது. யூதர்கள் தங்கள் நாட்டிற்கும் எருசலேமிற்கும் திரும்பச் சேர்க்கப்படவேண்டியது முதலாவது நடைபெறவேண்டிய காரியம். இது நடைபெறுமுன்பு சாத்தானின் தோல்வி இறுதியாய் முற்றுப்பெறாது.

இயேசு மறுபடியும் திரும்புவதற்கு முன்பு நிறைவேற வேண்டிய ஒரு காரியம். யூதர்கள் தங்கள் சொந்த நாட்டிற்கும் எருசலேமிற்கும் திரும்பி இயேசுவை மேசியாவாக ஏற்றுக்கொள்ள ஆயத்தப்படவேண்டும். முதலாவது இயேசு யூதர்கள் *மூலம்* வந்தார். இரண்டாம் முறை அவர் யூதர்களுக்காக வருவார்.

முதலாவது இயேசு யூதர்கள் மூலம் வந்தார். இரண்டாம் முறை அவர் யூதர்களுக்காக வருவார்.

இஸ்ரவேலில் உள்ள குழப்பத்திற்கும் கொந்தளிப்பிற்கும் உலகம் தழுவிய இந்தக் காரணம் இச்சூழ்நிலையை புதிய கண்ணோட்டத்தில் புரிந்துகொள்ள உதவுகிறது. இஸ்ரவேல் என்னும் சிறிய நாடு ஐந்து மில்லியன் மக்களைக் கொண்ட வேல்ஸ் நாட்டைப் போன்ற ஒரு நாடு. எனினும் ஐக்கிய நாட்டுச் சபையும் உலகத்தின் சக்கிவாய்ந்த அரசாங்கங்களும் செய்தி தொடர்புகளும் இஸ்ரவேலின்மேல் கவனம் செலுத்துவதின் காரணம் புரிந்து கொள்ள முடிகிறது. உலகிலே முக்கியமற்றதாய்க் காணப்படும் இந்நாட்டின் மேல் உலக அரசியலின் கவனம் முழுவதும் செலுத்தப்படுவது ஒரு சாதாரண காரியமன்று.

யோவேல் தீர்க்கதரிசியின் வெளிப்பாட்டின் மூலம் இஸ்ரவேல் மக்கள் தன் நாட்டில் கூடுவது குறித்துக்கொண்டிருக்கும் எண்ணத்தின் அடிப்படையில் தேவன் அந்த நாடுகளை நியாயந்தீர்ப்பார் என்பது தெரிகின்றது.

> இதோ, யூதாவுக்கும் எருசலேமுக்கும் உண்டாயிருக்கிற சிறையிருப்பை நான் திருப்பும் அந்நாட்களிலும் அக்காலத்திலும், நான் சகல ஜாதியாரையும் கூட்டி, யோசபாத்தின் பள்ளத்தாக்கிலே அவர்களை இறங்கிப் போகப்பண்ணி, அவர்கள் என் ஜனத்தையும் இஸ்ரவேலென்னும் என் சுதந்தரத்தையும் புறஜாதிகளுக்குள்ளே சிதறடித்து என் தேசத்தைப் பங்கிட்டுக்கொண்டதினிமித்தமும் . . .
>
> யோவேல் 3:1, 2

இவ்வெளிப்பாட்டின் தாக்கம் மிக அதிகமாயுள்ளது. இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக் குறித்து நாம் அக்கறைகொள்ள வேண்டிய இரு காரியங்கள்: உலகம் முழுவதிலும் சுவிசேஷம் அறிவிப்பதும் யூதர்கள் தன் சொந்த நாட்டில் நிறுவப்படுவதுமாகும்.

இவ்விரு காரியங்களைக் குறித்து நாம் கவலையற்றவர் -களாயிருப்போமாயின் - நமக்குத் தெரிந்தோ தெரியாமலோ அதற்கு நாம் இயேசுவின் வருகையைக் குறித்துக் கவலையற்றவர்களாய் இருக்கிறோம் என்றாகும். உலகம் சுவிசேஷ மையமாக்கப்படுகின்ற காரியம் குறித்து அநேகக் கிறிஸ்தவர்கள் உதட்டளவில் பேசினாலும் யூதர்கள் இஸ்ரவேல் நாட்டிற்குத் திரும்புகிற முக்கியத்துவத்தைக் குறித்து அறியாதவர்களாயிருக்கின்றனர். இவைகள் இரண்டும் இயேசு கிறிஸ்துவின் தீர்க்கதரிசன வசனங்களில் முக்கியமுடையதாய் உள்ளது.

இஸ்ரவேல் தன் நாட்டிற்குத் திரும்பும் காரியம் அறிவினால் புரிந்துகொள்ள முடியாத இறையியலினால் ஆழம் காணமுடியாத ஒரு சத்தியமாகும். இஸ்ரவேலர்கள் தன் நாட்டில் சேர்க்கப்படுவது இயேசுவின் வருகைக்கு முக்கியமானதாய் உள்ளதால் அதற்கு அதிகமான எதிர்ப்பின் சக்திகள் எழுந்துள்ளன. இது பல வடிவில் தோன்றினாலும் இதற்குப் பின்னே இருப்பது சாத்தானின் ஆவி.

இந்த வேதத்தின் சத்தியங்களை எதிர்நோக்கும் நாம் நம்மைக் கேட்டுக்கொள்ளவேண்டிய ஒரு முக்கியமான கேள்வி உள்ளது. உலக சுவிசேஷ அறிவிப்பிற்கு அதி வேகத்தில் செயல்பட முற்படுகின்றோமா? மேலும் தன் சொந்த நாட்டில் இஸ்ரவேலர்கள் திரும்பி நிறுவப்படவேண்டும் என்பதில் அக்கறை காட்டுகின்றோமா? இதற்கான பதில் இயேசு கிறிஸ்துவின் வருகைக்கு எவ்வளவு ஆர்வம் கொண்டுள்ளோம் என்பதை அறிவிப்பதாய் இருக்கும்.

24

பிலேயாமின் தவற்றிலிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டியவை

எண்ணாகமம் 22-24 அதிகாரங்களில் குறிக்கப்பட்டுள்ள பிலேயாமின் சரித்திரம் மேல்வாரியாய்ப் பார்க்கும்பொழுது ஆவிக்குரிய யுத்தத்தில் ஈடுபட்டுள்ள கிறிஸ்தவர்களுக்கு முக்கியமற்றதாய்த் தோன்றலாம். அப்படியாயின் புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் அச்சம்பவம் பற்றி முக்கியத்துவப்படுத்தி எழுதியிருக்கத் தேவையில்லை. அவர்கள் மூன்று தனிப்பட்ட இடங்களில் எச்சரிப்பின் தொனியில் இதனைக் குறிப்பிட்டுள்ளனர். ஆகவே இதில் நமக்கு முக்கியமான பாடம் உள்ளது என்பது தெளிவாகிறது.

பிலேயாம் ஒரு அசாதாரண சூழ்ச்சிக்காரன். ஆவிக்குரிய வரம் பெற்றும் புதிரான பண்புடையவன். முக்கியமாக இன்றையத் திருச்சபையில் ஆவிக்குரிய வரங்களைப் பெற்றும் கேடான பண்புடையவர்கள் இருக்கின்றனர்.

இச்சம்பவத்தின் ஆரம்பம்

பிலேயாமின் கதை இஸ்ரவேலர்கள் கானானின் கரையோரம் பாளயமிறங்கியதில் ஆரம்பமாகிறது. இது மோவாபிய அரசனான பாலாக்கினுடைய நாடு இவர்களின் பாளயத்திற்கு அருகே இருப்பதால் பயத்தை உண்டாக்குகிறது. அவனுடைய பயத்திற்கு எந்தக் காரணமும் இல்லாதிருந்தும் இஸ்ரவேலர்களைத் தனக்கு எதிரிகளாகக் கருதினான்.

இஸ்ரவேலர்களை யுத்தத்தில் எதிர்க்க திறமையற்ற பாலாக் அவர்களுக்கு விரோதமாக ஆவிக்குரிய ஆயுதங்களைப் பயன்படுத்துகிறான். அவனுக்கு கைக்கூலி கொடுத்து தனது பிரபுக்களில் சிலரை பிலேயாமிடம் அனுப்பி அவனைத் தன்னிடம் வரவழைத்து இஸ்ரவேலின் மேல் சாபமிடக் கேட்கின்றான். நிமித்தம் பார்க்கின்ற பிலேயாம் ஆசீர்வாதங்களையோ சாபங்களையோ நன்மைக்கானாலும் தீமைக்கானாலும் கூறும் திறமை படைத்தவன்.

முக்கியமாக இன்றைய திருச்சபையில் ஆவிக்குரிய வரங்களைப் பெற்றும் கேடான பண்புடையவர்கள் இருக்கின்றனர்.

பிலேயாம் மெசப்பொத்தோமியாவில் உள்ள பேயோரிலிருந்து வந்தவன். அவன் ஒரு இஸ்ரவேலன் இல்லையென்றாலும் ஒன்றான மெய்த்தெய்வத்தைப் பற்றி சொந்த அறிவுடையவனாயிருந்தான். இச்சம்பவத்தின் ஒரு பகுதியில் (எண்ணாகமம் 22:18) ‘‘இவன் என் தேவனாகிய கர்த்தர்’’ என்று அழைக்கின்றான். கர்த்தர் என்னும் தமிழ் வார்த்தை எபிரெய மொழியில் “யெகோவா” என்றும் “யாவே” என்றும் தேவனுடைய பரிசுத்த நாமத்தைக் குறிக்கிறது. பிலேயாம் தேவனுடைய பரிசுத்த நாமத்தை அறிந்திருந்ததினால் “என் தேவனே” என்று அவரை அழைக்கிறான்.

பாலாக்கின் ஆட்கள் வந்தபொழுது தேவன் பிலேயாமிடம் இஸ்ரவேலைச் சபிக்க வேண்டாம் என்று கூறினார். (எண்ணாகமம் 22:12) பிலேயாம் கீழ்ப்படிந்தான்.

பாலாக் இதற்குப்பின்பு இன்னும் அதிமான சன்மானம் கொடுப்பதாகக் கனத்திற்குரிய அநேகப் பிரபுக்கள் மூலம் செய்தி அனுப்பினான். இவ்வேளை பிலேயாமிற்கு, ‘‘கர்த்தர்: நீ எழுந்து அவர்களோடேகூடப் போ ஆனாலும் நான் உனக்குச் சொல்லும் வார்த்தையின்படிமாத்திரம் நீ செய்ய வேண்டும்” என்ற கட்டளையுடன் அனுப்பினார் (எண்ணாகமம் 22:20).

இதற்குப் பின்பு பிலேயாமை அவர்கள் கூப்பிட வந்தார்களா என்பதற்கு ஆதாரமில்லை. எனினும் அவன் புறப்பட்டுச் சென்றான். அந்தக் கீழ்ப்படியாமையினால் தேவனுடைய கோபத்தைச் சம்பாதித்ததினாலே அவனை வழி மறித்த கர்த்தர் அவனைக் கொல்லும் நிலைக்குத் தள்ளினார். இறுதியில் அவனுக்கு அனுமதி தந்து, “நான் உன்னோடு சொல்லும் வார்த்தையை மாத்திரம் நீ சொல்லக்கடவாய்” என்ற நிபந்தனையுடன் அனுப்பினார் (எண்ணாகமம் 22:35).

பாலாக் பிலேயாமை வரவேற்று இஸ்ரவேலைச் சபிக்கும்படியான பெரிய ஆயத்தத்தைச் செய்திருந்தான். ஒவ்வொரு முறையும் அவன் நினைத்ததற்கு மாறுபாடாகவே காரியம் நடந்தது. மொத்தத்தில் பிலேயாம் நான்கு தீர்க்கதரிசனங்களைக் கூறினான். அவைகள் இஸ்ரவேலை ஆசீர்வதிப்பதற்குத் தேவன் வசனத்தில் அளித்த வாக்குறுதிகளாகும்.

இஸ்ரவேலைச் சபிப்பதற்கு தேவன் அனுமதிக்காததால் பிலேயாம் வேறொரு யுக்தியைக் கையாண்டான் (எண்ணாகமம் 31:16). மோவாபியப் பெண்கள் இஸ்ரவலேர்களைச் சிலை வணக்கம்

செய்யும்படியும் ஒழுக்கக்கேடாய் நடக்கும்படியும் சூழ்ச்சி செய்தால் அவர்களைச் சபிக்க வேண்டிய அவசியமேற்படாது என்பதை அறிந்திருந்தான். தேவனே அவர்களைத் தண்டிக்க முற்படுவார். பிலேயாமின் இரண்டாம் யுக்தி வெற்றியடைந்தது. தேவனுடைய நியாயத்தீர்ப்பில் 24,000 இஸ்ரவேலர்கள் அழிக்கப்பட்டதால் வெற்றியடைந்தது (எண்ணாகமம் 25:1-9).

இவையனைத்திலும் பிலேயாம் அதிசயிக்கத்தக்க விதமாக நிலையற்றுச் செயல்படுகிறான். ஒரு தடவைக்கு மேல் இஸ்ரவேலைச் சபிக்கக்கூடாது எனத் திட்டமாய் எச்சரிக்கப்பட்டான். இயற்கைக்கு அப்பாற்பட்ட வெளிப்பாட்டின் மூலம் இஸ்ரவேலை ஆசீர்வதிக்க வேண்டியது தேவனுடைய மாறாத நோக்கம் என்றும் எதிரிகளை நியாயந்தீர்க்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டான். இஸ்ரவேலை அழிக்கும் சதியில் இஸ்ரவேலின் எதிரியான பாலாக்கோடு கைகோர்த்து செயல்படுவதில் உறுதியாய் நின்றான். இஸ்ரவேலின் மற்ற எதிரிகளைப் போல மீதியானியர்களின் அரசர்களோடு சேர்ந்து அழிக்கப்பட்டது பொருத்தமாய் உள்ளது (எண்ணாகமம் 31:8).

பிலேயாம் தேவனுடைய வெளிப்பாட்டை நேரிடையாகப்பெற்றும் அதை உதாசீனப்படுத்தித் தன் சொந்த அழிவை தேடிக்கொண்டதின் நோக்கம் என்ன என்பதை நாம் கேட்கத் தோன்றுகிறதல்லவா? இரு புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் இதற்குப் பதில் தருகின்றனர்.

திருச்சபையின் கள்ளப்போதகர்களைப் பற்றி பேதுரு பேசுகையில் “செம்மையான வழியை விட்டுத் தப்பி நடந்து, பேயோரின் குமாரனாகிய பிலேயாமின் வழியைப் பின்பற்றிப் போனவர்கள்; அவன் அநீதத்தின் கூலியை விரும்பி, தன்னுடைய அக்கிரமத்தினிமித்தம் கடிந்துகொள்ளப்பட்டான்.” (2பேதுரு 2:15)

யூதாவும் கள்ளப் போதகர்களைப் பற்றிப் பேசும் வேளையில் “பிலேயாம் கூலிக்காகச் செய்த வஞ்சகத்திலே விரைந்தோடி . . . . (யூதா 11) என எழுதுகிறார்.

இந்தப் பதில் தெளிவாக உள்ளது. பிலேயாம் பண ஆசையால் சோதிக்கப்பட்டுத் தன் அழிவைத் தேடிக்கொண்டான். இதற்காக அற்புதமான ஆவிக்குரிய வரங்களைத் தவறுதலாகப் பயன்படுத்தினான். ஒருவேளை பாலாக் அரசனும் அவனுடைய பிரபுக்களும் புகழ்பாடியதில் மயங்கிப் போயிருக்கலாம். வல்லமையும் புகழ்ச்சியும் பண ஆசையுடன் நெருக்கமான தொடர்புடையது. இவையனைத்தும் பெருமையென்னும் தீய மண்ணில் உருவாகக் கூடியது.

பிலேயாம் கற்றுத் தரும் பாடங்கள்

பிலேயாமிடமிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய மூன்று முக்கியமான பாடங்கள் உள்ளன.

முதலாவதாக சர்வ வல்லமையின் தேவன் யூதர்களைத் தமது மக்களாக நிரந்தரமாகத் தெரிந்து கொண்டார்.

உலகத்தின் எந்தச் சக்தியும் மனித சக்தியோ பிசாசின் சக்தியோ தேவனுடைய இந்தத் தீர்மானத்தை மாற்ற முடியாது. யூதர்கள் அநேகந்தடவைகள் நம்பக் கூடாதவர்களாய் இருந்துள்ளனர். அதன் மூலமாகத் தேவ நியாயத்தீர்ப்பு அவர்கள் மேல் வந்துள்ளது. ஆயினும் அவர்களுடைய உண்மையற்றத் தன்மை தேவனுடைய மெய்யான உண்மையினை மாற்றி விட முடியாது.

இந்த வாக்குத்தத்தம் மனிதனிடமிருந்து அல்ல தேவனிடமிருந்ததே ஆரம்பமானது. யூதர்கள் தேவனைத் தெரிந்துகொள்ளவில்லை தேவனே யூதர்களைத் தெரிந்துகொண்டார்.

முன்பு இஸ்லாமியராக இருந்த ஒரு வாலிப நண்பன் எனக்கிருந்தார் - அவரை அலி என்று அழைப்போம் - அவர் இயற்கைக்கு அப்பாற்பட்ட முறையில் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டார். அவரின் மனந்திரும்புதலுக்குப் பின்பு யூதர்களுக்கு விரோதமான பல குற்றச்சாட்டுகளைத் தேவனிடம் கொண்டு வந்தார். இறுதியாகத் தேவன் அதற்கு "அலி, உன் பிரச்சனை யூதர்களைப் பற்றியதல்ல அது என்னைப் பற்றியதே. நானே அவர்களைத் தெரிந்தெடுத்தேன்". அந்த வாலிபன் இப்பொழுது இஸ்லாமியர்களை ஆதாயம் பண்ணுகிறவனாகவும் யூதர்களுக்காக ஜெபிக்கப் போதிக்கிறவனாகவும் இருக்கிறான்.

எண்ணாகமம் 24:9இல் வரும் பிலேயாமின் தீர்க்கதரிசனம் மனிதர்களைப் பற்றியும் நாடுகளைப் பற்றியும் ஒரு முக்கிய குறிப்பை வெளிப்படுத்துகிறது. இஸ்ரவேலர்களைப் பற்றி பேசும்பொழுது "உன்னை ஆசீர்வதிக்கிறவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்களாயும் உன்னைச் சபிக்கிறவர்கள் சபிக்கப்பட்டவர்களாயும் இருப்பார்கள்'' என்று சொல்கிறார்.

தனிப்பட்ட நபரும் நாடுகளும் தங்கள் இறுதி நிலையைத் தங்களை அறியாமலேயே தாங்களே தேர்ந்தெடுக்கின்றனர். இது யூதர்களைப் பற்றி அவர்கள் கொள்ளும் எண்ணத்தின் அடிப்படையில் உள்ளது. அவர்களை ஆசீர்வதிக்கிறவர்கள் ஆசீர்வதிக்கப்படுகிறார்கள், சபிக்கிறவர்கள் சபிக்கப்படுகிறார்கள்.

இரண்டாவதாக, சாத்தானுடைய வெற்றியும் பலமுமான ஆயுதம் பணத்தின் மேல் ஆசை கொள்ள வைப்பதே.

கிறிஸ்தவத்தின் ஆரம்பத்திலிருந்து இன்று வரை இது உண்மையாக உள்ளது. இயற்கைக்கு அப்பாற்பட்ட அடையாளங்களைக் கொண்ட ஊழியங்கள் சிறப்பாக தெய்வீக சுகமளிக்கும் ஊழியம் பணம் ஈட்டும் ஊழியமாக மாறுகிறது.

பிலேயாம் பண ஆசையால் சோதிக்கப்பட்டுத் தன் அழிவைத் தேடிக்கொண்டான். இதற்காக அற்புதமான ஆவிக்குரிய வரங்களைத் தவறுதலாகப் பயன்படுத்தினான்.

பவுல் தன் சொந்த ஊழியத்தைத் தன் காலத்தில் வாழ்ந்த மற்றக் கிறிஸ்தவர்களோடு ஒப்பிடுகையில் "அநேகரைப் போல நாங்கள் தேவ வசனத்தைக் கலப்பாய்ப் பேசாமல் துப்புரவாகவும், தேவனால் அருளப்பட்ட பிரகாரமாகவும், கிறிஸ்துவுக்குள் தேவ சந்நிதியில் பேசுகிறோம்'' (2 கொரிந்தியர் 2:17). பவுலின் நாட்களிலும் கூட அநேகக் கிறிஸ்தவர்கள் பண ஆதாயத்திற்காக ஊழியம் செய்துள்ளனர்.

பணம் என்பது தீமையானதல்ல. செல்வந்தனாயிருப்பது பாவமானதல்ல. பணம் பொதுவானது. அதனை நன்மைக்கும் பயன்படுத்தலாம் தீமைக்கும் பயன்படுத்தலாம். ஆனால் பணத்தை நேசிக்க ஆரம்பிக்கும்பொழுது நாம் சாத்தானின் வலையில் விழுகிறோம். இதைக் குறித்துப் பவுல் தெளிவாக எச்சரிக்கின்றார்:

> ''ஐசுவரியவான்களாக விரும்புகிறவர்கள் சோதனையிலும், கண்ணியிலும், மனுஷரைக் கேட்டிலும் அழிவிலும் அமிழ்த்துகிற மதிகேடும் சேதமுமான பலவித இச்சைகளிலும் விழுகிறார்கள். பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது; சிலர் அதை இச்சித்து, விசுவாசத்தைவிட்டு வழுவி, அநேக வேதனைகளாலே தங்களை உருவக் குத்திக்கொண்டிருக்கிறார்கள்".
>
> 1 தீமோத்தேயு 6:9-10

தேவனுடைய இராஜ்யத்தின் நோக்கங்களுக்குத் தங்களை ஒப்புக்கொடுத்தவர்கள் செழிப்படைவதற்கான தேவனுடைய திட்டம் என்னவென்று என் ஊழியத்தில் நான் அடிக்கடி போதித்திருக்கிறேன். ஆனால் நான் பின்னிட்டுத் திரும்பிப் பார்க்கும்போது 1 தீமோத்தேயுவில் பவுல் கொடுத்த எச்சரிப்பை மனதிற்கொண்டு என் செய்தியைப்

போதிக்கவில்லை என்று மனவருத்தப்பட்டது உண்டு. பண ஆசைக்குத் தங்களை ஒப்புக்கொடுத்த விசுவாசிகள் நஞ்சு கலந்த கூர்மையான கத்தியைத் தங்கள் மாம்சத்திலேயே குத்திக்கொள்கின்றவர்களாய் இருக்கின்றனர். இதனையே பிலேயாம் செய்தான்.

மூன்றாவதாக, ஆவிக்குரிய வரங்களுக்கும், ஆவிக்குரிய கனிக்கும் உள்ள வித்தியாசத்தைப் புரிந்துகொள்ள வேண்டியது அவசியமாகிறது.

வரங்கள் நமது திறமையையும், கனி நமது பண்பையும் வெளிப்படுத்துகிறது. வரம் என்பது ஒரு குறுகிய காலத்தில் நமக்கு அளிக்கப்படுகிறது. ஆனால் கனியோ மெதுவாகத்தான் காலப்போக்கில் விருத்தியடைகிறது. ஆவிக்குரிய வரத்தைப் பெற்றுக்கொள்வது தன்னிலே ஒருவனுடைய பண்பை மாற்ற முடியாது. ஒரு மனிதன் பெருமையுள்ளவனாக நம்பத்தகாதவனாக, ஏமாற்றுகிறவனாக, ஆவிக்குரிய வரங்களைப் பெறுவதற்கு முன்பு காணப்பட்டால், அவன் அதைப் பெற்றுக்கொண்ட பின்பும் பெருமையுள்வனாக, நம்பத்தகாதவனாக, ஏமாற்றுகிறவனாகவே இருப்பான்.

வரங்கள் நமது திறமையையும், கனி நமது பண்பையும் வெளிப்படுத்துகிறது.

இவ்வாறு வரத்தைப் பெற்றுக்கொள்வது அந்நபரின் பொறுப்பினை அதிகரிக்கிறது. ஏனெனில் மற்றவர்களுக்கு முன்பு அவன் செல்வாக்கு அதிகரிக்கிறது. ''வெற்றியடைய வேண்டும்'' என்னும் சோதனையினால் தாக்கப்படுவதால், கிறிஸ்தவ வாழ்க்கையில் அவன் தனது தெய்வீகப் பண்பை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்பதைவிட அந்த வரத்தைச் செயல்படுத்துவதிலேயே அதிகக் கவனத்தைச் செலுத்துகிறான். *ஒருவனுக்கு எவ்வளவு வரங்கள் கொடுக்கப்படுகின்றனவோ அந்த அளவுக்கு ஆவியின் கனியை வளர்த்துக்கொள்ளவேண்டியதில் கவனம் செலுத்த வேண்டியவனாய் இருக்கிறான்.* காலத்தைக் கடந்து நித்தியத்திற்கு செல்கின்ற வேளையில் வரங்கள் அற்றுப்போகும். ஆனால் பண்பு என்றும் நம்மில் நிலைத்திருக்கும்.

பிலேயாமின் ஜெபம் நீதிமானுக்குக் காத்திருக்கின்ற ஆசீர்வாதத்தைக் குறித்து அவன் கொண்டிருந்தத் தெளிவான தரிசனத்தை வெளிப்படுத்துகிறது. "நீதிமான் மரிப்பது போல் நான் மரிப்பேனாக, என் முடிவு அவன் முடிவுபோல் இருப்பதாக என்றான்" (எண்ணாகமம் 23:10). எனினும் பிலேயாம் ஜெபம் கேட்கப்படவில்லை. அவன் பணத்தினால் சோதிக்கப்பட்டுத் தேவனுக்கு விரோதமாகச் செயல்பட ஆரம்பித்தபோது மோவாபியர்களுக்கு வந்த நியாயத்தீர்ப்பு அவன் மேலும் வந்தது.

இயேசு மத்தேயுவில் கொடுத்த போதனை பிலேயாமின் முடிவைக் குறித்து தெளிவாய் விவரித்துக் காட்டுகிறது.

> “பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை. அந்நாளில் அநேகர் என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள். அப்பொழுது, நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை; அக்கிரமச் செய்கைக்காரரே, என்னைவிட்டு அகன்றுபோங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன்”.
>
> மத்தேயு 7:21-23

தேவனுக்குக் கீழ்ப்படிவதற்குப் பதில் வேறு எதுவும் செய்ய முடியாது. கிறிஸ்தவப் போர்வீரன் இதைச் சட்டமாகக் கொள்ள வேண்டும்.

25

கிறிஸ்துவோடு ஆளுகை செய்ய ஆயத்தப்படுதல்

பரிசுத்தவான்கள் உலகத்தை நியாயம் விசாரிப்பார்கள் என்பதை நீங்கள் அறியீர்களா?

1 கொரிந்தியர் 6:2

நம்மை மீட்கும் பணியில் தேவனுக்கு இரண்டு நோக்கங்கள் உள்ளன. எதிர்மறையாகப் பார்க்கும்பொழுது நம்மை நரகத்திலிருந்து மீட்பது ஒரு நோக்கமாகும். அதற்காக நாம் என்றென்றும் அவருக்கு நன்றியுள்ளவர்களாய் இருத்தல் வேண்டும். நேர்மறையாக பார்க்கும்பொழுது, அவருடைய சிங்காசனத்தில் அமரும்படியாக ஒரு கூட்ட ஜனத்தைத் தனக்கென்று ஆயத்தப்படுத்தல் என்பது மற்றொரு நோக்கமாகும்.

தொடர்ந்து வாசிப்பதற்கு முன்னதாகச் சில நிமிடங்கள் சிந்திக்கும்படி உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். ஒரு கிறிஸ்தவனாக, தனி நபராக, கிறிஸ்துவோடு என்றென்றும் ஆளுகை செய்வதற்கு ஒருவன் எப்படித் தன்னை ஆயத்தப்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதைச் சிந்திக்க வேண்டும். எங்களைப் பொருத்தமட்டில் என்னையும், என் மனைவி ரூத்தையும் நித்தியத்திற்கென்று பரிசுத்த ஆவியானவர் படிப்படியாக ஆயத்தப்படுத்துகின்றார்.

மத்தேயு 19:28இல்

அதற்கு இயேசு: மறுஜென்ம காலத்திலே மனுஷகுமாரன் தம்முடைய மகிமையுள்ள சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கும்போது, என்னைப் பின்பற்றின நீங்களும், இஸ்ரவேலின் பன்னிரெண்டு கோத்திரங்களையும் நியாயந்தீர்க்கிறவர்களாக பன்னிரெண்டு சிங்காசனங்களின்மேல் வீற்றிருப்பீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று கூறுகிறார்.

வெளி 2:26-27இல்

ஜெயங்கொண்டு முடிவுபரியந்தம் என் கிரியைகளைக் கைக்கொள்ளுகிறவன் எவனோ? அவனுக்கு, நான் பிதாவினிடத்தில் அதிகாரம் பெற்றதுபோல ஜாதிகள் மேல் அதிகாரம் கொடுப்பேன். அவன் இருப்புக்கோலால் அவர்களை ஆளுவான். அவர்கள் மண்பாண்டங்களைப் போல நொறுக்கப்படுவார்கள் என்று கூறப்பட்டுள்ளது.

அவரோடு நித்தியகாலமாய் நாம் ஆளுகை செய்யவேண்டுமானால், அதற்கான சில முக்கியமான ஆயத்தங்கள் செய்ய வேண்டும். அந்த மிகப்பெரிய பொறுப்பு நமக்குள்ளது. அதற்கு “**மறுபடியும் பிறத்தல்**” என்ற அனுபவம் மட்டும் போதாது. அதற்கான முக்கியத் தேவைகள் பின்வருமாறு:-

1. சகிப்புத்தன்மை

நாம் கிறிஸ்துவின் ஆளுகையில் பங்கடைய வேண்டுமென்றால், முதலாவது அவருடைய மரணத்தில் பங்கடைய வேண்டும், தொடர்ந்து அதினிமித்தம் வருகிற சோதனைகளைச் சகித்தல் வேண்டும்.

லூக்கா 22:28-30இல்

‘‘மேலும் எனக்கு நேரிட்ட சோதனைகளில் என்னோடேகூட நிலைத்திருந்தவர்கள் நீங்களே. ஆகையால், என் பிதா எனக்கு ஒரு இராஜ்யத்தை ஏற்படுத்தினதுபோல, நானும் உங்களுக்கு ஏற்படுத்துவேன். நீங்கள் என் இராஜ்யத்திலே என் பந்தியில் போஜனபானம் பண்ணி, இஸ்ரவேலின் பன்னிரெண்டு கோத்திரங்களையும் நியாயந்தீர்க்கிறவர்களாய்ச் சிங்காசனங்களின் மேல் உட்காருவீர்கள் என்றார்’’ என்று வாசிக்கிறோம்.

நாம் கிறிஸ்துவின் ஆளுகையில் பங்கடைய வேண்டுமென்றால், முதலாவது அவருடைய மரணத்தில் பங்கடைய வேண்டும்.

கடைசி இராப் போஜனத்தில் இயேசு பன்னிரெண்டு சீஷர்களிடம், நீங்கள் இஸ்ரவேலை நியாயந்தீர்க்க தகுதியுடையவர்கள் என்று கூறினார். (கவனிக்கவும்: ஆனால் யூதாஸ்காரியோத்து இயேசுவைக் காட்டிக்கொடுத்த துரோகச் செயலின் மூலமாக, சிங்காசனத்திற்கு செல்லும் உரிமையை இழந்தான். அப்போஸ்தலர் 1:15-26இல் யூதாஸ்காரியோத்தின் கண்காணிப்பை வேறொருவன் பெறக்கடவன் என்று வாசிக்கின்றோம்.

இன்று வரை இத்தகையப் பாடுகளைச் சகித்து, அவருடைய சீஷர்களாக இறுதிவரை நிலை நிற்க விரும்புகிறவர்களுக்கு “அவரோடே கூட மரித்தோமானால், அவரோடே பிழைத்துமிருப்போம். அவரோடேகூடப் பாடுகளைச் சகித்தோமானால், அவரோடேகூட ஆளுகையும் செய்வோம்'' என்று 2 தீமோத்தேயு 2:11-12இல் கூறப்பட்டுள்ளது.

அடுத்த இரண்டு அதிகாரத்திலும் இதைக்குறித்து தெளிவாகக் காண்போம்.

2. சாந்தகுணம், ஆவியில் எளிமை

தேவன் தம்முடைய இராஜ்யத்தை முரட்டாட்டமுள்ளவர்களுக்கும், எதையும் சாதிக்கவேண்டும் என்ற எண்ணமுடையவர்களுக்கும் கொடுக்கமாட்டார். இப்படிப்பட்ட மேன்மையான பாக்கியத்திற்குத் தாங்கள் முற்றிலும் தகுதியற்றவர்கள் என்று யார் உணர்ந்துகொள்கிறார்களோ? அவர்களுக்கே தேவன் தம்முடைய இராஜ்யத்தைக் கொடுப்பார். சாமுவேலின் தாயாகிய அன்னாள் அவளுடைய வெற்றிப்பாடலில் 1 சாமுவேல் 2:8இல் “அவர் (தேவன்) சிறியவனைப் புழுதியிலிருந்து எடுத்து எளியவனைக் குப்பையிலிருந்து உயர்த்துகிறார்; அவர்களைப் பிரபுக்களோடே உட்காரவும், மகிமையுள்ள சிங்காசனத்தைச் சுதந்தரிக்கவும் பண்ணுகிறார்; பூமியின் அஸ்திபாரங்கள் கர்த்தருடையவைகள்; அவரே அவைகளின்மேல் பூச்சக்கரத்தை வைத்தார்” என்று பாடுகிறாள்.

தேவன் தம்முடைய இராஜ்யத்தை முரட்டாட்டம் உள்ளவர்களுக்கும், எதையும் சாதிக்கவேண்டும் என்ற எண்ணம் உடையவர்களுக்கும் கொடுக்கமாட்டார்.

ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு கன்னி மரியாள், இதே உண்மையைக் குறிக்கும் சிறப்பான பாடலில் லூக்கா 1:52இல் “பலவான்களை ஆசனங்களிலிருந்து தள்ளி தாழ்மையானவர்களை உயர்த்தினார்” என்று கூறுகிறாள்.

மத்தேயு 5:3இல் “ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்; பரலோக இராஜ்யம் அவர்களுடையது'' என்றும் மத்தேயு 5:5இல் ‘‘சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக்கொள்வார்கள்” என்றும் கூறப்பட்டுள்ளது.

3. தூய்மை

எல்லா அக்கிரமங்களிலுமிருந்து மீட்டு, தனக்கென்று யாரை சுத்திகரிக்கிறாரோ அவர்களையே தன்னுடைய சொந்த ஜனங்கள் என்று தேவன் குறிப்பிடுகின்றார். தீத்து 2:13-14இல் நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியத்துக்கும், மகா தேவனும் நமது இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதலுக்கும், எதிர்பார்த்துக்கொண்டிருக்கும்படி நமக்குப் போதிக்கிறது.

“அவர் நம்மை சகல அக்கிரமங்களினின்று மீட்டுக்கொண்டு, தமக்குரிய சொந்த ஜனங்களாகவும், நற்கிரியைகளைச் செய்ய பக்திவைராக்கியமுள்ளவர்களாகவும் நம்மைச் சுத்திகரிக்கும்படி நமக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார்” என்று வாசிக்கிறோம்.

இந்தச் சுத்திகரிப்பில் இரண்டு பக்கங்கள் உள்ளன. ஒன்று தெய்வீகம், மற்றொன்று மாம்சீகம். அப்போஸ்தலராகிய யோவான் “அவர் வரும்போது நாமும் அவரைப்போலவே இருப்போம்” என்று கூறுகிறார்.

1 யோவான் 3:3இல் அவர்மேல் இப்படிப்பட்ட நம்பிக்கை வைத்திருக்கிறவனெவனும், அவர் சுத்தமுள்ளவராயிருக்கிறதுபோல, தன்னையும் சுத்திகரித்துக்கொள்ளுகிறான் என்று கூறுகிறார். தன்னைச் சுத்திகரித்துக்கொள்ள ஒப்புக்கொடுக்கிறவர்களையே, கிறிஸ்து சுத்திகரிக்கிறார். தேவன் உன்னதமானதொரு சுத்திகரிப்பை எதிர்பார்க்கிறார். அது என்னவென்றால், அவர் பரிசுத்தராய் இருப்பதுபோல, நாமும் பரிசுத்தமாய் இருக்க வேண்டும் என்பதே.

பவுல் நாம் நம்முடைய ஆத்துமாவை எவ்வாறு சுத்திகரிக்க வேண்டும் என்பதை 1 பேதுரு 1:22இல் “சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து உங்கள் ஆத்துமாவைச் சுத்தமாக்கிக்கொள்ளுங்கள்” என்று கூறுகிறார். ஒருவரிலொருவர் ஊக்கமாய் அன்புகூற வேண்டுமென்று வலியுறுத்துகிறார். சுத்திகரிக்கப்பட்ட ஆத்துமா அன்பினால் நிறைந்திருக்கும்.

சத்தியத்தை நேசித்தல்

சாத்தான் ஆதாமையும், ஏவாளையும் தேவனுக்கு எதிரான வன்முறைகளைச் செய்யத் தூண்டி அழிவுக்குட்படுத்தினான். அதுவே இன்றையத் தினம் வரையிலும் சாத்தான் மனித இனத்திற்கு எதிராகப் பயன்படுத்திவரும் ஆயுதமாகவுள்ளது. வெளிப்படுத்தின விசேஷம் 12:9இல் உலகம் அனைத்தையும் மோசம்போக்கும் பிசாசு என்றும் பழைய பாம்பாகிய சாத்தான் என்றும் சாத்தான் அழைக்கப்படுகின்றான். 1 தெசலோனிக்கேயர் 2:9இல் அந்த அக்கிரமக்காரனுடைய வருகை

சாத்தானுடைய செயலின்படி, சகல வல்லமையோடும் அடையாளங்களோடும், அற்புதங்களோடும் இருக்கும் என்று வாசிக்கிறோம். சாத்தானுடைய சகல தந்திரங்களும் அப்படியே அந்திக்கிறிஸ்துவிடமும் வெளிப்படுகிறது. அவன் தேவனுடைய சத்தியத்தையும் ஏற்றுக்கொள்ளமாட்டான்.

எனவே நம்முடைய உண்மையான பாதுகாப்பு தேவனுடைய சத்தியத்தை ஏற்றுக்கொள்வதில் அடங்கியுள்ளது. இந்தச் சத்தியத்தை ஏற்றுக்கொள்ளாதவர்களுக்குச் சாத்தானால் எந்தப் பாதிப்பும் இல்லை. ஆனால் தேவன் தாமே அவர்களுக்கு மதிமயக்கத்தை அனுப்புவார்.

எவ்வளவுதான் மதவைராக்ல்கிய்யம் உள்ளவர்களாய் இருந்தாலும், சத்தியத்தின் மேல் உள்ள வாஞ்சை மட்டும் அவர்களுக்கு ஒரு உறுதியையளிக்க முடியாது. அது மதக்கோட்பாடுமல்ல. அனுதினமும் வேதம் வாசிப்பதற்கு அதிக நேரத்தைச் செலவிட வேண்டும். தேவனுடைய வார்த்தைகளை விசுவாசிக்கவும் அதற்குக் கீழ்ப்படிந்து நடக்கவும் ஒரு நிபந்தனையற்ற அர்ப்பணிப்பு ஒருவனுக்குத் தேவைப்படுகிறது. இது சரி அது சரி என்று தன்னைத் தானே ஏமாற்றிக்கொள்ளவோ திருப்திபடுத்திக்கொள்ளவோ முடியாது.

இயேசு வாழ்ந்த காலத்தில் வாழ்ந்த அநேக யூதர்கள் இயேசுவை மேசியா என்று புரிந்து கொண்டார்கள். அவர்கள் மத அதிகாரிகளுக்குப் பயந்ததினால், இயேசுவை ஏற்றுக்கொள்ளவில்லை. தேவனால் புகழப்படுவதையே அவர்கள் அதிகம் விரும்பினார்கள். யோவான் 12:43இல் அவர்கள் தேவனால் வருகிற மகிமையிலும், மனுஷரால் வருகிற மகிமையை அதிகம் விரும்பினார்கள் என்று வாசிக்கிறோம். நம்மை நாமே கேட்டுக்கொள்ளவேண்டிய ஒரு வினா உள்ளது. அது என்னவென்றால், தேவனால் அங்கீகரிக்கப்படுவதா? அல்லது மனிதனுடைய அங்கீகாரமா? எது எனக்கு அவசியமாகத் தோன்றுகிறது என்பதேயாகும்.

சாலொமோன் நீதிமொழிகள் 23:23இல் சத்தியத்தை வாங்கு, அதை விற்காதே என்று கூறுகிறார். சத்தியத்தை எளிதாகப் பெற்றுக்கொள்ள முடியாது. அதிகநேரம் ஜெபிப்பதாலும், வேதத்தை வாசிப்பதாலும், அதை அன்றாட வாழ்க்கையில் நடைமுறைப்படுத்துவதாலும் சத்தியத்தை அடையமுடியும். நம்முடைய கலாச்சாரத்தில் உள்ள கீழ்த்தரமான நிகழ்ச்சிகளின்மேல் கவனம் செலுத்தாமல், அதின்மேல் வெற்றி பெற வேண்டும். நம் வாழ்க்கையையே இதற்காக அர்ப்பணிக்க வேண்டும்.

நாம் உண்மையினை விற்கக்கூடாது என்றும் எச்சரிக்கப்படுகின்றோம். இந்தச் சத்தியத்தைக் கிரயமாகச் செலுத்திப் புகழைப் பெற விரும்பி, கடினமான உபதேசங்கள் எல்லாவற்றையும் விடுத்து, வாழ்க்கையில் எளிதாகப் பயன்படுத்தக் கூடிய, எந்தவிதத்

தியாகமும் இல்லாததாய் இருக்கக்கூடிய சுவிசேஷங்களை மட்டும் மற்றவர்களுக்கு எடுத்துக் கூறலாம் என்று விரும்புவீர்களானால் இயேசு அப்படிப்பட்டவர்களுக்கு ஒரு எச்சரிப்பைத் தருகின்றார். மத்தேயு 7:14இல் “ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாய் இருக்கிறது. அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்” என்று கூறுகிறது.

இயேசுவின் இராஜ்யத்தைச் சுதந்தரிக்கவேண்டும் என்று விரும்பினால், நான் மேலே குறிப்பிட்டுள்ள எல்லா வேதப் பகுதிகளையும் படித்து, அதை உங்கள் வாழ்க்கையில் நடைமுறைப்படுத்துங்கள். எந்தப் பகுதியில் குறைவுள்ளவர்களாய் இருக்கின்றீர்கள் என்று பரிசுத்த ஆவியானவர் காட்டுகின்றாரோ, அதை அவருடைய உதவியை நாடியே சரிப்படுத்திக் கொள்ளுங்கள்.

எது உங்களுக்கு வெற்றியைத் தேடித் தரும்? சகிப்புத் தன்மை.

26

சோதனையை மேற்கொள்ளும் பண்பு

பொறுத்துக்கொள்ளுதல். இது பாராட்டிற்குரிய ஒரு சொல் அல்ல - மேலும் இதனை எளிதில் புரிந்து கொள்ள முடியாது. இருந்தாலும், இது இல்லாமல் யுத்தத்தில் வெல்ல முடியாது. பொறுத்துக்கொள்ளுதல் என்பதற்கு என்ன அர்த்தம் என்பதை முக்கியமாய்ப் புரிந்துகொள்ள வேண்டிய காலத்தில் நாம் வாழ்கிறோம் என நம்புகிறேன்.

கிங் ஜேம்ஸ் மொழிபெயர்ப்பு 300 ஆண்டுகளுக்கு முன்பு மொழிபெயர்க்கப்பட்டது. அதில் பல ஆங்கில வார்த்தைகளின் அர்த்தம் மாறியுள்ளது. கிங் ஜேம்ஸ் வேதாகமத்தில் *பொறுமை* என்பதனை (Patience) பொறுத்துக்கொள்ளுதல் என்னும் அர்த்தத்தில் பயன்படுத்தியுள்ளனர். பொறுமை என்ற சொல் கிங் ஜேம்ஸ் மொழிபெயர்ப்பில் *நீடிய பொறுமை* (long suffering) என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. பொறுமை அல்லது நீடிய பொறுமை என்பது சினமூட்டும் மக்களையும், நிலைமைகளையும், சூழ்நிலைகளையும் மனநிலைக் கோணாமல் ஏற்றுக்கொள்வதாகும் - பொறுமையைக் கையாடி பாய்ந்துவிடாதபடி இருப்பது. அது முக்கியமான மதிக்கத்தக்க கிறிஸ்தவப் பண்பு. நான் இந்தப் பண்பை அதிகம் பயன்படுத்தக்கூடும் என்பது எனக்குத் தெரியும். சகிப்புத் தன்மை என்பதே பொறுமையாகும். பலவித நவீன மொழிபெயர்ப்புகளில் *"விடாமுயற்சி"* (perseverance) என்னும் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதனுடைய வினைச் சொல் ***"சகித்துக்கொள்ளுதல்"*** என்னும் அர்த்தமுள்ளது.

ஒலிவ மலைப் பிரசங்கத்தில் இயேசு அவர் வருவதற்கு முன்பாக உலகத்தில் எப்படி இருக்குமென்று தீர்க்கதரிசனமாக முன் கூட்டியே ஒரு படத்தைத் தீட்டியுள்ளார். அவர் பேசியதில் பெரும்பாலானவைகளை இன்று நாம் காண்கிறோம். இந்த அதிகாரத்தில், என்னுடைய நோக்கம் தீர்க்கதரிசனத்திற்கு விளக்கம் கொடுப்பதன்று, ஆனால் இப்படிப்பட்ட காலங்களில் நமக்கு இருக்க வேண்டிய பண்பைக் குறித்து இயேசு சொன்னதில் என் கவனத்தைச் செலுத்த விரும்புகிறேன். "அக்கிரமம் மிகுதியாவதினால் அநேகருடைய அன்பு தணிந்து போம். முடிவுபரியந்தம் நிலைநிற்பவனே இரட்சிக்கப்படுவான்" (மத்தேயு 24:12-13).

அன்பும் கட்டுப்பாடும் ஒன்றையொன்று சார்ந்தது. சட்டமும் கட்டுப்பாடும் மீறப்படும்பொழுது அன்பு தணிந்து போம்

சட்டம் மீறிய தன்மைக்கும் அன்பற்ற தன்மைக்கும் உள்ள நேரடியான தொடர்பைக் கவனிக்கவும். சட்டத்தை மதிக்காதவர்கள் அன்பற்றவர்களாயிருப்பார்கள். அன்பு என்பதற்கு சட்டமும் கட்டுப்பாடும் தேவையில்லையென்றும் அது சுயாதீனமாய்த் தானே இயங்கக் கூடியதென்றும் அடிக்கடி நினைக்கிறோம். இது தவறான கருத்து. அன்பும் கட்டுப்பாடும் ஒன்றையொன்று சார்ந்தது. சட்டமும் கட்டுப்பாடும் மீறப்படும்பொழுது அன்பு தணிந்து போம். 12ஆம் வசனத்தில் *அன்பிற்குப்* பயன்படுத்தப்பட்டுள்ள வார்த்தை *"அகாப்பே"* (agape) என்பதாகும். இது கிறிஸ்தவர்களுக்கு இருக்க வேண்டிய அன்பைக் குறிக்கிறது. உலகத்தில் உள்ள அன்பு குறைந்து போகிறதைப் பற்றி இயேசு கூறாமல் கிறிஸ்தவர்களுக்கு உள்ள அன்பு தணிந்து போவதைப் பற்றிப் பேசுகிறார்.

இந்த இருளான சூழலில் சட்டங்கள் மதிக்கப்படாமல் அன்பு குறைந்து போவதால் இயேசு "முடிவு பரியந்தம் நிலை நிற்பவனே இரட்சிக்கப்படுவான்" என்று கூறுகிறார். முடிவு மட்டும் நிலைத்திருக்க வேண்டும். மூல கிரேக்க மொழியில் "முடிவுபரியந்தம் நிலைத்திருப்பவன் மட்டுமே இரட்சிக்கப்படுவான்" என்று கூறப்பட்டுள்ளது.

ஒலிவமலைப் பிரசங்கத்தில் மாற்கு சுவிசேஷத்தின்படி கீழ்க்கண்ட எச்சரிப்பைக் காண்கின்றோம்.

> அன்றியும் சகோதரன் சகோதரனையும், தகப்பன் பிள்ளையையும் மரணத்துக்கு ஒப்புக்கொடுப்பார்கள்; பெற்றாருக்கு விரோதமாகப் பிள்ளைகள் எழும்பி, அவர்களைக் கொலை செய்வார்கள். என் நாமத்தினிமித்தம் எல்லாராலும் பகைக்கப்படுவீர்கள். முடிவுபரியந்தம் நிலைநிற்பவனே இரட்சிக்கப்படுவான்.
>
> மாற்கு 13:12-13

கிறிஸ்தவர்கள் எல்லாராலும் வெறுக்கப்படுவார்கள். அவர்களுடைய குடும்ப உறவுகள் தாக்கப்படும். நம்பிக்கைத் துரோகம் சீறியெழும் என இவ்வசனம் கூறுகிறது. பொறுத்துக்கொள் என்பதே இதற்கான ஆலோசனை. நாம் நிலைத்து நிற்க வேண்டும். உறுதியாயிருக்க வேண்டும். உறுதியுடன் நிலைத்திருப்பது முழுநேர வேலையாகச் சில வேளைகளில் இருக்கும்.

அநேக ஆண்டுகளாக பிரான்ஸ் நாட்டில் பணிபுரிந்த ஒரு ஸ்வீடன் மிஷனெரியை நான் அறிவேன். அவர் தெற்கு பிரான்ஸில் உள்ள மார்சிலஸ் (Marseilles) என்னும் இடத்தில் உள்ள சிறைச்சாலைக்குச் சென்று அவர்களின் விசுவாசத்திற்காக சிறையில் அடைக்கப்பட்டச் சிலரைச் சந்தித்தார். அவர்களில் அநேகர் சிறைக் கிடங்குகளில் போடப்பட்டவர்கள் திரும்பி வரவேயில்லை. அதில் ஒரு சிறைக்கைதி. சிறைக்கிடங்கின் கல்லிலே rèsister என்ற பிரெஞ்சு வார்த்தையை எழுதியிருந்தார். அதற்கு நிலைத்து நில் என்று அர்த்தம். தன்னைத் தொடர்ந்து அங்கு வருபவர்களுக்கு ஒரு விசுவாசி இவ்வார்த்தையைச் செய்தியாக எழுதியிருந்தார். பொறுத்துக்கொள். தேவன் இன்று இந்த வார்த்தையை நமக்குக் கூறுகிறார். நீங்கள் உங்களுடைய ஆத்துமாவில் பெலனற்றவர்களாய் இருப்பீர்கள் என்றால் தேவன் தம்முடைய வார்த்தையின் மூலம் உங்களுடைய ஆத்துமாவை இரும்பைப் போல பெலனுள்ளதாக்க வேண்டும் என்பதே என்னுடைய ஜெபம்.

உபத்திரவக் காலத்தின் கனி

எப்படி நாம் பொறுமையை வளர்க்கிறோம். கீழே சில எளிய குறிப்புகளைக் காணலாம்.

> இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறபடியால், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துமூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம். அவர் மூலமாய் நாம் இந்தக் கிருபையில் பிரவேசிக்கும் சிலாக்கியத்தை விசுவாசத்தினால் பெற்று நிலைகொண்டிருந்து, தேவமகிமையை அடைவோமென்கிற நம்பிக்கையினாலே மேன்மை பாராட்டுகிறோம்.
>
> ரோமர் 5:1-2

வருங்காலத்தில் நமக்கு வைக்கப்பட்டிருப்பதைக் குறித்து மகிழ்கின்றோம். ஆனால் அப்போஸ்தலனாகிய பவுல் வருங்காலத்தை மட்டும் குறித்து மகிழ்ச்சியடையாமல் வித்தியாசமான தற்காலத்தைக் குறித்தும் மகிழ வேண்டும் என்கிறார். “அதுமாத்திரமல்ல, உபத்திரவமும் பொறுமையையும், பொறுமை பரீட்சையையும், பரீட்சை நம்பிக்கையையும் உண்டாக்குகிறதென்று நாங்கள் அறிந்து, உபத்திரவங்களிலேயும் மேன்மை பாராட்டுகிறோம்” (வசனம் 3-4).

3ஆம் வசனத்தில் வரும் *மகிமை* என்ற சொல்லுக்குக் “களிகூருதல்” “பெருமை கொள்தல்” “மகிழ்வடைதல்” என்று பொருள். உபத்திரவத்தில்

ஏன் மகிழ வேண்டும்? ஏனெனில் உபத்திரவம் அதைச் செய்யும். அமெரிக்கன் வேதாகமம் "உபத்திரவம் பொறுமையையும், பொறுமை நற்பண்பையும் நற்பண்பு நம்பிக்கையையும் உண்டாக்குகிறது" என்று சொல்கிறது. பொறுத்துக்கொள்ளுதல் சரியான பண்பை வளர்க்கிறது. பரீட்சைக்கு வெற்றிகொள்ளும் பண்புதான் பொறுத்துக்கொள்ளுதல். 5ஆம் வசனத்தைப் பார்ப்போம்: "மேலும் நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியினாலே தேவ அன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறபடியால், அந்த நம்பிக்கை நம்மை வெட்கப்படுத்தாது".

அன்பு என்பது பண்பைப் பொறுத்த காரியம் சுருங்கச் சொன்னால் முடிவு வரை நிலைத்திருக்கும் போர் வீரனின் பண்பைப் போன்ற ஒரு குணாதிசயத்தை வளர்க்கிறோம். உபத்திரவத்தில் நாம் மகிழ்வோம். (பெருமை கொள்தல், மகிழ்ச்சி கொள்தல்). ஏனெனில், அதுவே பொறுமையை வளர்க்கும். பொறுமை நிலையான பண்பை உருவாக்கும். என்னுடைய வாழ்க்கையில் நான் சில மனிதர்களோடு ஈடுபட்டிருந்த வேளையில் அவர்களால் கஷ்டத்தை அனுபவித்திருக்கிறேன், எதிர்ப்பைச் சந்தித்திருக்கிறேன், என்னைத் தவறுதலாகப் புரிந்துகொண்டு தவறுதலாகத் தூற்றியுள்ளார்கள். எனக்கும் அவர்களுக்கும் பெரும் கருத்து வேறுபாடு ஏற்பட்டதுண்டு. ஆனால், இன்று அவர்கள் பண்பு சரியாயிற்று. அவர்களை நான் நம்ப முடியும். சட்டங்களை மதியாத நம்பிக்கைத் துரோகத்தின் மத்தியிலும் யாரை நம்ப முடியும் என்பது எனக்குத் தெரியும்.

நான் நம்பத்தக்க மனிதனாய் முதலாவது கருதப்பட விரும்புகிறேன். தின அழுத்தங்களால் பிறரை உதாசீனப்படுத்த சோதிக்கப்படுகிறோம். கிறிஸ்துவின் சரீரத்தில் உள்ளவர்களுக்கு என்னை ஒப்புக் கொடுத்ததினால், அழுத்தங்கள் என்னை நேர்மையற்றவனாக மாற்றுமென்றால் நான் அதிகம் வெட்கமடைவேன்.

கொலோசெயர் 1ஆம் அதிகாரத்தைப் பார்ப்போம்.

> இதினிமித்தம், நாங்கள் அதைக் கேட்ட நாள்முதல் உங்களுக்காக இடைவிடாமல் ஜெபம் பண்ணுகிறோம்; நீங்கள் எல்லா ஞானத்தோடும், ஆவிக்குரிய விவேகத்தோடும் அவருடைய சித்தத்தை அறிகிற அறிவினாலே நிரப்பப்படவும், சகலவித நற்கிரியைகளுமாகிய கனிகளைத் தந்து, தேவனை அறிகிற அறிவில் விருத்தியடைந்து, கர்த்தருக்குப் பிரியமுண்டாக அவருக்குப் பாத்திரராய் நடந்துகொள்ளவும், சந்தோஷத்தோடே கூடிய எல்லாப் பொறுமையும் நீடிய சாந்தமும் உண்டாவதற்கு, மகிமையான அவருடைய வல்லமையின்படி, எல்லா

வல்லமையாலும் பலப்படுத்தப்படவும், உங்களுக்காக வேண்டுதல்செய்கிறோம்.

கொலோசெயர் 1:9-11

தேவன் சகலவித அறிவோடும் அவருடைய சித்தத்தை அறிகிற ஞானத்தோடும் நிரப்ப விரும்புகிறார் என்பது வியப்பாய் இருக்கிறதல்லவா? பவுல் "கர்த்தருக்கேற்றவிதமாய் நடந்துகொள்ளுங்கள்" என்பதை மனதில் வைத்து தேவ சித்தத்தைப் பற்றிய அறிவினால் நிரப்பப்பட்டிருக்கும்பொழுது அது நம்முடைய வாழ்க்கையை மாற்றியமைக்கும். நமது எதிரியை எப்படிச் சந்திக்கின்றோம் என்பதையும் கற்றுத்தரும். பொறுமையாயிருப்பது ஒரு காரியம் அதே நேரத்தில் பொறுமையாய் மகிழ்வுடன் இருப்பது மற்றொரு காரியம். இதற்குப் பொறுத்துக்கொள்ளுதலும் பெலனும் தேவை. சகிப்புத்தன்மையும் பொறுமையும் பெலத்திற்கு அடையாளமாகவுள்ளது. இவைகள் பெலவீனத்தின் அடையாளங்கள் அல்ல.

எபிரெயருக்கு எழுதின நிருபத்தில் அடிக்கடி வரும் ஒரு கருப்பொருள் கிறிஸ்து இயேசுவின் மேல் வைக்கும் விசுவாசத்தைப் பற்றி அறிக்கை. எபிரெயருக்கு எழுதின நிருபங்களில் 5 இடங்களில் பின் வாங்கிப்போகுதலின் அபாயம் பற்றிச் சொல்லப்படுகிறது. அவைகள் வேதத்தின் முக்கியமான வசனங்கள். எபிரெயருக்கு எழுதின நிருபத்தில் வரக்கூடிய திறவுகோல் வசனம் *"பொறுத்துக்கொள்வதாகும்".*

சகிப்புத்தன்மையும் பொறுமையும் பெலத்திற்கு அடையாளமாக உள்ளது. இவைகள் பெலவீனத்தின் அடையாளங்கள் அல்ல.

நீங்கள் அசதியாயிராமல், வாக்குத்தத்தமான ஆசீர்வாதங்களை விசுவாசத்தினாலும் நீடிய பொறுமையினாலும் சுதந்தரித்துக்கொள்ளுகிறவர்களைப் பின்பற்றுகிறவர்களாயிருந்து, உங்களுக்கு நம்பிக்கையின் பூரண நிச்சயமுண்டாகும்படி நீங்கள் யாவரும் முடிவுபரியந்தம் அப்படியே ஜாக்கிரதையைக் காண்பிக்கவேண்டுமென்று ஆசையாயிருக்கிறோம்.

எபிரெயர் 6:11-12

விசுவாசமும் பொறுத்துக்கொள்ளுதலும் தேவனுடைய வாக்குத்தத்தத்தை அனுபவிக்க விசுவாசம் மட்டுமே போதுமென்று சிலர் கூறுவர். ஆனால் அது உண்மையன்று, விசுவாசமும் பொறுமையும்

தேவை. “ஆகையால், மிகுந்த பலனுக்கேதுவான உங்கள் தைரியத்தை விட்டுவிடாதிருங்கள். நீங்கள் தேவனுடைய சித்தத்தின்படி செய்து, வாக்குத்தத்தம்பண்ணப்பட்டதைப் பெறும்படிக்குப் பொறுமை உங்களுக்கு வேண்டியதாயிருக்கிறது” (எபிரெயர் 10:35-36).

இங்கு *நம்பிக்கை* (confidence) என்றால் பேச்சு சுதந்திரம் என்று அர்த்தம். இயேசு உனக்கு என்ன செய்தார்? என்ன செய்யப்போகிறார்? என்பதை தைரியத்துடன் பேசுவதாகும். நீ தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றினாய், ஆயினும் வாக்குத்தத்தத்தைப் பெற்றுக்கொள்ளவில்லை. உனக்குத் தேவையானது என்ன? ***சகிப்புத்தன்மை.*** தேவனுடைய சித்தத்தை செய்து முடித்த பின், வாக்குத்தத்தத்தைக் கைவரப்பெறும்வரை பொறுமையாயிருக்க வேண்டும். சிலர் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றி வாக்குத்தத்தத்தைப் பெற பொறுமையின்றி எதிர்பார்க்கின்றனர். ஆனால் பொறுமையில்லாமல் அது கிடைக்காது. உனக்கு விசுவாசமும் பொறுமையும் தேவை.

நாம் சந்திக்க இருக்கும் சோதனை

நாம் சந்திக்க இருக்கும் சோதனை எப்படிப்பட்டது. மத்தேயு 13இல் பதில் உள்ளது. விதையுடன் விதைக்கப் புறப்பட்ட, நமக்கு நன்கு தெரிந்த உவமையை இயேசு சொல்கிறார். இங்கு ஒரு சிறு வார்த்தை முக்கியமானதாக உள்ளது: எப்பொழுது? இயேசு உபத்திரவமும் துன்பமும் வந்தால் என்று சொல்வில்லை உபத்திரவமும் துன்பமும் வருமென்றால் என்கிறார். அவைகள் வரும்.

இரண்டு விதமான பரீட்சைகள் உண்டு. முதலாவது உபத்திரவப்படுவது; இரண்டாவது செல்வம் பெறுவது.

இந்த உவமையில் இயேசு பலவிதமான நிலங்களைப் பற்றிக் கூறுகிறார். ஒவ்வொன்றும் வசனத்தைக் கேட்கும் ஒவ்வொரு மக்களைக் குறிக்கிறது. சில விதைகள் வழியருகே விழுந்து பறவைகளால் கொத்திச் செல்லப்பட்டனவேயன்றி நிலத்தினுள் செல்லவில்லை. சில விதைகள் கற்பாறையான நிலத்தில் விழுந்தது. சில விதைகள் முள்ளுள்ள இடத்தில் விழுந்தது.

ஒவ்வொரு நிலமும் யாரைக் குறிக்கிறதென்று இயேசு விளக்குகிறார். இது எளிதாய் விளக்கப்பட்டுள்ளது.

> ஒருவன், ராஜ்யத்தின் வசனத்தைக் கேட்டும் உணராதிருக்கும்போது, பொல்லாங்கன் வந்து, அவன் இருதயத்தில் விதைக்கப்பட்டதைப்

பறித்துக்கொள்ளுகிறான்; அவனே வழியருகே விதைக்கப்பட்டவன். கற்பாறை இடங்களில் விதைக்கப்பட்டவன், வசனத்தைக் கேட்டு, உடனே அதைச் சந்தோஷத்தோடே ஏற்றுக்கொள்ளுகிறவன்; ஆகிலும் தனக்குள்ளே வேரில்லாதவனாய், கொஞ்ச காலமாத்திரம் நிலைத்திருப்பான்; வசனத்தினிமித்தம் உபத்திரவமும் துன்பமும் உண்டானவுடனே இடறலடைவான். முள்ளுள்ள இடங்களில் விதைக்கப்பட்டவன், வசனத்தைக் கேட்கிறவனாயிருந்தும், உலகக்கவலையும் ஐசுவரியத்தின் மயக்கமும் வசனத்தை நெருக்கிப் போடுகிறதினால், அவனும் பலனற்றுப் போவான்.

மத்தேயு 13:19-22

எளிதாகக் கூறினால் இரண்டு விதமான பரீட்சைகள் உண்டு: முதலாவது, கடினமான பரீட்சை அடுத்தது எளிதான பரீட்சை - முதலாவது, உபத்திரவப்படுவது; இரண்டாவது செல்வம் பெறுவது. சிலர் உபத்திரவத்தைப் பொறுத்துக்கொள்ளமாட்டார்கள். சிலர் உபத்திரவம் வந்த வேளையிலும் அதை சமாளித்துவிடுவார்கள். ஆனால் தேவன் பொருளாதார ஆசீர்வாதத்தால் ஆசீர்வதிக்கும்பொழுது - அழகான வீடு, இரண்டு கார்கள், ஒருவேளை ஒரு படகு போன்றவற்றை வாங்கி தேவனுடைய அரசைவிட இவ்வுலகப் பொருட்களுக்கு அதிமுக்கியத்துவம் கொடுக்க முற்படுவர்.

மற்றும் சிலர் வசனத்தை மகிழ்வுடன் ஏற்றுக்கொள்வார்கள். அது சிறந்த காரியம். இரட்சிக்கப்பட்ட முதல் இரவில் தங்கள் சாட்சியைக் கூறுவார்கள். பிறகு ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெறுவார்கள்; நவமான பாஷையில் பேசி தீர்க்கதரிசனம் சொல்வார்கள். தீப்பிடித்த வீட்டை அணைப்பது கடினமாயுள்ளதுபோல அவர்கள் சாட்சியின் வைராக்கியத்தையும் தணிக்க முடியாது. ஆனால் மூன்று மாதங்கள் கழித்து அவர்கள் எங்கேயிருக்கிறார்கள் என்பதே தெரியாது. எதிர்ப்பும் பிரச்சனையும் வரும்பொழுது துவண்டு போய்விடுவார்கள். அவர்கள் வேர் நாட்டப்படாத நிலையில் இருப்பவர்கள். உடனே புதிதாக கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவன், அளவிற்கு மீறி உடனே அதிக உணர்ச்சிவசப்படுவதைத் தவிர்க்க வேண்டும். ஆரம்பத்தில் சிறிய பிரச்சினை வரும்பொழுது அதனை மேற்கொண்டு வேர்விட வேண்டும்.

நான் லண்டனில் போதகராக இருந்தபோது, ஒருவரை ஆவியானவருக்குள் நடத்துவது என்பது ஒரு சிறந்த வெற்றியாகும். பத்துப்பேர் ஆவியானவரின் ஞானஸ்நானம் பெற்றால், ஒருவர் நிலைத்து நிற்பதே பெரிய காரியம். அந்நாட்களில் எதிர்ப்பு அதிகமாயிருந்தது.

நீங்கள் உபத்திரவத்தினாலும் சோதிக்கப்பட இருக்கிறீர்கள்; வெற்றி வரும்போது சோதிக்கப்பட இருக்கிறீர்கள். இவ்விரு சூழலிலும் நிலைத்து நிற்க வேண்டும்.

இது ஒரு மாரத்தான் ஓட்டத்தைப் போல் உள்ளது. இதில் வேகமோ, பெலனோ முக்கியமல்ல, நிலையாய் ஓடுவதே முக்கியம். எபிரெயருக்கு எழுதிய நிருபத்தில் அதன் எழுத்தாளர் ஓடவேண்டிய ஓட்டம் ஒலிம்பிக் பந்தய ஓட்டம் போல் உள்ளது என எழுதுகின்றார்.

> ஆகையால், மேகம்போன்ற இத்தனைத் திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்துகொண்டிருக்க, பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருங்கிநிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்.
>
> எபிரெயர் 12:1

இது சிறு தூரம் ஓடும் ஓட்டமல்ல. நாம் தெரிந்துகொண்டு ஓடும் நீளமான ஓர் ஓட்டம். கிறிஸ்தவ வாழ்க்கையை ஒரு பாய்ச்சல் போல அநேகர் ஆரம்பிக்கின்றனர். கொஞ்ச நேரத்தில் மூச்சு வாங்க, ஓட்டம் ஆரம்பிக்கும் முன்னரே அவர்கள் சோர்ந்து போய்விடுகின்றனர். ‘‘ஓடுகிறதற்கு வேகமுள்ளவர்களின் வேகமும், யுத்தத்திற்குச் சவுரியவான்களின் சவுரியமும் போதாது” (பிரசங்கி 9:11).

எல்லா பாரத்தையும் “ஒதுக்கித் தள்ளிவிட்டு” இந்த ஓட்டத்தை மேற்கொள்ள வேண்டும். ஓட்டப்பந்தயத்தில் ஓட முற்படுபவன் தன் பாக்கெட்டில் உள்ளதையெல்லாம் எடுத்துவிட்டு இலாவகமாக எடை குறைந்த ஆடையை உடுத்தி ஓடுவதற்கு முற்படவேண்டும். தேவையற்ற சிறிதளவு எடை கூட அவனில் இருக்கக்கூடாது. சில காரியங்கள் பாவமில்லை என்றாலும் அவைகள் உன்னைப் பாரப்படுத்தும் எடையாக உன்னை நிற்கச்செய்யும். அவைகள் உன் பெலனைக் குறைத்து உன் நேரத்தையும் காலத்தையும் திசை திருப்பிவிடும். ஓட்டம் முடிவுறும் இடத்தில் திரள் கூட்டமான பார்வையாளர்கள் யார் ஜெயிக்கப்போகிறார்கள் என்று பார்க்கக் காத்திருக்கின்றனர். இந்தப் பார்வையாளர்கள் பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்களே. பரலோகத்தின் பலகணியிலிருந்து தங்கள் ஓட்டத்தை முடித்துவிட்டு நம்மை உற்சாகப்படுத்தக் காத்திருக்கிறார்கள்.

முழுமையான கிறிஸ்தவன்

யாக்கோபின் வார்த்தை நமக்குத் தூண்டுதலாக உள்ளது.

> என் சகோதரரே, நீங்கள் பலவிதமான சோதனைகளில் அகப்படும்போது, உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்குமென்று அறிந்து, அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள். நீங்கள் ஒன்றிலும் குறைவுள்ளவர்களாயிராமல், பூரணராயும் நிறைவுள்ளவர்களாயும் இருக்கும்படி, பொறுமையானது பூரண கிரியை செய்யக்கடவது.
>
> யாக்கோபு 1:2-4

பலவிதமான சோதனைகளில் விழும்பொழுது அதை ஒரு சந்தோஷமான காரியமாக ஏற்றுக்கொள்கிறோமா? நல்லது, நீங்கள் அப்படித்தான் அதை எடுத்துக் கொள்ளவேண்டும். நானும் அப்படித்தான் செய்யவேண்டும். தேவன் இவ்விதப் பரீட்சைக்குள் நம்மை நம்பி அதனுள் செல்ல அனுமதிப்பதற்கு அவரை ஸ்தோத்தரிக்க வேண்டும். அது உங்கள் பண்பையும் ஆள்தத்துவத்தையும் சரிப்படுத்தும். இப்படிப்பட்ட சோதனைகள் உன்னை முழுமையான நல்ல நிலைக் கிறிஸ்தவனாக மாற்றும். நீக்கப்படாது விட்டுவைக்கப்பட்டதென்று ஒன்றும் உன் பண்பில் இருக்காது.

என்னை மற்றவர்களுடன் இணைத்து ஐக்கியப்பட வில்லையாயின் என் பண்பில் உள்ள குற்றங்களைக் காணாது நான் என்னையே ஏமாற்றுகிறவனாவேன்.

உன் பண்பு சரியாக உள்ளதா என்று சோதித்துப் பார்க்கும் பெரிய வழி என்ன என்று தெரியுமா? அது நெருக்கமான ஒப்புக்கொடுக்கப்பட்ட ஐக்கியம் அது ஒரு சிறு குழுவான மக்களுடன் ஒவ்வொரு வாரமும் சந்தித்த உங்கள் வாழ்வின் அனுபவங்களைப் பகிர்ந்துகொள்வது போல் உள்ளது. கொஞ்சக் காலத்தில் நீயே சோகப்படும் வகையில் உன் வாழ்க்கையில் சில பகுதிகள் இன்னும் சரி செய்யப்படுவதில்லை என்பதை உணருவாய். மக்களுடன் நெருங்கிப் பழகாவிட்டால் வாழ்வின் இப்பகுதிகள் மறைக்கப்பட்டுவிடும். தொடர்ச்சியாக வாராவாரம் உண்டாகும் இவ்விதச் சந்திப்பும் நெருக்கமான ஐக்கியமும் உன்னைச் சரிப்படுத்தும் அல்லது பின்வாங்கிப் போகச் செய்யலாம்.

என் நண்பர் பாப் மம்ஃபோர்டு ஒரு தடவை “உன் வாழ்வில் பத்துக் காரியங்கள் சரி செய்யப்படவேண்டுமென்றிருந்தால், அதில்

ஆறுகாரியங்களை உன்னால் சரிப்படுத்தமுடியும். மற்ற நாலு காரியங்களைப் பிறர் கண்டுபிடித்து அவர்களால்தான் சரிப்படுத்தமுடியும்'' இது ஒரு நல்ல சராசரி மதிப்பீடு. என்னை மற்றவர்களுடன் இணைத்து ஐக்கியப்படவில்லையாயின் என் பண்பில் உள்ள குற்றங்களைக் காணாது நான் என்னையே ஏமாற்றுகிறவனாவேன். ஆனால் ஒப்புக்கொடுக்கப்பட்ட ஐக்கியம் என்னை இதிலிருந்து தப்புவிக்கும்.

யார் இருந்தாலும் இல்லாவிட்டாலும் நீ கர்த்தருடன் இருப்பாய் என்ற மன உறுதியை ஏற்படுத்திக்கொள்

ஒருவர், ஐக்கியம் என்பது "கூரை பிரிக்கப்படுவதும், சுவர்கள் தகர்க்கப்படுவதும்'' என்றார். தேவன் மேலிருந்து பார்ப்பதால் கூரையை எடுக்க முற்படலாம். ஆனால் சுவர்களைத் தரைமட்டமாக்கி பிறர் பார்வைக்கு விடமுடியுமா? இதற்குத் தைரியம் தேவை. இது கடினமானது.

பொறுத்திருக்கும் வேளையில் மக்கள் உன்னுடன் தங்கியிருக்க வேண்டுமென்பது இதற்கு அர்த்தமல்ல. பவுல் தீமோத்தேயுவிற்கு இரண்டாம் நிருபம் எழுதியபொழுது அவனைத் தாங்கிய மக்களின் கூட்டம் குறைந்து போவதை உதாரணத்திற்கு வேதத்திலே பார்க்கிறோம். பவுல் சிரச்சேதம் செய்யப்படுவதற்கு முன்பு எழுதப்பட்ட கடைசி நிருபம் இது. ''நீ சீக்கிரமாய் என்னிடத்தில் வரும்படி ஜாக்கிரதைப்படு. ஏனென்றால், தேமா இப்பிரபஞ்சத்தின்மேல் ஆசைவைத்து, என்னைவிட்டுப் பிரிந்து, தெசலோனிக்கே பட்டணத்துக்குப் போய்விட்டான்; கிரெஸ்கே கலாத்தியா நாட்டிற்கும், தீத்து தல்மாத்தியா நாட்டிற்கும் போய்விட்டார்கள். லூக்கா மாத்திரம் என்னோடே இருக்கிறான். மாற்குவை உன்னோடே கூட்டிக்கொண்டு வா; ஊழியத்தில் அவன் எனக்குப் பிரயோஜனமுள்ளவன்" (2 தீமோத்தேயு 4:9-11).

உண்மையான அப்போஸ்தலன் என்பவன் அனைவரும் களத்தைவிட்டு கைவிட்டுச் சென்றாலும் அவன் அச்சூழ்நிலையில் தொடர்ந்து நிற்பான். ''அப்போஸ்தலனுக்குரிய அடையாளங்கள் எல்லாவிதமான பொறுமையோடும், அதிசயங்களோடும், அற்புதங்களோடும், வல்லமைகளோடும், உங்களுக்குள்ளே நடப்பிக்கப்பட்டதே" (2 கொரிந்தியர் 12:12). அப்போஸ்தல ஊழியத்தில் முதல் அடையாளம் அற்புதங்கள் அல்ல. பொறுத்து நிற்கும் தன்மையே.

எனினும், இறுதிக்கட்டத்தில் அவனுடன் இருந்தவர்கள் அவனைச் சிறைச்சாலையில் விட்டுச்சென்றனர். அவர்களில் இருந்த குறை யாது? அப்போஸ்தலன் என்பதை நிரூபித்தது யாது? **சகிப்புத்தன்மை.** இப்படிப்பட்ட சகிப்புத்தன்மையின் பண்பை வளர்க்கும்படி கர்த்தரிடம் நாம் கேட்க வேண்டும்.

அநித்தியமானதும் நித்தியமானதும்

பவுல் கடந்து சென்ற பாதையைக் கருதும்பொழுது நமது உபத்திரவத்தைக் குறித்துக் குறைபடுவதைத் தவிர்க்க முடியும். நான்கு தடவை அடிக்கப்பட்டார், ஒரு முறை கல்லால் எறியப்பட்டார். இரண்டு முறை கப்பற்சேதத்தில் இருந்தார்; மரணத்திற்கு ஒப்புக்கொடுக்கப்பட்டார். பசியையும், தாகத்தையும், நிர்வாணத்தையும், ஆபத்தையும் சகித்துக்கொண்ட அவர்:

> மேலும் காணப்படுகிறவைகளையல்ல, காணப்படாதவைகளை நோக்கியிருக்கிற நமக்கு, அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது. ஏனெனில், காணப்படுகிறவைகள் அநித்தியமானவைகள், காணப்படாதவைகளோ நித்தியமானவைகள்.
>
> 2 கொரிந்தியர் 4:17-18

மேற்கூறியவற்றைத் தெரிவிக்கிறார்.

நித்தியமான காரியங்களில் கண்களைப் பதிக்கும்படி வேதம் இரு குறிப்புகளைத் தருகிறது. முதலாவது எந்த நிபந்தனையுமின்றி முழு இருதயத்தடன் நம்மை இயேசு கிறிஸ்துவிற்கு ஒப்புக்கொடுப்பது. சீரியா பட்டணத்து அந்தியோகியாவில் பர்னபா எப்படி நடந்துகொண்டான் என்பதைக் காண்க. “அவன் போய்ச் சேர்ந்து, தேவனுடைய கிருபையைக் கண்டபோது, சந்தோஷப்பட்டு, கர்த்தரிடத்தில் மனநிர்ணயமாய் நிலைத்திருக்கும்படி எல்லாருக்கும் புத்திசொன்னான்'' (அப்போஸ்தலர் 11:23).

“மன நிர்ணயமாய்” என்ற வார்த்தைகள் இதில் முக்கியமானது. யார் எப்படி நடந்துகொண்டாலும் நடந்துகொள்ளவில்லையாயினும், எதுவாயினும் நான் கர்த்தரைப் பற்றிக்கொள்வேன் என்னும் உறுதிப்பாடு இருக்க வேண்டும். உன் நண்பர்கள் நிலைத்து நிற்கவில்லையாயினும் நீ நிலைத்து நிற்க வேண்டும். உன் குடும்பம் உன்னுடன் இல்லையாயினும் நீ நிற்க வேண்டும். இதுவே இருதயத்தின் வாஞ்சையாய் தேவனோடு தொடர்ந்து நிலைத்திருக்க வேண்டும்.

அப்போஸ்தலர் 14:22இல் பர்னபாவும் பவுலும் புதிதாக மனமாறிய விசுவாசிகளுக்கு அந்தியோகியா என்னும் அதே பேருள்ள இன்னொரு பட்டணத்தில் “சீஷருடைய மனதைத் திடப்படுத்தி, விசுவாசத்திலே நிலைத்திருக்கும்படி அவர்களுக்குப் புத்திசொல்லி, நாம் அநேக உபத்திரவங்களின் வழியாய்த் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கவேண்டுமென்று சொன்னார்கள்”.

உபத்திரவம் தவிர வேறு வழியில் தேவனுடைய இராஜ்யத்தை அடைவது கடினம். தேவனுடைய இராஜ்யம் என்பது இரண்டு அர்த்தத்தில் வருகிறது: இயேசு கொண்டுவந்து நிறுவும் தேவனுடைய இராஜ்யம் ஒன்று, இப்பொழுது நாம் கடந்து சென்றுள்ள தேவனுடைய இராஜ்யம் மற்றொன்று. நாம் தேவனுடைய இராஜ்யத்தில் வாழ்கிறோம் - இந்த அரசின் வாழ்விற்கு மிகுந்த உபத்திரவத்தைக் கடந்து வந்துள்ளோம். வாழ்வின் எல்லாப் பகுதிகளிலும் அழுத்தப்படுவதை உணருவோம். "எனக்கு என்ன நடக்கிறது?" என்று நீ கேட்கலாம். அதற்குப் பதில் தேவன் உன்னை அதற்கு ஆயத்தப்படுத்துகிறார் என்பதே.

சிலவேளைகளில் தேவனுடைய இராஜ்யத்தில் மக்கள் வரும்பொழுது, தேவனுடைய இராஜ்யத்தில் வரவேண்டுமெனின் எதிர்ப்புகளையும் உபத்திரவங்களையும் சந்திக்க வேண்டியதிருக்கும் என்ற எச்சரிப்பைக் கொடுக்க வேண்டியது நமது கடமை என நான் நினைக்கிறேன். புதிதாக மனம் திரும்புபவர்களிடம் நீங்கள் இயேசுவிடம் வந்தால் உன் பிரச்சனை அனைத்தும் தீர்ந்துவிடும் என்று கூறி அழைப்பது சரியானதன்று. பெரும்பாலும் அப்படி நடப்பதில்லை. அநேகம் தடவைகளில் அதுவரைக் காணப்படாத பிரச்சனைகள் தலை தூக்கும்.

நித்தியத்தின் மேல் கண்களைப் பதிப்பதில் இரண்டாம் காரியம் எனக்குப் பிரியமான வேதபகுதியாகிய எபிரெயர் 11:27இல் உள்ளது. மோசே எகிப்தில் இருந்தான்; பார்வோனின் மகனாக அவன்தான் சிங்காசனத்தைச் சுதந்தரிக்க வேண்டும். கல்வி, செல்வம், சமூக அந்தஸ்து போன்ற உலகம் தரக்கூடியது அனைத்தையும் உடையவனாயிருந்தான். நாற்பது வயதிலே அவன் அந்தச் சிலாக்கியத்தை வேண்டாமெனக் கருதி எகிப்தைவிட்டு நீங்கி மீண்டும் நாற்பது ஆண்டுகள் வனாந்தரத்தின் பின்னே சில ஆடுகளை மேய்த்துக்கொண்டிருந்தான். "விசுவாசத்தினாலே (மோசே) அவன் அதரிசனமானவரைத் தரிசிக்கிறதுபோல உறுதியாயிருந்து, ராஜாவின் கோபத்துக்குப் பயப்படாமல் எகிப்தைவிட்டுப் போனான்" (எபிரெயர் 11:27).

காணப்படாதவரை அவன் கண்டு நடந்துகொண்ட விதத்திலே சகிப்புத் தன்மையின் விளக்கத்தைக் காண்கிறோம். காணப்படாததைக் காண்பது எவ்வாறு? அதை நீ பார்க்கச் செய்வது எது? காணப்படாதவைகளின் நிச்சயமாக இருக்கிறது விசுவாசம். நீங்களும் நானும் உறுதியாக இருந்தால் காணப்படும் உலகைவிட காணப்படாத உலகமே அதிக மெய்யானதாக இருக்கும்.

பவுல் அதனை இப்படிக் கூறுகிறார்:

> கர்த்தரே ஆவியானவர்; கர்த்தருடைய ஆவி எங்கேயோ அங்கே விடுதலையுமுண்டு. நாமெல்லாரும் திறந்த முகமாய்க் கர்த்தருடைய

மகிமையைக் கண்ணாடியிலே காண்கிறதுபோலக் கண்டு, ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத்தானே மகிமையின்மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம்.

2 கொரிந்தியர் 3:17-18

தேவனுடைய வார்த்தையாகிய ''கண்ணாடி'' நம்மைக் காணப்படாததைக் காணச்செய்யும். இந்தக் கண்ணாடியில் பார்க்கும்பொழுது கர்த்தர் தமது மகிமையை வெளிப்படுத்துகிறார்; நாம் காண்கின்றதைப் போன்று மாற்றப்படுவோம். எவ்வளவிற்கு அதிகமாய் இந்தக் கண்ணாடியைப் பார்க்கிறோமோ அந்த அளவிற்கு பரிசுத்த ஆவியானவர் உபத்திரவத்தினாலும் துன்பத்தினாலும் நம்மைக் கட்டி எழுப்புவார்.

27

ஓட்டத்தை முடித்தல்

வெப்ஸ்டர் புது உலக அகராதி பொறுத்துக்கொள்வதைத் “திடமனதுடன் அமைதலாயிருப்பது'', சோர்ந்துபோகாது இருப்பது, தொடர்வது, நிலைத்திருப்பது என்று அர்த்தப்படுத்துகிறது. விட்டுவிடாது தொடர்வதற்குச் செலுத்த வேண்டிய கிரயமும் அதனால் உண்டாகும் ஆசீர்வாதம் குறித்தும் கற்றுக்கொண்டு வருகிறோம்.

அநேக ஆண்டுகட்கு முன்பு லண்டனில் ஒரு ஸ்வீடன் நாட்டு மிஷினரியின் மகள் எங்களுடன் தங்கி நான் கற்றுத்தந்த ஆங்கிலத்தைப் படித்து வந்தாள். அவள் இனிய குரலில் பாடக்கூடிய அழகும் தாலந்தும் நிறைந்த பெண். ஸ்வீடன் நாட்டில் அவளுடைய தந்தை ஒரு பெரிய பெந்தேகொஸ்தே சபையின் போதகர். அவள் கட்டுப்பாட்டுடன் அச்சூழ்நிலையில் வளர்க்கப்பட்டவள்.

இப்பெண்ணுக்கு பதினான்கு வயது எட்டியபொழுது அவளது தோழிகள் பாடசாலையில் திரையரங்குகளின் கேளிக்கைகள் நடனங்கள் பற்றி பலவற்றைத் தெரிவித்தனர். அதில் அவள் அதிகம் ஆர்வம் காட்ட ஆரம்பித்தாள். ஆகவே ஓர் நாள் அவள் தன் தந்தையிடம் சென்று “அப்பா, நீங்கள் என் மேல் காட்டிய அக்கறைக்கும், பயிற்றுவித்த விதத்திற்கும் வளர்த்த வளர்ப்பிற்கும் நன்றி. ஆனால் இப்பொழுது முதல் நான் வேறு பாதையில் செல்ல விரும்புகிறேன். உலகம் எனக்கு எதனைத் தர இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன். என் சிநேகிதிகள் இது பற்றி அதிகம் பேசுகிறார்கள். நான் சொந்த ரீதியில் இது பற்றி அறிய விரும்புகிறேன்” என்றாள்.

ஞானமுள்ள அவளுடைய தந்தை “ பார்பரா, நானும் உன் அம்மாவும் உனக்காக ஜெபிப்போம் என்றார். அவர் தர்க்கம் செய்யவில்லை. அது தவறு என்றும் கூறவில்லை. நாங்கள் ஜெபிப்போம் என்று மட்டும் கூறினார்.

அன்று இரவு அவள் ஒரு தெளிவான சொப்பனம் கண்டாள். அந்தச் சொப்பனத்தில் அவள் இரு பட்டணங்களைக் கண்டாள். ஒன்று நவீன கால அழகான பட்டணம். மிளிரும் ஒளி விளக்குகளினால்

நிறைந்திருந்தது. எங்கும் பளபளப்பு. மறுபக்கத்தில் உள்ள பள்ளத்தாக்கில் வேறுவிதமான ஒளியுள்ள ஒரு பட்டணம் இருந்தது. அது மிளிரவில்லை. ஆனால் அமைதியாகவும் தெளிவாகவும் இருந்தது. அவள் அந்த அழகுள்ள பட்டணத்தையும் நியான் ஒளி விளக்குகளையும் பார்த்தபொழுது ஒரு மனிதன் வந்து தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டான். அவன் நன்கு படித்தவனாக சிறப்பான ஆடை அணிந்து ஒரு நாகரீகமான மனிதனாகக் காணப்பட்டான். இந்தப் பட்டணத்தைச் சுற்றிக் காட்ட விரும்புகிறேன் என்றான். அவளும் அவனுடன் சென்றாள். அம்மனிதனுடன் தொடர்ந்து சென்றபொழுது அவன் முகம் விகாரம் அடைந்தது. சீக்கிரத்தில் அது சாத்தான் என்பதை அவள் உணர்ந்தாள். அவள் பயத்தோடு அங்கு நின்றபொழுது அப்பட்டணத்தின் நியான் விளக்குகள் ஒவ்வொன்றாக அணைந்து இறுதியில் அப்பட்டணம் முழுவதும் இருளில் மூழ்கியது. அப்பொழுது அவள் அடுத்தப் பட்டணத்தைப் பார்த்தாள். அது எப்பொழுதும் போல பிரகாசமாயும் தெளிவாகவும் இருந்தது. மறுநாள் அவள் தன் தந்தையிடம் சென்று “அப்பா! நான் இன்று உங்களுடன் ஆலயத்திற்கு வருகிறேன்” என்றாள். அவள் ஒரு ஞானமுள்ள பெண். தேவன் பேசியதற்கு அவள் செவி சாய்த்தாள்.

அடிக்கடி நானும் லிடியாவும் பெரிய நவீன கால பட்டணத்தில் பல நியான் விளக்குகள் மிளிர்வதைக் காணும்பொழுது, மேலும் அங்குள்ள பூரிப்பு, வாகனப் போக்குவரத்துகளைக் காணும்பொழுது நாங்கள் ஒருவரை ஒருவர் பார்த்து ‘‘பார்பராவின் கனவு நினைவிருக்கிறதா?” எனக் கூறிக்கொள்வோம். ஒரு நாளில் அத்தனை விளக்குகளும் அணையும்.

பவுலை மேற்கோளாகக் காட்டுகிறேன்:

> மேலும் காணப்படுகிறவைகளையல்ல, காணப்படாதவைகளை நோக்கியிருக்கிற நமக்கு, அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது. ஏனெனில், காணப்படுகிறவைகள் அநித்தியமானவைகள், காணப்படாதவைகளோ நித்தியமானவைகள்.
>
> 2 கொரிந்தியர் 4:17-18

அவைகளே நித்தியமானவைகள். அவைகள் மாறுவதில்லை அவர்கள் வசனத்தில் வாழ்பவர்கள்.

வசனத்தில் நிலைத்திரு. வேதத்தை வாசிக்க ஐந்து நிமிடம் போதும் என எண்ணாதே. அதை நன்கு படி. தியானம் செய். விசுவாசி. அதின்படி வாழ்வு நடத்து. வசனத்தை உன் வாழ்வில் உண்மையாய்க் காண

உதவும்படி கேள். வசனம் உனக்கு மெய்யாகும்பொழுது இந்த உலகத்தின் எந்தக் காரியமும் உன்னைச் சோதனையில் விழத்தட்டாது, உன்னை அதன் பக்கம் ஈர்த்துவிடாது, நீ கிறிஸ்துவிற்கு உண்மையானவனாய் இருப்பாய்.

வாழ்க்கையைப் பயிற்சி செய்வதின் மூலமும் மகிழ்ச்சியாய் இருப்பதின் மூலமும் அனுபவிக்க வேண்டும். சட்டதிட்டங்களின் அடிப்படையில் - என்னுடைய அநேக ஆண்டுகளைக் கழித்து விட்டேன் - ஆனால் இவ்வுலகத்தையோ அதின் பொருட்களின் மேலேயோ நான் பற்று வைக்க விரும்பவில்லை. ஏனெனில் ''ஒருவன் உலகத்தில் அன்புகூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை" (1 யோவான் 2:15). அனைத்தும் என் பரமபிதாவிற்கே சொந்தம். அவருக்கு முன் நேர்மையற்றவனாக இருக்க விரும்பவில்லை. எனது நன்றியினையும் பாராட்டுதலையும் அவருக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். அவர் என்னைத் தம் குழந்தையாகவும் கிறிஸ்துவிற்கு உடன் சுதந்தரருமாக்கினார். அவர் எனக்குச் செய்தவற்றிற்கு நன்றியுடையவனாயிருக்க விரும்புகிறேன். காணப்படாதவைகளின் மேல் என் கண்களைப் பதிக்க விரும்புகிறேன்.

நான் தன்னார்வத்துடன் நடைமுறையிலான வாழ்க்கை வாழ விரும்புகிறேன். என் கடிதங்களுக்குப் பதில் எழுதி என் ரசீதுகளுக்குப் பணம் செலுத்துகிறேன். என் இரு கால்களும் பூமியில் இருப்பினும் என் கண்கள் காணப்படாதவைகளின் மேல் பதிந்துள்ளது. நமக்கும் நித்தியத்திற்கும் இடையே ஒரு மென் திரையே உள்ளது. "சில வேளைகளில் பரலோக வாஞ்சையில் மூழ்கியிருக்கிறேன்" என்ற ஒரு பழைய பாடல் உள்ளது. ஆம் உண்மை அதுதான். எனினும் இப்புவி வாழ்வு குறித்துக் குறைகூற விருப்பமில்லை. என் நம்பிக்கைக்கும் மேலாக என் தகுதிக்கும் மேலாக என்னை நன்கு தேவன் நடத்தியுள்ளார். ஆனாலும் காலத்திற்கு அப்பால் ஏதோ ஒன்று உள்ளது என்பதை மறக்கவில்லை.

இன்னொரு பழைய பாடல் "எதுவும் என்னுடன் வராவிட்டாலும் நான் இயேசுவைப் பின்பற்ற முற்பட்டேன், பின்னோக்கேன் நான், பின்னோக்கேன் நான்" என்று ஒரு பாடல் உள்ளது. இந்தப் பாடலை நான் 1947ஆம் ஆண்டு எருசலேம் பட்டணத்தில் வைத்து நவம்பர் மாதத்தில் கேள்விப்பட்டேன். என் மனைவி, எட்டுப் பெண்பிள்ளைகளும் நானும் இரவின் வேளையில் எருசலேமுக்கு மத்தியிலுள்ள ஒரு அமெரிக்க மிஷனில் அடைக்கலம் புகுந்தோம். எங்களுக்கு வீடு இல்லை, உணவு இல்லை; வேறு ஒன்றும் இல்லை. நாங்கள் அனைத்தையும் விட்டு நள்ளிரவில் இருப்பிடத்திலிருந்து கடந்து சென்றோம். அந்த ஊழிய தளத்தில் ''என்னுடன் யாரும் வரவில்லையாயினும் நான் பின்பற்றுவேன்" என்ற அந்தப் பாடலை அவர்கள் பாடிக்கொண்டிருப்பதை முதல் முறையாகக் கேட்டேன்.

என் பொறுமையை வளர்த்த இன்னும் இரு காரியங்களையும் நான் பகிர்ந்துகொள்ள வேண்டும். முதலாவது எளிதானது, எனினும் முக்கியமானது: நீ தோற்றுப்போகும்பொழுது மனம் தளராதே. உனக்கு முன்பு பலரும் தோல்வி கண்டுள்ளனர் - அவர்களில் நானும் ஒருவன். பிசாசினுடைய தந்திரமான வேலை என்னவென்றால் ‘‘நீ தோல்வியடைந்துவிட்டாய். விட்டுப்போய்விடு” என்று கூறுவதாகும். தேவனே உன்னைக் கைவிட்டுவிட்டார் என்று கூறுவான். அவனை விசுவாசிக்காதே. அவன் பொய்யன். “நல்ல மனுஷனுடைய நடைகள் கர்த்தரால் உறுதிப்படும், அவனுடைய வழியின்மேல் அவர் பிரியமாயிருக்கிறார். அவன் விழுந்தாலும் தள்ளுண்டு போவதில்லை; கர்த்தர் தமது கையினால் அவனைத் தாங்குகிறார்” (சங்கீதம் 37:23-24).

எப்பொழுதாவது வீழ்ச்சியடைந்தது உண்டா? நீ முற்றும் கைவிடப்படுவதில்லை ஏனெனில், தேவன் உன் கையைப் பிடித்திருக்கிறார். தாவீது அரசனின் வாழ்வில் பழைய ஏற்பாட்டில் இப்படிப்பட்ட வியக்கத்தகு ஒரு சம்பவம் வருகிறது. அவன் பயங்கரமாய் தோற்றுப்போய் பாவத்தில் வீழ்ந்தான். எனினும் தேவன் அவனை மன்னித்து மீட்டுக்கொண்டார். தாவீது கூறுவது ‘‘நீ வீழ்ந்து போனாலும், சோர்ந்துபோகாதே, தேவன் உன்னைத் தூக்கி எடுப்பார்”.

வசனத்தில் நிலைத்திரு. வேதத்தை வாசிக்க ஐந்து நிமிடம் போதும் என எண்ணாதே. அதை நன்கு படி. தியானம் செய். விசுவாசி. அதின்படி வாழ்வு நடத்து.

புதிய ஏற்பாட்டிலும் வீழ்ந்து போன ஒரு மனிதனைப் பார்க்கிறோம். தேவன் அப்படியே அவன் போய்விட அனுமதிக்கவில்லை. அவருடைய பெயர் பேதுரு. மூன்று தடவை பேதுரு தன்னை மறுதலிக்கப் போகிறான் என்று தெரிந்தும், இயேசு இந்த இரு வாக்கியங்களைப் பேசினார். “பின்னும் கர்த்தர்: சீமோனே, சீமோனே, இதோ, கோதுமையைச் சுளகினால் புடைக்கிறதுபோலச் சாத்தான் உங்களைப் புடைக்கிறதற்கு உத்தரவு கேட்டுக்கொண்டான். நானோ உன் விசுவாசம் ஒழிந்துபோகாதபடிக்கு உனக்காக வேண்டிக்கொண்டேன்; நீ குணப்பட்டபின்பு உன் சகோதரரை ஸ்திரப்படுத்து என்றார்” (லூக்கா 22:31-32).

இவை எவ்வளவு ஆழமான வசனங்கள்! இயேசு பேதுரு தன்னை மறுதலிக்கக் கூடாது என்று ஜெபிக்கவில்லை. ஆனால் அவனுடைய விசுவாசம் தோற்றுப்போகாமலிருக்கும்படி வேண்டிக்கொண்டார். பேதுருவின் விசுவாசம் தோற்றுப்போனால் மீண்டுவர வழியேயில்லை.

நீ கீழே விழும்பொழுது உன் கையை உயர்த்து, கர்த்தர் உன் கையைப் பற்றிப் பிடிப்பார். அவர் உன்னைக் கைவிடாததினாலே நீ சோர்ந்து போகாதே.

இறுதியாக, பரிசு பெறும் நாளை மறந்து போகாதே. வாழ்வின் எல்லாக் காரியங்களும் இவ்வுலகில் இப்பொழுதே தீர்வு காண்பதில்லை. சில காரியங்கள் பிற்காலத்திற்காக வைக்கப்படும். சிறைச்சாலையிலிருந்து பவுல் தீமோத்தேயுவிற்கு எழுதிய வார்த்தைகளைக் கவனி "நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன்" (2 தீமோத்தேயு 4:7).

இந்த மூன்று சாதனைகளும் இணைந்தே செல்லும். நீ விசுவாசத்தைக் காத்துக்கொள்ள வேண்டுமானால், நீ போராட்டத்தைப் போராட வேண்டும். விசுவாசம் ஒரு போராட்டம். இந்தப் போராட்டத்திலிருந்து தப்பினால் விசுவாசத்தைக் காத்துக்கொள்ள முடியாது. ஓட்டத்தை முடிக்க வேண்டுமானால் நல்ல போராட்டத்தைப் போராட வேண்டும். பவுல் இவைகள் மூன்றையும் செய்தார்: போராட்டத்தைப் போராடினேன்; விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன்; ஓட்டத்தை முடித்தேன். பின்பு அவர் ''இப்பொழுதிலிருந்து பந்தயப் பொருளுக்காக காத்திருக்கிறேன்'' என்றார். வசனம் 8இல் ''இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது, நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார்; எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார்" என்று வருகிறது.

நீ விசுவாசத்தைக் காத்துக்கொள்ள வேண்டுமானால், நீ போராட்டத்தைப் போராட வேண்டும். விசுவாசம் ஒரு போராட்டம்.

அநியாய ஆட்சியாளர், பேரரசன் நீரோ பவுலைச் சிரச்சேதம் செய்யும்படி அநியாயத்தீர்ப்பு வழங்கினார். அந்த வழக்கு விசாரிப்பிலே நியாயம் இருக்கவில்லை; ஆனால் பவுல் இறுதியாக ஒரு வார்த்தை கூறினார். இன்னொரு நியாயத்தீர்ப்பைக் குறித்து அவர் பேசுகிறார். ''பந்தயப்பொருள் வழங்கும் நாள் உள்ளது. அந்த நியாயாதிபதி நீதியுள்ளவர். அந்த நியாயாதிபதி கர்த்தர் தாமே. வெற்றியின் கிரீடமான பரிசை அவர் தந்தருள்வார்."

என் வாழ்வில் அநேக ஆண்டுகளாக பரிசு பெறுவது என் பள்ளி வாழ்க்கையில் முக்கியமாக இருந்தது. ஒரு பரிசு கட்டாயம் பெற வைக்கப்பட்டுள்ளது. அது விசுவாசத்தைக் காத்துக்கொண்டு நல்ல போராட்டத்தைப் போராடி ஓட்டத்தை முடிப்பதாகும். காலத்திற்கு

அப்பால் நடக்கப்போவதை அறிந்ததினாலே, அவர் கடைசிவரை விசுவாசத்தைக் கைவிடவில்லை. அவர் நித்தியத்தை நோக்கினார். வெள்ளி, பொன், வெண்கலப் பதக்கம் கொடுக்கப்படும் நாள். நம்மில் சிலர் யார் அந்தத் தங்கப் பதக்கத்தைப் பெறப் போகிறார்கள் என ஆவலுடன் காத்திருக்கின்றனர். அப்படிப்பட்ட வேகத்தோடு நாம் ஓட வேண்டும். நாம் உண்மையுடனே சேவை செய்தோம். உண்மையாய் இருக்க தேவன் விரும்புகிறார்.

இயேசுவின் வார்த்தைகளை நினைவு கூறுங்கள்: "நல்லது, உத்தமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே" (மத்தேயு 25:23).

நம்மில் அநேகருக்கு வரும் நாட்கள் நம்முடைய பொறுமையைச் சோதிக்கும் நாட்களாயிருக்கும். அவைகள் எளியதாக இருக்காது. நமக்கு ஏற்படும் துன்பப் பரீட்சையில் எவ்வளவு பொறுமையைக் கடைப்பிடிக்கிறோம் எனப் புகட்டும். கிறிஸ்துவின் சபைக்கும் கர்த்தருக்கும் எவ்வளவு விசுவாசத்துடன் உள்ளோம் என்பதனை அந்தப் பொறுமை நிர்ணயிக்கும். நான் சகோதர, சகோதரிகளைப் பார்த்து "நான் விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன்; நம்பிக்கைக்குப் பாத்திரமாக நடந்துகொண்டேன். நான் மறுதலிக்கவில்லை'' என்று கூற விரும்புகிறேன்.

நமக்கு முன்பாக உள்ள பரீட்சை நமது பண்பையும் விசுவாசத்தையும் குறித்ததாகும்; நாம் எந்த அளவு பரிசுத்த ஆவியினால் பயிற்றுவிக்கப்படுகிறோம் என்பதற்கான பரீட்சை - இந்த ஆவிக்குரிய போராட்டத்தில் நம்பத்தக்கவனாய் இருப்பது.

இந்த யுத்தத்தில் பங்கேற்று வெற்றி கண்டு ஓட்டத்தை முடிப்பாயானால் தேவனுக்கே மகிமை.

நூலாசிரியரைப் பற்றி . . . . .

டெரிக் பிரின்ஸ் (1915-2003) ஆங்கிலேயப் பெற்றோர்களுக்குப் பிறந்தார். இங்கிலாந்தில் உள்ள ஈட்டன் கல்லூரியிலும், கேம்பிரிட்ஜ் சர்வ கலாசாலையிலும் கிரேக்கமும் லத்தீன் மொழியும் கற்றார். கிங்ஸ் கல்லூரியில் தற்கால, நவீன கால தத்துவ ஞானத்திற்கான உதவித் தொகையினைப் பெற்றார். தற்காலத்துப் பல மொழிகளைக் கற்றதுடன் எபிரெயம், அராமிய மொழிகளைக் கேம்பிரிட்ஜ் சர்வ கலாசாலையிலும் எருசலேமின் எபிரெய சர்வ கலாசாலையிலும் கற்றார்.

இரண்டாம் உலகப்போரின் வேளையில் பிரிட்டிஷ் இராணுவத்தில் பணியாற்றியபொழுது வேதத்தை வாஞ்சையுடன் படித்தார். அவருக்கு வாழ்வை மாற்றக்கூடிய இயேசுவின் சந்திப்பு கிட்டியது. இதன் மூலமாக இரண்டு முடிவுகளுக்கு அவர் வந்தார்: முதலாவதாக, இயேசு உயிருடன் இருக்கிறார் என்பது; இரண்டாவது, வேதம் தற்காலத்திற்கு நடைமுறையிலான, நமக்கு ஏற்றவற்றைக் கூறும் நூல் என அறிந்தார். இம்முடிவுகள் அவருடைய வாழ்க்கையையே மாற்றிற்று. இதற்குப் பின்பு, வேதத்தைப் படிக்கவும், போதிக்கவும் ஆரம்பித்தார்.

அவருடைய வெற்றிக்குரிய வாழ்வின் திறவுகோல் என்னும் ஒலிபரப்பு உலகத்தின் பெரும் பகுதிக்குச் செல்கிறது. மேலும் அராபிய, சீன, குரோசிய, மலகாசி, மங்கோலிய, ருஷ்ய, சமோவன், ஸ்பானிய மொழி, டோங்கா போன்ற மொழிகளிலும் ஒலிபரப்பாகிறது. இவர் 50 புத்தகங்கள், 500 ஒலிநாடாக்கள், 160 வீடியோக்கள் வெளியிட்டுள்ளார். இவைகள் 60 மொழிகளுக்கு மேல் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

இவருடைய சிறப்பு வரமான, எளிய முறையில் போதிப்பது இலட்சக்கணக்கான மக்களின் வாழ்வை விசுவாசத்தில் வேரூன்றச் செய்துள்ளது. எந்தச் சபையையும் சாராத நிலையில் எவரையும் புண்படுத்தாதபடி நடைமுறைக்கேற்ற வேத போதனை பலதரப்பட்ட இனத்தைச் சார்ந்தவர்களுக்கும், மதத்தைச் சார்ந்தவர்களுக்கும் பயனளித்து வருகிறது.

OTHER TAMIL BOOKS BY DEREK PRINCE

1) தேவனின் மருந்து புட்டி

2) உங்களில் உள்ள தூய ஆவியானவர்

3) தெய்வீகப் பரிமாற்றம்

4) சாபத்திலிருந்து ஆசீர்வாதத்திற்கு கடந்து வருதல்

5) ஆசீர்வாதங்கள் அல்லது சாபங்கள்: தெரிந்து கொள்ளலாம்

6) வாழ்வளிக்கும் விசுவாசம்

7) அவர்கள் பிசாசுகளைத் துரத்துவார்கள்

8) ஆவிக்குரிய போராட்டம்

9) ஞானஸ்நானத்தின் மூலம் அடக்கம்பண்ணப்படுதல்

10) அனாதைகள், விதவைகள், ஏழைகள், ஒடுக்கப்பட்டோர்

11) வாழ்வின் கசப்பான ஊற்று

12) பிசாசுகளைத் துரத்துவார்கள்

13) தியான வாழ்க்கைக்கு அடித்தளங்கள்

14) விட்டுக்கொடுத்தலின் கிருபை

15) வாழ்வை மாற்றும் ஆவிக்குரிய ஆற்றல்

16) அறிக்கையிடுதலின் ஆற்றல்

17) சோதிக்கப்படுதல்

18) அளவற்ற பேரன்பு

19) உங்கள் பணத்தைக் குறித்த தேவ திட்டம்

20) தேவனின் சிறப்பு ஈவினை நீங்கள் விரும்பினால்

Write for a free catalogue of Books, Teaching DVDs VCDs and MP3s by Derek Prince

DEREK PRINCE MINISTRIES - INDIA

18/32, Mangammal Salai,

Renga Nagar,Trichy - 620 021,

Tamil Nadu, India.

Phone: 00-91-431-2459464 / 2459664

E-mail: rhema@derekprince.in / revvg@dpm.co.in